# அரசியல் அறிவியல்

## மேல்நிலை – இரண்டாம் ஆண்டு

**தமிழ்நாடு அரசு**
**இலவசப் பாடநூல் வழங்கும்**
**திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டது**
**(விற்பனைக்கு அன்று)**

தீண்டாமை ஒரு பாவச்செயல்
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்
தீண்டாமை மனிதத்தன்மையற்ற செயல்

**தமிழ்நாடு பாடநூல் மற்றும்**
**கல்வியியல் பணிகள் கழகம்**
கல்லூரிச் சாலை, சென்னை – 600 006

© தமிழ்நாடு அரசு
முதற்பதிப்பு – 2005
திருத்திய பதிப்பு – 2017

**குழு தலைவர்**

**முனைவர் சோ. சுப்பிரமணியன்,**
தலைவர், பாடத்திட்டக்குழு,
முன்னாள் பேராசிரியர் மற்றும்
துறைத்தலைவர், அரசியல் துறை,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.
சரசுவதி இல்லம், 87/25, செட்டித் தெரு,
அயன்புரம், சென்னை –23.

**மேலாய்வாளர்கள்**

**முனைவர் வ. நா. விசுவநாதன்**
இணைப் பேராசிரியர்
அரசியல் துறை, மாநிலக் கல்லூரி,
சென்னை – 5

**முனைவர் எ. கருப்பன்**
விரிவுரையாளர் (தேர்வு நிலை)
அரசியல் துறை, மாநிலக் கல்லூரி,
சென்னை –5

**நூலாசிரியர்கள்**

**முனைவர் கோ. சுந்தரராமன்**
முதுநிலை பட்டதாரி ஆசிரியர்
(அரசியல் அறிவியல்), எம். எம். ஏ.
அரசினர் மேனிலைப்பள்ளி,
பல்லாவரம், சென்னை – 43

**முனைவர் க. பழனிச்சாமி,**
தனி விரிவுரையாளர்,
அண்ணா பொதுவாழ்வியல் மையம்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை – 5

**திருமதி கோ. வசுமதி**
உதவித் தலைமையாசிரியை,
லோகநாதன் தாராபூர் மே. நி. பள்ளி,
அயன்புரம், சென்னை –23

**முனைவர் என். கே. குமரேசன் ராசா**
விரிவுரையாளர், அரசியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர்

**விலை : ரூ.**

பாடங்கள் தயாரிப்பு தமிழ்நாடு அரசுக்காக பள்ளிக்கல்வி இயக்ககம், தமிழ்நாடு

இந்நூல் 60 ஜி. எஸ். எம். தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :

# முன்னுரை

மனிதன் தன்னுடைய திறமைகள் மற்றும் பண்புகளின் துணைக் கொண்டு இதர உயிர்வாழ் இனங்களுக்கும் மேலான வாழ்க்கையை அடைவதற்கு சமுதாயம் வழிவகை செய்கின்றது. சமுதாயத்தில் ஏற்படும் சமுதாய மோதல்களை தீர்த்து வைத்து தன்னுடன் வாழ்கின்ற மக்களுடன் ஒருங்கிணைந்து, சுமுகமாக வாழ்வதற்கு அரசியல் உதவுகிறது. அரசு மற்றும் அரசாங்கத்துடன் தொடர்புடைய மனிதன் அரசியல் அறிவியலின் கருப்பொருளாக இருக்கிறான். அறநெறி, தத்துவம் மற்றும் பொருளியல் போன்றவை அல்லாமல் மனிதனுடைய வாழ்வில் அரசியலின் இயல்பை அறிவதற்கு உதவுகின்ற கல்விப் பிரிவாக அரசியல் அறிவியல் உள்ளது. சமுதாய, அரசியல் மற்றும் பொருளாதார துறைகளில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்களைக் கருத்தில் கொண்டு 12ம் வகுப்பு பாடத்திட்டம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டம் அரசியலில் பங்கேற்பு, மற்றும் ஆட்சியில் ஏற்படக்கூடிய பிரச்சனைகளோடு தொடர்புடைய கல்வியறிவை விளக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. 21ம் நூற்றாண்டில் தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் போன்ற பன்னாட்டு அரசியலில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்கள் இப்பாடத்திட்டத்தில் சொல்லப்பட்டுள்ளன. பதினொன்றாம் வகுப்பில் சொல்லப்பட்டுள்ள பாடத்திட்டத்தோடு பன்னிரெண்டாம் வகுப்பு பாடத்திட்டம் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. மேல்நிலை கல்வி மட்டத்தில் விருப்பப்பாடமாக அரசியல் அறிவியல் கற்கும் மாணவர்கள் மாநில மற்றும் மத்திய அரசுகளின் பணிக்காக நடத்தும் பொதுத்தேர்வுகளில் சிறந்த முறையில் பங்கேற்க ஊக்குவிக்கும் வகையில் சொல்லப்பட்டிருகின்றது.

## எல்லைகள் மற்றும் குறிக்கோள்கள்

### அ. எல்லைகள்

- அரசியல் கருத்து முன் படிவங்கள் (கருத்துக்கள்) மற்றும் முறைகளை அறிந்து அவற்றின் பொருளறிந்து திறனாய்வு செய்தல்.
- மாணவர்களை பொறுப்புடைய சிறந்த குடிமக்களாக ஆக்குதல்.
- அரசியல் அறிவியல், சட்டம் மற்றும் செய்தித்துறைப் பற்றிய உயர்கல்விக்கு மாணவர்களை தயார் செய்தல்.

### ஆ. குறிக்கோள்கள்

- உலகின் பல நாடுகளிலும் காணப்படும் அரசியலில் பங்கேற்பு ஆர்வத்தை ஊக்குவித்தல் மற்றும் அரசியல் கட்சி முறைகள் அவற்றோடு தொடர்புடைய தன்னலக்குழுக்கள் போன்றவற்றை அறிந்து கொள்ளுதல்.
- சட்டத்துறை, செயலாக்கத்துறை உறவுகள் மற்றும் அதிகாரப்பூர்வமாக எடுக்கப்பட வேண்டிய கொள்கைகளை முடிவு செய்தல். அதிகாரவர்க்கம், நீதித்துறை இவற்றின் பங்கு பணிகளை வரையறுத்தல்.
- குடிமைச் சுதந்திரம், குடிமக்கள் நலன் மற்றும் தேச பாதுகாப்பு தொடர்புடைய கொள்கைகளை முடிவு செய்தல்.
- இயற்றப்படும் சட்டங்கள் அரசியல் அமைப்புபடி செல்லத்தக்கவையா, அல்லவையா என்பதை உச்ச நீதிமன்றம் முடிவு செய்வதில் எத்தகைய பங்கு பணி ஆற்ற வேண்டும் என்பதனை தெளிவாக அறிந்து கொள்ளுதல்.

பன்னாட்டு அமைப்பில் நிறைந்துள்ள முறைகளை கண்டறிந்து அவற்றை விவரிக்கிறது. உலகளவில் ஏற்படும் சச்சரவுகள் அவற்றை தீர்த்து வைக்கும் முறைகள், நாடுகள் ஒன்று சேர்ந்து ஏற்படுத்தும் இராணுவ அமைப்புக்கான சூழ்நிலைகள் மற்றும் நாடுகளுக்கிடையே நடைபெறும் பேரங்கள், பன்னாட்டு அமைப்புகள் மேலும் கிழக்கு மற்றும் மேற்கு மற்றும் வடக்கு மற்றும் தெற்கு இவைகளிடையே ஏற்படும் வேற்றுமைகள் ஆகியவற்றைத் தீர்த்து வைக்கும் முறைகள் ஆகியனவும் விளக்கப்பட்டுள்ளன.

இந்நூலை ஆக்குவதற்கு துணைபுரிந்த குழு உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்கள், தமிழ்நாட்டு அரசாங்க மேல்நிலை கல்வித்துறை, அதிகாரிகளுக்கு. இந்நூலை இயற்றுவதற்கான பணியை அவர்களிடம் ஒப்படைத்ததற்கு அவர்களுடைய பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கின்றனர்.

**தலைவர் மற்றும் உறுப்பினர்கள்**

**பாடத்திட்டக்குழு**

# பாடத்திட்டம்

**பா. பாடத் தலைப்பு**

**எண்**

**1. அரசின் வளர்ச்சி**

1.1 நகர அரசு

1.2 நில பிரபுத்துவ அரசு

1.3 இன (தேச) அரசு

1.4 சமதர்ம அரசு

1.5 மக்கள் நல அரசு

**2. அரசுத் தோற்ற கொள்கைகள்**

2.1 தெய்வீகத் தோற்ற கொள்கை

2.2 சமுதாய ஒப்பந்தக் கொள்கை

2.3 வலிமைக் கொள்கை

2.4 இயற்கைக் கொள்கை

2.5 பரிணாம வளர்ச்சி கொள்கை

**3. புது அரசியல் அறிவியல்**

3.1 புது அரசியல் அறிவியலின் பொருள்

3.2 அரசியல் அதிகாரத்தின் பயன்பாடுகள்

3.3 ஆளுமையின் தன்மை மற்றும் முக்கியத்துவம்

3.4 மற்றவரை கவருதலின் இயல்பும் பயன்களும்

**4. அரசு இறைமைக்கு ஏற்படும் சவால்கள்**

4.1 தேசிய இறைமையின் தேய்மானம்

4.2 உலகமயமாக்கல் கொள்கையால் தேசிய இறைமைக்கு ஏற்படும் சவால்கள்

**5. அரசாங்கமும் அதன் வடிவங்களும்**

5.1 ஒற்றை அரசாங்கமுறை

5.2 கூட்டாட்சி அரசாங்கம்

5.3 பாராளுமன்ற முறை அரசாங்கம்

5.4 தலைவர்முறை அரசாங்கம்

5.5 குழுமுறை அரசாங்கம்

5.6 இக்கால சர்வாதிகார அரசுகள்

5.7 ஓரவை மற்றும் ஈரவை முறை சட்டமன்ற விளக்கம்

**6. நீதித்துறை**

6.1 நீதித்துறையின் தேவையும் முக்கியத்துவமும்

6.2 நீதிபதிகளுக்கு இருக்க வேண்டிய தகுதிகள்

6.3 நீதி மறுஆய்வுக் கொள்கை

6.4 நீதித்துறை செயல்வேகம்

6.5 நீதித்துறை சுதந்திரம்

**7. இந்திய அரசாங்கமும் அரசியலும்**

7.1 இந்திய அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்

7.2 மத்திய அரசாங்கத்தின் அமைப்புமுறை

7.2.1 குடியரசுத்தலைவர்

7.2.2 பிரதம அமைச்சர்

7.2.3 அமைச்சரவை

7.2.4 மக்களவை மற்றும் மாநிலங்கள் அவைத்தலைவர்

7.2.5 நாடாளுமன்றம்

7.2.6 மக்களவை

7.2.7 உச்சநீதிமன்றம்

7.2.8 இந்திய அரசியல் கட்சிகள்

**8. மாநில அரசாங்க அமைப்பு – தமிழ்நாடு**

8.1 ஆளுநர்

8.2 முதலமைச்சர்

8.3 அமைச்சர்கள் குழு

8.4 சட்டமன்றம்

8.5 உயர்நீதிமன்றம்

8.6 மாநிலச்செயலகம்

8.7 மாவட்ட நிர்வாகம்

**9. தமிழ்நாட்டில் உள்ளாட்சி அரசாங்கம்**

9.1 உள்ளாட்சி அரசாங்க கட்டமைப்பு

9.2 நகர்ப்புறம்

9.2.1 மாநகராட்சி

9.2.2 நகராட்சி

9.2.3 நகரியங்கள்

9.2.4 இராணுவ நகரியங்கள்

9.2.5 பகுதி நகர அமைப்புகள்

9. 2. 6 குறிப்பிட்ட நகர குழுக்கள்

9.3 ஊரகம்

9.3.1 மூன்றடுக்கு பஞ்சாயத்து அமைப்பு

9.3.1.1 மாவட்ட அபிவிருத்தி கழகம்

9.3.1.2 பஞ்சாயத்து ஒன்றியம்

9.3.1.3 கிராம பஞ்சாயத்து

9.3.2 அவற்றின் பணிகள்

9.4 பஞ்சாயத்துமுறை – பணிச் சீராய்வு

**10. 21ம் நூற்றாண்டில் இந்தியா**

10.1 தற்போதைய நிலவரம்

10.2 எதிர்காலத் திட்டங்கள்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அரசின் வளர்ச்சி | 1 |
| 2. | அரசின் – தோற்றம் – கொள்கைகள் | 19 |
| 3. | புதிய அரசியல் அறிவியல் | 32 |
| 4. | அரசு இறைமைக்கு ஏற்படும் சவால்கள் | 42 |
| 5. | அரசாங்கமும் அதன் வடிவங்களும் | 52 |
| 6. | நீதித்துறை | 64 |
| 7. | இந்திய அரசாங்கமும் அரசியலும் | 72 |
| 8. | மாநில அரசாங்க அமைப்பு – தமிழ்நாடு | 106 |
| 9. | தமிழ்நாட்டில் உள்ளாட்சி அரசாங்கம் | 133 |
| 10. | 21 ஆம் நூற்றாண்டில் இந்தியா | 162 |

# அத்தியாயம் 1

# அரசின் வளர்ச்சி

‘அரசு’ என்பது மனித சமுதாயத்தின் வாழ்விற்கும் வசதிக்கும் ஏற்படுத்தப்பட்ட ஒரு இன்றியமையாத அமைப்பாகும். ‘அரசு’ இயற்கையாக தோற்றுவிக்கப்பட்ட அத்தியாவசியமான அமைப்பாகும். பல்வேறு அரசியல் அறிஞர்கள் ‘அரசு ஒரு தேவையான துன்பம்’ என்ற கூற்றை ஆமோதித்துள்ளனர். லாஸ்கி, ‘‘அரசு என்பது சமூகம் என்ற தோரண வாயிலின் முக்கிய கல்’’ என குறிப்பிடுகிறார். மனிதரில் எளியோரை வலியோரிடமிருந்து காப்பாற்றும் பொருட்டும், மனித சமுதாயத்தின் ஆசாபாசங்களை ஒரு கட்டுக்குள் வைத்திடவும் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பாக அரசு கருதப்படுகிறது. பைனர் என்பவர், அரசு இல்லையெனில் உலகில் சச்சரவும் குழப்பங்களுமே மிஞ்சும் என குறிப்பிடுகிறார்.

இவ்வத்தியாயத்தில், அரசின் வளர்ச்சி குறித்து காண்போம். நாம் காணும் தற்கால அரசு, பல காலகட்டங்களில் பலவாறாக உருவெடுத்து தற்போதைய நிலையை அடைந்துள்ளது. எனினும், இதுதான் அரசின் பரிணாம வளர்ச்சி என்று அறுதியிட்டு கூற இயலாத அளவிற்கு, அரசு படிப்படியாக வளர்ந்து வந்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

அரசு என்கிற அமைப்பு ஒரே மாதிரியாக இல்லாமல் ஆரம்ப காலத்தில் பழமைப் பேரரசாக, கிரேக்க நகர அரசாக தற்போதைய மக்கள் நல அரசாக மாறுவதற்கு முன் உருப்பெற்றிருந்திருக்கிறது. கீழே சில முக்கியமான வகை அரசுகள் பற்றிய விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன.

1. நகர அரசு
2. நிலப்பிரபுத்துவ அரசு
3. தேசிய அரசு
4. சமஉடைமை அரசு, மற்றும்
5. மக்கள் நல அரசு.

## 1.1. நகர அரசு

பழமைப் பேரரசு முடிவுக்கு வந்த பின்னர் கிட்டத்தட்ட கி.மு. 1000வது ஆண்டு சமயத்தில் கிரேக்க நாட்டில் நகர அரசு தோன்றியது. நகர அரசு தோன்றிய அதே காலத்தில் அரசியல் கோட்பாட்டின் தோற்றமும் ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது. கிரேக்க சமூகங்களே முதன் முதலில் அரசியல் சிந்தனையின், முக்கியத்துவத்தை உணர்ந்து நடைமுறைப்படுத்தின. கிரேக்கர்கள், ‘அரசியல்’ என்பதை வெறும் தர்க்க, தத்துவார்த்த நிலைகளிலேயே வைக்காமல் வாழ்க்கையோடு இணைத்து அதையே அரசாங்கமாகவும் ஏற்படுத்தி பெருமை பெற்றார்கள்.

ஐரோப்பாவில் புலம் பெயர்ந்த கிரேக்கர்கள், சிறு சிறு குழுக்களாக பிரிந்து, ஆங்காங்கே மலைப்பகுதிகளிலும் சமவெளிகளிலும் இதர பிரதேசங்களிலும் குடியேறினர். காலப்போக்கில் அவர்களின் ஒவ்வொரு வாழ்விடமும், அரசின் இருப்பிடமாக, முன்பிருந்த பழமைப்பேரரசுக்கு முற்றிலும் மாறுபட்டுத் திகழ்ந்தது. அவ்வகை ஆட்சி முறை, பழங்குடியினரின் நிர்வாகத்தினை ஒத்திருந்தது எனலாம். இத்தகைய உள்ளாட்சி நிர்வாகமானது காலப்போக்கில் உருப்பெற்று நகர அரசாக திகழ்ந்தது. கிரேக்க நகரம், எல்லா வகையிலும், நவீன அரசின் அத்தனை


அம்சங்களையும் கொண்டு உண்மையான அரசாக இருந்ததெனக் கருதப்படுகிறது. மக்களுடைய அரசியல், பொருளாதார, அறிவார்ந்த, ஒழுக்க வாழ்க்கை முழுவதும் நகர அரசைச் சார்ந்திருந்தது.



## கிரேக்க நகர அரசின் அம்சங்கள்

ஒவ்வொரு நகர அரசும் சுதந்திர அமைப்பாக செயல்பட்டது. அவ்வாறு சுதந்திரமாக இருப்பதை பெருமையாகக் கருதியது. கிரேக்க நகர அரசுகள் அனைத்தும் அளவில் சிறியவைகளாகவும் மக்கள் தொகையில் குறைவான எண்ணிக்கையும் கொண்டவைகளாக இருந்தன. இத்தகைய அரசில் மட்டுமே சமூக, பொருளாதார, அறிவியல் சார்ந்த வாழ்க்கை அமைய முடியும் எனக் கருதப்பட்டது. இக்கருத்தை அரிஸ்டாட்டிலும் வலியுறுத்தியுள்ளார்.

வரி செலுத்துதலும், தேர்தலில் வாக்களிப்பதும் மட்டுமே குடிமகனின் கடமை என்பது வன்மையாக மறுக்கப்பட்டது. ஒவ்வொரு குடிமகனும் அவன் சார்ந்துள்ள அரசின் மேம்பாட்டிற்கென வாழ்தல் வேண்டும். அவன் தன்னுடைய அரசு சார்ந்தப் பணிகளை தானே செய்தான்.



நகரத்தின் கடவுள்களை அவனுடைய கடவுள்களாக பாவித்தான். அனைத்து விழாக்களிலும் அவன் பங்கு பெற்றான். அரசும் சமுதாயமும் இருவேறு அமைப்பன்று, அவை ஒன்றே என்ற நிலை அக்காலத்தில் இருந்தது. கிரேக்க நகரம் அரசு, திருச்சபை, பள்ளி என்கிற அமைப்புகளின் ஒட்டுமொத்த அமைப்பாக இருந்து மனித வாழ்க்கையை முழுவதுமாக ஆக்ரமித்தது. நல்வாழ்க்கையை பெற்றுத் தருவதுதான் அரசின் குறிக்கோளாக இருந்தது. இதனை நோக்கமாகக் கொண்ட அரசின் நடவடிக்கைகள் எல்லாம் நியாயப்படுத்தப்பட்டன. அரசியல், ஒழுக்கம், சமயம் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றிற்கிடையே எவ்வித பாகுபாடும்

காணப்படவில்லை. ஆயகலைகள் அறிவியல் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றை அடைய அரசு பங்காளியாக இருக்கிறது என்னும் எட்மண்டு பர்க்கின் கருத்தையொட்டியதாகவே கிரேக்க நகர அரசு திகழ்ந்தது. ஏதென்ஸ் நகர அரசு புகழின் உச்சத்திலிருந்த போது கிரேக்கத்தின் சிறந்த அரசியல் கருத்துக்களின் பிரதி பிம்பமாகக் கருதப்பட்டது.

கிரேக்க நகர அரசுகளில் நேரடி மக்களாட்சி நடைபெற்றது. மக்கள் நேரடியாக அரசாங்கத்தில் பங்கேற்றனர். இது மக்கள் சக்திக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது. அரசாங்க அமைப்புகள் என்பது மாற்றத்திற்குட்பட்டது என்பதை கிரேக்க அரசியல் தத்துவஞானிகள் கருதினர். அதன்படி முதலில் முடியாட்சி பிறகு உயர் குடியாட்சியென மாற்றம் ஏற்பட்டது. பிறகு சிறு குழுவாட்சி பிறகு மக்களாட்சியென மாறி மாறி சுற்றிச்சுற்றி அரசுகள் ஏற்பட்டன. ஆனால் கிரேக்கர்கள் மக்களாட்சியை மாக்களாட்சியாகக் (Mobocracy) கருதினர்.

கிரேக்கர்கள் தன்னாட்சி, சுதந்திரம் போன்றவைகளை அபரிதமிதமாகப் பின்பற்றினர். அச்சமயத்தில், வடக்கு ஐரோப்பாவில், மாசிடோனியாவை சார்ந்த பிலிப் என்பவரின் தலைமையில் வலிமைமிக்க, முடியாட்சி முறை அரசு எழுச்சி பெற்ற போது, நகர அரசுகள் குலைந்து போயின. கட்டுப்பாடற்ற அதீத சுதந்திரம், கிரேக்க அரசு சமுதாயத்தில் பல்வகை ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தியிருந்தன. இருப்போர், இல்லாதோர், எளியோர், வலியோர் மற்றும் ஏதென்சு அல்லது ஸ்பார்டா ஆகியவற்றின் நண்பர்கள் என சமுதாயம் பிளவுபட்டு மக்களிடையே ஒற்றுமையின்மை நிலவியது. தத்துவஞானியர் பலர், ஒழுக்கம் என்பது என்ன ? நற்பண்புகளை போதிக்கும் முறைகள் எவை ? என்பதை பற்றி தீவிரமாக சிந்தித்தனர். அப்போதிருந்த மக்கள் கட்டுப்பாடற்ற, ஒழுங்கற்ற வாழ்க்கையை வாழ்ந்ததாகக் கருதினர். இத்தகைய மனப்பான்மை உடையவர்கள், அவர்களை காட்டிலும் மேலான பண்புடையவர்களிடம், வீழ்வது தவறில்லை எனக் கருதினர். அவ்வாறே, கிரேக்கர்களும் வீழ்ந்தனர்.

கிரேக்க நகர அரசுகளில் சமூக அமைப்பிலும் குறைபாடுகள் இருந்தன. ஏதென்ஸ் நகரத்தில் அடிமைகள் பெருமளவில் இருந்தனர். அடிமைமுறை நாகரீக மேம்பாட்டிற்கு எதிரானது. மக்களாட்சி முறைக்கு மாறானது. பாகுபாடுகள் இல்லாமல் எல்லா மக்களும் உரிமைகள் மற்றும் சலுகைகளைப் பெற்று அனுபவிக்கும் சூழ்நிலைகள் மக்களாட்சிமுறையில் நிலவும் சகோதரத்துவம் அதன் அஸ்திவாரம். அதன் உறுப்பினர்கள் எல்லோரும் சமமானவர்கள்.

மானிட வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கியதாக கிரேக்க நகர அரசு விளங்கியது. இந்த உள்ளடக்கிய நிலை, அரசாங்கம் மற்றும் அதன் பணிகள், அரசாங்கத்திற்கும் இதர கழகங்களுக்குமிடையேயுள்ள வேறுபாடுகள் போன்ற அரசியல் தொடர்பான பிரச்சினைகளை கிரேக்கர்கள் அறியாமல் புறக்கணிக்கும்படி செய்து விட்டது.

‘‘சமூகத்தினின்றும் அரசை பிரித்தறிய தவறியதால் அத்தீனிய சுதந்திரம் அடையாளம் காணமுடியாத உடைபட்ட சின்னமாகிவிட்டது’’ என்று மாக்ஐவர் (MacIver) என்னும் அறிஞர் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுவதாவது, எல்லாவற்றையும் உள்ளடக்கிய கிரேக்க நகர அரசு, நகரத்திற்கும் மக்களுக்குமிடையேயுள்ள வேறுபாடுகளின் தன்மை மற்றும் சட்டம் மற்றும் வழக்காறுக்களுக்கிடையேயுள்ள வரையறைகளை அறியத்தவறியது. சட்டம் மற்றும் ஒழுங்கை நிலை நாட்டுதல், பண்பாடுகளைப் பாதுகாத்தல் போன்ற பணிகள் சர்வவல்லமை படைத்த அரசின் கடமைகள் என்பதை உணரத் தவறியது. வேற்றுமையில் ஒற்றுமை, எல்லோருக்கும் உரிமைகளைத் தர மறுத்து தன்னிச்சையாக செயல்பட்டது எல்லாமாகச் சேர்ந்து நகர அரசு அழிவதற்குக் காரணங்களாகி விட்டன.

## 1.2 நிலப்பிரபுத்துவ அரசு

மேற்கத்திய ஐரோப்பாவில் உரோமானிய அரசின் வீழ்ச்சி, 'அரசு' என்கிற அமைப்பின் வீழ்ச்சியாகவே கருதப்பட்டது. அவ்வீழ்ச்சிக்கு பின்னர் எங்கும் பெருங்குழப்பமே மேலிட்டது. உரோமானிய அரசின் மீது வடக்கிலிருந்து படையெடுத்த தூத்தோனிய ஆதிவாசிகள் (Teutonic Barbarians), பழங்குடியினர் நிலையிலேயே வாழ்ந்தனர். வலிமைமிக்க, மைய அதிகாரக் கட்டுப்பாடு, வல்லமை பொருந்திய மேம்பட்ட மைய அதிகார அமைப்பு போன்றவை அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. பிரதேச சுதந்திரம் மற்றும் தனிமனித சுதந்திரம் என்பவைகளே அவர்களுக்கு முக்கியமானதாக இருந்தது. அவர்களுடைய அரசர்கள் வெற்றிகரமான படைத்தலைவர்கள் என்பதைத் தவிர, வேறு எந்த அடையாளங்களும் அவர்களுக்கு இல்லை. அரசாங்க நிகழ்ச்சிகளில் சாமானியர்கள் அனைவரும் பங்கு பெற்றனர்.

இத்தகைய குணநலன்களைக் கொண்ட தூத்தோனிய பழங்குடியினருடன் உரோமானிய அரசமைப்பின் ஒழுங்கு, ஒருமைப்பாடு மற்றும் மையப்படுத்தப்பட்ட அதிகாரமுறையோடு தொடர்பு ஏற்பட்டபோது மோதல் ஏற்பட்டது.



இந்த இரண்டு முரண்பட்ட அமைப்புகளின் சங்கமத்தில் ஒரு புதிய அரசுமுறை தோன்றியது. குழு முறை சமுதாய அமைப்பைக் கொண்ட பழங்குடியினர் மற்றும் ஏகாதிபத்திய அரசு முறை அமைப்பைக் கொண்ட உரோமானிய அரசமைப்பு ஆகிய வெவ்வேறு முறைகள் மோதிக் கொண்டபோது நிலப்பிரபுத்துவ அரசு என்ற அரசுமுறை தோன்றியது. நிலப் பிரபுத்துவ அரசு, என்பது ஒரு அரசு முறையே அல்ல, அது ஒரு குழப்பமான அமைப்பு என்றும், இம்முறையை அரசின் பரிணாம வளர்ச்சியில் சேர்ப்பது சரியன்று என்றும் பல விமர்சனங்கள் இருப்பினும், நிலப்பிரபுத்துவ முறையை ஒதுக்கி விடுதல் சரியன்று. உரோமானிய ஆட்சி வீழ்ச்சி பெற்ற காலத்தில், ஐரோப்பிய மக்களுக்கு பாதுகாப்பும், அமைதியான வாழ்க்கையும் தந்தது இம்முறை அரசாகும். ஏகாதிபத்திய உரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகும் நவீனகால தேசிய அரசு தோன்றுவதற்குமான இடைக்காலத்தில் அவைகளுக்கிடையே பாலமாகத் திகழ்ந்தது நிலப்பிரபுத்துவ அரசாகும் என்பது சரியானதாகும்.

## நிலப்பிரபுத்துவ அரசின் எழுச்சி

உரோமானிய சாம்ராஜ்ஜியம் வீழ்ந்த பின்னர், அந்நாட்டின் நிலப்பரப்பு, வலிமை பெற்று விளங்கிய பிரபுக்களின் முழுக்கட்டுப்பாட்டிற்குள் வந்தது. ஒவ்வொரு பிரபுவும் அவரது கட்டுப்பாட்டில் இருந்த குறிப்பிட்ட நிலப்பரப்பிற்கு தலைவராக இருந்து அதன் நிர்வாகத்தையும் கவனித்து வந்தார். அவர் அவரது பொறுப்பில் இருந்த நிலங்களை அவரைச் சுற்றியிருந்தவர்களுக்கு குத்தகைக்கு விட்டு குத்தகையை பெற்று அவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்தினார். அவரிடமிருந்து நிலத்தை நேரிடையாகப்பெற்றவர்கள் தலைமைக் குத்தகைதாரர்கள் எனப்பட்டனர். அவர்களுக்கு அடுத்தபடியாக இருந்தவர்கள் குத்தகைதாரர்கள் எனப்பட்டனர். அவர்களுக்கும் கீழே இருந்தவர்கள் துணைக் குத்தகைதாரர்கள் எனவும், குத்தகைதாரர்களின் நேர்மேற்பார்வையில் நிலத்தை சாகுபடி செய்த இதர சிலர் அடிமைகள் அல்லது பண்ணையாட்கள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் ஒவ்வொரு வகையினரும் அவர்களுக்கு நேர் மேல் மட்டத்திலிருந்தவர்களுக்கு குத்தகை, காணிக்கை மற்றும் இதர பணிகளைச் செய்து வந்தனர். இத்தகைய அமைப்பில் விசுவாசம் என்பது உடனடி மேலாளருக்கேயில்லாமல் அவருக்கும் மேலேயுள்ளவர்களுக்கு கிடையாது. எனவே பிரபுக்கள் தலைமைக் குத்தகைதாரர்களைத் தாண்டி இதரர்கள் மேல் அதிகாரம் செலுத்தவோ அல்லது கட்டளைகளை நிறைவேற்றும்படியோ வற்புறுத்த முடியாது. மேலே கூறப்பட்டுள்ள பண்ணையாள்முறை இக்காலத்திலும் தென்னாட்டின் பல பகுதிகளிலும் நடைமுறையிலிருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதே போல ராணுவமும் அவரவர்களால் ஏற்படுத்தப்பட்டு அவரவர் கட்டுப்பாட்டில் இயங்கியது. எனவே இறைமையதிகாரம் முழுமையானதாக இல்லை. ஒவ்வொரு மட்டத்திலும் இருந்தவர்கள் அதனைப் பெற்றிருந்தனர். இச்சூழ்நிலையில் அரசியல் முன்னேற்றத்திற்கு வழியில்லாதிருந்தது, இம்முறையிலான விசுவாசம் பிற்காலத்தில் இங்கிலாந்து போன்ற நாடுகளில் தேசிய அரசு ஏற்பட வகை செய்தது. நிலப்பிரபுத்துவ முறை அரசின் முக்கிய சாதனை மக்களுக்கு அமைதியைப் பெற்று தந்ததாகும் என்பதை மறுக்க இயலாது.

நிலப்பிரபுத்துவ அரசில் அடிமைகளான பண்ணையாட்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமானதாக இருந்தது. இதன் காரணமாக அவர்கள் வழிபட்ட கிறிஸ்துவ மதம் நன்கு வளர்ந்தது. இதனால் உரோமானிய அரசின் வீழ்ச்சிக்கு பிறகு, நிலப்பிரபுத்துவ அரசமைப்பால் பிழைத்த மாபெரும் நிறுவனமாக, திருச்சபை கருதப்படுகிறது.

நிலப்பிரபுத்துவ அரசமைப்பு திருச்சபையின் ஆதிக்கத்திற்கு வலு சேர்ப்பதாகவே இருந்தது. மதத்தலைமைக்கெதிராக எந்த ஒரு பெரிய அமைப்பையும், அக்காலத்திய திருச்சபை விரும்பவில்லை. பல்வகை படிநிலைக்குட்பட்டு, எவர் ஒருவருக்கும், அதிக முக்கியத்துவம் தராத நிலப் பிரபுத்துவ ஆட்சி, திருச்சபையின் ஆதிக்கம் வேரூன்ற முக்கிய காரணமானது. இவ்வாதிக்கத்திற்கு எதிராக பிற்காலத்தில் தோன்றிய மதச்சீர்த்திருத்த இயக்கம் (Reformation) திருச்சபையின் தலைமையை வலுவிழக்கச் செய்ததுடன், தேச முடியாட்சி தோன்றிட காரணமும் ஆனது.

இத்தகைய குறைபாடுகள் மற்றும் பலவீனங்களுக்கிடையேயும், நிலப்பிரபுத்துவ அரசு, ஐரோப்பிய அரசியலுக்கு பலவகையில் பங்களித்துள்ளது. மேற்கத்திய ஐரோப்பாவில், அரசியல் ஒற்றுமையையும், வாழ்வியல் முறைகளையும் தோற்றுவித்த உரோமானிய அரசு, நாகரீக முறை பழங்குடியினரால் வீழ்த்தப்பட்டு, சிதைக்கப்பட்டாலும் தனிமனித விசுவாசத்தினாலும், நிலத்தை சார்ந்த பற்றின் பேரால் ஏற்படுத்தப்பட்ட நிலப்பிரபுத்துவ அரசு, சமூக கட்டமைப்பு சிதறா

வண்ணம், குழப்பங்கள் ஏற்படா வண்ணம் ஒரு ஒழுங்கை தோற்றுவித்தது. இரண்டாவதாக, பெரிய நிலச்சுவான்தாரர்கள் சுயமாக, தனிமனித சுதந்திரத்தை விரும்பியவண்ணம், தன்னாட்சி பெற்றிருந்தனர். அவர்களுடைய சுதந்திரம் முழுமை பெற்றிருந்தது. இதனை 'மையர்ஸ்' என்கிற அறிஞர், ''நிலப்பிரபுத்துவ அரசு இடைக்காலத்தின் பிந்தைய பகுதியில், சுதந்திரத்தின் மாட்சிமையை கட்டி காத்தது'' என்று குறிப்பிடுகிறார்.

நிலப்பிரபுத்துவ அரசில், பொது மற்றும் தனி உரிமைகள் வரையறுக்கப்படாமலிருந்தது. வலிமை மிக்க இன அரசாங்கம் உருவாக இடையூறாக, நிலப்பிரபுத்துவ அரசு, பல்வகை சிறிய அரசுகளாக பிரிந்திருந்தது. ஐரோப்பிய அரசியலில், ''நிலப்பிரபுத்துவ அரசு, ஒழுங்கற்ற முறையில் ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்பு'' என்ற ஆடம்ஸின் கூற்றில் பெருமளவு உண்மை உள்ளது.

## இந்தியாவில் நிலப்பிரபுத்துவ அரசு

இடைக்கால இந்தியாவில் நிலவிய நில உடைமை மற்றும் நிலவரி முறைகள், ஐரோப்பிய நிலப்பிரபுத்துவ முறையை ஒத்திருந்தாலும், இரண்டையும் சமமாக கருதுவது சரியானதன்று. அவ்வாறாக இந்தியாவில் நிலவிய நிலஉடைமை அமைப்பு ''**ஜமீன்தாரி**'' முறை எனப்பட்டது.

## ஜமீன்தாரி அமைப்பு

பன்னெடுங்காலமாக, இந்தியாவில் நிலத்தின் விளைச்சலில் ஒருபகுதி நிலவருவாயாக பெறப்பட்டது. இவ்வருவாய் அரசு அலுவலர்கள் மூலமாக நேரிடையாகவோ அல்லது இடைத்தரகர்கள் வாயிலாகவோ பெறப்பட்டது. இவர்கள் வசூலித்த வரியின் ஒரு பகுதியை தங்கள் பங்காக எடுத்துக் கொண்டனர். இவர்களே ஜமீன்தார்கள் என அழைக்கப்பட்டனர். நிலவரி வசூல் செய்த இடங்களில் அவர்களுக்கு சில சமயங்களில் சொந்த நிலமும் இருந்தது.

பிரிட்டிஷர் காலத்தில், இந்த ஜமீன்தாரி முறையானது. வடக்கு மற்றும் வடமேற்கு இந்தியாவில், மாற்றியமைக்கப்பட்டு மகல்வாரி (Mahalwari) முறையாக அறிமுகம் செய்யப்பட்டது. இந்த முறையில் கிராமம் கிராமமாக, ஆதினங்கள் வாரியாக, நிலஉடைமை அமல்படுத்தப்பட்டது. நிலஉடைமையானது, **மேட்டுக்குடி** குடும்பத்திற்கு கூட்டு உடைமையாக ஆக்கப்பட்டது.

## 1.3 இன அரசின் தோற்றம்

நிலப்பிரபுத்துவ ஆட்சிமுறை, ஐரோப்பிய மக்களுக்கு, தற்காலிமான பாதுகாப்பு அமைப்பாக இருந்ததேயல்லாமல், மக்களிடையே தேசிய இன உணர்ச்சியையும், வாழ்க்கை முறையையும் அமைத்து கொள்வதற்கு எவ்வகையிலும் உதவி செய்யவில்லை.

நிலப்பிரபுக்களாட்சி முறை சாதாரண மக்களை அடக்கி அவர்கள் மீது, ஆதிக்கம் செலுத்துவதாகவே இருந்தது. எனவே இதற்கெதிராக, மக்கள் செயல்பட்டதோடு வலிமைமிக்க ஆதிக்கம் செலுத்தக் கூடிய அரசுகள் தோன்ற ஆரம்பித்த போது அவற்றை ஆதரித்தார்கள். இதற்கு வேறு சில நிகழ்வுகளை காரணிகளாக குறிப்பிடலாம். அவற்றுள் அப்போது மக்களிடையே ஏற்பட்ட மறுமலர்ச்சி, மத சீர்திருத்த இயக்கம் போன்றவைகளை குறிப்பிடலாம். இதனை அப்போது, இங்கிலாந்து நாட்டை ஆட்சி செய்த டியோடர் பரம்பரையைச் சேர்ந்த அரசர்கள் அதிகார குவிப்பு மற்றும் அதிகாரத்தை திறமையாக கையாளும் முறையால் மக்களை தேசிய உணர்வு உடையவர்களாக மாற்றலாம் என்பதையும் அவர்களை ஒற்றுமைப்படுத்தி அரசுக்கு சாதகமாக செயல்பட செய்யமுடியும் என்பதையும் எடுத்துக்காட்டினார்கள்.

மக்களிடையே தொடர்ந்து ஒற்றுமை உணர்வைப் போற்றவும், இன உணர்வுகள் அடிப்படையில் அவர்களைத் திரட்டி, வளர்ச்சி ஏற்பட உதவ முடியும் என்பதையும் அவர்கள் இதர ஐரோப்பிய நாடுகளுக்கு புரியுமாறு செய்தார்கள். இத்தகைய அரசியல் மாற்றம் இங்கிலாந்து நாட்டில் ஏற்படுவதற்கு அடிப்படையான மற்றும் முக்கியமான காரணமாக இங்கிலாந்தை ஐரோப்பிய கண்டத்தினின்றும் ஆங்கிலக் கால்வாய் பிரித்து அதனால் அது தனித்தன்மை உடையதாக இருந்ததேயாகும். காலப்போக்கில் குறிப்பாக பதினைந்தாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் ஆங்கிலேயர்கள் பிரான்சு போன்ற நாடுகளில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தனர். இந்த போக்கு, பிரான்சு, ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகல் நாடுகளில் மேலே கூறப்பட்ட தேசிய இன உணர்வு ஏற்பட ஏதுவாயிற்று. இதே போல பதினாறாம் நூற்றாண்டில் டென்மார்க், மற்றும் சுவீடன் மக்களிடையே இவ்வுணர்வை தோற்றுவித்து ஒருமைப்பாட்டை மேம்படுத்தியது.

இவ்வாறாக, புதிய அரசு ஒன்று தோன்றியது. அரசு பற்றிய பழைய கருத்துக்கள் மறைந்து 'தேசியம்' என்ற உணர்ச்சி மேலோங்கி மக்களிடையே ஏற்பட்ட ஒற்றுமை, இத்தகைய அரசுகளை பாதுகாத்தது. அந்த அடிப்படையில் தான் பதினைந்து மற்றும் பதினாறாம் நூற்றாண்டில் அரசுகள் தோன்றவும், இந்த அரசுகளுக்கிடையே சமநிலை மற்றும் இறைமை அதிகாரம் ஏற்கப்பட்டு, நிலைநாட்டப்பட வேண்டும் என்ற உறுதிப்பாடு அரசுகளுக்கிடையிலும் மக்களிடத்திலும் மேலோங்கி இருந்தது. இம்மாற்றம், பன்னாட்டு சட்டம் தோன்றுவதற்கு துணை நின்றது.

## இன அரசின் வளர்ச்சி

இன அரசுகள் வரம்பற்ற அதிகாரம் செலுத்தும் முடியாட்சிகளாக இருந்தன. திருச்சபை அதிகாரம் ஒதுக்கப்பட்டு பிரபுக்களாட்சி மறையத் தொடங்கிய காலத்தில் மக்கள் அவர்களுடைய உயிர்களுக்கு பாதுகாப்பு தரத்தக்க அரசுகள் மேல் நம்பிக்கை கொண்டு, அவற்றை ஆதரித்தனர். புரட்சி கிறிஸ்துவ மதமும் கூட நான்கு எல்லைகளுக்குட்பட்ட பகுதிக்கு தான் அதிகாரம் செலுத்த அரசர்களுக்கு உரிமை உண்டு என்று கூறி வந்த போதிலும், சமயத்தை கட்டுப்படுத்துவதற்கு அதிகாரம் அரசர்களுக்கு உண்டு என ஏற்றுக்கொண்டது. எனவே தான் தெய்வீக தோற்றக் கொள்கை அடிப்படையில், அரசர்கள் வரம்பற்ற அதிகாரம் படைத்த முடியாட்சிகளை ஆதரித்தனர். இருப்பினும், இத்தகைய அரசர்களின் ஆதிக்கம் மக்களிடையே தொடர்ந்து நடைபெறமுடியவில்லை. அடுத்த கட்டமாக, இன அரசுகளில் அரசருக்கும் மக்களுக்குமிடையே, பூசல்கள் ஏற்பட்டு மக்கள், தங்களுடைய உரிமைகளுக்காக அவர்களுடைய எண்ணங்கள். வாழ்க்கை முறைகளை சிறந்த முறையில் அமைத்துக் கொள்ள போராடினார்கள். மக்களுக்கு பிரதிநிதித்துவம் தரும் அரசாங்கம் சிறந்ததென கருதி குடியாட்சி முறை வேண்டுமென வற்புறுத்தினார்கள்.

குடியாட்சி முறை மூன்று முக்கிய கோட்பாடுகளை வற்புறுத்துகிறது. அவை சமத்துவம், மக்கள் இறைமை மற்றும் தேசியம் என்பனவாகும். முதலில் சொல்லப்பட்ட சமத்துவ கோட்பாடு, பிரெஞ்சு புரட்சியாளர்கள் 1789–ம் ஆண்டு வெளியிட்ட 'மனித உரிமைகள் பிரகடனத்தில்' வற்புறுத்தப்பட்டுள்ளது. அப்போது முதல் ஏழை எளிய மக்கள் முதல் அனைவரும் அடிமைதனத்திலிருந்து விடுபட்டு சமூக, சமய மற்றும் பொருளாதார துறைகளில் எவ்வித பாகுபாடும் இல்லாமல் சுதந்திரமாக வாழவேண்டும் என்ற கருத்து தொடர்ந்து வலியுறுத்தப்பட்டது. மக்களிடத்தில் தேசியம், சுதந்திரம் மற்றும் சமத்துவ உணர்வுகள் மேலோங்கி அவற்றை அடைவதற்கு அவர்கள் உத்வேகத்துடன் நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டார்கள். இத்தகைய உணர்வு அவர்களிடையே ஏற்படுவதற்கு பிரெஞ்சு புரட்சியும் முக்கியமான காரணமாகும் என்று சொல்லப்படுகிறது.

வரம்பற்ற முடியாட்சி முறை மறைந்த போது அதனுடைய நடைமுறைகளும் மறைந்து போனதோடு எதிர்காலத்தில் அத்தகைய ஆட்சி முறைகள் தோன்ற முடியாதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாயிற்று. இவ்வாறாக, ஐரோப்பிய கண்டத்தில் குடியாட்சி முறையை பின்வரும் நவீன கால தேசிய இன அரசுகள் ஏற்பட்டன. இவ்வரசுகள் தொழில், வர்த்தகம் மற்றும் வியாபாரம் ஆகியவற்றில் தடைகள் இல்லாமல் மக்கள் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அவற்றை விரிவுபடுத்தவும் புதியனவற்றை கண்டுபிடிக்கவும், சுதந்திரமாக இவை எல்லாவற்றிலும் செயல்படவும் வழிவகை செய்தன. இதன் காரணமாக நிலம் மற்றும் முதலீட்டில் தெளிவான அதே சமயத்தில் உறுதியான முற்போக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வகையான தேசிய இன அரசுகள் உலகெங்கிலும், விரைவில் ஏற்பட்டன. இதன் விளைவாக தன்னைத்தானே ஆட்சி செய்துக்கொள்ள சுதந்திரம் வேண்டும் என்ற 'தன்னாட்சி' உறுதிப்பாடு மக்களிடையே மேலோங்கி நின்றது. மக்கள் எந்தெந்த அரசுகளில் வாழ்ந்தார்களோ, அந்த அரசுகளின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அவர்களுடைய தொழில்கள் மற்றும் வியாபாரம் போன்றவைகளை அமைத்து முன்னேறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டதன் காரணமாக, கிட்டத்தட்ட ஐந்து நூற்றாண்டுகளுக்கு இம்முறை பின்பற்றப்பட்டது. மேற்சொல்லப்பட்ட கொள்கைகள் அடிப்படையில் ஏற்பட்ட இன அரசில் குடிமக்களிடத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தியதோடு அவற்றின் பாதுகாப்பினையும் உறுதி செய்து கொண்டனர்.

### சமதர்ம அரசு

சமதர்ம கொள்கையை பின்பற்றுபவர்கள் அரசு நன்மை தரும் நிறுவனம் என்பதாக கருதுகிறார்கள். எனவே மக்களுக்கு சமூக நீதி கிடைப்பதற்கு அதிக அளவில் பொருள் உற்பத்தி அதனை பகிர்ந்தளித்தல் போன்றவற்றில் அரசு கட்டுப்பாடு அவசியம் என கருதுகிறார்கள். சமதர்ம அரசில் பொருள் உடைமை, பொருள் உற்பத்தி சாதனங்கள் மற்றும் பரிவர்த்தனை போன்றவைகளும், தரப்படும் வேலைக்கான ஊதியமும் அவரவர் தேவைக்கு தகுந்தாற் போல இருக்கவேண்டும் என்று சமதர்மவாதிகள் கருதுகிறார்கள். இந்த அடிப்படையில் தான் சமதர்ம அரசு ஏற்பட்டது.

### சமதர்ம அரசின் முக்கிய சிறப்புகள் வருமாறு

J.W. கார்னர் என்பவர் சமுதாயத்தில் உள்ள குறைகள் மற்றும் கெடுதல்களை குறைத்து தீவிர மாற்றங்களை சமதர்ம அரசு ஏற்படுத்தும் என்று கூறியுள்ளார். அதற்கு அவர் பின்வரும் காரணங்களை எடுத்துக்காட்டாக சொல்கிறார். பணமும், அதிகாரமும் சிலரிடத்தில் குவிந்திருக்கின்றன. உழைப்போர் அவர்களுடைய உழைப்பிற்கேற்ற ஊதியத்தை பெறுவதில்லை. முதலாளிகளோடு அவர்களுக்கு போராடுவதற்கான சக்தியோ பேரம் பேசுகின்ற திறமையோ இருக்கவில்லை. இப்போதுள்ள இம்முறை சிலரிடம் அதிகமாக செல்வம் சேரக்கூடிய வாய்ப்புகளை தந்து மக்களிடையே ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்துகிறது. இதில் கால தாமதமும், தேவையில்லாத அலுவல்களும் அதிகரிக்கின்றன. தேசிய பொருளாதாரம் திட்டமிடப்படாமல், கட்டுப்பாடற்ற உற்பத்தி போக்கு இருப்பதால் பொருள்கள் மலிவாக கிடைக்கின்றன. ஊதியம் குறைவாக இருக்கின்றது. அதே சமயத்தில் வேலை கிடைக்காத நிலையும் ஏற்படுகின்றது. இவை எல்லாமும் நியாயமற்ற தன்மை, நேர்மையற்ற போக்கு, பொருள் சேர்த்தலில் அபரிமித விருப்பம் போன்றவைகள் மேலோங்கி தனிமனித நடத்தையின் தரம் குறைகிறது என்றும் கார்னர் எடுத்துக் காட்டியுள்ளார்.

கீழே சமதர்ம அரசிற்கே உரிய சில முக்கியமான தன்மைகள் தரப்பட்டிருக்கின்றன.

### 1. முதலாளித்துவ முறையை நீக்குகிறது.

சமுதாயத்தில் பொருளாதார ரீதியாக ''பணக்காரர்'' மற்றும் ''ஏழை'', ''பொருள் உடையவர்'' மற்றும் ''பொருளற்றவர்'', ''சுரண்டுவோர்'' மற்றும் ''சுரண்டப்படுவோர்'' என்று ஏற்றத்தாழ்வுகளை ஊக்குவித்து மக்களை இருவகையாக பிரிக்கின்ற முதலாளித்துவ முறையை ஒழித்து ஏற்றத்தாழ்வில்லாத சமுதாயத்தை ஏற்படுத்துகிறது.

### 2. போட்டிகளை எதிர்க்கிறது

எல்லா வகையான போட்டிகளையும் ஒழித்து வேலை கொடுப்போர் மற்றும் வேலை செய்வோர் இடையே ஒற்றுமையையும், ஒத்துழைப்பையும் ஏற்படுத்த முயலுகிறது.

### 3. அனைவருக்கும் பொருளாதார சமத்துவம்

சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளுக்கிடையே உள்ள பொருளாதார ரீதியான அதிக அளவிலான இடைவெளியை குறைத்து பொருளாதார சமத்துவம் ஏற்பட உதவுகிறது. செல்வம் குறிப்பிட்ட சிலரிடம் குவிக்கப்படுவதை எதிர்த்து ஏழை மற்றும் பணக்காரர் என்ற நிலைமையை அகற்றி எல்லோரும் சமவாய்ப்புகள் பெறவும், அதனால் கிடைக்கும் நன்மைகளின் பலனை அனுபவிக்கவும் உதவுகிறது. லேவலி என்ற பொருளியல் நிபுணர், ''சமதர்ம அரசு ஏற்றத்தாழ்வுகளை அகற்றி எல்லோரையும் சமமாக்குகிறது'' என்று குறிப்பிடுகிறார்.

### 4. தனியார் உடைமையை எதிர்க்கிறது

தனி நபர்கள் சொத்து குவிப்பதை சமதர்ம அரசு எதிர்க்கிறது. அதை நீக்குவதற்கு முயற்சிக்கிறது. தனியார் உடைமை என்பது திருட்டுக்கு சமமானது என்றும், சமுதாயத்தில் தீங்குகளை தோற்றுவிக்கிறது என்றும் கருதுகிறது. நிலமும் மூலதனமும் எல்லோருக்கும் பொதுவானது என்றும், குறிப்பிட்ட சிலருக்கு உரியதல்ல என்றும் விவரிக்கிறது.

### 5. உற்பத்தியின் மீது சமுதாயக் கட்டுப்பாடு

தனிநபர் பொருள் உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடுவதை தடுத்து அரசே அதனை தேசியமயமாக்கி நடைமுறைப்படுத்தவேண்டும் என்பது சமதர்ம அரசின் கோட்பாடுகளில் முக்கியமானது. உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் பொதுமக்களுக்கே பயன்படவேண்டும். எனவே அரசு அவற்றை தேசிய மயமாக்கி மக்கள் அனுபவிக்கும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

### 6. சமுதாயத்திற்கு முக்கியத்துவம் தருகிறது

தனிநபர் நலனுக்கு மாறாக, சமூகநலன் ஏற்கப்பட்டு சமுதாயத்திற்கு சமதர்ம அரசு முக்கியத்துவம் தருகிறது. குறுகிய மற்றும் சுயநல போக்குகளுக்கு எதிராக பொதுநலனை சமூக அரசு காப்பாற்றுவதற்கு விரும்புகிறது. சமுதாயத்திற்கு எவை எவை தேவையோ, அவை அவை அரசாலேயே உற்பத்தி செய்யப்படவேண்டும் என்பது முக்கியமான குறிக்கோளாகும்.

### 7. தேவைக்கேற்ப உழைப்பாளிகளுக்கு நன்மை தருகிறது

உழைப்புக்கேற்ற ஊதியம் மற்றும் பலன்கள் உழைப்பாளிகளுக்கு கிடைக்க வேண்டும். ஒருவனது உழைப்பிற்கேற்றவாறு ஊதியமளித்தல் என்பது சமதர்ம அரசின் பிரதான

கொள்கையாகும். அதன் சித்தாந்தம் ‘‘ஒருவனின் திறமைக்கேற்றாற் போன்ற பணி, அவன் தேவைக்கேற்றார் போல் ஊதியம்’’.

## 8. முறைகள்

ஜனநாயக – மற்றும் பரிணாம வளர்ச்சியினையே சோசலிஸ அரசு விரும்புகிறது. தற்காலத்தில் நிலவுகின்ற அரசியல் மற்றும் பொருளாதார அமைப்புகளில், படிப்படியாகவும், ஜனநாயக ரீதியிலுமே மாற்றத்தை கொண்டுவர முயற்சிக்கிறது. சோசலிஸ சித்தாந்தம், அரசியல் ரீதியிலான அமைதியான வழிகளையே நம்புகிறது.

**மதிப்பீடு** (Evaluation)

சித்தாந்த ரீதியிலும், பொருளாதார இயக்கம் என்ற முறையிலும் சமதர்ம அரசின் நிறைகள் மற்றும் குறைகள் பின்வருமாறு.

## அ. சமதர்ம அரசின் நிறைகள்

உலகெங்கிலும் பல்வேறு வடிவங்களில் சமதர்ம அரசுகள் உள்ளன. பொது நன்மை குறித்த அனைத்து நடவடிக்கைகளிலும் அரசு அங்கே தலையிடுவதை காணலாம். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார மற்றும் தொழில் நடவடிக்கைகளை அரசே தன் வசம் எடுத்துக் கொண்டு, அவற்றை கட்டுப்படுத்துகிறது. அனைத்து அரசுகளின் போக்குகளும், சோசலிஸ சித்தாந்தத்தின் பாதையில் செல்வதாகத் தெரிகிறது.

1. அரசு தனிமனிதனைக் காட்டிலும், மாட்சிமை கொண்டதாகக் கருதப்படுகிறது. உற்பத்தியின் முக்கிய அம்சமாக மக்கள் நலன் கருதப்படுகிறது.
2. சமூக ஏற்றத்தாழ்வுகளை அறிவியல் பூர்வமாக விளக்குவதுடன், அத்தகைய சமனற்ற நிலைகளை போக்குவதே சோசலிஸ சித்தாந்தத்தின் தலையாய கடமைகளாக கூறப்படுகிறது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், வளங்களின் பயனற்ற உபயோகம், மற்றும் முறையற்ற திட்டமிடல் போன்றவற்றை அறவே நீக்குகிறது.
3. சமுதாயத்தில் நிலவுகின்ற பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அறவே போக்கும் வகையில், தனி உடைமையினை அடியோடு போக்க எத்தனிக்கிறது. இதனால் எளியோர் வலியோரால் சுரண்டப்படுவது அறவே தவிர்க்கப்பட்டு மேம்பட்ட சமுதாயம் உருவாக வழிகோலப்படுகிறது.
4. உற்பத்தியின் கோட்பாடு, சமூக பயன்பாடே தவிர, தனிமனித லாபம் அன்று. தொழிற்சாலைகளை லாப நோக்கத்திற்காக அன்றி, சமூக நலனுக்காகவே முறைப்படுத்தி நிர்வாகம் செய்கிறது.
5. உழைக்கும் வர்க்கத்தினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி சமுதாயத்தில் முக்கிய அந்தஸ்த்தை ஏற்படுத்தித் தருவதுடன், அவர்களின் பணிச்சூழலினை மேம்படுத்தவும் சோசலிஸ அரசு முயற்சிக்கிறது.
6. விரும்பும் மாற்றங்கள் அனைத்தையும் படிப்படியாகவும், அரசியல் ரீதியாகவும் மட்டுமே ஏற்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இவ்வகையில் ஜனநாயகம் வெற்றிப்பாதையில் செல்லவும் உதவுகிறது.

7. இவை அனைத்திற்கும் மேலாக தனிமனிதனை தேவைகளிலிருந்தும், பசிப்பிணி பட்டினிகளிலிருந்தும் விடுவித்து அவன் அரசியல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் பங்கேற்க பலவகைகளில் உதவுகிறது.

## ஆ. சமதர்ம அரசின் குறைகள்

மேற்கூறப்பட்ட சாதகத் தன்மைகளை பெற்றிருப்பினும், சோசலிஸ அரசானது கீழ்க்காணும் காரணங்களினால் கடுமையாக விமர்சனம் செய்யப்படுகிறது.

1. தனிமனிதனுக்கு மேலான அமைப்பாக அரசு செயல்படுவதால், தனிமனித சுதந்திரம் பாதிக்கப்படுகிறது. அரசு எஜமானனாகவும், குடிமக்கள் அரசின் சேவகர்களாகவும் ஆகிவிடக்கூடும். இது ஏற்புடையதன்று.

2. தனிஉடைமை மற்றும் தனிநபர் முயற்சிகள் புறந்தள்ளப்படுவதால், அதிக பட்ச உழைப்பினை காட்ட மனிதர்கள் முற்படமாட்டார்கள்.

3. சித்தாந்த ரீதியில் பல நன்மைகள் இருப்பதாக தோன்றினாலும், நடைமுறைக்கு ஒவ்வாத அமைப்பாகவே இது கருதப்படுகிறது. அரசே அத்தனை அலுவல்களையும் கவனிக்க இயலாது. இது காலப்போக்கில், தாமதத்தையும், ஊழலையும், யதேச்சதிகாரத்தையும் தோற்றுவித்து விடும். இம்முறை அரசில் தொழிற்சாலை லாபத்தில் இயங்க வாய்ப்பில்லை.

4. நுகர்வோர் ஆர்வம் மற்றும் திருப்தி என்பதை சோசலிஸ கொள்கை அங்கீகரிக்கவில்லை. இதனால் நுகர்வோர்களுக்கு எவ்விதமான தேர்ந்தெடுக்கும் உரிமைகளும் அளிக்கப்படுவதில்லை. அரசு அளிக்கும் பொருட்களை மட்டுமே பயன்படுத்தும் நிலைக்கு நுகர்வோர் தள்ளப்படுகிறார்.

5. சோசலிஸ சித்தாந்தப்படி செயல்படும் நாடுகளை விட, தலையீடு இல்லாத வணிக முறைகள் கொண்ட நாடுகள் பல வகையில் முன்னேறியுள்ளன. உதாரணத்திற்கு சோசலிஸ ரஷ்யா மற்றும் சீனாவை விட அமெரிக்கா பன்மடங்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

சோசலிஸ அரசு என்பது குழப்பங்களின் கிடங்கு என்றும் கருதப்படுகிறது. அதன் உண்மையான இலட்சியங்கள் எவை என்பதை எவரும் அறிந்திலர். எனினும், இது உலகம் முழுவதும் வரவேற்பை பெற்றுள்ளது. கம்யூனிசத்தை விமர்சிப்பவர்கள் சோசலிசத்தை ஒரு மிதவாத பாதையாக பாராட்டுகின்றனர். இன்றைய உலகில் அனைத்து வளர்ச்சி பெற்ற நாடுகளும், சோசலிஸ பாதையிலேயே செல்கின்றன. மக்கள் தங்களுக்கு உதவ முன்வரும் அரசையே வரவேற்கின்றனர்.

## 1.4 பொதுநல அல்லது மக்கள் நல அரசு

பொது நல அரசு என்பது இன்றைய இந்திய நாட்டிற்கு பொருந்தும். இந்திய அரசியல் சட்டத்தில் அரசு வழிகாட்டும் கோட்பாடுகளில் பொது நல அரசின் சிந்தனைகள் விரிவாக தரப்பட்டிருக்கின்றன.

அரசியல் சட்டவிதி 98, நீதி, சமூக, பொருளாதார அரசியல் ரீதியிலான சமுதாய அமைப்பொன்றை ஏற்படுத்தி எந்தளவிற்கு முடியுமோ, அந்த அளவிற்கு அதனை பாதுகாத்து தரக்கூடிய நிறுவனங்களை ஏற்படுத்தி, மக்களின் தேசிய வாழ்க்கைக்கு ஆதாரமாக இருக்கும் பொதுநலத்தை மேம்படுத்த அரசு முனையும் என்று கூறுகிறது.

அரசியல் சட்ட விதி 39(அ) வாழ தேவையான ஆதாரங்கள் (ஆ) பொதுநலன் காக்கும் இயற்கை வளங்கள் பகிர்வு (இ) சொத்து குவிப்பிற்கு எதிர்ப்பு (ஈ) ஆண்கள் மற்றும் பெண்களுக்கு அவரவர் உழைப்பிற்கேற்ப பாரபட்சமற்ற ஊதியம் (உ) உழைப்பவர் உடல்நலன் மற்றும் நல்வாழ்வு, பாதுகாப்பு – குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேலும் (ஊ) குழந்தைகளை வேலைக்கமர்த்துதல் ஆகியவற்றைப் பற்றியும் எடுத்துக்கூறுகிறது.

## அரசியல் சட்டவிதி 41 கூறுவதாவது

வேலைக்கு உரிமை, கல்விக்கு உரிமை, மற்றும் வேலை இல்லாதோர், முதியோர் நோயினால் தாக்கப்பட்டவர்கள் மற்றும் உடல் ஊனமுற்றோருக்கான உரிமைகளை அரசு பெற்றுத்தரும்.

விதி 41 வேலை வாய்ப்புகள் ஏற்படுத்துதல், கல்வி அளித்தல், முதியோர், நோய்வாய்ப்பட்டோர், ஊனமுற்றோர்க்கு உதவுதல், உணர்வு பூர்வ நிலையில், மனித நேயம் கட்டிக்காக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது. அவற்றுள் மகளிருக்கு பேறு கால சலுகை, உழைக்கும் வர்க்கத்தினருக்கு நியாயமான கூலி, தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர் மற்றும் நலிவுற்ற பிரிவுகளின் கல்வி மற்றும் பொருளாதார அபிலாஷைகள், மக்களுக்கு சத்துணவு, பொது சுகாதார மேம்பாடு ஆகியன அடங்கும். இவை அனைத்தும், மக்களின் நலன் கருதி, ஆட்சியாளர்களால் நிறைவேற்றப்படவேண்டிய இனங்கள். இவற்றை மாநில அரசுகள் நிறைவேற்றாமல் போனாலும், நீதிமன்றம் அவை குறித்த இனங்களில் தலையிட முடியாது. (அரசியலமைப்பு சட்டம்: பத்தி 37)

## மக்கள் நல அரசின் தோற்றம் மற்றும் வளர்ச்சி

இன்றைய நிலையில், உலகில் உள்ள ஒவ்வொரு அரசும், தன்னை ‘‘மக்கள் நல அரசாக’’ முன்னிறுத்திக் கொள்வதில், அதீத ஆர்வம் காட்டுகின்றது. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், நிலைமை வேறுவிதமாக இருந்தது. பெரும்பான்மையான அரசுகள், ‘‘காவல்’’ அரசுகளாகவே இருந்தன. சட்ட ஒழுங்கு பேணுதலையே அரசுகளின் தலையாய பணியாக கருதப்பட்டது. ‘மக்கள் நலன்’ என்பது தனிமனிதர்களிடத்தும், தனிமனித குழுக்களிடத்தும் விடப்பட்டது. மேற்படி ‘காவல்’ அரசுகள், ‘மக்கள் நல அரசுகளாக’ மாறவேண்டும் என்று உலகத்தின் கவனத்தை ஈர்த்த அரசியல் தத்துவஞானியரில், லாஸ்கி நினைவு கூறத்தக்கவர். முதன்முதலில் இங்கிலாந்து நாட்டில், மக்கள் நல அரசின் சிந்தனை ஆழ்ந்து வேரூன்றியது. ஆயினும், எஞ்சிய பகுதிகளில் நிகழ்ந்தது போல் அல்லாமல், இங்கிலாந்து நாட்டில், மக்கள் நல அரசு வேறு வகைகளில் வளர்ந்தது. இங்கிலாந்து நாட்டில், தொழிற் சங்கங்கள், பேபியன்கள் முதலான சோசலிஸ சிந்தனையாளர்கள் இந்த சித்தாந்தம் தழைத்து வளர காரணமாயினர்.

இங்கிலாந்து பிரதமர் ஆட்லியின் தலைமையில் உருவான அரசு, தேசிய சுகாதாரப் பணிகளுக்கு இறுதி வடிவம் கொடுத்தது. இரயில்வே துறை, நிலக்கரி சுரங்கங்கள், எஃகு தொழிற்சாலைகள், இங்கிலாந்து வங்கி, போக்குவரத்து துறை முதலியன நாட்டுடமையாக்கப்பட்டன. பழமைவாத கட்சியினர் ஆட்சிக்கு வந்தவுடன், நாட்டுடைமையாக்கல் தொய்வு பெற்றது.

இங்கிலாந்தில், மிகப்பெரிய அளவிலான சமூக காப்பீட்டு திட்டம் இன்றளவிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வீட்டுப் பெண்மணிகள் நீங்கலாக, பணிபுரியும் அனைவரும் அதற்கான பங்களிப்பினை தரவேண்டும். இதன் மூலம், வயது முதிர்ந்தோர் ஓய்வூதியம், கைம்பெண்கள் பயன்பெரும் வண்ணம் உதவித்திட்டங்கள், வேலையற்றோருக்கு பிழைப்புத்

திட்டங்கள், இரு குழந்தைகளுக்கு மேலுள்ள குடும்பத்திற்கு படிகள், பள்ளிக் குழந்தைகளுக்கு பால், கர்ப்பிணி தாய்மார்களுக்கு பால் மற்றும் விசேஷ உணவு, இலவச மருத்துவ சேவை, இலவச மேல்நிலைக் கல்வி மற்றும் தாராளமான கல்வி ஊக்கத்தொகை ஆகியன செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இம்மாபெரும் திட்டம், பலமுனை வரிவிதிப்புகளாலும், மக்களின் சுயகட்டுப்பாட்டு ஒழுக்கத்தினாலும் இங்கிலாந்து நாட்டில் சாத்தியமானது. இதில் வியப்பு தரும் செய்தி யாதெனில், இத்தனை கடுமையான வரிவிதிப்புகளுக்கு பின்னரும், நாட்டின் உற்பத்தி வளர்ச்சி பெற்றது தான்! அந்நாட்டில் அதிக அளவு பொருளாதார தன்நிறைவு காணப்படுகிறது.

ஐக்கிய அமெரிக்க குடியரசு, வலிமை பெற்ற தனிமனிதத்துவ சித்தாந்தங்களை தன் அரசியல் அமைப்பில் வலியுறுத்துகிறது. எனவே, ''மக்கள் நலன்'' என்பது பெரும்பான்மையோருக்கு ஏற்புடைய கருத்தாக இருப்பதில்லை. அவர்கள் மனிதன் முழுமையாக தன்னையே சார்ந்திருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றனர். எனினும், ''மக்கள் நல அரசின்'' திட்டங்கள் பெருமளவு அந்நாட்டில் காணப்படுகின்றன. விரிவான சமூக பாதுகாப்பு திட்டங்கள், பொதுப்பணிகள், சிறந்த சாலைகள், வேளாண் உற்பத்திகளுக்கு மானியம், இலவச கல்லூரிகல்வி, உயர் கல்விக்கு நடுவண் அரசின் நிதி உதவி ஆகியன அவற்றுள் அடங்கும். இதற்கு உதாரணமாக டென்னஸி பள்ளத்தாக்கு ஆணையத்தின் பணிகளை சொல்லலாம்.

ஸ்வீடன், நார்வே, டென்மார்க் போன்ற நாடுகளில், அதிக வரிவிதிப்பின் வாயிலாக விரிவான அளவில் மக்கள் நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஐரோப்பிய நாட்டின் ஒரு சில நாடுகளில் உயர்ந்த மற்றும் குறைந்த வருவாய்களின் வித்தியாசம் பத்துமடங்கிற்கு குறைவாகவே உள்ளது.

சோசலிஸ அரசுகளும் மக்கள் நல அரசுகள் தான். ஆனால் அங்கே நலத்திட்டங்கள் மேல்நிலையில் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. தார்மீக மற்றும் ஆன்மீக நலன்களைக் காட்டிலும், பொருள் முதல் வாதமே நிலைநாட்டப்படுகிறது. ரஷ்யா, நவீன நாடுகளில் முதன் முதலில், திட்டமிட்ட பொருளாதாரத்தை கொண்டிருந்தது. வெற்றிகரமான ஐந்தாண்டு திட்டங்களினால், இரண்டாம் உலகபோரின் போது, நல்ல வருவாயினை ரஷ்யா ஈட்டியது.

இந்தியாவில் மக்கள் நல அரசு என்பது முழுமை பெற்றதாக இல்லை. அநேக திட்டங்களில், முழு வேலை வாய்ப்பு என்பது எட்டாக் கனவாகவே இன்னும் உள்ளது. இலவச மற்றும் கட்டாயக் கல்வி குறிப்பிடத்தகுந்த அளவில் முன்னேற்றம் அடைந்தாலும், இன்னும் குறிப்பிட்ட இலக்கினை அதில் நாம் அடையவில்லை. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு, பதினான்கு வயது வரையில் இலவசக் கட்டாய கல்வி அளிக்கப்படும் என்பதையும், குடிமக்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு தரப்படும் என்பனவாகும்.

மக்கள் தொகையை கட்டுப்படுத்தவும் முழு வீச்சில் நடவடிக்கைகள் தொடரப்படவில்லை. முன்னேற்றப்பாதையில் இந்தியா செல்வதில் முட்டுக்கட்டையாக, அதீத பற்றாக்குறை, பிணிகள், அறியாமை, ஒழுங்கின்மை மற்றும் சோம்பல் ஆகியன திகழ்கின்றன என்றால் அது மிகையில்லை.

இந்தியாவில் வகுக்கப்பட்ட ஐந்தாண்டு திட்டங்கள் முழு அளவில் பயனை தந்தது எனக் கருதலாம். ஆறுகளின் குறுக்கே அணைகள் கட்டியது, பாசன வசதிகளை ஏற்படுத்தியது, இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகள் நிர்மாணம் செய்தது, இரயில் எஞ்சின்கள் மற்றும் பெட்டிகள் தயாரிப்பு, தந்தி மற்றும் தொலை தொடர்பு உபகரணங்களின் உற்பத்தி போன்றவை

அதில் அடங்கும். தனியார் துறை நிறுவனங்களை விட, பொதுத்துறை நிறுவனங்கள் நன்கு ஊக்குவிக்கப்பட்டன. ''பொதுத்துறை நிறுவனங்கள் வளர்ச்சி பெற்று ஆதிக்கம் செலுத்த வேண்டும்'' என்பது பண்டித நேருவின் அளப்பறிய ஆசையாகும்.

## மக்கள் நல அரசு: வரையறையும், இயல்பும்

ஆபிரகாம் என்பவர் ''அனைத்து குடிமக்களும் சரியான சந்தை மதிப்புக்குட்படாத விகிதத்தில், குடிமக்களும், சரியான ஊதியம் பெறத்தக்க வகையில் பொருளாதார சக்திகளை மாற்றி அல்லது திருத்தி அமைக்கும் திறனுடைய அரசையுடைய சமூகம்'' என பொருளாதார ரீதியில் வரையறுக்கிறார்.

T.W. கென்ட், ''குடிமக்களுக்கு பலதரப்பட்ட சமூக சேவை செய்கிற அரசு'' என மக்கள் நல அரசை வர்ணிக்கிறார். மேலும் ஒரு குடிமகன், தன்னுடைய சாதாரண வருவாயினை இழக்கும் பட்சத்தில் அவனுக்கு உரிய பாதுகாப்பு தருவது, மக்கள் நல அரசின் அடிப்படை நோக்கம் எனவும் அவர் கூறுகிறார்.

ஹாப்மேன் என்பவர், மக்கள் நல அரசை, கம்யூனிசத்திற்கும் தனிமனித தத்துவத்திற்கிடையே ஏற்படுத்தப்பட்ட மத்தியஸ்த அமைப்பாக கருதுகிறார். தனியார்த்துறைக்கு மானியம் வழங்கும் அதே சமயம், மனித சமூகத்திற்கு குறைந்த பட்ச உதவிகளை செய்வது மக்கள் நல அரசு தருகின்ற உத்திரவாதம் எனவும் குறிப்பிடுகிறார். அனைத்து தரப்பு மக்களுக்கும் மக்கள் நல அரசு உதவிகளை செய்கிறது.

'மக்கள் நல அரசு' என்கிற சிந்தனை, அரசியல் கோட்பாட்டிற்கு புதிது அல்ல. இது குறித்த சிந்தனை, அரசு என்ற அமைப்பின் நோக்கம் மற்றும் செயல்பாடுகளுக்கு, புதிய பரிமாணத்தை அளித்துள்ளது எனலாம். மக்களுடைய நலனை பேணுவதே அரசின் தலையாய கடமை என பிளாட்டோ மற்றும் அரிஸ்டாட்டில் போன்ற மேற்கத்திய அரசியல் தத்துவஞானியர்கள் கருதியுள்ளனர். இதையே பண்டைய இந்திய அரசியல் சிந்தனையாளர்களும் கூறினர். அரசின் கடமை மக்கள் நலனை காப்பதே என்கிற இவர்களது சிந்தனை பெருமளவு நடைமுறைக்கு ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்பகுதியின் தான் மக்கள் நல அரசின் முக்கியத்துவம் நன்கு உணரப்பட்டது. தொழிற்புரட்சியின் விளைவாக அநேக பிரச்சினைகள் எழுந்தன. பணியாளர்களுக்கு மோசமான பணிச் சூழ்நிலைகள், அதீத செல்வம் ஓரிடத்தில் குவிந்த நிலை, நகரங்கள் மற்றும் குடிசைப் பகுதிகளின் அதிகரிப்பு, தொற்றுநோய்களின் பரவல்கள், வேலைவாய்ப்பின்மை அதிகரிப்பு, கூடுதலான விலைவாசி முதலியன அத்தகைய பிரச்சினைகளில் ஒரு சிலவாகும்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாகவும் சில எதிர்மறை விளைவுகள் மனித சமுதாயத்திற்கு ஏற்பட்டன. இதனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் பெருமளவு மக்கள் நலன் காக்க ஒழுங்குபடுத்தும் சட்டங்கள் பெருமளவு இயற்றப்பட்டன. தொழிற்சாலை சட்டம் பிறப்பிக்கப்பட்டதை மக்கள் நல அரசு பிறந்த காலமாக கருதப்படுகிறது.

## பொது நல அரசின் விளக்கம்

பல்வேறு சிந்தனையாளர்களால் கீழ்க்கண்டவாறு மக்கள் நல அரசு வரையறுக்கப்பட்டது.

1. அதிக அளவில் சமூக சேவைகளும் பாதுகாப்பையும் அளிப்பதே மக்கள் நல அரசாகும். – T.W. கெண்ட்.

2. ''பற்றாக்குறை, பிணிகள், அறியாமை, ஒழுங்கின்மை, சோம்பல் ஆகிய மக்களின் ஐந்து எதிரிகளுடன் போரிட்டு, அழிப்பது மக்கள் நல அரசின் நோக்கம்'' – பண்டித நேரு.

3. குறைந்த பட்ச வாழ்க்கைத்தரமும், வாய்ப்பும் ஒவ்வொரு குடிமகனுக்கும் உத்தரவாதம் அளிப்பது மக்கள்நல அரசாகும். – ஜி.டி.எச்.கோல்.

4. வேலைவாய்ப்பு, வருவாய், கல்வி, மருத்துவ உதவி, சமூக பாதுகாப்பு மற்றும் அனைத்து குடிமக்களுக்கும் வசிக்க வீடு என்பதை வழங்கக்கூடிய அரசாங்கத்தை கொண்ட அமைப்பு மக்கள் நல அரசாகும். – அமர்த்தியா குமார் சென்.

## மக்கள் நல அரசின் தன்மைகள்

1. சமுதாயத்தில் தனிமனிதனுடைய மதிப்பினையும் தகுதியினையும் வலியுறுத்தி, அவன் மதிக்கத்தக்க வாழ்க்கை நடத்த உதவுகிறது. அனைவரையும் சமமாக பாவிக்கிறது.

2. முன்னேற்ற பணிகளை மேற்கொள்கிறது. நிலச்சீர்திருத்தம், வேளாண்மையில் வளர்ச்சி, விலைகளின் கட்டுப்பாடு, நியாய விலை, அத்தியாவசிய உணவுப் பொருள் அங்காடி சுகாதாராம், கல்வி, பொதுநல வாழ்வு மற்றும் பொருளாதார நிலைகளை உயர்த்துவது போன்ற முன்னேற்ற பணிகளை மக்கள் நல அரசு மேற்கொள்கிறது.

3. பரந்த அளவில் சமூக சேவைகளை மேற்கொள்கிறது. குடிமக்கள் நல்லமுறையில் வாழ, வேண்டிய சமூக சேவைகளை மக்கள் நல அரசு மேற்கொள்கிறது. தீண்டாமை ஒழிப்பு, வரதட்சணை, குழந்தை திருமணம், உடன் கட்டை ஏறுதல் போன்ற சமூக அவலங்களை ஒழித்து விட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. மக்கள் பயன் பெற பள்ளிகள், மருத்துவமனைகள் போன்றவற்றை அமைக்கிறது. அத்துடன் வேலை இல்லா திண்டாட்டத்திற்கான நிவாரணம், பேறு கால சலுகைகள், முதியோர் பராமரிப்பு போன்ற சமூக சேவைகளும் மக்கள் நல அரசால் செய்யப்படுகின்றன.

## மக்கள் நல அரசின் செயல்பாடுகள்

மக்கள் நல அரசின் பல்வேறு செயல்பாடுகளை மூன்று இனங்களாக பிரிக்கலாம்.

1. ஒழுங்குமுறைப்படுத்தும் பணிகள்
2. பாதுகாப்பு பணிகள்
3. நலப் பணிகள்.

## 1. ஒழுங்குமுறைப்படுத்தும் பணிகள்

சட்ட ஒழுங்கு பராமரிப்பு, சமாதானத்தை நிலைநாட்டல், சமூக விரோதிகள் மற்றும் சமூக விரோத நடவடிக்கைகளை ஒடுக்குதல், வகுப்பு வாத கலவரங்களை அடக்குதல், தொழிலாளர்கள் சுரண்டப்படாமல் தடுத்தல் போன்றவை ஒழுங்குமுறைப்படுத்தும் பணிகளில் அடங்கும்.

## 2. பாதுகாப்பு பணிகள்

உள்நாட்டு சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, பிராந்திய ஒற்றுமையை காத்தல், அடிப்படை நிறுவனங்களில் மேலாண்மை, விரிவுப்படுத்தப்பட்ட தொலை தொடர்பு மற்றும் தரைவழி போக்குவரத்து, ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட வணிக நடவடிக்கைகள், திருட்டு மற்றும் இதர குற்றங்களின் தடுப்பு, அயல்நாட்டு நல்லுறவு, நீதிபரிபாலனம் மற்றும் நாட்டின் மாட்சிமையையும் இறையாண்மையையும் பேணுதல் போன்றவை பாதுகாப்பு பணிகளாக கருதப்படுகிறது.

## 3. நலப்பணிகள்

மலேரியா, காலரா போன்ற கொள்ளை நோய்களை ஒழித்தல், கல்வி நிறுவனங்கள் மூலம் கல்லாமையை போக்குதல், தேசிய வருமானத்தை சமச்சீராய் பங்கிடல், தகுதி உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பளித்தல், சிறைத்துறை சீர்திருத்தம், நிலசீர்த்திருத்தம், சிறு தொழில்கள் வளர்ச்சி, சமூக வளர்ச்சி திட்டங்கள், சமூக அவலங்களை அடியோடு அழித்தல் போன்றவை நலப்பணிகள் என கருதப்படுகிறது. சுருங்கக்கூறின், மக்கள் நல அரசு, மக்களுடைய அத்தியாவசிய மற்றும் அறிவு சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

## மக்கள் நல அரசு பற்றிய விமர்சனங்கள்

மக்கள் நல அரசின் குறைபாடுகள் என கீழ்க்கண்ட இனங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

## 1. அதிக செலவு பிடிக்கும் அமைப்பு

பல்வகையிலான சமூக சேவைத்திட்டங்களுக்கு அதிக நிதி செலவாகும். இதனால் ஏழை நாடுகளுக்கு இத்தகைய அரசமைப்பு எட்டாக் கனியாகவே திகழ்கிறது.

## 2. தனிமனித முயற்சி மற்றும் சுதந்திரத்தை ஒடுக்கி விடுகிறது.

மனிதனின் தனிமனித சுதந்திரத்தையும், தன்னைத்தானே சார்ந்திருத்தலையும் மக்கள் நல அரசு அனுமதிப்பதில்லை. மனிதனின் நெறிசார்ந்த வளர்ச்சியை, முழு ஆற்றலையும் இவ்வகை அரசில் பேண இயலாது. அனைத்திற்கும் மனிதர்கள் அரசை சார்ந்து வாழ வேண்டிய பழக்கத்திற்கு ஆளாவதால், மக்கள் தங்களைப் பற்றிய ஒரு தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளும் வாய்ப்புள்ளது.

## 3. அதிகாரவர்க்கத்தினருக்கு தேவையற்ற முக்கியத்துவம்

அரசின் கொள்கைகளை உருவாக்குவதிலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் அதிகார வர்க்கத்தினருக்கு அதிக பங்கிருப்பதால், அவர்களுக்கு அதீத முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. இதன் காரணமாக, பல்வகையில் நாட்டின் முன்னேற்றம் பாதிப்படைவதாக மார்க்ஸ் முதலான அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## 4. திறனற்ற நிர்வாகத்தினை தோற்றுவிக்கும்

மிக அதிகமான பணிகளை அரசே ஏற்று செய்வதால், திறனற்ற நிர்வாகம் தோற்றுவிக்க வாய்ப்புள்ளது. மனித வளங்கள் மற்றும் இயற்கை வளங்களின் தவறான மேலாண்மைக்கும் அது வழிவகுக்கும்.

### 5. தன்னார்வ  தொண்டு நிறுவனங்களை மந்தமாக்கிவிடும்

அரசு சாரா தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் அரசு ஒழுங்குமுறைப் படுத்துவதால், அத்தகைய நிறுவனங்கள் சுணக்க நிலைக்கு தள்ளப்படுகின்ற அபாயம் எழுகிறது.

### மக்கள் நல அரசின் முக்கியத்துவம்

மக்கள் நல அரசின் மீது கூறப்படுகின்ற விமர்சனங்கள் சரியானவை என்று கருத இயலாது. அத்தகைய அரசின் மீது குறைபாடுகள் இருப்பின், அக்குறைபாடுகளைக் களைந்து அதனை செம்மைப்படுத்த முயற்சிக்க வேண்டுமே தவிர, அதனை அவ்வாறே விட்டுவிட முடியாது.

சீரிய நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை ஊக்குவித்தல், அசாதாரண நிர்வாக தாமதங்களை களைதல், நலத்திட்டங்களை பருவ இடைவெளியில் சீராய்வு செய்தல், ஆதிக்கம் செலுத்தும் நபர்களை கண்டறிந்து அவர்களை நீக்குதல், தன்னார்வ அமைப்புகளை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைளால் மக்கள் நல அரசை செம்மைப்படுத்த இயலும்.

### மக்கள் நல அரசை நிறுவுவதில் உள்ள சிக்கல்கள்

செம்மைப்படுத்தப்பட்ட மக்கள் நல அரசு என்பது ஏட்டளவில் அனைவரையும் கவர்ந்தாலும், நிலவுகின்ற சமூக, அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினைகளால், ஏட்டளவில் உள்ள சித்தாந்தங்களை நடைமுறைக்கு கொண்டு வருவது மிக கடினமானதாக கருதப்படுகிறது. கீழ்க்கண்ட காரணிகள் அதற்கு காரணம் என்றும் கூறலாம்.

### 1. மக்கள் தொகைப் பெருக்கம்

அதீத மக்கள்தொகையினால், அனைத்து வகையிலும் வளங்கள் பற்றாக்குறையாகி விடுகிறது. நிர்வாகமும்  சிக்கலுற்றதாகி விடுகிறது.

### 2. அதிகாரிகளின் ஆணவப் போக்கு

நலத்திட்டங்கள் நல்லமுறையில் வெற்றி பெற அவற்றை அமல் படுத்தும் அரசாங்க அதிகாரிகள் தங்களை முழுமையாக அதில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அத்தகைய அர்ப்பணிப்பு அரிதாகி விடுகிறது. இதனால் தீட்டப்பட்ட திட்டங்கள், பயனற்றதாகி விடுகிறது.

### 3. பொருளாதாரச் சுமை

இந்தியா போன்ற வளரும் நாடுகளில், வளர்ச்சி மற்றும் திட்டப்பணிக்களுக்காக செலவிடப்படும் தொகை, நாட்டின் வருவாயை விட அதிகமாகி விட வாய்ப்புள்ளது. இதனால் அந்நிய நிறுவனங்களிடமிருந்து நிதி கடனாக பெறுதல் போன்ற பிரச்சனைகள் எழக்கூடும். இதன் காரணமாக அதீத நிதி நெருக்கடி ஏற்படவும் இடமுண்டு.

### 4. மக்களுடைய குறுகிய மனப்பான்மை

பரந்த சிந்தனையும், தெளிந்த நோக்கும், மக்களுடைய மனப்பாங்கில் மாற்றமும் மிக அவசியம். குறுகிய ஜாதி, மத கண்ணோட்டத்தில் மக்கள் தங்களுக்குள்ளாகவே வேற்றுமை பாராட்டக்கூடாது. தேச நலனை போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

## 5. சமூக அவலங்கள்

காலம் காலமாக, நமது சமூகத்தின் புரையோடிப் போய் உள்ள தீண்டாமைக் கொடுமை, கொத்தடிமை முறை, நிலச்சுவான்தார்களின் யதேச்சதிகாரம் முதலியன அரசாங்கத்தின் நலத்திட்டங்களை வெகுவாக பாதித்துள்ளது.

## 6. அறநெறிகளுக்கு முக்கியமின்மை

பொருள் சார்ந்த வாழ்க்கையே பிரதானம் என்று ஆகிவிட்ட நிலையில், மக்கள் அறநெறிகளுக்கு முக்கியத்துவம் தருவதில் தயக்கம் காட்டுகிறார்கள். கடமை உணர்வும், எடுத்துக் கொண்ட பணியில் முழு அர்ப்பணிப்பும் அரிதாகிக் கொண்டு வருகிருது. நாட்டின் நலதிட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்த, மக்களின் முழு ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும். நல்ல குடிமக்களால் மட்டுமே சிறந்த மக்கள் நல அரசை உருவாக்கிக் கொள்ள இயலும்.

### பயிற்சி

### பகுதி அ

**கோடிட்ட இடம் நிரப்புக.**

1. நவீன அரசு__________ அரசாகும்.
2. மக்கள் நல அரசு குறித்த சிந்தனை __________ நாட்டில் முதன்முதலில் வேரூன்றியது.
3. ஸ்வீடன், டென்மார்க், நார்வே__________ நாடுகளாகும்.

### பகுதி ஆ

4. நகர அரசினை வரையறு.
5. சோசலிஸ அரசினை வரையறு.
6. மக்கள் நல அரசின் சாதகத் தன்மைகளை சுருக்கமாக கூறுக.

### பகுதி இ

7. இன அரசின் வளர்ச்சியை விளக்குக.
8. நிலப்பிரபுத்துவ அரசின் எழுச்சியை ஆய்வு செய்க.

### பகுதி ஈ

9. மக்கள் நல அரசு குறித்து விரிவான கட்டுரை வரைக.
10. ‘அரசு’ என்ற அமைப்பின் பரிணாம வளர்ச்சியை அலசுக.

# அத்தியாயம் 2
# அரசின் – தோற்றம் – கொள்கைகள்

அரசின் தோற்றம் பற்றி அரசியல் அறிஞர்கள் பலவகையாக விவரித்துள்ளார்கள். அரசு எங்கு எப்போது, எவ்வாறு தோன்றியது என்பதற்கான விளக்கம் வரலாற்றில் கிடைக்கவில்லை. எனவே அரசியல் அறிஞர்கள் யூகங்கள் அடிப்படையில் அரசு இப்படித்தான் தோன்றியிருக்க வேண்டும் என்று பலவகைப்பட்ட விவாதத்திற்குரிய கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு சொல்லப்பட்டுள்ள கருத்துக்கள் பல உண்டு எனினும் ஒரு சில மட்டும் பின்வரும் பக்கங்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

1. தெய்வீக தோற்ற கொள்கை
2. சமூக ஒப்பந்தக் கொள்கை
3. தாய்வழி மற்றும் தந்தைவழிக் கொள்கை
4. வலிமைக் கொள்கை
5. பரிணாமக் கொள்கை

## 2.1 தெய்வீக தோற்றக் கொள்கை

எல்லாக் கொள்கைகளிலும் இதுவே மிகவும் பழமையானது. இதன்படி கடவுள் அரசைத் தோற்றுவித்து ஆட்சி செய்வதற்கு அரசரை நியமிக்கின்றார். கடவுளுக்குப் பதிலாக அரசர் அவரின் பிரதிநிதியாக ஆட்சி செய்கிறார் என்பது இக்கொள்கையின் கருத்தாகும். மகாபாரதத்தில் இக்கொள்கை குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் மக்கள் குழப்பமான சூழ்நிலையில் வாழ்ந்ததாகவும், அச்சூழ்நிலையை அகற்றி அமைதியான சூழ்நிலையில் வாழ்வதற்கு உதவி கேட்டு மக்கள் இறைவனை வேண்டிக் கொண்டதாகவும், அதன்படி இறைவன் அவர்களுக்கு அரசரை ஆட்சி செய்ய பணித்ததாகவும் மேற்கூறப்பட்ட இதிகாசத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டை முதலாம் ஜேம்ஸ் மன்னர் ஆட்சி செய்தார். அவர் பூமியில் இறைவனை போல இறை அதிகாரத்தை அரசர்கள் செய்த காரணத்தினால் அவர்கள் இறைவனுக்கு நிகரானவர்களாகக் கருதப்பட்டார்கள். இறைவனுக்கு மட்டுமே அவர்கள் கட்டுப்பட்டவர்கள் என்றும் அவர்கள் தீங்கு செய்யக்கூடாதென்று சாதாரண மக்கள் தடுக்க முடியாது என்பதாகவும் வரலாற்றில் சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல கிறித்துவசமயத்திலும் அரசு மற்றும் திருச்சபைக்கு இடையே கருத்து வேற்றுமைகள் காரணமாக பிரச்சனைகள் எழுந்த போது இறை வழி தோற்றக் கொள்கை பற்றிய விவாதங்கள் நடைபெற்றன. அதிகாரத்தின் பிறப்பிடம் இறைவன்தான் என்பதில் எல்லோருக்கும் உடன்பாடு இருந்ததெனினும் அவ்வதிகாரத்தை நடைமுறையில் செலுத்துவது அரசரா அல்லது திருச்சபையா (போப் ஆண்டவர்) என்ற வேறுபாடு இருந்தது.

அரசர்கள் இறைவனின் பிரதிநிதிகளாகக் கருதப்பட்டார்கள். அவர்கள் தகாதவர்களாக மக்களுக்கு தீங்கு செய்தாலும் அவர்களை எதிர்க்க மக்களுக்கு உரிமை இல்லை. அவ்வாறு எதிர்த்து புரட்சி நடக்குமானால் அது இறைவனுக்கு எதிரான புரட்சி என்பதாகக் கருதப்பட்டது. அரசர் இறைவனால் நியமிக்கப்பட்ட அவருடைய பிரதிநிதி என்பதால் அரசரை எதிர்ப்பது சரியாகாது என்று வாதிக்கப்பட்டது. தெய்வீக வழிக் கோட்பாட்டின் முக்கியமான சில கருத்துக்கள் சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளன.

1. அரசர் இறைவனால் நியமிக்கப்பட்டு ஆட்சி செய்வதற்கு அதிகாரம் தரப்பட்டிருக்கிறார்.

2. அரசர் பரம்பரை பரம்பரையாக ஆட்சி செய்வதற்கு இறை அதிகாரம் பெற்றிருக்கிறார். ஆட்சி செய்யும் உரிமை தந்தையிடமிருந்து மகனுக்குச் செல்கிறது.

3. அவர் செய்யும் காரியங்களுக்கு அரசர் இறைவனுக்கு மட்டுமே பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்.

4. அரசருக்கு எதிராக செய்யப்படும் புரட்சி சட்ட ரீதியான அதிகாரத்தை எதிர்ப்பதற்குச் சமமாகும்.

இக்கொள்கை நெடுங்காலத்திற்கு மக்களிடையே நிலவிவந்தது என்றாலும் இதர பல காரணங்களால் பிற்காலத்தில் கைவிடப்பட்டது.

### திறனாய்வு

இக்கொள்கை பல கோணங்களில் கண்டறிந்து குறைகள் மற்றும் நிறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. நிறைகள் என்று பார்க்கும் பொழுது குழப்பமான சூழ்நிலையில் மக்களிடையே அமைதியை ஏற்படுத்துவதற்கு தெய்வீகக் கோட்பாடு உதவியிருக்கிறது. குடிமக்கள் ஒன்றுபட்டு ஆட்சி செய்பவர்க்கு அடங்கி நடக்கும் போக்கு ஏற்பட உதவி செய்திருக்கிறது. அரசர் மக்களுக்கு நன்மை மட்டுமல்லாமல் தீமைகள் செய்த போதும் அரசருக்கு எதிராக புரட்சி செய்வது சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கு ஆட்சியாளர்களுக்கு அடிப்படையாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இம்முறை முடியாட்சி அரசிற்கு பக்க பலமாக திகழ்ந்தது. எனினும் பிற்காலத்தில் இதரவகை அரசுகள் ஏற்பட்டபோது பொது மக்களிடையே இக்கொள்கைக்கு ஆதரவு குறைந்து காலப்போக்கில் கைவிடப்பட்டடது.

குறைகள் என்று பார்க்கும்போது கடவுள் மக்களுக்காக அரசை தோற்றுவித்து அரசருக்கு முழு அதிகாரம் கொடுத்து சில சமயங்களில் சர்வாதிகாரம் செய்யவும் அனுமதித்தார் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. பகுத்தறிவாளர்களுக்கிடையே இக்கொள்கைக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. இக்கொள்கை இதர வழிகளில் அரசு தோன்றுவதற்கு பாதகமாக நெடுங்காலம் வரையிலும் இருந்து வந்தது. அரசியலில் இருந்து திருச்சபை பிரிக்கப்பட்டிருந்ததினால் ஐரோப்பிய பகுதிகள் எல்லாவற்றிலும் இக்கொள்கை மறைந்து சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு தோன்றியது என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.



## 2.2 சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு

அரசு தோற்றக் கொள்கைகளில் தெய்வீக தோற்றக் கொள்கை போல இக்கொள்கை பழமையானதும் பிரசித்தி பெற்றதுமாகும். இக்கொள்கை மக்களிடையே ஏற்பட்ட ஒப்பந்த அடிப்படையில் அரசாங்கம் தோன்றியதாகக் கூறுகிறது.

ஆரம்பத்தில் மக்கள் கட்டுப்பாடுகளற்ற ஒழுங்கு முறைகள் பின்பற்றப்படாத சமுதாய அமைப்பில் சுதந்திரமாக வாழ்ந்து வந்தார்கள். இப்படிப்பட்ட நிலை இயற்கை நிலை என்று சொல்லப்பட்டது. இவ்வமைப்பில் ஒவ்வொருவரும் அவரவர் விருப்பப்படி வாழ்ந்தனர். இங்கு பலமிக்கவர்கள் பலமற்றவர்களை அடக்கினார்கள். அவர்கள் விருப்பம்போல வேண்டியதை பெற்றுக் கொண்டார்கள். மற்றவர்களுக்கு அவைகள் கிடைத்தனவா என்ற அக்கறை அவர்களுக்குக் கிடையாது. சிங்கம் காட்டில் எப்படி காட்டு ராஜா என்று கருதப்பட்டதோ

அதைப்போல  வலிமை உடையவர்கள் அவர்களுக்கு வேண்டியதை பெற முடிந்தது. வலிமை உடையோர் உரிமை உடையோராக விளங்கினர். ஆனால் இது மக்களுடைய முன்னேற்றத்திற்கு எவ்வழியிலும் உதவி செய்யவில்லை. அதுமட்டுமின்றி நலிந்தவர்கள் மற்றும் திறமை இல்லாதவர்கள் வாழ்க்கை நடத்துவது கடினமாக இருந்தது. இத்தகைய நிலைமையை மாற்றி எல்லோரும் முன்னேற அவர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய அமைப்பு ஒன்று தேவை என்ற கருத்து மக்களிடையே ஏற்பட்டது. இதன் விளைவாக அவர்கள் எல்லாம் சேர்ந்து கூடி பேசி ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டு முதலில் சமூகத்தை தோற்றுவித்து அதன் பிறகு அரசைத் தோற்றுவித்தார்கள் என்று விளக்குவதுதான் சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு என்று சொல்லப்படுகிறது.

பதினாறு மற்றும் பதினேழாம் நூற்றாண்டுகளில் பொது மக்களிடையே ஆதரவு பெருகி ஏறத்தாழ எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருந்தது. ஹுக்கர் என்பவர் முதன் முதலாக இதற்கு அறிவியல் பூர்வமான விளக்கம் தந்தார். இங்கிலாந்து நாட்டை சேர்ந்த தாமஸ் ஹாப்ஸ் மற்றும் ஜான்லாக் என்பவரும் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த  ரூஸோ என்பவரும் இக்கொள்கையின் சீரிய ஆதரவாளர்கள். இவர்கள் மூவரும் சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டாளர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இவர்கள் மூவருடைய சமுதாய ஒப்பந்தம் பற்றிய கொள்கைகள் ஒப்பு நோக்கு அடிப்படையில் கீழே தரப்பட்டிருக்கின்றன.

| **ஹாப்ஸ்** | **லாக்** | **ரூஸோ** |
|---|---|---|
|  |  |  |
| 1588 – 1679 | 1632 –  1704 | 1712 – 1778 |
| **1. இவர்களுடைய முக்கியான நூல்கள்** | | |
| லெவியாதன் (1651) | சிவில் அரசாங்கம் (1690) | சமுதாய ஒப்பந்தம் (1762) |
| **2. இயற்கை நிலை** | | |
| இயற்கை நிலையில் மனிதன் பயம், அதிகாரம், அரசியல் சமத்துவம் சரியானது என்று அறியாமல் இருந்தான். நியாய, அநியாயங்கள் என்று பாராமல் மிருகங்களுக்குச் சமமான வாழ்க்கையை நடத்தினான். | இயற்கை நிலையில் மனிதன் சுமுகமான சூழ்நிலையில் வாழ்ந்தான் என்றாலும் அரசு என்ற அமைப்பு அவனுடைய நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்தி நடத்திச் செல்ல தேவை என்று உணர்ந்தான். | இயற்கை நிலையில் மனிதன் தன்னுடைய தேவைகளை பெற்றுக்கொண்டு அமைதியான சூழ்நிலையில் நல்ல முறையில் வாழ்ந்தான். இருப்பினும் தனக்கு என்று உடைமை வேண்டுமென்று சேர்க்க ஆரம்பித்தபோது சமநிலை மாறுபட்டது. |

| | | |
|---|---|---|
| **3. இயற்கைச்சட்டம்** | | |
| இயற்கை நிலையில் மனிதர்களுடைய நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்துவதற்கு சிவில் சட்டம் இல்லை. மனிதனுடைய மனசாட்சிதான் அவனுடைய வாழ்க்கைக்கு ஆதாரமாக இருந்தது. ஒவ்வொருவரும் | இயற்கைச் சட்டம் மனித உணர்வுகளை பிரதிபலிக் காமல் அவனுடைய நடவடிக்கையை கட்டுபடுத்துகின்ற நெறியை பிரதிபலிக்கும் சட்டமாக இருக்கின்றது. | பகுத்தறிவு அடிப்படையில் அல்லாமல் மனித எண்ணம் மற்றும் சமூக உணர்வு அடிப்படையில் இயற்கை சட்டம் ஏற்படுகிறது. |
| **4. இயற்கை உரிமை** | | |
| அவரவர் வலிமையை பொருத்து இயற்கை உரிமை அமைகிறது. | உரிமை மனிதனிடம் இயல்பாகவே இருப்பதாகும். உயிர், சுதந்திரம் மற்றும் உடைமையாகியவற்றிற்கு மனிதனுக்கு இயற்கையிலேயே உரிமை இருக்கிறது. | இயற்கை நிலையில் மனிதன் சுதந்திரமானவனாக இருக்கிறான். மனிதன் என்ற அடிப்படையில் அவனுக்குரிய உரிமைகளை அவன் பெற்று அனுபவிக்கிறான். |
| **5. சமுதாய ஒப்பந்தம்** | | |
| சுய பாதுகாப்பு மற்றும் தற்காப்பு ஆகியவைகளுக்கு உள்ள தன்னுடைய உரிமைகள் நீங்கலாக இதர எல்லாவற்றிற்கும் பொதுவான இறைமைக்கு மனிதன் தங்களுடைய உரிமைகளை விட்டுக் கொடுத்து ஒப்பந்த அடிப்படையில் இறைமைக்கு கட்டுப்பட்டு நடக்கிறான். | இயற்கை சட்டத்தை நடைமுறைபடுத்துவதற்காக தேவைப்படும் செயல் ஒன்றை ஏற்படுத்த மனிதன் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்கிறான். சில உரிமைகள் தவிர இதர உரிமைகள் அந்த செயலுக்குத் தராமல் அவனே வைத்துக்கொள்கின்றான். | அரசு என்ற அமைப்பு மனிதர்கள் தன்னுடைய தனிப்பட்ட முறையிலும் அவர்களுடைய ஒட்டு மொத்த கூட்டு அடிப்படையிலும் ஏற்படுத்திக்கொள்ளும் அமைப்பாகும். உதாரணமாக அ, ஆ, இ, ஈ என்பவர்கள் அவருடைய தனிப்பட்ட முறையில் உரிமைகளை விட்டுக்கொடுக்கிறார்களே அல்லாமல் இந்த அ+ஆ+இ+ஈ இவர்கள் எல்லோரும் சேர்ந்து கூட்டாக உரிமைகளை விட்டுக் கொடுக்கவில்லை. |
| **6. இறைமை** | | |
| ஹாப்ஸ் இறைமை அளவற்றது. பிரிக்கமுடியாதது வேறு யாருக்கும் தர முடியாதது, | லாக் இறைமையுடைய அரசு ஒன்றைப் பற்றி சொல்லவில்லை. அவருடைய அரசாங்கம் வரையறை | ஒன்று திரண்ட மக்களின் அமைப்பிடமே இறைமை இருக்கிறது. எனவே ரூஸோ |

| | | |
|---|---|---|
| முழுமையானது சட்டத்திற்கும் மேம்பட்டது. சட்டம், நீதி, உடைமைகளின் பிறப்பிடமாவது. அரசு, திருச்சபை ஆகியவற்றுக்கு மேலானது. அதற்கு எதிராக புரட்சி செய்ய முடியாதது. | செய்யப்பட்டது. குடிமக்களுக்கு கடமைகளை நிறைவேற்ற வேண்டியது. மனிதனுடைய உயிருக்கும், சுதந்திரத்திற்கும், உடமைகளுக்கும் பாதுகாப்பு தந்து அவைகளை அவனுக்கு உறுதி செய்ய வேண்டியது. லாக் பொது மக்கள் இறைமையைதான் குறிப்பிடுகிறாரே அல்லாமல் சட்ட இறைமையைப் பற்றிக் குறிப்பிடவில்லை. | மக்கள் இறைமையை வலியுறுத்தியுள்ளார். எனவே மக்கள் சட்ட பூர்வமான இறைமையுடையவர்களாக இருக்கிறார்கள். பொது கருத்து ஒன்றே இறைமையாகும். இந்த இறைமையின் முக்கிய அம்சங்கள் அதனுடைய ஒற்றுமை, தனித்தன்மை, நிரந்தரத்தன்மை பிறருக்கு கொடுக்க முடியாதது, முழுமையானது மற்றும் வேறுயாரும் உரிமை கொண்டாட முடியாதது. அரசாங்கம் மக்கள் இறைமையின் அடிப்படையில் இயங்கியது ஆகும். ரூஸோ இறைமையுடைய அரசையும் அதன் கீழ் இயங்கும் அரசாங்கத்தையும் வேறுபடுத்தி காட்டியுள்ளார். |
| **7. சுதந்திரம்** | | |
| இயற்கை நிலையில் சுதந்திரம் அரசை சார்ந்து அரசினால் வழங்கப்பட்டு உறுதியளிக்கப்படுகிறது. அதனாலேயே அது நீக்கப்படுகிறது. அரசுக்கு எதிராக அதனை பயன்படுத்த முடியாது. | உயிருக்கு உரிமை, சுதந்திரம் மற்றும் உடைமைக்கு உரிமை என்பதெல்லாம் மனிதனுக்கு இயற்கையாகவே உள்ளவையாகும். இவைகளை அரசாங்கம் மறுக்க முடியாது. | சிவில் அரசில் தனிமனித சுதந்திரம் என்பது இறைமையுடைய அரசால் தரப்படுவது. இறுதி ஆட்சி அதிகாரமுடைய அரசுக்கு எதிராக இதனை பயன்படுத்த முடியாது. அரசுடன் இணைந்து அதனை பெறுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| **8. தனிமனிதனும் அரசும்**<br><br>ஹாப்ஸ் கருத்துப்படி தனிமனித உரிமைகள் அனைத்தும் அரசால் வழங்கப்படுபவைகளாகும். அதனால் அவை உயரியவைகளாக இருக்கின்றன. தனிமனிதன் ஒவ்வொருவனும் இறைமை அதிகாரத்திற்கு கட்டுப்பட்டு வரிகளை செலுத்த<br><br>வேண்டும். தனிமனிதன் அவனுக்கென சிவில் அரசில் சில உரிமைகளை பெற்றிருக்கின்றான் அவைகள்<br><br>(அ) இறைமையால் பணிக்கப்படுகின்ற போது தன்னை மாய்த்து கொள்ளும் உரிமை<br><br>(ஆ) அரசு அவனை சீண்டுகின்றபொழுது அவன் உயிரை பாதுகாத்து கொள்ளும் உரிமை<br><br>(இ) அவனுடைய உயிருக்கு உத்திரவாதம் தர முடியாத அல்லது பதவியிலிருந்து இறக்கப்பட்ட அரசனுக்கு எதிரான உரிமை. | | |
| **9. அரசு மற்றும் அரசாங்கம்** | | |
| அரசு மற்றும் அரசாங்கம் என்று அல்லது சட்டப்படியான மற்றும் நிகழ்முறையிலான இறைமை என்று ஹாப்ஸ் வேறுபடுத்தவில்லை. | அரசு மற்றும் அரசாங்கம் மேலும் அரசு மற்றும் சமுதாயம் ஆகியவைகளை லாக் வேறுபடுத்துகிறார். அவருடைய கொள்கை வரையறுக்கப்பட்ட சட்ட ரீதியான அரசாங்கத்தைப் பற்றி எடுத்துரைக்கின்றது. | இறைமையுடைய அரசையும் அதற்கு கீழ்ப்படிந்து செயலாற்றும் அரசாங்கத்தையும் ரூஸோ வேறுபடுத்திக் காட்டுகிறார். |

### ஹாப்ஸ், லாக் மற்றும் ரூஸோ

இந்த மூவருடைய கருத்துக்களை ஒப்புவமை அடிப்படையில் காணலாம். ஹாப்ஸிருந்து சில கருத்துக்களையும் லாக்கின் சில கருத்துக்களையும் ரூஸோ எடுத்துக்கொண்டு சமுதாய ஒப்பந்தக்கொள்கையை விவரிக்கிறார். ரூஸோ மற்றும் லாக் ஆகிய இருவரும் இயற்கை நிலையில் மனிதன் மகிழ்ச்சியுடனும் சுதந்திரமாகவும் இருந்தான் என்ற கருத்தில் ஒன்றுபட்டுள்ளனர். ஒப்பந்த அடிப்படையில் ஏற்படும் சிவில் அரசாங்கம் அவசியமானது என இவர்கள் கருதினார்கள். இருவரும் அரசு வேறு அரசாங்கம் வேறு என்று கருதினாலும் ஒப்பந்தத்தை அடிப்படையாக கொண்டு அரசாங்கம் தோன்றியது என்ற கருத்தை ரூஸோ ஏற்றுக் கொள்ளவில்லை. இருவரும் மக்களிடம் உள்ள இறைமை அதிகாரத்தை ஒப்பந்தம் நீக்கவில்லை என்று கருதினார்கள். ரூஸோவினுடைய குரலும் லாக்கினுடைய குரலும் ஒன்றே என்றாலும் அவர்களுடைய கைகள் ஹாப்ஸுக்கு சொந்தமானவை.

### சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு – ஒரு மதிப்பீடு

ஹாப்ஸ், லாக் மற்றும் ரூஸோ ஆகியவர்களின் சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு அரசின் தோற்றம் பற்றி விவரிக்கவில்லை. இவர்களுடைய கொள்கைகளுக்கு ஆதாரம் இல்லை. அதற்கு சரியான எடுத்துக்காட்டுகள் கிடையாது. ஹாப்ஸ் எதேச்சதிகார கொள்கையை முன் வைத்தார். லாக் வரையறை செய்யப்பட்ட அரசாங்கம் என்ற கருத்தை எடுத்துரைத்தார். ரூஸோ மக்கள் இறைமையை எடுத்துரைத்து அதனை வற்புறுத்தியுள்ளார்.

### சமுதாய ஒப்பந்த கோட்பாடு – திறனாய்வு

பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் அரசு தோன்றியது என்ற கருத்து மிக பிரபலமாக இருந்தது. ஆனால் இது வெறும் கட்டுக்கதையே. வரலாற்றில் இப்படித்தான் அரசு தோன்றியது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. ஆரம்பகாலத்தில் வாழ்ந்த மனிதர்கள் ஒப்பந்த அடிப்படையில் அரசு தோன்றியது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. செய்து கொண்ட ஒப்பந்த அடிப்படையில் அரசு ஏற்பட்டதென்று சொல்லக்கூடிய அளவிற்கு அறிவாற்றல் உடையவர்களாக அவர்கள் இருந்திருக்க முடியாது. எனவே இது வரலாற்றுக்கு புறம்பான கட்டுக்கதை என்பது நிதர்சனமான உண்மையாகும்.

சட்ட அடிப்படையிலும் இதனில் குறைகள் உண்டு. செல்லத்தக்க சட்ட அடிப்படையிலான ஒப்பந்தம் ஒன்று வலுவான ஆட்சி அதிகாரமுடைய அரசு இல்லாமல் ஏற்பட்டிருக்க முடியாது. ஒப்பந்தம் ஏற்பட்டபொழுது இத்தகைய அதிகாரமுடைய அரசு நடைமுறையில் இருக்கவில்லை என்பது உண்மையாகும். எனவே இக்கொள்கை வரலாறு, சட்டம் மற்றும் தத்துவம் எனப்படும் இயல்களுக்கு அப்பாற்பட்டு ஏற்றுக் கொள்ள முடியாததாக செயற்கையானதாகக் கருதப்படுகிறது.

## 2.3 தாய்வழிக் கொள்கை

**மக்லனன், மார்கன், ஜென்க்ஸ்** ஆகிய அறிஞர்கள் இக்கோட்பாட்டைப் பற்றி அவர்களுடைய கருத்துக்களை விளக்கமாகத் தெரிவித்துள்ளனர். அக்காலத்தில் திருமணம் என்ற பந்தத்தால் ஒன்றுபட்ட மக்கள் இருந்திருக்கவில்லை. அதனால் ஒரு பெண்ணிற்கு பல கணவன்மார்கள் இருந்தார்கள் என்றும் அதனால் அவர்களுக்கு பிறந்த குழந்தைகளுக்கு தகப்பன் யார் என்று அறியமுடியாத நிலையிருந்த காரணத்தால் தாய்வழிமுறை அரசு தோன்றியிருக்ககூடும் என்ற கருத்து நிலவியிருந்தது. குடும்பம் என்பதற்கு பதிலாக

அக்காலத்தில் மக்கள் குழுக்களாகவோ பிரிவுகளாகவோ வாழ்ந்து வந்தனர். அவர்கள் பிற்காலத்தில் கீழே சொல்லப்பட்டுள்ள அடிப்படையில் அரசு தோன்றுவதற்கு காரணமாக இருந்திருக்க கூடுமெனக் கருதப்படுகிறது.

1. தொடக்கத்தில் பழங்குடி அமைப்பொன்று இருந்தது. அது பழமையான மற்றும் முதன்மையான சமூக அமைப்பாக இருந்திருக்கின்றது.

2. காலம் செல்லச் செல்ல பழங்குடி அமைப்புகள் பலவாக பெருகி குலங்களாக பிரிந்தன.

3. இந்த குலங்கள் ஒவ்வொன்றும் பல நூற்றுக் கணக்கான குடும்பங்களாகப் பெருகின. இக்குடும்பங்கள் தனித்தனி வீடுகளாக மாறியதால் அவையெல்லாம் சேர்ந்து அரசாக மாறின.

4. இந்த அடிப்படையில் தற்காலத்தில் குடும்பம் என்று சொல்லப்படுகின்ற அமைப்பு ஏற்பட்டது.

### திறனாய்வு

இக்கொள்கை குடும்பம் எவ்வாறு தோன்றியது என்று விவரிக்கின்றது என்பதல்லாமல் அரசு தோற்றத்தை பற்றி சொல்லவில்லை. இது ஒரு சமுதாய கொள்கையே தவிர அரசியல் கொள்கை அல்ல. இவ்வாறு தான் சமூகமும் அரசும் தோன்றியிருக்க கூடும் என்ற ஆதாரங்கள் கிடையாது.

## 2.4 தந்தைவழிக் கொள்கை

இக்கொள்கை தந்தைவழி முறையில் அதாவது குடும்பத் தலைவன் அல்லது குடும்பத்திற்கு தலைவர் தந்தை என்ற அடிப்படையில் அரசு தோன்றியதாக விவரிக்கின்றது. குடும்பத்தின் விரிவாக்கமே அரசு. ஆரம்பத்தில் குடும்பத்தில் ஒரு மனிதன் ஒரு மனைவி மற்றும் குழந்தைகள் இருந்தனர். குடும்பத்தின் தலைவராக தந்தை மற்ற உறுப்பினர்களை கட்டுப்பாட்டில் கொண்டு வந்து அவர்கள் மேல் அதிகாரம் செலுத்தினார். காலப் போக்கில் குடும்பத்திலிருந்த குழந்தைகள் பெரியவர்கள் ஆனதும் திருமணம் செய்து கொண்டு அவர்களும் குழந்தைகளை பெற்றார்கள். தொடர்ந்து இவ்வாறு ஒரு குடும்பம் பல குடும்பங்களாக மாறி அதன் அடிப்படையில் அரசு தோன்றியது என்று கருதப்படுகிறது. இக்கருத்தை **சர் ஹென்றி மெயின்** என்னும் ஆங்கில அறிஞர் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். இக்கொள்கையின் முக்கியமான கருத்துக்கள் வருமாறு

1. தந்தைவழி குடும்ப அமைப்பில் தந்தை முக்கியமானவர்.

2. வாரிசு முறை ஆண்களை அடிப்படையாக கொண்டு அந்த ஆண்களின் முன்னோர்கள் அடிப்படையிலும் விவரிக்கப்பட்டது. பெண்கள் வழி வாரிசுகள் இந்த கணக்கில் குடும்பத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனவே உறவுமுறை எதிர்மறையானதாக இருந்தது.

3. நிரந்தர திருமணம் என்பது ஒரு மனைவி அல்லது பல மனைவியர்களை கொண்ட அமைப்பாக இருந்தது.

4. மேற்கூறப்பட்ட குடும்பத்தின் தலைவராக ஆண்மகன் ஒருவர் இருந்தார். அவர் குடும்பத்தில் உள்ள அனைவர் மேலும் மற்றும் அவர்கள் சந்ததியினர் மேலும் அதிகாரம் செலுத்தினார்.

5. அவர் குடும்ப விவகாரங்களை கட்டுப் படுத்தியதோடு மட்டுமல்லாமல் அந்த குடும்பத்தின் மதம் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்றிருந்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த **உட்ரோ வில்சன்** என்பவர் அரசியல் சமுதாயத்தின் விதையாகவும் அதிலிருந்து ஏற்பட்ட அரசாங்கங்களின் ஆணிவேராகவும் குடும்ப அமைப்பு இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார். ஒரு குடும்பம் பல குடும்பங்களாகவும், பல அமைப்புகளாகவும் விரிவடைந்த போதும் அவற்றிற்கிடையே உள்ள தொடர்புகளும் அதன் உறுப்பினர்களுக்கிடையே உள்ள இரத்த பந்தமும் ஒற்றுமைக்கு ஆதாரமாக இருந்தன. நாடோடிகளாக வாழ்ந்த மக்கள் விவசாயம் போன்ற தொழில்கள் செய்ய ஆரம்பித்த பொழுது குறிப்பிட்ட ஏதேனும் ஒரு இடத்தில் தங்கினார்கள். அவ்வாறு தங்கிய குடும்பங்களும் அக்குடும்பங்களின் விரிவாக்கமும் பிற்காலத்தில் அரசு என்ற அமைப்பை தோற்றுவித்தன. இதை வலியுறுத்தும் வகையில் **சர் ஹென்றி மெயின்** என்பவர் இந்தியாவில் காணப்படும் கூட்டுக்குடும்ப அமைப்பு, ரோமாபுரியில் காணப்படும் தந்தைவழி அமைப்பு அதன் ஆதிக்கம் மற்றும் கிரேக்க நாட்டில் உள்ள ஏதென்ஸ் நகர மக்களிடையே காணப்படும் குடும்ப அமைப்புகள், அக்குடும்ப அமைப்புகளிடையே நிலவும் சகோதரத்துவம் போன்றவற்றை உதாரணமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

### திறனாய்வு

தந்தைவழி தோற்றக் கொள்கை பரவலாக பல தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டதென அறிஞர்கள் கூறுகின்றனர். தந்தைவழி மற்றும் தாய்வழி கொள்கைகள் அரசியல் கொள்கைகள் அல்ல. இருப்பினும் **ஸ்டீபன்லீகாக்** என்பவர் இக்கொள்கைகள் அரசுக்கும் குடும்பத்திற்கும் உள்ள தொடர்பை எடுத்துக்காட்டுகின்றன என்று கூறுகிறார். மேலும் இவை ஆரம்ப காலத்தில் இருந்த சமுதாய அமைப்புகளை எடுத்துக்காட்டுபவைகளாகவும் அவைகளுடைய நடைமுறைகளை விவரிப்பவைகளாகவும் இருக்கின்றன என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தாகும்.

## 2.5 வலிமை கொள்கை

இக்கொள்கைப்படி எளியோர் மேல் வலியோர் செலுத்திய ஆதிக்கம் காரணமாக அரசு தோன்றியது எனப்படுகிறது. போர்க்காலங்களில் வலியோர் அவர்களுடைய போர்த் திறமையை வெளிப்படுத்தி எதிரிகளை வீழ்த்தி வெற்றி பெறுகின்ற போது அவர்கள் வாழும் பகுதிகளுக்கு சுலபமாக தலைவர்களாகி விடுகிறார்கள். இவர்களே நாளடைவில் அரசர்களாக ஆட்சியும் செய்வோர்களாகிறார்கள். இந்த அடிப்படையில் பல இடங்களில் பல அரசுகள் தோன்றியிருக்கின்றன.

அரசர்களாவதற்கு போர்கள் உதவுகின்றன என்று **ஹ்யூம், ஒப்பன்ஹிம், ஜென்கஸ், பிரன்ஹார்டி மற்றும் டிரியட்ஸ்கி** போன்ற அறிஞர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இம்முறையில் வலிமை உரிமையாகிறது என்ற கருத்து வற்புறுத்தப்பட்டாலும் தனி நபர் சுதந்திரத்திற்கு எதிரானது என்பது தெளிவாகும். வலிமைக் கொள்கை அரசு தோற்றத்தின் ஒரு அம்சத்தை மட்டும் விளக்குகிறது. ஆனால் வேறு சில காரணிகளும் அரசின் தோற்றத்திற்கு ஆதாரமாக இருந்தன என்பது தான் உண்மையாகும்.

## திறனாய்வு

அரசு தோற்றத்தில் வலிமை கொள்கையினுடைய பங்கு இன்றியமையாதது. பேரரசுகள் எழுந்ததும் வீழ்ந்ததும் வலிமையின் காரணமாக என்பதை முழுவதுமாக ஏற்க முடியாது. இக்கொள்கை தகுதியுடையவர்கள் மட்டுமே வாழ்வதற்கு அருகதை படைத்தவர்கள் என்னும் கொள்கையை அளவுக்கும் அதிகமாக வற்புறுத்துகிறது. எளியோர் வீழ்வதும் வலியோர் வாழ்வதும் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் இம்முறை விவேகமானதும் சிறந்ததுமாகாது. இது ஏற்றுக்கொள்ளப்பட்டால் போரிடுவது தொடர்ந்து நடைப்பெற்றுக் கொண்டேயிருக்கும். இவ்வாறு குழப்பம் ஓங்கி அமைதி குறைந்து, பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும் போது போரிடுவதற்காக ஆயுதங்கள் மேலும் மேலும் உற்பத்தி செய்யப்படுவதோடு மக்களும் அதற்காகவே தயார் செய்யப்பட நேரிடும்.

எனவே நாடு மற்றும் மக்கள் எந்த நேரமும் அழிவை நோக்கி செல்வதால் உண்மை மறைந்து, ஒழுக்கக் குறைவு ஏற்பட்டு சம்பந்தப்பட்ட அனைவரும் மடிந்து போவதோடு மனித நேயமும் இல்லாமல் போய்விடும். எனவே வலிமைக் கோட்பாடு ஏற்றுக்கொள்ளதக்கதல்ல எனலாம்.

## வரலாறு அல்லது பரிணாமக் கொள்கை

இதற்கு முன் ஐந்து முக்கிய கொள்கைகள் பற்றி இப்பாடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றில் எதுவும் அரசு தோற்றத்தை பற்றி போதுமான விளக்கம் தரவில்லை. ஆனால் வரலாற்று அல்லது பரிணாமக் கொள்கை ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இருக்கிறது. இக்கொள்கை அரசு இயல்பான ஆனால் சீரான முறையில் பல கால கட்டங்களில் தோன்றி இப்போதைய நிலையை எட்டி இருக்கிறது என்று விவரிக்கிறது.

அரசு கடவுளால் உருவாக்கப்பட்டதென்றோ அல்லது குடும்பம் பெரிதாகி அதனால் ஏற்பட்டதென்றோ அல்லது வலிமை காரணமாக ஏற்பட்டதென்றோ குறிப்பிட முடியாது. **பேராசிரியர் கார்னர்** என்பவர் செயற்கை அல்லது இயந்திரத்தனமான முறையில் ஏற்பட்டிருக்கக்கூடும் என்ற கருத்தை மறுத்து வரலாறு கூறுவது போல இயற்கையாக ஏற்பட்ட அமைப்பு தான் அரசு என்பதாகக் குறிப்பிட்டுள்ளார். அரசின் தோற்றத்தில் பல மூலக்கூறுகள் இருக்கின்றன. அவற்றில் இனப்பற்று, மதம், போர், இடம் பெயர்தல், பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் அரசியல் விழிப்புணர்வு ஆகியவை முக்கியமானவைகளாகும்.

## 1. இனப்பற்று

பொதுவாக மக்கள் குடும்ப அமைப்பு, குல அமைப்பு போன்றவைகளில் வாழ்கின்ற பொழுது அவர்களிடையே உறவு முறை தொடர்பு இருக்கிறது. அவர்கள் எல்லோரும் ஒருவரோடு ஒருவர் பந்தம் பாசம் என்பவைகளால் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் மேற்பட்ட அமைப்புகள் எவ்வளவு பெரியவைகளாக அதிக உறுப்பினர்களை கொண்டதாக மாறினாலும் அவர்கள் எல்லோரும் ஏதேனும் ஒரு மூத்த குடும்பத்தை சேர்ந்த ஆண்மகனை தலைவனாக ஏற்றுக்கொண்டு அவனுக்கு கட்டுப்பட்டு அவன் கட்டளைப்படி நடக்கின்றார்கள்.

இக்கருத்தை பேராசிரியர் **மாக்ஐவர்** (Mac Iver)மிகவும் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார். அதாவது பல தலைமுறைகளை சேர்ந்த மக்கள் எல்லோரும் இன அடிப்படையில் ஒன்றுபட்டு அவர்களுக்கு இடையே சகோதரத்துவ பாசத்தை வளர்த்துக் கொள்கிறார்கள். ஒருவர் மற்றொருவரை விட்டுக் கொடுக்காமலும் சார்ந்தும் வாழ்கிறார்.

இத்தகைய அமைப்பு இன அடிப்படையில் பிற்காலத்தில் அரசாக ஏற்பட்டிருக்கலாம் என்று அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

## 2. மதம்

இனத்தைப் போல மதமும் மக்களை ஒன்றுபடுத்தும் சக்தியாக இருக்கிறது. பொதுவாக மக்கள் எப்பகுதிகளில் வாழ்ந்தாலும் அவர்களுடைய மூதாதையர்கள் எந்த மதத்தைப் பின்பற்றினார்களோ அந்த மதத்தையே பின்பற்றி வாழ்ந்திருக்கிறார்கள். மதம் அவர்களை அணைத்து ஒன்றுபடுத்தியிருக்கிறது. மதத்தலைவர் அவ்வப்பகுதி மக்களுக்கு தலைமை ஏற்று அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றி தந்திருக்கிறார்கள். பொதுவாக மதம் பற்றிய பயம் மக்களிடையே காணப்பட்டாலும் இன அடிப்படையில் அவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு அரசை தோற்றுவித்திருக்கக்கூடும் என்ற கருத்தும் வற்புறுத்தப்படுகிறது.

## 3. வலிமை

வலிமை அல்லது வல்லமை என்பதும் உலகின் பல பகுதிகளில் அரசுகள் மற்றும் பேரரசுகள் ஏற்படக் காரணமாக இருந்திருக்கிறது. இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி மற்றும் இதர ஐரோப்பிய நாடுகளில் அரசுகள் பல மறைந்து புதிய அரசுகள் தோன்றியிருக்கின்றன. இதற்கு முக்கியமான காரணம் வலிமை என்பது தான் ஆகும்.

## 4. உடைமை மற்றும் பாதுகாப்பு

இவை இரண்டும் அரசு தோன்றுவதற்கு பழங்காலத்தில் காரணிகளாக இருந்திருக்கின்றன என்று பேராசிரியர் **லாஸ்கி** போன்றோர்கள் குறிப்பிடுகிறார்கள். மக்கள் தமக்கென்று பொருள்களையும் இதர உடைமைகளையும் சேர்க்கவும் அவற்றை பாதுகாக்கவும் மற்றும் தங்களை சேர்ந்தவர்களுக்கு அவைகள் கிடைக்க வேண்டுமென்று பல நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இதற்கு பக்க பலமாக, பாதுகாப்பாக அமைந்த ஏற்பாடு பிறகு அரசாக ஏற்பட்டது என்றும் கூறுகின்றார்கள்.

## 5. அரசியல் விழிப்புணர்வு

அரசின் தோற்றத்திற்கு அரசியல் விழிப்புணர்வும் முக்கியமான காரணியாக கருதப்படுகிறது. குறிப்பிட்ட நிலப்பரப்பில் நிரந்தரமாக வாழ்க்கையை நடத்த முற்பட்ட போது உயிர் மற்றும் உடமைகளுக்கு பாதுகாப்பு பிரச்சனைகள் ஏற்பட்டன. அதோடு அவர்களுக்கிடையே தனிப்பட்ட முறையில் சமுதாய அமைப்பு முறையில் அமைதி மற்றும் பாதுகாப்பு சட்டம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் ஏற்பட்டன. இவைகளை தீர்த்து வைக்கவும் அவைகள் மீண்டும் மீண்டும் ஏற்படாமல் தடுக்கவும் தோன்றிய அமைப்பே அரசு என்பதாக கருதப்பட்டது.

## முடிவுரை

மேலே சொல்லப்பட்டவைகளில் இருந்து எந்த ஒரு கொள்கையும் அரசின் தோற்றத்திற்கு முழுமையான காரணியாக அமையவில்லை. ஒவ்வொரு காரணியும் ஏதேனும் ஒரு வகையில் தான் அரசு தோன்றுவதற்கும் மக்கள் திருந்தி சிறந்த குடிமக்களாக வாழ்வதற்கும் துணையாக இருந்திருக்கின்றது என்பது தெளிவாகின்றது. இக்கொள்கைகள் எல்லாவற்றிலும் வரலாறு சார்ந்த பரிணாமக் கொள்கை அரசு இயற்கையாக காலப்போக்கில் மெல்ல மெல்ல தடைகள் பலவற்றைக் கடந்து தோன்றியதெனக் குறிப்பிடுகிறது. இது அறிவியலடிப்படையில் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருப்பதால் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

## பயிற்சி

### பகுதி – அ

**I. சரியான விடையை தேர்ந்தெடு.**

1. சமுதாய ஒப்பந்த கொள்கைக்கு ஆதரவு தெரிவித்தவர்கள்

   அ. ஜென்க்ஸ் ஆ. மார்கன்

   இ. ரூஸோ ஈ. சர் ஹென்றி மெயின்

2. இயற்கை நிலையை படம் பிடித்து காட்டிய கொள்கை

   அ. தெய்வீக தோற்றக் கொள்கை

   ஆ. வலிமை கொள்கை

   இ. தாய்வழிக் கொள்கை

   ஈ. சமுதாய ஒப்பந்தக் கொள்கை

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

3. ______________ பிரதிநிதியாக கருதப்படுகிறார்.

4. குடும்பத்தின்______________ அரசு.

5. அரசன் ______________ ஆக்கப்படுகிறான்.

6. வாழ்க்கைக்கு இன்றியமையாதது ____________ எனும் கொள்கை இப்போது நியாயப்படுத்த முடியாதது.

7. இனப்பற்று தான் முதல்__________ ஒற்றுமைக்குக் காரணம்.

**III. சரியா அல்லது தவறா.**

8. தெய்வீக தோற்றக் கொள்கை ஒரு நவீன கொள்கையாகும்.

9. தந்தை வழி குடும்ப அமைப்பில் தந்தை முக்கியமானவர்.

10. பரிணாமக் கோட்பாடு அறிவியல் சார்ந்த கோட்பாடு.

**IV. பொருத்துக**

| | | |
|---|---|---|
| 11. தெய்வீக கோட்பாட்டில் கடவுளின் பிரதிநிதி | – | அரசர் |
| 12. சமூக ஒப்பந்தக் கோட்பாடு | – | தாமஸ் ஹாப்ஸ் |
| 13. தகப்பன்யாரென்று தெரியாத நிலை | – | தாய்வழிமுறை |
| 14. பலகுடும்பங்களின் தொகுப்பு | – | அரசு |
| 15. பேரரசுகளின் எழுச்சி மற்றும் வீழ்ச்சிக்குக் காரணம் | – | வலிமை |

## பகுதி ஆ

16. தெய்வீக தோற்றக் கோட்பாடு விளக்குக.

17. வலிமை கொள்கை என்றால் என்ன ?

18. அரசின் தோற்றத்தை விளக்கும் கொள்கைகள் யாவை ?

19. தாய்வழிக் கொள்கை விளக்குக.

20. தந்தைவழிக் கொள்கை விளக்குக.

## பகுதி இ

21. தெய்வீக தோற்றக் கொள்கையின் கோட்பாடுகள் யாவை ?

22. சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டை மதிப்பீடு செய்க.

23. சர் ஹென்றி மெயின் கொள்கையை விளக்குக.

## பகுதி ஈ

24. ஹாப்ஸ், லாக், ரூஸோவின் சமுதாய ஒப்பந்தக் கொள்கையின் கருத்துக்களை விளக்குக.

25. சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டை ஊக்கு வித்த காரணிகள் யாவை ?

26. அரசின் பரிணாம வளர்ச்சிக்கு ஆதாரமாக இருந்த காரணிகள் என்ன ?

# அத்தியாயம் 3
# புதிய அரசியல் அறிவியல்

## 3.1 பொருள் மற்றும் முன் கருத்து படிவத்தின் தன்மை

அரசு இயங்குகின்ற தன்மை பற்றி அறியும் இயல் அரசியல் அறிவியல் என்பதாகும். அரசாங்கத்தின் கட்டுமானம் மற்றும் அதன் இயக்கத்தை படிப்பதும் இதில் உள்ளடங்கியதாகும். அதனடிப்படையில் அரசியல் அறிஞர்கள் கீழ்க்கண்ட சமூக நிறுவனங்களை பற்றி படிக்க முற்படுகின்றனர்.

1. கழகங்கள்
2. கூட்டமைப்புகள்
3. தேவாலயம்
4. நிர்வாக அமைப்புகள்

ஜான் போதான் (1530 – 1596) என்ற பிரெஞ்சு தத்துவ ஞானி ''அரசியல் அறிவியல்'' என்ற பதத்தைப் பயன்படுத்தினார். முடிவு எடுப்பதில் அதிகார ஒதுக்கீடு மற்றும் அதிகார இடப்பெயர்வை பற்றிய செய்திகளை அரசியல் அறிவியலாளர்கள் கற்கின்றனர்.

அரசியல் அறிவியல் என்பது நேர்மறை எண்ணக் கருத்துகளை முன் நிறுத்துவதிலும், அரசியலை பகுப்பாய்வு செய்வதிலும் மேலும் கொள்கை உருவாக்கத்திற்கு தேவைப்படும் கருத்துகளை சிபாரிசு செய்வதிலும் முற்படும். பாரம்பரிய அரசியல் அறிவியல் என்பது மனதளவில் உருவாகும் எண்ணக்கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு அறிவை வளர்ப்பதாகும். மேலும் அவைகள் ஒழுக்கலாறு அடிப்படையிலானவை. பாரம்பரிய அரசியல் கோட்பாடுகள் உத்தேசம் மற்றும் ஆசிரியர்களின் தனிப்பட்ட முன் அனுபவம் மற்றும் ஆராய்ச்சி கேள்வி ஞானத்தால் உருவாகுவதாகும். ஆனால், புதிய அரசியல் அறிவியல் என்பது புள்ளி விவரங்களோடு சார்ந்த அறிவியல் அடிப்படையிலான கேள்வி ஞானமாகும். அரசியல் அறிவியலின் அறிவியல் தோற்றம் என்பது 1950–களில் நடைபெற்ற நடத்தை இயக்கத்தால் ஏற்பட்டதாகும்.

அறிவியல் ரீதியான அரசியல் என்பது 1950–களில் கண்ட நடத்தை இயல் புரட்சியின் மூலம் நாம் கண்டதாகும். இவ்வியக்கத்தின் பிறகே இவ்வியலின் பல உறுப்பினர்கள் அரசியல் பாடத்திற்கு ஒரு அறிவியல் தன்மை இருப்பதாக உணர்ந்து கொண்டனர். அரசியல் நடத்தைகளை உணர்வதிலும், எண்ணளவு அடிப்படையில் அரசியல் உணர்வுகளை துல்லியமாக எதிர்பார்ப்பதிலும், அனைவரும் ஏற்றுக் கொண்ட மதிப்பு அடிப்படையில் அல்லாத ஆராய்ச்சி வழிமுறைகளில், அரசியல் அறிவியல் நடத்தை இயலின் மூலம் நிலைநிறுத்தியது. நடத்தை இயக்கத்தின் பிறகு இவற்றில் சிறிது மாறி இருந்தாலும் நேர்மறை அறிவியல் மாதிரியை இன்றளவும் அரசியல் அறிவியல் பின்பற்றிவருகிறது. இதன் காரணமாய் எண்ண அடிப்படையில் உருவாகும் அரசியல் கோட்பாடுகள் ஓரளவு மங்கத் தொடங்கின. உண்மையில் வெறும் சிந்தனை அடிப்படையை அரசியல் கோட்பாடுகள் எண்ணளவு அடிப்படையிலான ஆதரிக்கவில்லை, என்பதால் நடத்தை இயல், எண்ணம் அடிப்படையிலான அரசியல் கோட்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

பணி சார் குழுமங்களின் ஆதரவினால் அரசியல் படிப்பு என்பது தொழில்ரீதியான இயல் என்ற அந்தஸ்தைப் பெற்றது.

**உதாரணங்கள்**

1. நாட்டிடை அரசியல் அறிவியல் குழுமம்

2. இந்திய அரசியல் அறிவியல் குழுமம்

3. இந்திய பொது நிர்வாக நிறுவனம்

4. அமெரிக்க அரசியல் அறிவியல் குழுமம்

தூய அறிவியல் நிலையை பெறவேண்டும் என்ற இலக்கை நோக்கி நடத்தை இயல் செல்லும் போது, அரசியல் அறிவியலுக்கு ஒரு தொழில் ரீதியான அந்தஸ்து கிடைக்கப்பெற்றது.

நடத்தை இயலின் காரணமாய் அரசியல் அறிவியலோடு தன்னை ஐக்கியப்படுத்தியது. இத்தகைய ஐக்கியப்படுதல் என்பது அன்று முதல் இன்று வரை எந்தவொரு மாற்றமில்லாமல் தொடர்கின்றது.

அரசியலைப் பற்றிய உண்மையான அறிவை பெறவேண்டும் என்றால் அரசியல் அறிவியல் ஒரு அறிவியல் அடிப்படையிலான, தனித்தன்மைபெற்ற இயல் என்றும், தொழில்ரீதியான ஐக்கியப்படுத்துதல் என்ற நிலையில் இவ்வியல் தன்னைக் காட்டிக் கொள்ளவேண்டும். அறிவியல் அடிப்படையிலான வழிமுறைகளின் மூலம் அரசியல் ஆர்வலர்கள் குறிக்கோள் அடிப்படையிலான, எண்ணங்களின் அடிப்படையில் விடுபட்ட, மதிநுட்ப ரீதியாக அரசியலை புதுமைப்படுத்துவதில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வர். மதிப்பீட்டிலிருந்து விடுபட்ட (Value-free) அறிவியலில் எண்ணம் அடிப்படையிலான குறிக்கோள்கள் கிடையாது.

ஒரு தொழில் ரீதியான பார்வையின் மூலம் அரசியல் ஆர்வலர்கள் புதிய அரசியல் அறிவியலை அறிமுகப்படுத்தினர். அரசு அமைப்புகளில் அரசியல் அறிவுகளைப் புகுத்தினார்கள். பகுத்தறிவு ரீதியான அரசியல் கட்டளைகள், புதிய அரசியல் சமுதாயத்தை உருவாக்குவதில் சமூக பொறியாளர்களான சார்லஸ் மேரியம் மற்றும் ஹெரால்டு லாஸ்கி போன்றோர் முற்பட்டனர்.

புதிய அரசியல் அறிவியல் அறிஞர்கள் குடிமக்களை ஒரு கருவாக மேலும் உற்றுநோக்கி அறிவதில் தங்கள் கவனத்தைச் செலுத்தினர். சுதந்திர மக்களாட்சி அரசை ஊக்கப்படுத்துவதில் புதிய அரசியல் அறிஞர்கள் நாட்டம் கொண்டனர். அறிவியல் அடிப்படையிலான அரசியல் சாத்தியமென்றும் அதனடிப்படையில் உருவாகும் அரசியல் அறிவு சமூக மற்றும் அரசியல் பிரச்சனைகளை நிரந்தரமாக தீர்க்கவல்லது என்ற அடிப்படையில் இயங்கினார்கள்.

நுட்ப ரீதியாய் உருவாக்கப்பெற்ற அரசியல் அறிவியல் அறிவினை அரசியல் அறிஞர்கள் அரசாங்கப் பணிகளில் தக்க வழிகளில் செலுத்தி பயன்பெறச் செய்தனர்.

**மெரியம்** தன்னுடைய ஆராய்ச்சி கட்டுரைகளில் அரசியல் அறிவியல் ஆழ்ந்த அறிவியல் வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என கருதினார். எதிர்பார்ப்பு மற்றும் யோசனை அடிப்படையிலான எண்ணங்களை விடுத்து அரசியல் அறிவியல், அறிவியல் நுட்பங்களையும், வழிமுறைகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை காணத் துடித்தார். மனித நாகரீகத்தை முழுமை படுத்துவதில் எங்ஙனம் அறிவியல் துணை புரிந்ததோ, அதே வகையில் அரசியல் அறிவியல் மனித நாகரீகத்தை காப்பதிலும், செழுமை படுத்துவதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும். அறிவின் பரிணாம வளர்ச்சியினையும் மற்றும் மனித உணர்வுகளையும்

கட்டுப்படுத்தும் குடிமக்கள் கல்வியின் மூலம் மக்களாட்சி மாண்புகளை வளர்க்க முற்பட்டார். இதன் மூலம் முழுமைப்பெற்ற சமுதாயத்தை மற்றும் மனித இனத்தை காணமுற்பட்டார்.

நடத்தை இயல் அறிஞர்களாகிய ஹீனஸ் யூலா (Heinz Eulau) மற்றும் டேவிட் ஈஸ்டன் (David Easton) நடத்தை இயல் ஆராய்ச்சி முறைகளை கண்டறிந்து, பயன்படுத்தி ''புதிய அரசியல் அறிவியலை'' வளர்க்க முற்பட்டனர். புதிய அரசியல் அறிவியலின் குணாதிசயங்களாய் கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. முன் அறிதல் மற்றும் விளக்கங்களை அளிப்பதில் அரசியல் அறிவியல் தக்க நெறிமுறைகளைக் கொண்டு அரசியல் நடத்தைகளைப் பயன்படுத்துவதாகும்.

2. தனிமனித நடத்தை மற்றும் அரசியல் குழுக்களின் நடத்தைகளை எண்ணிக்கை அடிப்படையில் ஆராய்ச்சி செய்து அரசியல் புதிர்களை விளக்கச் செய்வதாகும்.

3. முன்கூட்டி அறிதலை துணைசெய்யும் வகையில் புள்ளியல் விவரங்கள் அளவிடப்படவேண்டும்.

4. ஒரு கோட்பாட்டின் மூலம் ஆராய்ச்சிகள் அமைய வேண்டும். மேலும் அவ்வாராய்ச்சிகள் சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்ற கருத்து முன்படிவத்தினை பெற்றிருக்க வேண்டும்.

5. உண்மையான அறிவியல் ஆராய்ச்சி முறைகளை அரசியல் அறிஞர்கள் பின்பற்றவேண்டும்.

6. அளவிடமுடியாத கருத்துகளாகிய மக்களாட்சி, சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றை எண்ணிக்கையளவில் ஆராயமுடியவில்லையென்றால் அவைகளை ஒதுக்கவேண்டும்.

7. அரசியல் அறிவியல் ஒரு பல இயல் அறிவாக உருவாகவேண்டும்.

8. பல்நோக்கு பகுப்பாய்வு, சர்வே ஆராய்ச்சி, கணக்கு மாதிரிகள் துணைகொண்டு அரசியல் அறிவியல் ஆராய்ச்சி வழிமுறைகளில் அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

யூலாவின் கருத்துப்படி பெரு அளவு பகுப்பாய்வு (Macro level analysis) என்பது நிறுவனங்களையும் சிறு அளவு பகுப்பாய்வு (Micro level analysis) என்பது தனிமனிதனையும் அடிப்படையாகக் கொண்டு அமையும். அறிவியல் ரீதியான அரசியல் என்பது அரசியல் நடத்தைகளை பெரு அளவு மற்றும் சிறு அளவு பகுப்பாய்வின் மூலம் நன்கு தெளிவு படுத்துவதாகும். ஒருமைதன்மை மற்றும் சீரான நெறிகளை வளர்ப்பதில் எண்ணிக்கை அடிப்படையிலான அறிவியல் தன் நோக்கினை செலுத்தும். நிறுவனங்களின் தாக்கம் தனிநபர் நடத்தையிலும், தனிநபர் தாக்கம் நிறுவனங்களின் மேலும் உள்ளவற்றை நாம் அறிவியல் ரீதியாய் அறியலாம்.

அரசியல் அறிஞர்கள் புள்ளியியல் விவரங்களையும், அதன் முடிவுகளையும் ஒழுங்கு படுத்த வேண்டும் என யூலா கருதுகின்றார். அளவிடுவது, இன்றைய ஆராய்ச்சி வழிமுறைகள், சோதனைக்குரிய கருத்து முன்படிவங்கள் ஆகியவைகள் செயல்பாட்டிற்குரிய மேலும் நம்பிக்கைக்குரிய அரசியல் அறிவினை பெருக்கும். எண்ணிக்கை அடிப்படையிலான அரசியல் அறிவியல் என்பது பல அரசியல் கருத்துகளுக்கு ஆதாரமாகவும், நம்பிக்கை தன்மையை கொடுப்பதிலும் முன் நிற்கும். நடத்தை இயல் மூலம் அறியப்படும் அரசியல் அறிவியல் என்பது பகுத்தறிவாக இருக்கும்.

## 3.2 அரசியல் அதிகாரத்தின் பயன்பாடுகள்

அரசியல் அதிகாரம் என்றால் என்ன ?

மாக்ஸ் வீபரின் கூற்றுப்படி அரசியல் அதிகாரம் என்பது வரலாற்று சமூகங்களில் எதேச்சதிகார வர்க்கம் தன்வசம் உள்ள ஒரு பரிசாகும், தற்கால சமுதாயத்தில் அது செல்வத்தின் படைகளாகும். தற்கால சமுதாயத்தில் அரசியல் அதிகாரத்தினை அடைவதில் சச்சரவுகள் இருந்தாலும், அரசியல் அதிகாரத்தினை இன்று குழுக்களின் சமூக அந்தஸ்து, அரசியல் குழாம், மற்றும் அரசியல் கட்சிகள் ஆகியவைகள் அரசியல் அதிகாரத்தினை பெற்று விளங்குகின்றன.

சமுதாயத்தில் அரசியல் மற்றும் அரசியல் நிறுவனங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். கருத்து முன்படிவமாக, அரசியல் என்பது நாம் அன்றாட வாழ்வில் காணும் அதிகார உறவுகளை தெளிவுப் படுத்துவதாகும். உதாரணமாக, பெற்றோர்களிடையே அதிகார உறவுகள் இருப்பதைக் காணலாம். ஆகவே சமுதாயத்தில் சிறு அரசியல் (Micro Politics)மற்றும் பெரு அரசியல் (Macro Politics) உள்ளது. நாம் அன்றாட வாழ்க்கையில் காண்பது சிறு அரசியலாகும். நிறுவன அளவில் உள்ள அதிகார உறவுகள் பெரு அரசியல் எனலாம்.

அரசியல் சமூகவியல் என்ற பாடம் அரசு மற்றும் சமுதாயத்திற்கிடையே நிலவும் உறவுகளை பற்றிய படிப்புகளாகும். அதிகாரத்தைப் பற்றி தெரிந்து கொள்ளவேண்டும் என்றால் நாம் அ மற்றும் ஆ க்களுக்கிடையே உள்ள உறவுகளை அறிந்து கொள்ளவேண்டும். ஆ என்ற நபர் ஒரு காரியத்தை செய்யவேண்டாம் என்று நினைத்திருந்தாலும் அ அந்த காரியத்தை ஆ யின் மூலம் செய்து முடித்தால், அத்தகைய செயல்பாடு அ என்ற நபர் ஆ என்பவர் மீது செலுத்திய அதிகாரம் என நாம் கருதலாம். இதனடிப்படையில் அதிகாரம் என்பது ஒரு முக்கியமான முன் கருத்துப்படிவமாகும். மற்றொரு வகையில் நியமன அதிகாரம் என்பது ஆளுமையாகும் (Authority). உதாரணமாக, ஒவ்வொரு அரசியல் தலைவர்களும் தங்கள் மக்கள் மீது அதிகாரம் செலுத்த முற்படுவர். இதன் காரணமாய் நியமன அதிகாரத்தை மக்கள் மீது இத்தலைவர்கள் செலுத்துகின்றனர் என்று மக்களை நம்பச் செய்வார்கள்.

அதிகாரம், நியாயத்தன்மை மற்றும் ஆளுமை ஒன்றொடு ஒன்று தொடர்புடையது. மேலும் இணைந்தே செல்வதாகும். மற்றவர் செய்ய மறுப்பினும், அதை அவர்கள் கொண்டே செய்வது என்ற அதிகாரம் பல வகைகளை கொண்டதாகும். ஆளுமை என்பது அதிகாரத்தைப் போலத்தான். ஆனால் ஆளுமைக்கு நிறுவனங்களின் துணையுண்டு. ஆளுமையில்லாமல் அதிகாரம் மட்டுமே இருக்குமிடத்தில் அதிகாரத்திற்கு நியாயத்தன்மை தேவைப்படுகிறது. அதிகாரத்திற்கு நம்பிக்கை மற்றும் நியாயத்தன்மையிருக்குமேயானால் அது ஆளுமையாகும்.

அதிகாரம் (Power) மற்றும் ஆளுமை (Authority) அரசியல் சமூகவியல் அறிஞர்களை சிந்திக்கச் செய்யும் இரு அடிப்படையான முன் கருத்துப்படிவமாகும்.

தனிமனித கருத்து, குழுக்களின் நடத்தை குணாதிசயங்கள் மக்களின் எண்ணம் மற்றும் செயல்பாடுகளை இயக்கவல்லது அதிகாரமாகும். (உதாரணம்: பெற்றோர் மற்றும் குழந்தைகள் அரசாங்கம் மற்றும் வரிகள்)

ஆளுமை என்பது அதனோடு தொடர்புடைய நிறுவனங்களையும் குறிப்பிடுவதாகும். நிறுவனங்களின் செயல்பாடுகளுக்கிடையே தான் ஆளுமை வெளிப்பாடு அடையும்.

நம் வாழ்க்கையின் வழி நடத்த சமூக அமைப்புகள் சட்டம் மற்றும் வழிகாட்டிகளை உருவாக்குகின்றது. அத்தகைய சட்டம் மற்றும் விதிமுறைகள் ஆளுமையாகும். (உதாரணம்: பல்கலைக்கழகம் மற்றும் பேராசிரியர்கள்).

பெரும் அளவிலான நிறுவனங்கள் வீழ்கின்ற போது (USSR) அதிகாரம் அவற்றினை கைப்பற்றும். நிலைத்த தன்மையுடைய ஆளுமையை உருவாக்கவேண்டுமென்றால், அதற்கு நியாயத்தன்மை தேவைப்படுகிறது.

சுருங்கக்கூறின், அரசின் மூன்று முக்கிய குணாதியசங்கள் என்னவென்றால், அது அதிகாரம், ஆளுமை மற்றும் நியாயத்தன்மையாகும். அதிகாரம் என்பது பல்வேறு வடிவங்களை எடுத்தாலும் (துன்புறுத்துதல், தாக்கம் மற்றும் கட்டுப்பாடு) ஆளுமையோடு செயல்படுத்தப்படும் அதிகாரம் அடிப்படையில் ஒருவரின் எண்ணத்தை மற்றவரின் மேல் திணித்து செயல்படுத்துவதாகும்.

## 3.3 ஆளுமையின் தன்மை மற்றும் முக்கியத்துவம்

மாக்ஸ்வீபரின் கருத்துப்படி ஆளுமை என்பது மூன்று வகைப்படும்

ஆளுமை
- பாரம்பரிய ஆளுமை
- தலைமைபண்பு ஆளுமை
- சட்ட – பகுத்தறிவு ஆளுமை



**மாக்ஸ்வீபர்**
**1864–1920**

அரசாட்சிகள் மற்றும் பேரரசுகளில் உள்ள பாரம்பரிய சமுதாயத்தில் நாம் பாரம்பரிய ஆளுமையைக் காணலாம். பாரம்பரிய ரீதியாக அதிகாரத்தை இச்சமூகங்களில் காணலாம். தனிமனித மாண்புகளின் மூலம் தலைமை ஆளுமை அதிகாரம் உருவாகும். தலைமை ஆளுமை பண்பையுடைய ஒரு தலைவன் மிக எளிதில் தன் மக்களோடு தொடர்பு கொள்வார். ஒரு சில சிறப்பு குணாதியசங்களின் திறமையின் காரணமாய் தலைமை ஆளுமை நபர்கள் தோன்றுகின்றார்கள். இன்றைய உலகில், சட்டப்பகுத்தறிவு அடிப்படையிலான ஆளுமையை நாம் அரசியல் சாசனத்தின் மூலம் பெறுகின்றோம்.

### உயர் வகுப்பு கோட்பாடு என்றால் என்ன ?

ஒரு சமுதாயத்தில் செல்வம், அதிகாரம், முன்னுரிமைகள் மற்றும் உயர் தகுதிகளைப் பெற்றவர்களை உயர் வகுப்பினர் என்று கூறுகிறோம்.

உயர் குடியினர் என்பதை பரிட்டோ கீழ்க்கண்ட வகையில் விளக்குகிறார்.

1. ஒவ்வொரு சமுதாயத்திலும் சமத்துவமின்மை எப்பொழுதும் இருக்கும்.
2. சிறுபான்மையினரான உயர்குடியினர் பெரும்பான்மையான மக்களை ஆள்வார்கள். உயர் குடியினரை இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம். ''ஆட்சி செய்யும்'' உயர் குடியினர் மற்றும் ''ஆட்சி செய்யா'' உயர் குடியினர் ஆவார்கள். இவ்விரு உயர் குடியினர் சமூக சமன்நிலையை செய்கின்றார்கள்.

உயர் குடியினர் என்ற கருத்து முன்படிவம், உயர்ந்த தகுதிகள், திறமை மற்றும் சிறப்பு சலுகைகளை பெற்றவர்களை குறிப்பதாகும்.

பரிட்டோவின் விளக்கப்படி உயர்குடியை இரண்டு விதமாக பார்க்கலாம்.

1. ஒவ்வொரு சமுதாயத்திலும் சலுகைகளையுடைய மக்கள் உள்ளனர். ஆகவே சமூக வாழ்வில் சமத்துவமின்மை தவிர்க்க இயலாதது. (சமூக வகைபாடுகள்)
2. ஒவ்வொரு சமுதாயத்திலும் உயர் குடியினர் சிறுபான்மையினராகவே இருந்து பெரும்பான்மையான மக்களை ஆட்சி செய்வர்.

உயர் குடியினர் கோட்பாட்டாளர்கள் கூறுவது என்னவென்றால் மக்களாட்சி அமைப்புகளில் ஆட்சி செய்கின்ற ஒரு சில உயர் குடியினரே கொள்கை முடிவினை எடுக்கின்றார்கள். பல குழுக்களுக்கிடையே நடைபெறும் பகிரங்க போட்டியின் விளைவாய் ஏற்படும் கொள்கை முடிவுகள் அல்ல என்பதை நாம் அறியலாம். ராபர்ட் மைக்கேல் கூற்றுப்படி கீழ்க்கண்டவைகள் உயர்குடி வகுப்பினரை விளக்கும் கொள்கைகள் ஆகும்.

- ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒரு குறிப்பிட்ட அதிகாரம் உடையவர்கள் சமுதாயத்தை கட்டுப்படுத்துவார்கள். எந்தவிதமான அரசாங்கமோ அல்லது பொருளாதாரமோ, அவற்றில் என்றும் உயர்குடி ஆட்சிதான் கோலோச்சும். பெரும்பான்மையான மக்கள் தங்களை ஆட்சி செய்யமாட்டார்கள்.
- கிடைக்கின்ற வளங்களை தக்க அமைப்பு ரீதியாகவும், கூட்டு முயற்சியிலும் பெருமளவில் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பர். உயர்குடி உறுப்பினர்கள் அதிகாரத்தை மையப்படுத்தி ஆட்சி செய்வார்கள்.
- கிடைக்கின்ற அனைத்து வழிமுறைகளையும் பயன்படுத்தி உயர்குடி வகுப்பினர் தங்கள் அதிகாரத்தை பாதுகாத்தும், விரிவுபடுத்தியும் கொள்வர். தங்களுக்கு பயன்படும் என்றாலொழிய அதிகாரத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள மாட்டார்கள். தன்னிச்சையாக தங்கள் அதிகாரத்தை மற்றவர்களுக்கு விட்டுக்கொடுக்க மாட்டார்கள்.
- தங்கள் சமுதாயத்தை ஆட்சி செய்ய பல நுட்ப முறைகளை உயர் குடியினர் பின்பற்றுவர். பொருளாதாரத்தை கட்டுப்படுத்தல், காவல் மற்றும் இராணுவத்தை தங்கள் நலன் காக்க பயன்படுத்துதல், கல்வி முறை மற்றும் மக்கள் தொடர்பு சாதனங்களை தங்களுக்கு சாதகமாக சூழ்ச்சியாக நடத்துதல், தங்களை எதிர்பவர்களை தனிமைப்படுத்துவது அல்லது தீர்த்துகட்டுவது, தங்கள் அதிகாரத்தையும் ஆட்சியையும் நியாயப்படுத்தும் அரசியல் கொள்கைகளை உருவாக்குவது போன்ற வழிகளை பின்பற்றி தங்கள் ஆட்சியை நிலைப்படுத்துவர்.

- தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி தங்களின் சுயநலத்தை பேணவும், தங்களின் அதிகார இடத்தை தக்க வைத்துக்கொள்வதில் அக்கறை காட்டுவர்.

இரண்டு காரணங்களுக்காக மார்கீசிய கோட்பாட்டினை உயர் கோட்பாட்டாளர்கள் மறுக்கின்றனர்.

### சமூக வர்க்க கோட்பாடு என்பது:

1. மார்கீசியம் குறிப்பிடுகின்ற 'ஆதிக்க வர்க்கம்' என்பது தவறு, ஏனெனில் தற்கால தொழிற்கூட சமுதாயங்களில் உயர்குடி வகுப்பினரின் தொடர்ச்சியான சுழற்சி முறைதான் வழக்கில் உள்ளது.

2. ஒவ்வொரு சமுதாயத்திலும் சமூக படிநிலைகள் இருப்பதால் வர்க்கம் என்ற பிரிவு முக்கியத்துவம் பெறுகின்றது.

மக்களாட்சி மற்றும் உயர்குடியினர் கோட்பாட்டில் உள்ள அடிப்படை முரண்பாடுகள்.

1. உயர்குடியினர் கோட்பாடு என்பது ஒவ்வொரு சமுதாயத்திலும் சமத்துவமின்மை இருப்பதை குறிப்பிடுகின்றது. ஆனால் மக்களாட்சி கோட்பாடு சமுதாயத்தில் சமத்தவம் இருப்பதாகக் கூறுகிறது.

2. உயர் குடியினர் கோட்பாடு என்பது ஒரு சில உயர் குடியினரே பெரும்பான்மையான மக்கள் மீது ஆதிக்கம் செய்வதாகப் பகர்கின்றது. ஆனால் மக்களாட்சி கோட்பாடு என்பது பெரும்பான்மையாளர்களே ஆட்சி செய்கின்றனர் எனக் கருதுகின்றது.

ராபர்ட் மைகேல் அதிகார வர்க்க எதேச்சதிகார ஆட்சியைப் பற்றி கூறுகிறார்.

தற்கால மக்கள் நலம் நாடும் அரசுகளில் அதிகார வர்க்கத்தின் ஆட்சி அதிகாரங்கள் வளர்ந்து வருவதாகக் கூறுகின்றார்.

1. இராணுவத்தின் துணைகொண்டு, சிறு குழு தலைவர்கள் அரசியல் ரீதியாக ஆட்சி செய்வது.

2. நுட்ப பணியாளர்களை சார்ந்து ஆட்சி செய்யும் அரசியல் தலைவர்கள்இத்தகைய நுட்ப பணியாளர்கள் சமுதாயத்தின் அன்றாட நடவடிக்கையை கட்டுப்படுத்தி ஆட்சி செய்வர்.

3. பொருளாதார மந்தநிலை ஏற்படுகின்ற காலங்களில் சமுதாயத்தில் பொருளாதார வளர்ச்சியினைப் பெருக்குதல்.

4. பல வர்க்கங்களின் மீது அடக்குமுறையைப் பயன்படுத்துதல், குறிப்பாக மத்திய வருவாய் வர்க்கத்தினர் மீது.

### காரல் மார்க்ஸின் உயர்குடி வகுப்பினர் அல்லா கோட்பாடு

ஒரு சமுதாயத்தில் அரசியல் அதிகாரம் எவ்வாறு பிரித்தளிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஆரம்ப காலம் முதற்கொண்டே விளக்கியது மார்கீசிய கோட்பாடாகும். மார்க்ஸின் கூற்றுப்படி ஒவ்வொரு நாகரீகமடைந்த சமுதாயத்திலும் அரசியல் அதிகாரம் என்பது சமமான அளவில் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது. பொருள் உற்பத்தி செய்யும் முறையை தங்கள் வசமாக்கி கொண்டு ஆட்சியில் உள்ளவர்கள் அரசியல்

அதிகாரத்தை ஒருமுகப்படுத்துவர். ஆகையால் அரசியல் தலைவர்கள் ஆதிக்க வர்க்கத்தை பிரதிநிதித்துவம் செய்பவர்கள் ஆவார்கள். அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க சமூக பொருளாதார காரணிகள் தீர்மானிக்கின்றது. ஆளப்படுவோருக்கும், ஆள்வோருக்கும் இடையே தொடர்ச்சியாக நடைபெறும் சச்சரவுகள் சமூக முறைமைகளை நிலை நிறுத்துகிறது. இத்தகைய சச்சரவுகள் உற்பத்தி சக்திகளை தீர்மானம் செய்கின்றது. வர்க்கரீதியாக முதலீட்டாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் என இருவேறு கூறாக மாறும் வர்க்க வேறுபாட்டுடன் வர்க்க பேதங்கள் உருவாக்குகின்றன. சச்சரவுகளின் தன்மைகளின் அடிப்படையில் அதிகார பகிர்ந்தளிப்பு நடைபெறுகிறது. ஆகவே பொருளாதார தன்மையை தீர்க்கவல்லது மார்க்கீசிய கோட்பாடு. அது வர்க்க போராட்டத்தை தூண்டவல்லது. வன்முறை அடிப்படையில் புரட்சியை ஆதரிப்பது. ஆகவே மற்ற சிந்தனையாளர்கள் மார்க்சீய கோட்பாட்டினை எதிர்க்கின்றார்கள்.

## 3.4 தன்மை மற்றும் மற்றவரை கவருதலின் நன்மைகள்

அரசியல் சமூகவியல் என்பது எங்ஙனம் மற்றவரை கவருதல், அரசியல் அதிகாரம் மற்றும் அதன் பகிர்வு ஆகியவற்றைப் பற்றி அறிவதாகும். தற்கால சமுதாயத்தில் மற்றவரை எந்தளவுக்கு நாம் கவருகிறோம் என்ற அடிப்படையில் நாம் வளமை பெறுகின்றோம். ஆகவே அதிகாரம் என்பது மற்றவரை கவரும் விதத்தில் தீர்மானிக்கப்படுகிறது. மற்றவரை கவருதல் என்பது ஒரு நபரின் நடத்தையை இயல்பாக கட்டுப்படுத்துவதாகும். இது அவர்கள் விரும்பும் வண்ணமாக இல்லாமல் எதிராகவும் இருக்கலாம். ஹரால்டு லாஸ்வேல் மற்றும் ஆபிரகாம் கப்பலான் மற்றவரை கவருதல் என்ற கருத்தை விளக்க முற்படும் பொழுது ''கவருகின்ற தன்மையின் அடிப்படையில் அரசியல் தன்மைகள் தீர்மானிக்கப்படுகிறது'' எனக் கூறுகின்றார்கள். மற்றவரின் நடத்தையை பாதிப்பு அடையச் செய்யும் குணாதியசத்தை நாம் கவருதல் எனக் கூறுகிறோம். சில சமயம் மற்றவரை கவரும் தன்மை உச்சநிலையில் இருக்கும். இத்தகைய தருணத்தில் அதிகாரத்தை வைத்திருப்போர் அதிக கவருகின்ற தன்மையை பெற்றிருக்கவேண்டும்.

### மூர்க்கதனம்

கவருதல் என்பதற்கான ஈடு கொடுக்கும் தன்மையில் சிறிது குறையும் பொழுது மூர்க்கத்தனத்தோடு கூடிய அதிகாரத்தை நாம் பயன்படுத்துகின்றோம். இதை நாம் மூர்க்கத்தனமான கவருதல் எனக் கூறுகிறோம். அச்சுறுத்துதல் அல்லது கட்டுப்பாட்டுகளை விதித்தல் என்ற விதத்திலான கவருகின்ற தன்மைகளை நாம் பயன்படுத்துகின்றோம். இத்தகைய அச்சுறுத்துதல்கள் பாராட்டுகள் அல்லது கொடுமைப் படுத்துதல் என்பவற்றோடு துணைவரும். தண்டனைகள் என்பது எதிர்மறையான கட்டுபாடுகள் எனவும், பாராட்டுகள் நேர்மறையான கட்டுப்பாடுகள் என நாம் எடுத்துக் கொள்ளலாம்.

### மற்றவரை கவரும் தன்மையின் அளவு

மற்றவரின் நடத்தையை தாக்கம் செய்கின்ற வகையில் பயன்படுத்தும் எதிர்மறையான அல்லது நேர்மறையான கட்டுப்பாடுகளை நாம் அதிகாரம் என்ற பொருள் விளக்கத்தை அளிக்கின்றோம்.

### தொடர்புடையது

அதிகாரம் என்பது தனிநபரின் சொத்து அன்று. அடிப்படையில் அது மற்றவையோடு தொடர்புடையதாகும். மற்றவர்களை தொடர்புபடுத்தியே அதிகாரம் பயன்படுத்தப்படும்.

ஏனையவரின் நடத்தையை பாதிக்கச் செய்வது அதிகாரம் எனக் கூறுகிறோம். ஒரு சமுதாயத்தில் அதிகாரம் செலுத்துகின்றவர், அதிகாரம் செலுத்தப்படுகின்றவர்கள் என்று உறவுகள் அதிகாரத்திற்கு தொடர்புடையவனவாக உள்ளது. நகரம் மற்றும் கிராம சமுதாயங்களில் இத்தகைய அதிகார உறவுகளை நாம் காணலாம். அரசு மற்றும் அதன் நிறுவனங்களின் அரசியல் அதிகாரம் செயலாக்கப்படுகிறது. அரசின் அதிகாரத்தின் மூலம் அரசியல் தீர்மானிக்கப்படுகிறது. சமுதாயத்தின் பல அடுக்குகளில் காணப்படும் அதிகாரத்தைக் காட்டிலும் எந்த விதத்திலும் அரசின் அதிகாரம் வேறுபட்டது அல்ல. ஆகவே சமுதாய மாற்று காரணிகளின்பார்வையில் அதிகாரம் தீர்மானிக்கப்படுகிறது. சமூக செயல்பாட்டின் அடிப்படையில், அரசியல் அதிகாரம் தீர்மானம் செய்யப்படுகிறது. சமுதாயம் செயல்படும் விதம் மற்றும் அரசியல் அதிகாரங்கள் மாறும் தன்மைபடைத்தது.

## பயிற்சி

### பகுதி–அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:**

1. வருமான வரியை கட்டுப்படுத்துதல் என்பது எதனைக் குறிக்கின்றது ?

   அ. பாரம்பரிய ஆளுமையை

   ஆ. பகுத்தறிவு – சட்ட ஆளுமையை

   இ. சிறப்பியல்புகளை உடைய தலைமை ஆளுமையை

   ஈ. மேற்கூறிய எதுவுமில்லை

2. அரசியல் அறிவியல் என்று யார் முதல் முதலில் பயன்படுத்தினார் ?

   அ. அரிஸ்டாட்டில்

   ஆ. பிளாட்டோ

   இ. ஜான் போதான்

   ஈ. ஆடம் ஸ்மித்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக:**

3. தனிநபர் நடத்தையின் அரசியல் பகுப்பாய்வு என்பது_____________

4. ஆளுமையின் வகைப்பாட்டினை கூறியவர்_____________

**III. சரியா அல்லது தவறா**

5. எண்ண அடிப்படையிலான அரசியல் அறிவியல் என்பது எண்ண மதிப்பீட்டிலிருந்து விடுபட்டது.

6. புதிய அரசியல் அறிவியல் என்பது நடத்தை பகுப்பாய்வாகும்.

**பகுதி ஆ**

7. நடத்தை இயலை விளக்குக.

8. 'புதிய அரசியல் அறிவியல்' என்றால் என்ன ?

**பகுதி இ**

9. அதிகாரத்தின் பொருள் விளக்கத்தினை தருக.

10. ஆளுமை என்றால் என்ன ?

**பகுதி ஈ**

11. உயர்குடி வகுப்பினர் சாராத காரல் மார்க்ஸின் கோட்பாட்டினை திறனாய்வு செய்க.

12. அதிகாரம் மற்றும் ஆளுமைக்கான வேறுபாட்டினை புலப்படுத்துக. ஆளுமையின் வகைப்பாடுகள் என்ன ?

# அத்தியாயம் 4
# அரசு இறைமைக்கு ஏற்படும் சவால்கள்

ஒரு அரசுக்கு, இறைமை தலையாய பண்பு கூறாகக் கருதப்படுகின்றது. இவ்வுலகில் சுதந்திரமான ஒவ்வொரு நாடும் இறைமை பெற்று திகழ்கின்றது. பொதுவாக இறைமையை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. உள் இறைமை மற்றும்
2. வெளி இறைமை

உள் இறைமை என்பது ஒரு நாடு தன்னில் உள்ளடக்கிய கழகங்கள் மற்றும் குழுக்களைக் காட்டிலும் தலையாய அதிகாரத்தை உடையது. வெளி இறைமை என்பது, ஒரு நாடு பன்னாட்டு அமைப்புக்களான ஐ.நா. சபை மற்றும் பன்னாட்டு நீதிமன்றம் ஆகியவற்றை தவிர மற்ற எந்த நாட்டிற்கும், அமைப்புக்கும் சட்ட ரீதியாக கட்டுப்பட வேண்டாம். உள் இறைமையை பொறுத்த வரையில் ஒரு அரசுக்கு இறைமை முழுமையாக உரித்தானது. அத்தகைய இறைமை உடைய அரசு அதன் விருப்பப்படி சட்டங்களை இயற்ற முடியும்.

A.V. டைசியின் கருத்துப்படி இறைமைக்கு இரண்டு விதமான எல்லை தடைகள் உள்ளன. குடிமக்கள் சட்டத்தை மதித்து நடத்தலும், எதிர்க்காமலும் இருக்கும்போது உள் இறைமை என்பது நிலைநாட்டப்படுகிறது. வெளி அல்லது புற இறைமை என்பது இறைமைப்பண்புடைய அரசொன்று இதர அயல்நாடுகளுடனான தொடர்பில் அதன் விருப்பப்படியான கொள்கையை பின்பற்றும் துணிவையும் ஆற்றலையும் பெற்றிருப்பதென்பதாகும். இன்றைக்கு அடிப்படையிலேயே நாடுகளின் உள் இறைமையும், வெளி இறைமையும் சவாலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. நாடுகளின் இறைமைக்கு இப்போது தொடர்ச்சியாக அச்சுறுத்துதல் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இத்தகைய அச்சுறுத்துதல்கள் புதிய காலனி ஆதிக்கம் அல்லது பொருளாதார, உலகமயமாக்குதல் போன்றவற்றால் ஏற்படுகின்றது. பல அரசியல் அறிஞர்கள் தேசிய இறைமை கண்ணுக்கு புலப்படுகின்ற மற்றும் புலப்படாத காரணிகளால் பாதிப்புக்கு அல்லது சுருக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாகக் கருதுகின்றனர்.

## 4.1 தேசிய இறைமைக்கு ஏற்படும் பாதிப்பு

தனிமனிதர்களையும், அமைப்புகளையும், அரசாங்கத்தையும் தகவல் தொடர்பு வலைப் பின்னலில் இணைக்கின்ற இவ்வுலகத்தை ''உலக கிராமம்'' என்று கூறுவது சால பொறுத்தமாகும். இத்தகைய உலக கிராமம் வளர்ச்சி பெறுகின்ற செய்தி தொடர்பு நுட்ப அறிவியல் ரீதியாக ஒரு உலக கலாச்சாரத்தை ஏற்படுத்தும் நோக்கில் சென்று கொண்டிருக்கிறது. தொழில் நுட்ப வளர்ச்சி மற்றும் பொருளாதார சக்திகளின் உந்துதலின் காரணமாய் உலகமயமாக்குதல் என்பது 1990 களிலிருந்து வளர தொடங்கியது. உண்மையில் G8 நாடுகளின் பொருளாதார இச்சைகளைப் பூர்த்தி செய்வதிலும், பல தேசிய கழகங்களின் வியாபாரச் சந்தையை விரிவுப்படுத்துவதிலும் தான் உலகமயமாக்குதல் மிக முனைப்பாக செயல்பட்டு வந்துள்ளது. கடந்த 1990–ஆம் ஆண்டு முதல் பல தேசிய கழகங்களின் எண்ணிக்கை அபரிமித வளர்ச்சியினை அடைந்துள்ளன. கடந்த 1990– ஆம் ஆண்டுகளில் 3000 பல தேசிய கழகங்கள் என்ற எண்ணிக்கையில் இருந்தது. இன்று 63,000 எண்ணிக்கையை தொட்டுள்ளது. சோவியத் யூனியன் சிதைவுக்குப் பின்னும் ஐரோப்பிய

யூனியன் ஏற்பட்டதிலிருந்து பல பல்தேசியகழகங்கள் வியத்தகு வளர்ச்சியை பெற்று உலக நாடுகளுக்கிடையே வாணிபத்தை விரிவுபடுத்துயிருக்கின்றன.

பொருளாதார அடிப்படையில் நாடுகள் பலவும் இணைக்கப்பட்டது போல அரசு – சாரா அமைப்புகளும் மிக அதிக அளவில் தோன்றின.

உதாரணம் : சிறைவாழுநர் விடுவிப்பு உலக அமைப்பு

செஞ்சிலுவைச் சங்க உலக அமைப்பு

எல்லையில்லா மருத்துவர்கள்

பசுமை வழி அமைதி (Green Peace)

சிக்கனமான தொலைதொடர்பு வசதிகளின் மூலம் மேற்கூறிய அமைப்புகள் எளிதில் தங்களுக்குள் தொடர்புகளை ஏற்படுத்தி ஒரு நாட்டின் பொதுக்கொள்கையின் மீது பாதிப்பை ஏற்படுத்தியது. வலிமை குன்றிய நாடுகளில் இத்தகைய அரசு சாரா நிறுவனங்களின் பாதிப்பு என்பது அந்த நாட்டின் உள் இறைமையை பாதிப்பதாக உள்ளது. பன்னாட்டு நிதி நிறுவனம் மற்றும் பலநாடுகளைச் சேர்ந்த நிதிநிறுவனங்கள் பலவும் நிபந்தனைகள் மற்றும் இதர பல்வேறு கட்டுப்பாடுகள் அடிப்படையில் நிதி வழங்குவதாலும் அரசின் உள்நாட்டு இறைமை பாதிப்புக்குள்ளாகிறது.

சமீபத்தில் தோற்றுவிக்கப்பட்ட ஐரோப்பிய யூனியன் அமைப்பு பாரம்பரிய இறைமையின் செயல்பாட்டு விதிகளுக்கு முற்றிலும் பொருத்தமற்றது.

ஐரோப்பிய யூனியன் உறுப்பினர்கள் தேசிய அரசுக்கும் மேலான (Supra national) நிறுவன அமைப்புகளை உருவாக்கினர்.

உதாரணம் : ஐரோப்பிய நீதி மன்றம்

ஐரோப்பிய ஆணையம்

ஐரோப்பிய அமைச்சர்கள் அவை

தேசியத்திற்கு அப்பாற்பட்ட இத்தகைய நிறுவனங்கள் உறுப்பு நாடுகள் இயற்றுகின்ற முடிவுகளை எதிர்க்கலாம். உறுப்பு நாடுகளின் பணப்புழகத்தைக் கட்டுப்படுத்த மத்திய வங்கி மற்றும் ஐரோப்பிய நிதிக் கழகம் ஏற்படுத்தப்பட்டன. ஒருங்கிணைக்கப்பட்ட ஐரோப்பிய சட்டம், மற்றும் மாஸ்ட்ரீட் உடன்படிக்கை ஆகியவை (Maastricht Treaty) ஐரோப்பிய நாடுகளின் நீதிமன்ற சுதந்திரத்தை பாதிக்கச் செய்வதால், உறுப்பு நாடுகளின் இறைமை பாதிப்படைவதாக உள்ளது.

தேசிய இறைமையை உலகமயமாக்குதலோடு தொடர்பு படுத்தப் பார்க்கும் போது பல கருத்துப் படிவமாக தென்படுகின்றது. பொருளாதாரம் மற்றும் கலாச்சார வாழ்வில் ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளுடன் சார்ந்து உள்ளது என்பது தெளிவாகும். பொருளாதார தஞ்சத்தோடு (வியாபாரம், நிதி, மற்றும் நேரடி முதலீடு) கல்வி, தொழில்நுட்பம், அரசியல் கொள்கை, கலாச்சாரம், சுற்றுச்சூழ்நிலை, சட்டம், இராணுவ மற்றும் அரசியல் ஆகியவற்றிலும் மற்ற நாடுகளிடம் தஞ்சம் அடைகின்ற நிலை உலகமயமாக்குதல் மூலம் நடைபெறுகின்றது. பொருள் மற்றும் சேவைகள் நாடுகளின் எல்லையிலிருந்து மிக எளிதில் கடந்து செல்ல முடிகின்றது. சிறப்பு தகுதிகளைப் பெற்ற தொழிலாளர்கள் வெளி நாடுகளுக்கு செல்வதற்கு

சட்டங்கள் தளர்த்தப்பட்டுள்ளன. பல மென்பொருள் பணியாளர்கள் அமெரிக்கா சென்று நிரந்தர தொழிலாளர் அல்லது குடிமக்கள் தகுதியை பெற்றனர். பலர் இந்தியாவில் வசிக்காத இந்தியர்கள் (NRI) இரட்டை குடியுரிமை பெறுவதில் ஆர்வமாக உள்ளனர். இங்ஙனம் மாறுபட்ட உலகில் அரசுகள் செயல்படுவது என்பது மிகவும் சிக்கல்மிகுந்தது. உலக பொருளாதாரத்தை இணைக்கும் முயற்சியும், ஒரு நாட்டின் எல்லையை கடந்து மக்கள் இடப்பெயர்வு செய்வதும் தேசிய இறைமையைப் பாதிப்பதாக உள்ளது. தேசிய இறைமை என்பது இன்று தேசிய ராஜ்ஜிய மற்றும் உலகஅளவில் பிளவுப்பட்டுள்ளது. நாடுகளுக்கு அப்பாற்பட்ட நிறுவன அமைப்புகள் மற்றும் நாட்டிடை வணிகச் சட்டமும் தேசிய இறைமையை வலிமை குன்றச் செய்ய வழிவகுத்தது. உலகமயமாக்குதலின் பல கூறுகள் மொத்தத்தில் தனிப்பட்ட இறைமை பெற்ற அரசுகள் கொள்கை உருவாக்கத்தில் தனிகவனமும் கட்டுப்பாட்டையும் செய்ய தவறிவிட்டன.

தேசத்திற்கு அப்பாற்பட்ட அமைப்புகளான உலக வியாபார அமைப்பு (WTO) ஐரோப்பிய யூனியன் (EU) வட அட்லாண்டிக் வியாபார உடன்படிக்கை கூட்டமைப்பு (NAFTA). உலக வங்கி (WB) மற்றும் பன்னாட்டு நிதிக்கழகம் (IMF) ஆகியவைகள் ஒரு நாட்டின் கொள்கையில் இன்று அதிக அளவில் தலையிட்டு இறைமைக்கு ஒரு சவாலாக திகழ்கின்றன. உலகமயமாக்குதல் என்பது அரசின் இறைமைக்கு பலவீனத்தை அளிக்கின்றது. பன்னாட்டு சட்டங்கள் மற்றும் நிறுவன அமைப்புகள், பன்னாட்டு அரசு சாரா அமைப்புகளின் செயல்பாட்டுத்திறம் ஆகியவற்றால் தேசிய இறைமை மிகவும் பாதிப்புக்குள்ளாகியது. எண்ணக் கருத்து முன்படிவமான தேசிய இறைமை உலகமயமாக்குதலின் மூலம் நலிவடைந்து பல சவால்களை சந்திக்க நேரிடுகின்றது.

தேசிய இறைமை அதிகாரமுடைய அரசு நியாயமான வன்முறையை பயன்படுத்தும் அதிகாரத்தைகூட நலிவடையச் செய்யும் வகையில் பன்னாட்டு அரசு சாரா அமைப்புகள் ஒரு சவாலாக திகழ்கின்றன.

தனியார் மயமாக்குதல் மற்றும் தாராளமயமாக்குதல் ஆகிய இரண்டும் உலக மயமாக்குதலின் இரண்டு ஆணிவேர்களாகும். இது வரை அரசாங்கம் மக்களுக்கு செய்த சேவைகள் இனிமேல் தனியார் வசம் ஒப்படைக்கும் போக்கு இன்று பல நாடுகளில் காணப்படுகிறது. தென்கொரியாவில் சேவைகள் தனியார் வசம் ஆனதால் கண்ட வெற்றியினால் பல ஆசிய நாடுகள் இன்று வரம்புக்குட்பட்ட அரசாங்கத்தையும், தாராள பொருளாதாரத்தையும் ஏற்க முனைகின்றன. தாராளமயமாக்குதல் இந்தியாவில் 1991ம் ஆண்டு கொண்டு வரப்பட்டதால் பல பொது நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்பட்டுள்ளன.

இந்திய அரசாங்கம் பொருள்கள் உற்பத்தி மற்றும் சேவைகள் மேல் விதித்திருந்த கட்டுப்பாடுகள் சிலவற்றை தளர்த்தியதால், சுதந்திரமான பகிரங்க போட்டியின் காரணமாய் இந்தியாவில் இன்று பல பல்நாட்டு கழகங்கள் (MNC's) வியாபாரம் செய்ய முன்வந்துள்ளன.

இத்தகைய பல்நாட்டு கழகங்கள் தங்கள் வியாபாரச் செயல்பாடுகள் தங்குதடையின்றி நடைபெற தேசிய மற்றும் மாநில அளவில் கொள்கை முடிவுகள் மேற்கொள்வதில் தலையிடுகின்றன.

உலகளவில் அரசாங்கம் செய்யவேண்டிய பணிகள் தனியார் வசம் ஆக்கப்படுவதால் தேசிய இறைமை மங்கும் நிலை உள்ளது. உலகமயமாக்குதல் என்ற அடிப்படையில் பெரும் வியாபார மேலாண்மையாளர்கள் மற்றும் குடிமக்கள் அல்லாதோர் புதிய கொள்கையை உருவாக்குபவர்கள் போல் உள்ளனர். சுருங்கும் தன்மையான அரசின் பொறுப்புகளும் விரிவாக்கம் செய்யப்படுகின்ற தனியார் சேவைகளினால் அரசாங்கத்தில் அதிகார

வர்க்கத்தின் முக்கியத்துவம் குறைக்கப்படுகின்றது. ஒழுங்குபடுத்தும் பணிகளேஅரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக இந்தியாவில் **1991** முதல் 'லைசென்சு ராஜ்' என்பது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

உலகமயமாக்குதலின் முதன்மைக் கொள்கையின் முக்கிய நோக்கம் உலக பொருளாதாரத்தை ஒருங்கிணைப்பதே ஆகும். ஆகவே இது அரசியல் மற்றும் கலாச்சார இணைப்பில் தோல்வியை கண்டது. இதன் காரணமாய் பல கலாச்சார குழுக்களிடம் தத்தம் கலாச்சார உணர்வுகள் மேலோங்கி உலக பொது கலாச்சாரத்தை (அமெரிக்கா – மேற்கு கலாச்சாரம்) எதிர்க்க முற்பட்டது. சாமுவேல் பி.ஹண்டிங்டன் கருதுவது போல, உலகமயமாக்குதல் என்பது நாகரீகங்களின் மோதல்களை தூண்டச் செய்ததாகும்.

நாகரீகங்களின் 'பிழையான கோடுகள்' நாகரீக மோதல்களுக்கு துணை நிற்கும். நாகரீக மோதல்களை கட்டுப்படுத்த உருவாக்கப்படும் தீர்மானங்களினால் தேசிய இறைமைக்கு முக்கியத்துவம் இல்லாமல் போகின்றது. இத்தகைய சூழ்நிலைகளில் தேசிய எல்லை கோடுகள் திருத்தப்படலாம் மற்றும் தேசிய இறைமைக்கான பொருள் விளக்கம் மாற்றமடையலாம்.

பல சமூகவியல் அறிஞர்கள் உலகமயமாக்குதலின் மூலம் தேசிய இறைமை கீழ்க்கண்ட சக்திகளின் மூலம் பாதிப்பை அடையும்.

அ. அடிப்படைவாத சக்திகள் (மதவாதிகள்)

ஆ. புதிய காலனி ஆதிக்கம்

இ. நாகரீக மோதல்கள் மற்றும்

ஈ. புதிய அரசியல்.

## 4.2 உலகமயமாக்குதல் மற்றும் அரசு இறைமை எதிர்கொள்ளும் சவால்கள்



உலகமயமாக்குதலுக்கும் அரசு இறைமைக்கும் ஒரு தொடர்புண்டு. திறந்தவெளி, எல்லையில்லா உலக பொருளாதாரத்தை தோற்றுவிக்க நாடுகளிடையே காணப்படும் வியாபாரக் கட்டுப்பாடுகளை தவிர்த்து தடையில்லா வாணிபம் நடக்கச் செய்வது என்பதுதான் உலகமயமாக்குதல் என்பதாகும். ஆகவே உலகமயமாக்குதல் என்பதற்கு சக்திவாய்ந்த அரசியல், பொருளாதார மற்றும் சமூக படிவங்கள் உண்டு எனலாம். ஒரு உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தில் தேசிய இறைமை மற்றும் தேசிய எல்லைகளுக்கு ஒரு அளவு உண்டு. மேலாண்மை இயலின் குருவென்று அழைக்கப்படும் பீட்டர் டிரக்கர் கூறுவது போல் உலகமயமாக்கப்பட்ட பெருளாதாரத்தில் தேசிய எல்லைகள் பொறுத்தமில்லாமல் போய்விடுகின்றன.

ஒரு உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தில் ஒரு நாட்டின் இறைமை கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதன் வாயிலாக பாதுகாக்கப்படலாம்.

1. தொழிற்கூட சமுதாயம் முதன்மையாக்கப்படவேண்டும்.
2. சரிசம சமுதாயம்
3. மக்களாட்சி அரசியல் நிறுவனங்கள்
4. உலகளவில் பொருளாதார ரீதியாக பேரம் பேசும் சக்தி

5. அரசு சாரா அமைப்புகள் அமைக்கப்படுதல்

6. அறிவை அடிப்படையாக கொண்ட சமுதாயம்

7. வளர்ந்த செய்தி தொடர்பு சாதனங்கள்

8. உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தின் விளைவால் பெறப்பட்ட நன்மைகளை தக்க முறையில் பகிர்ந்தளிக்கும் முறைமைகள்.

9. தொழிலாளர்களுக்கு தக்க சமூக பாதுகாப்புகள்

10. அதிகார வர்க்கத்திற்கு வரையறை செய்யப்பட்ட பங்குபணி மற்றும் அரசின் நலன் காக்கும் பணிகளின் விரிவாக்கம்.

மேற்கூறிய பண்புகள் இல்லாத நாடுகளில் உலகமயமாக்கப்படுதலை அறிமுகப்படுத்துதல் என்பது தேசிய இறைமையை பல் தேசிய கழகங்களுக்கு சரண் செய்வதற்கு ஒப்பாகும் என பல அறிஞர்கள் கருதுகின்றனர். இந்தியாவில் உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரம் ஒரு சோசலிச தளத்தில் தான் கட்டப்பட்டுள்ளது. வறுமை, கல்வி, அறியாமை, சமத்துவமின்மை என்ற கட்டத்தில் தாராள பொருளாதாராம் என்பது மக்களின் எதிர்ப்பையும், தொழிலாளர் அமைதியின்மையையும்தான் வளர்க்கும். இதன் விளைவாய் தேசியத்திற்கு அப்பாற்பட்ட அமைப்புகளை பன்னாட்டு நிதிக் கழகம் (IMF) மற்றும் உலக வங்கி (WB) ஆகிய சக்திகளுக்கு தேசிய இறைமை வழிவிட்டுச் செல்கின்றது. மேலும், இத்தகைய மாறுதல்கள் நாடுகளுக்கிடையே செய்து கொள்ளப்படும் உடன்படிக்கைகள் மற்றும் தேசிய கொள்கையின் மூலம் நியாயப்படுத்தப்படுகின்றன.

அரசாங்கம் இன்று உலக அளவிலான மனித உரிமை சட்டங்களுக்கு ஓரளவிற்கு மாற்றப்பட்டுள்ளது. தேசத்திற்கு அப்பாற்பட்ட உலக தேசிய அமைப்புகள் பல நாடுகளின் மனித உரிமைகளை பாதுகாக்க முற்படுவதால் தேசிய இறைமையும் குடிமக்கள் உரிமையும் வெகுவாக வலுவிழந்துள்ளன.

வேறு நாட்டிற்கு குடிபெயறும் சட்டங்கள் இன்று மிகவும் தளர்த்தப்பட்டுள்ளன. இதன் விளைவால் முரண்பாடுடைய சட்டங்கள் தோன்றியுள்ளன. வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள பெரும் வியாபாரக் குழுக்கள் தங்களுக்கு சாதகமான வகையில் எல்லையை கடந்து செல்லும் விதிமுறை கட்டுப்பாடுகளை தளர்த்தி தங்களின் நிதி மற்றும் பணியாளர் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டன. இருப்பினும் வெளிநாட்டினர் தங்கள் நாடுகளுக்குள் நுழைவதை கட்டுப்படுத்தி ஒழுங்கு செய்யும் தங்களின் இறையாண்மை அதிகாரத்தை பலநாடுகள் இன்றும் தொடர்ந்து பின்பற்றுகின்றன.

உள்நாட்டு நீதிமன்றங்கள் உலக மனித உரிமை உடன்பாடுகளை கையில் கொண்டு தனிமனித உரிமைகளை பாதுகாக்க முற்படும் செயல்பாடுகள் அரசு இறைமையை வெகுவாக பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இதன் காரணமாய் அரசு இறைமையின் அடித்தளமும், தேசியமும் மறுவிளக்கம் கொடுக்கப்பட்டுள்ளன. காலப்போக்கில் குடியுரிமை என்பது மறைய தொடங்கி குடிமக்கள் மற்றும் வெளிநாட்டினர் என்பதற்கு வேறுபாடு இல்லாமல் போய்விடும். ஒரு ஆராய்ச்சியாளர் கூறுவது போல தேசிய இறைமையின் வளர்ச்சியை, தேசிய தேவைகள், முன்னுரிமைகள் என்பதைக் காட்டிலும் சந்தை நிலவரமே தீர்மானம் செய்கின்றது. ஆகவே நாடுகளின் இறைமை செல்லத்தக்கது அல்ல என்ற நிலைமையில் உள்ளது. தேசிய சமூக உடன்படிக்கைகள் முறியடிக்கப்பட்டு இன்று பன்னாட்டு உடன்படிக்கைகள் செய்யப்பட்டு செயலாக்கப்படுகின்றன.

மேற்கூறிய பகுப்பாய்வின் மூலம் நாம் அறிவது என்னவென்றால் தேசிய இறைமையின் உலகமயமாக்குதலின் தாக்கம் என்பது வளர்ச்சி குன்றிய மற்றும் வளர்ச்சி பெறும் நாடுகளைக் காட்டிலும் வளர்ச்சி பெற்ற நாடுகளேஅதிக நன்மைகளை பெற்றுள்ளன. வளர்ச்சி குன்றிய மற்றும் வளர்ச்சி பெறுகின்ற நாடுகள் தாராள பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தினால் அது தேசிய இறைமையை மிகவும் பாதிக்கச் செய்கின்றது. வளர்ச்சி பெறும் நாடுகளின் இறைமையின் மீது உலகமயமாக்கப்படுதலின் பொதுவான தாக்கங்கள் கீழ்வருவனவாகும்.

1. பன்னாட்டுதேசிய அமைப்புகள் பல்வேறு இடங்களில் உள்ள சமூகங்களில் தங்கள் தாக்கத்தை வெளிப்படுத்தும். முதலில் தொடர்பு சார்ந்த செயலாக்கத்தில் (உற்பத்தி, சேவைகள் மற்றும் விற்பனை) ஈடுபடுவர். மேலும் அப்பகுதியில் உள்ள குறைந்த ஊதியத்திற்கு உழைக்கும் தொழிலாளர்கள் மற்றும் வளங்களைச் சுரண்டுவர்.

2. பன்னாட்டு தேசிய அமைப்புகள் வருவதற்கு முன்பிருந்த தொழிற்சாலைகள் மூடப்பட்டு அதில் வேலைபார்த்த பலபேர் பணியை இழப்பார்கள். இத்தகைய போக்கு வேலையில்லா நிலமையை உருவாக்கும்.

3. புதிய மற்றும் இதுகாறும் குறைந்த அளவில் சுரண்டப்பட்ட சந்தையைத் தேடுவார்கள்.

4. பன்னாட்டு தேசிய கம்பெனிகள் இராஜ்ஜிய குழுக்கள் மற்றும் ஒரு நாட்டின் கொள்கை உருவாக்கத்தில் அதிக அளவில் தலையிடுவர். தனியார் வசமாக்கப்படுதலிலும்,சிறந்த சேவை கொள்கையின் மூலம் அவ்வமைப்புகளுக்கு லாபம் கிடைக்கும்.

5. உலகமயமாக்குதலின் மற்றொரு தாக்கம் என்னவெனில் பன்னாட்டுதேசிய அமைப்புகளில் பணிபுரியும் மூத்த மேலாண்மையாளர்கள், கணக்கர்கள், சட்ட வல்லுநர்கள் மற்றும் பொது – தொடர்பு பணியாளர்கள் உள்நாட்டு போட்டியாளரைக் காட்டிலும் மிக அதிகமான ஊதியத்தை பெறுவர்.

6. இதன் விளைவாய் ஏற்படும் இழப்பு என்பது ஒரு நாட்டின் தேசிய அரசாங்கம் நேரிடையாக தங்கள் பொருளாதாரத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்த இயலாது. (குறிப்பாக பரந்த பொருளாதார மேலாண்மையை பொறுத்தமட்டில்)

7. உயிரியல் மற்றும் டிஜிடல் தொழில்நுட்ப வளர்ச்சியின் மூலமாக இன்று புதிய உற்பத்தியும் மற்றும் மாறுதலையும் நாம் கண்டுள்ளோம். புதிய கண்டுபிடிப்புகளான இண்டர்நெட் மூலம் உலகஅளவில் பல செய்திகளை அறிந்து ஒருங்கிணைப்பு செயல்பாடுகளில் மகத்தான வளர்ச்சியடைந்துள்ளோம்.

8. நிலம், உபகரணம் மற்றும் உழைப்பைக் காட்டிலும் இன்றைக்கு அறிவு வாழ்க்கைதரத்தை வகுப்பதில் ஒரு முக்கியமான காரணியாக உள்ளது. தொழில்நுட்ப ரீதியாக வளர்ச்சிபெற்ற நாடுகள் இன்றைக்கு அறிவை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

9. பெரிய பன்னாட்டு தேசிய கழகங்கள் இன்றும் பொருளாதார மற்றும் கலாச்சார அதிகாரங்களை பெற்று விளங்குகின்றன.

   உதாராணம்: கோக்கோ – கோலா, நைகி, மக்டோனால்ட் மற்றும் லிவிஸ்,

10. இந்திய தொழிலதிபர்கள் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியில் முதலீடு செய்வதில் தோல்வியுற்று, உலகமயமாக்கப்படுதலில் தங்களை இணைத்துக் கொண்டு, பெரிய பல்தேச கழகங்களோடு பங்குதாரராக சேர்ந்து வீழ்ந்து போகின்ற தங்களின் வியாபாரத்தை விரிவாக்கம் செய்ய முற்படுகின்றனர்.

உலகமயமாக்கப்படுதலை ஆதரிக்கின்ற நபர்கள் இதனால் இந்திய தொழிற்கூடங்கள் நசிவடைவதில்லை என்றும் மாறாக அது புதிய தொழிற்கூடங்களை தோற்றுவிக்கவும், இந்திய பொருளாதாரத்தை மிக விரைவாக முன்னேற துணை செய்கின்றது என்றும் பகர்கின்றனர். ஆனால் ஒரு விரிவான பகுப்பாய்வில் பார்க்கும் போது கடந்த பல ஆண்டுகளில் வெளிநாட்டின் நேரடி முதலீட்டின் மூலம் புதிய உற்பத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன எனக் கூற இயலாது.

## உலகமயமாக்கப்படல் மற்றும் இந்திய கலாச்சாரம்

மேற்கு கலாச்சாரம் உன்னிப்பாக கவனிக்க தக்கது என்னவெனில் இந்தியர்கள் பொதுவாக இந்திய கலாச்சாரத்தை பின்பற்ற எண்ணுவர். சாமுவேல். P. ஹட்டிங்டன் கூறுவது போல் இந்திய கலாச்சாரம் மிகவும் ''பலம்'' வாய்ந்ததாகும். மேலும் வேற்று கலாச்சாரத்திலிருந்து பல நடவடிக்கை மற்றும கருத்துக்களை பெற்றாலும், இந்திய கலாச்சாரத்தின் அடிப்படை தன்மையை அது விட்டுக் கொடுப்பதில்லை. வெளிநாட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் மீது இந்தியாவில் பல எதிர்ப்புகள் எழுந்துள்ளன. அதன் மூலம் இந்தியர் தம் கலாச்சாரத்தையும், தனித்தன்மையையும் பாதுகாக்க தவறவில்லை. மேற்கு நாட்டு மேலாண்மை செயல்பாடுகள் நம்நாட்டின் வியாபாரத்தில், குறிப்பாக கணினி மென்பொருள் தொழிற்கூடங்களில் மிக விரைவில் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் இந்தியர்கள் இன்றும், உள்நாட்டு உணவு வகைகள், உள்நாட்டு தொலைக்காட்சி மற்றும் உள்நாட்டு திரைப்படம் ஆகியவற்றை கண்டுகளிக்கின்றனர். பாரம்பரிய உடைகளையே பெரிதும் அணிகின்றனர். இதன் காரணமாய் மேற்கு நாட்டின் கம்பெனிகள் இந்திய சந்தையில் ஊடுருவுவதில் பல சங்கடங்களை எதிர் கொள்கின்றன.

## அமர்த்தியா சென்னின் கருத்துக்கள்

அமர்த்தியா சென் கூறுகிறார், ''சந்தை பொருளாதாரம்'' தன்னைத்தானே இயக்கவல்லது அல்ல. புதிய தாராள பொருளாதாரக் கொள்கை நல்ல வளர்ச்சியினைக் கண்டுள்ளது. இதை ஆதரித்தவர்கள் அமெரிக்காவில் அரசியல்வாதியான ரீகன் மற்றும் இங்கிலாந்தின் தாட்சர் ஆவார்கள். மனிதாபிமான வளர்ச்சியே இன்றைய வளரும் நாடுகளான இந்தியாவிற்கு தேவையாகும். உலகமயமாக்கப்படுதலில் அரசியல் மற்றும் பொருளதார சுதந்திரத்தை நாம் இழந்து விடக்கூடாது. சந்தைப் பொருளாதாரம் மற்றும் பொதுநலப்பொருளாதாரம் ஆகிய இரண்டுகளுக்குமிடையே ஒரு சமனிலையான அணுகுமுறை தேவைப்படுகிறது.



**அமர்த்தியா சென்**
**(பிறப்பு 1933)**

பன்னாட்டு தேசிய கழகங்கள் பிரெட்டன் வுட்ஸ் (Bretton Woods) அமைப்புகளோடு (உலக வங்கி, பன்னாட்டு நிதிக்கழக மானிய நிதி மற்றும் உலக வியாபார அமைப்பு)

ஒன்றிணைந்து காட் (GATT) ஒப்பந்தத்தின் மூலம் பல திட்டங்களை திணித்துள்ளன. இத்திட்டத்தின் காரணமாய் இன்று பல பன்னாட்டு தேசிய கழகங்கள் பல வியாபாரத் தடைகளைக் கடந்து தங்கள் வாணிபத்தை விரிவாக்கம் செய்துள்ளன.

**பன்னாட்டு நிதிக்கழகம் மற்றும் உலக வங்கியின் திட்டங்கள்**

- வரவு – செலவு திட்டத்தின் அரசு மானியத்தைக் குறைப்பது.
- விவசாய உற்பத்தி சார்ந்த பொருட்களுக்குரிய அரசு மானியத்தை குறைத்தல்.
- உணவிற்கான அரசு மானியத்தை நீக்குதல்.
- தாராள பொருளாதார கொள்கையைப் பின்பற்றுதல்.
- வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவித்தல்.
- வங்கிகளை தனியார் வசப்படுத்துதல்.
- இறக்குமதிக் கொள்கையை எளிமையாக்குதல்.

**உலக வர்த்தக அமைப்பு** (WTO)

- அரசு மானியத்தை குறைத்தல்.
- உள்நாட்டு விவசாயத்திற்குரிய ஆதரவை குறைத்தல்.
- பொது விநியோக முறையை நீக்குதல்.
- வளர்ச்சி பெறுகின்ற நாடுகள் தடையில்லா வியாபாரத்தை பின்பற்றுதல்.
- பயன்படு தொழிற்கூடங்களை அமைப்பதில் பன்னாட்டு தேசிய கழகங்களுக்கு எந்தவொரு தடையும் இல்லாதிருத்தல்.
- இறக்குமதி மீதான தடைகளை நீக்குதல்.
- வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மீதான தடைகளை நீக்குதல்.

வளர்ச்சி பெறும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை பாதிக்கும் வண்ணம் பிரெட்டன் வுட்ஸ் அமைப்புகள் பொருளாதாரக் கொள்கைகளை வளர்ச்சி பெறும் நாடுகளின் மீது திணிக்கின்றன.

இந்திய பொருளாதாரத்தை ஜுலை 1991 க்குப் பிறகு தணிக்கை செய்யப்பட்ட போது குறிப்பிடும் வகையில் எந்தவொரு வளர்ச்சியையும் எட்டவில்லை. உற்பத்தி துறையில் முதலீடோ அல்லது தொழில்நுட்பமோ திறந்த பொருளாதாரத்தின் மூலம் இந்தியாவில் பெருமளவு வந்தது எனக் கூற இயலாது.

**செய்தி உலகம்**

செய்தி தொடர்புகளில் நாம் கண்ட புரட்சி இன்று அரசுகளை வெறும் சிறிய நகர அரசுகளாக மாற்றியுள்ளது. தொழிற்புரட்சி ஒரு மையப்படுத்தும் சக்தியாக விளங்கியது. ஆனால் செய்தி தொடர்பு புரட்சி பரவலாக்கும் சக்தியாக உள்ளது.

## திறனாய்வு

பழைய உலக வரைபடத்தின் எல்லைகள் ஆட்டம் கண்டுள்ளன. பெரிய அரசுகள் சிதைந்துள்ளன, சில பெரிய வியாபார கூட்டுகளை ஏற்படுத்தி கொண்டுள்ளன. பல மேற்கு நாடுகள் உலகமயமாக்கப்படுதலில் தங்கள் இறைமையை சந்தை பொருளாதாரத்திற்கு விட்டு கொடுத்துள்ளன. பல சமூக மற்றும் பொருளாதார பொறுப்புகள் தனியார் மற்றும் அரசு சாரா அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆனால் ஆப்பிரிக்கா, முன்னாள் சோவியத் யூனியன் மற்றும் யூகோசோலோவியா நாடுகளில் 19 ஆம் நூற்றாண்டில் காணப்பட்ட தேசிய உணர்வு, குறுகிய தேசியம் மற்றும் சகிப்புத்தன்மையற்ற மனப்போக்கு வளர்ந்து இனப் படுகொலைக்கு தூண்டியுள்ளது. ஈராக்கில் குருடுகள் (Kurds) சுதானில் இஸ்லாம் மதத்தில் அல்லாதவர்கள், திபேத்தில் சீனர்கள் இத்தகைய இனப்படுகொலைக்கு ஆளாகும் நிலை தோன்றியுள்ளது.

### பயிற்சி

### பகுதி–அ

**I. சரியான விடையை தேர்ந்தெடுக்க.**

1. 'கோக்கோ – கோலா' என்பது

   அ. பொது நிறுவனம்

   ஆ. தனியார் நிறுவனம்

   இ. பன்னாட்டு தேச கழகம்

   ஈ. வரையறைக்குட்பட்ட கம்பெனி

2. எவற்றால் தேசிய இறைமை சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது ?

   அ. G–8 நாடுகள்

   ஆ. ஐரோப்பிய யூனியன்

   இ. நாட்டிடை நிதி நிறுவனங்கள்

   ஈ. G–77 நாடுகள்

3. உலகமயமாக்கப்படல் எதனை அறிவுறுத்தியது ?

   அ. பொருளாதார ஒருங்கிணைப்பு

   ஆ. அரசியல் ஒருங்கிணைப்பு

   இ. சமூக ஒருங்கிணைப்பு

   ஈ. மேற்கூறிய அனைத்தும்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக**

4. இந்தியா ஒரு ____________ நாடாகும்.

5. சாமுவேல் ஹண்டிங்டன் ____________ சச்சரவை பற்றி விவாதம் செய்கின்றார்.

**III. சரியா தவறா.**

6. G–8 நாடுகளில் இந்தியா சேர்க்கப்பட்டுள்ளது.

7. ஐரோப்பிய யூனியனில் இந்தியா ஒரு உறுப்பு நாடாகும்.

**பகுதி ஆ**

8. அறிவு சார்ந்தசமுதாயம் என்றால் என்ன ?

9. செய்தி தொடர்பு தொழில் நுட்பத்தை விளக்குக.

**பகுதி இ**

10. ‘உலக கிராமம்’ என்றால் என்ன ?

11. ‘திறந்த பொருளாதாரம்’ விளக்குக.


**பகுதி ஈ**

12. உலக மயமாக்கப்படுதலால் இந்தியாவிற்கு ஏற்பட்ட தாக்கங்களை வெளி கொணர்க.

13. உலகமயமாக்குதலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை ?

# அத்தியாயம் 5
# அரசாங்கமும் அதன் வடிவங்களும்

அரசாங்கம் அரசின் முக்கிய கூறுகளில் ஒன்றாகும். அரசின் செயலியாக அரசாங்கம் கருதப்படுகிறது. அரசாங்கத்தின் தேவை மற்றும் அதன் பணிகளை பற்றி தற்காலத்தில் மக்கள் அறிந்திருப்பதோடு அவற்றின் முக்கியத்துவத்தையும் உணர்ந்திருக்கிறார்கள். அரசு கண்ணுக்குத் தெரியாத மானசீகத்தன்மையுடையது. ஆனால் அரசாங்கம் அவ்வாறில்லாமல் மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் அமைந்திருக்கின்றது. இத்தகைய அரசாங்கம் பலவகைப்பட்டதாகும். தொன்றுதொட்டு இன்று வரையிலும் நடைமுறையில் இருந்து வந்திருக்கின்ற அரசாங்கம் பல மாறுதல்களை சந்தித்திருக்கிறது. அவ்வாறு அதில் ஏற்பட்ட மாற்றங்கள் கீழே உள்ளபடி வகைப்படுத்தப்படுகின்றன.




கீழே தரப்பட்டுள்ளவை சி.எப். ஸ்டராங் என்பவரால் தரப்பட்ட அரசாங்க வடிவங்களாகும்.

| வரிசை எண் | வகைப்படுத்தல் ஆதாரங்கள் | அ | ஆ |
|---|---|---|---|
| I | அரசாங்கத்தின் அதிகார எல்லைகள் | மக்களாட்சி | சர்வாதிகார ஆட்சி |
| II | அ. அரசின் இயல்பு | ஒன்றிய அரசு | கூட்டாட்சி அரசு |
| | ஆ. அரசியலமைப்பின் இயல்பு | நெகிழும் தன்மையுடையது. | இறுகிய தன்மையுடையது |
| | இ. தேர்தல் தொகுதியின் இயல்பு | (i)அனைவருக்கும் வாக்குடைய அரசு முறை | வரையறுக்கப்பட்ட வாக்குரிமையுடைய அரசு |
| | | (ii) ஒற்றை உறுப்பினர் தொகுதிகளுடைய அரசுகள் | பல உறுப்பினர் தொகுதிகளுடைய அரசுகள் |

| | | | |
|---|---|---|---|
| III | சட்டமன்றத்தின் இயல்பு | ஈரவை உடைய அரசு | ஓரவை உடைய அரசு |
| | சட்டமன்றத்தின் அமைப்பு | மேலவையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கொண்ட அரசு | மேலவையில் தேர்ந்தெடுக்கப்படாத உறுப்பினர்கள் கொண்ட அரசு |
| IV | செயலாட்சிக்குழுவின் இயல்பு | பாராளுமன்றம் மற்றும் பொறுப்புடைய அரசாங்கம் | தலைவர்முறை அரசாங்கம் |
| V | நீதித்துறையின் இயல்பு | சட்ட ஆட்சி பின்பற்றப்படும் அரசுகள் | நிர்வாக சட்டத்தை பின்பற்றும் அரசுகள் |

மேற்கூறப்பட்ட **சி.எப். ஸ்டராங்கின்** அரசாங்க வடிவங்கள் சட்டப்படி அமைந்த அரசாங்க வடிவங்களை பற்றி கூறுவனவாகும்.

## 5.1 ஒற்றை அரசாங்க முறை

ஒற்றை அரசாங்கமுறையில் மைய அரசில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டு இருக்கின்றன. மைய அரசாங்கம் மாநில மற்றும் பகுதி அரசாங்கங்களை ஏற்படுத்தி அவைகளுக்கு அதிகாரங்களை மாற்றி தருகிறது. இது நிர்வாகம் சீராக நடப்பதற்கான ஏற்பாடாகும். இந்த அமைப்புகள் பிரதேச அரசாங்கம் என அழைக்கப்படுகின்றன. ஒற்றை அரசாங்க முறைக்கு இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான், ஸ்ரீலங்கா நாடுகள் உதாரணங்கள் ஆகும்.

### விளக்கம்

ஒற்றை அரசாங்கமுறை பற்றிய சில அறிஞர்களுடைய விளக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**கார்னர் :** மத்தியில் அமைந்துள்ள அரசாங்க அமைப்புக்கு அரசியல் சட்டம் சகல அதிகாரங்களையும் அளித்தல்.

**எ.வி.டைசி. :** ''மத்திய அரசாங்கம் வழக்காறு அடிப்படையில் உயரிய சட்டம் இயற்றும் அதிகாரத்தை செலுத்துவது''

**சி.எப்.ஸ்டராங்:** இரண்டு முக்கியமான தகுதிகள் பற்றி குறிப்பிடுகிறார். அவை

1. மத்திய அரசாங்கத்தின் உயரிய தன்மை
2. இறைமை அதிகாரம் உடைய இதர அமைப்புகள் எதுவுமில்லாமல் இருப்பது.

இறைமை அதிகாரம் இல்லாத இதர அமைப்புகளுடன் மைய அரசாங்கம் உள்ள முறை ஒற்றை அரசாங்க வகையை சேர்ந்தது. மத்திய அரசாங்கம் மற்றும் மாநில அரசாங்கம் சட்டம் இயற்றும் அதிகாரம் பெற்ற அமைப்பு கூட்டாட்சி முறை எனப்படுகிறது.

### நிறைகள்

1. ஒற்றுமை, ஒரே மாதிரியான சட்டமுறை, கொள்கை மற்றும் நிர்வாகம்.
2. ஆட்சி அதிகாரம் மற்றும் பொறுப்பு வகிப்பவர்களிடையே சச்சரவுகள் இல்லாத தன்மை.
3. முடிவுகள் விரைவாக எடுக்கப்பட்டு அவை விரைவாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.
4. செலவு குறைவான அமைப்பு.
5. அரசியல் சட்டத்தை எளிதில் மாற்றக்கூடிய நிலை.

### குறைகள்

1. அதிகார குவிப்பு மத்திய அரசாங்கத்தின் சர்வாதிகாரத்திற்கு ஏதுவாகும்.
2. மத்திய அரசாங்கம் பல சிக்கலான பிரச்சினைகளை சந்திக்க நேரிடும்.மேலும் பிரதேச அலுவல்களை கவனிப்பதற்கு நேரம் இல்லாமல் போகும்.
3. மத்திய அரசாங்கத்திற்கு பிரதேச பிரச்சினைகள், அவற்றின் துவக்கம் மற்றும் அவற்றில் ஈடுபாடு இல்லாமல் போகும்.
4. அளவில் பெரிய நாடுகளுக்கு ஒத்து வராது.

## 5.2 கூட்டாட்சி அரசாங்கம்

ஒப்பந்தம் என்று பொருள்படும் இலத்தீனிய போடஸ் (Foedus) என்ற சொல்லிலிருந்து கூட்டாட்சி என்ற சொல் ஏற்பட்டது. இதற்கு கூட்டாட்சி அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கிடையேயும் ஒப்பந்தம் இருக்கிறது என்று பொருள். தேசிய ஒற்றுமையோடு மாநில உரிமைகளை பாதுகாத்து தர அமைக்கப்படும் அரசாங்க முறைக்கு கூட்டாட்சி என்று பேராசிரியர் **டைசி** என்பவர் விளக்கம் தந்திருக்கிறார்.

கூட்டாட்சி கொள்கை அல்லது கூட்டாட்சி அரசியல் முறை என்பது மத்திய அரசு மற்றும் மாநில அரசாங்கங்களுக்கிடையே அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டு அரசியலமைப்பு ரீதியாக செயல்படக்கூடிய அமைப்பென்று கூறப்படுகிறது. இவ்வமைப்பு ஒற்றையரசு முறைக்கு எதிரானது. இறைமை அதிகாரம் இருவகை அரசாங்கங்களுக்குமே குறிப்பிட்ட சில துறைகளில் இருக்கிறது. இத்தகைய அமைப்பில் மத்திய அரசாங்கம் தேச பாதுகாப்பு இதர நாடுகளுடனான கொள்கை தேசம் முழுவதற்குமான பாதுகாப்பு போன்ற நடவடிக்கைகளை அதற்கு என்று கொடுக்கப்பட்டுள்ள அதிகார எல்லைக்குள் செயல்படுகிறது. இதே போல மாநில அரசாங்கங்களும் அவற்றிற்கு என்று தரப்பட்டுள்ள அதிகார எல்லைக்குள் செயல்படுகின்றன.

### கூட்டாட்சி அரசாங்கத்தின் கூறுகள்:

1. அரசியலமைப்பின் உன்னத நிலைமை.
2. மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையே அதிகார பங்கீடு
3. அரசியலமைப்பின் இறுகிய தன்மை
4. நீதித்துறை சுதந்திரம்

### இவற்றின் விளக்கம் வருமாறு

**1. அரசியலமைப்பின் உன்னத நிலைமை:** அரசியலமைப்பு எழுதப்பட்டிருக்க வேண்டும். மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையே இருக்க வேண்டிய அதிகாரங்கள் என்னென்ன என்று தெளிவாக சொல்லப்படவேண்டும். இரண்டிற்குமிடையே அரசியல் சட்டமே உயரியது அல்லது மேலானது.


**2. அதிகார பங்கீடு:** கூட்டாட்சி முறை அரசாங்கத்தில் மத்திய அரசாங்கத்திற்கென சில இனங்களும் மாநில அரசாங்கத்திற்கென சில இனங்களும் பிரித்து ஒதுக்கப்படுகின்றன. இவ்வாறு ஒதுக்கப்பட்ட இனங்கள் அல்லது துறைகளில் ஒவ்வொரு வகை அரசாங்கமும் சட்டம் இயற்றவும் அவற்றை நிறைவேற்றவும் அதிகாரம் படைத்தவைகளாக, சுதந்திரம் உடையவைகளாக இருக்கின்றன.

**3. அரசியலமைப்பின் இறுகிய தன்மை: பேராசிரியர் டைசி** என்பவர் கருத்துப்படி அரசியலமைப்பில் சொல்லப்பட்டிருக்கின்ற விதிகள் அவற்றின் அடிப்படையில் இயற்றப்படும் சாதாரண சட்டங்கள் அல்லாத இதர சட்டங்களை எளிதில் மாற்றமுடியாது. அவைகள் ஆதார சட்டங்கள் எனப்படுகின்றன. அரசியல் சட்டம் சாதாரண சட்டங்களை விட மேலானது. அதை எளிதில் மாற்றமுடியாது.

**4. நீதித்துறை சுதந்திரம்:** கூட்டாட்சி அரசாங்க முறையில் மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்குமிடையே அல்லது மாநில அரசாங்கங்கள் மட்டத்தில் அவைகளுக்கு இடையே சச்சரவுகள் ஏற்படும். இந்த சச்சரவுகளை தீர்த்துவைப்பதற்காகவும் அரசியலமைப்பு விதிகளை தேவைப்படும் போது விளக்குவதற்காகவும் நீதித்துறை தேவைப்படுகிறது. இத்துறையினுடைய ஆணைகள் மற்றும் விளக்கங்கள் சம்மந்தப்பட்ட அரசாங்கங்களால் ஏற்றுக்கொள்ளப் படவேண்டும். நிறைவேற்றப்படவும் வேண்டும்.

## 5.3 பாராளுமன்ற முறை அரசாங்கம்

பாராளுமன்ற அரசாங்க முறையில் செயலாட்சிக்குழு சட்டமன்றத்திற்கு பொறுப்புடையதாக விளங்குகிறது. அவ்வரசு காபினெட் அரசாங்கம் அல்லது பொறுப்புடைய அரசாங்கம் என்றழைக்கப்படுகிறது




உதாரணம்: இந்தியா, இங்கிலாந்து

### முக்கிய அம்சங்கள்

**1.** செயலாட்சிக்குழு இரண்டு வகையான பண்புகளை உடையது. ஒன்று பெயரளவிலானது. மற்றொன்று உண்மையானது. பெயரளவிலான தலைவர் அரசின் தலைவராகிறார். உண்மையான தலைவர் அரசாங்கத்தின் தலைவர். இங்கிலாந்தில் அரசின் தலைவர் ராணி அல்லது ராஜா. அரசாங்கத்தின் தலைவர் பிரதமர்.

பெயரளவிலான செயற்குழுவுக்கு இங்கிலாந்தில் அரசர் அல்லது அரசியாரும் இந்தியாவில் குடியரசுத்தலைவரும் உதாரணமாவார்கள். இவர்கள் சட்டப்படி எல்லா அதிகாரங்களும் உடையவர்கள். உண்மையான அல்லது நிகழ்முறை குழுவுக்கு இங்கிலாந்து மற்றும் இந்தியாவில் பிரதம அமைச்சர் உதாரணமாவார்கள். இவர்கள் எல்லா அதிகாரங்களையும் பெயரளவிலான செயற்குழு பெயரில் செலுத்துகிறார்கள்.

**2.** நாட்டை ஆட்சி செய்யும் கட்சி தெளிவான மற்றும் திடமான பெரும்பான்மை சட்டமன்றத்தில் பெற்றிருக்க வேண்டும்.

‘‘தொங்கும் பாராளுமன்றம்’’ கூட்டணி ஆட்சி ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. உதாரணம் இந்தியா மைய அரசாங்கத்தில் **திரு.தேவேகௌடா** பிரதமராக இருந்த போது **(1996) ஐ.கே.குஜரால் (1998)** (தொங்கும் பாராளுமன்றம்) கூட்டணி ஏற்பட்டபொழுது.

**3.** இம்முறையில் மக்கள் பிரதிநிதித்துவமுடைய மன்றத்தின் பெரும்பான்மை கட்சி தலைவர் அமைச்சரவையின் தலைவராக இருக்கிறார். அவரே பிரதம அமைச்சராகவும் இருக்கிறார்.

4. பிரதம அமைச்சரும் இதர காபினெட் அமைச்சர்களும் பாராளுமன்றத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

5. ஒவ்வொரு அமைச்சரும் அவர் மேற்பார்வையிலுள்ள துறையின் நடவடிக்கைகளுக்கு பொறுப்பு ஏற்கிறார். அதே போல அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளுக்கு எல்லா அமைச்சர்களும் கூட்டுப்பொறுப்பு கொள்கை அடிப்படையில் பாராளுமன்றத்திற்கு பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள்.

### நிறைகள்

1. இம்முறை அரசாங்கத்தில் நிர்வாக துறைக்கும் சட்டதுறைக்கும் இடையே ஒற்றுமையும், ஒத்துழைப்பும் பெருமளவில் காணப்படுகிறது.
2. அவசியப்படும் போது விட்டுக்கொடுத்து நடக்கும் முறை நிலவுகிறது. நெருக்கடி காலங்களில் அமைதியான முறையில் அரசாங்க மாற்றம் ஏற்படுகிறது.
3. எதிர்க்கட்சிகள் நடைமுறைக்கு சாத்தியமான ஆலோசனைகள் வழங்குவதோடு நியாயமான குறைகளை எடுத்துக்கூறுகின்றனர்.
4. இம்முறை மக்களுடைய விருப்பத்திற்கேற்ப செயல்படுகிறது.

### குறைகள்

1. இது அதிகாரப் பிரிவினை கோட்பாட்டிற்கு எதிரானது. நிர்வாகத்துறை மற்றும் சட்டத்துறைகளுக்கு இடையே ஒற்றுமை அடிப்படையில் பணிகள் நிறைவேற்றப்படுவதால் பிரதம அமைச்சர் அதிகாரம் மேலோங்கியவராக சர்வாதிகாரியாக மாறிவிடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.
2. சட்டமன்றத்தில் எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத போது பல கட்சிகள் ஒன்று சேர்ந்து கூட்டு அரசாங்கம் ஒன்றை அமைக்கின்றன. இத்தகைய அரசாங்கம் கட்சிகளுக்கிடையே காணப்படும் பிரச்சினைகள் காரணமாக அரசியல் நிலையற்ற தன்மை ஏற்படுவதோடு அரசாங்கமும் வலிமை குன்றி காணப்படும்.
3. ஆட்சியிலிருக்கும் கட்சி பதவியிருந்து விலகுகின்ற போதோ அல்லது சட்டமன்றத்தில் தோற்கடிக்கப்படும் போதோ எதிர்க்கட்சி ஆட்சி செய்யும் உரிமையை பெறுகிறது. இந்த அரசாங்கம் முன்னால் இருந்த அரசாங்கத்தினுடைய முடிவுகளை ஏற்காமல் போகக்கூடும். இத்தகைய சூழ்நிலையில் பின்பற்றும் கொள்கையில் தொடர்ச்சி இல்லாமல் போகும்.

## 5.4 தலைவர்முறை அரசாங்கம்

இம்முறை அரசாங்கத்தில் தலைவர் சட்டமன்றத்திற்கு பொறுப்புடையவராக இருக்கமாட்டார். இதற்கு சிறந்த உதாரணம் அமெரிக்க ஐக்கிய குடியரசு ஆகும்.

### இம்முறையின் சிறப்பு அம்சங்கள்

1. குடியரசு தலைவர் நடைமுறையிலும் அரசியலமைப்பு அடிப்படையிலும் உண்மையான அதிகாரம் உடையவராக இருக்கிறார்.

2. அரசாங்கத்தின் பிரிவுகளான சட்டத்துறை, செயல்துறை மற்றும் நீதித்துறை ஆகியவற்றின் அதிகாரங்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் அதற்கென சில அதிகாரங்களை பெருகின்றன. இந்த அளவில் ஒவ்வொன்றும் தனித்தன்மையுடயதாக இருக்கிறது.

3. இவ்வாறு அதிகாரப்பிரிவினை இருந்தபோதும் ஒரு துறை பிறிதொரு துறையை கண்காணித்து தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளும் வகையில் சமநிலை மற்றும் தடை கோட்பாடு பின்பற்றப்படுகிறது. எந்த ஒரு துறையும் எந்த ஒரு சூழ்நிலையிலும் எதேச்சதிகாரம் செலுத்த முடியாது.

4. குடியரசு தலைவரது பதவிக்காலம் வரையறை செய்யப்பட்டது. எந்த காரணத்தை கொண்டும் பதவிக் காலத்தை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ அல்லது அவரை பதவியிலிருந்து தேசத் துரோக குற்றச்சாட்டு அடிப்படையில்லாமல் விலக்கமுடியாது.

**நிறைகள்**

1. நிலையான அரசு சாத்தியமாகிறது.
2. குடியரசு தலைவர் விருப்பப்படி கட்சியை சேர்ந்தவர்கள் மட்டுமல்லாமல் வெளியில் உள்ளவர்களும் அரசாங்கத்தின் துறைகளுக்கு தலைமை தாங்க பொறுப்பு ஏற்க நியமிக்கப்படலாம். அவசியமானால் எதிர்க்கட்சியை சேர்ந்தவர்கள் கூட இப்பொறுப்புகளை ஏற்க நியமிக்கப்படலாம்.
3. கொள்கை தொடர்ந்து பின்பற்றப்படுவதால் செயலாக்கம் இணக்கமாக இருக்கிறது.
4. தேசிய நெருக்கடிகள் ஏற்படும்போது இத்தகைய அரசாங்கம் சிறந்ததாக இருக்கிறது.
5. அதிகார குவிப்பிற்கு வாய்ப்பு இல்லை.

**குறைகள்**

1. நிர்வாகத்துறை சட்டத்துறைக்கு பொறுப்பு ஏற்காமல் இருப்பதால் அதன் விருப்பப்படி செயல்படமுடிகிறது.
2. நிர்வாகத்துறைக்கும் சட்டத்துறைக்கும் இடையே பிரச்சனைகள் தீர்க்கப்படமுடியாத சூழ்நிலைகள் அதிகம்.
3. இம்முறை அரசாங்கம் இறுக்கமானதாக இருக்கிறது.
4. சட்டத்துறைக்கும் நிர்வாக துறைக்கும் இடையே சுமூகமாக சூழ்நிலை இல்லாமல் போகும் போது சுதந்திரமான வெளிநாட்டுக்கொள்கையை பின்பற்றுவதற்கு முடியாமல் போகிறது. நிர்வாகத்துறை பின்பற்றும் கொள்கை சட்டத்துறையால் ஏற்கப்படாமலும் போகலாம்.

## 5.5 குழுமுறை அரசாங்கம்

குழுமுறை அல்லது பன்மை நிர்வாக அமைப்பு முறையில் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்டவர்கள் சமதகுதியும் அதிகாரமும் உடையவர்களாக இருக்கிறார்கள். இம்முறையில் பாராளுமன்றமுறை அரசாங்கம் மற்றும் தலைவர் முறை அரசாங்கத்தில் நல்ல அம்சங்களையும் அதே சமயத்தில் குறைகளையும் பெற்றிருக்கிறது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு சுவிட்ஸர்லாந்து அரசாங்கமாகும்.

சுவிட்ஸர்லாந்து நாட்டில் கூட்டாட்சி முறையில் குழுவாட்சி முறை பின்பற்றப்படுகின்றன. இங்குள்ள செயற்குழு உறுப்பினர்கள் ஏழுபேர் நான்கு ஆண்டு பதவி காலத்திற்கு கூட்டுக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு அமைச்சரும் ஒருதுறைக்கு பொறுப்பு ஏற்கிறார். இவ்வடிப்படையில் அரசாங்க துறைகள் ஏழாக இருக்கிறது. கவுன்சிலர் என்று அழைக்கப்படும் அமைச்சர் பொறுப்பிற்கு தேர்ந்தெடுக்கப்படுவர்கள் கூட்டாட்சி சட்டமன்ற உறுப்பினர் பதவியிருந்து விலகவேண்டும். இவர்கள் எத்தனை முறைவேண்டுமானாலும் திரும்ப திரும்ப தேர்ந்தெடுக்கப்படலாம். கூட்டாட்சி கவுன்சில் என்று அழைக்கப்படும் அரசாங்கத்தில் தலைவர் பொறுப்பு, உதவி தலைவர் பொறுப்பு, சுழற்சி முறையில் ஒவ்வொரு கவுன்சிலருக்கிடையே மாறி மாறி ஓராண்டு காலத்திற்கு தரப்படுகிறது.

### நிறைகள்

1. இந்த நாட்டில் உள்ள கூட்டு செயற்குழு நிலையானதாகவும் பொறுப்புடையதாகவும் இருக்கிறது.
2. தனி அமைச்சர் ஒருவரிடம் அதிகாரங்கள் குவிப்பதற்கான சந்தர்ப்பமே கிடையாது.
3. கொடுங்கோன்மை மற்றும் சர்வாதிகார போக்கு இந்த செயல்துறையில் ஏற்படவாய்ப்பில்லை.
4. நாட்டில் உள்ள பகுதிகள் அனைத்திற்கும் எல்லா மக்களுடைய கருத்துக்களை பிரதிபலிப்பதாகவும் இச்செயற்குழு பணியாற்றுகிறது.
5. இத்தகைய செயற்குழு கொள்கை மற்றும் அதனை நடைமுறைப்படுத்துதல் தொடர்ச்சி இருக்கவும் மரபுகள் பின்பற்றப்படவும் உதவுகிறது.

### குறைகள்

1. கூட்டாட்சி மன்றத்தில் பல்வேறு கட்சிகளை சேர்ந்தவர்கள் உறுப்பினராக இருப்பதால் முடிவுகள் எடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது.
2. இதன் உறுப்பினர்கள் வெவ்வேறு கட்சியை சேர்ந்தவர்களாக இருப்பதால் அமைச்சரவை முடிவுகள் பாதுகாக்கப்படாமல் வெளியார்களுக்கு அவ்வப்போது தெரிந்து விடுகின்றன.
3. நெருக்கடி காலங்களில் மட்டும் தான் இத்தைகைய அரசாங்கம் விரைந்து செயல்படுகிறது.
4. பன்மை கொள்கை அடிப்படையில் கூட்டுக்குழு உறுப்பினர்கள் பல கட்சிகளிலிருந்து நியமிக்கப்படுவதால் அவர்களிடையே ஒற்றுமை மற்றும் சுதந்திரம் இருப்பதில்லை.

## 5.6 இக்கால சர்வாதிகார அரசுகள்

சர்வாதிகாரி என்னும் சொல் பழங்கால உரோமாபுரி அரசு முறையிலிருந்து பெறப்பட்டதாகும். இம்முறை அரசாங்கம் மக்களாட்சிக்கு எதிரானது. மக்களாட்சியில் சுதந்திரம் நிலைநாட்டப்படுகிறது. ஆனால் சர்வாதிகார ஆட்சியில் அது ஒடுக்கப்படுகிறது. **நியூமன்** என்னும் அறிஞர் தனிமனிதர் அல்லது கூட்டாக சேர்ந்த சிலர் அரசு அதிகாரத்தை தாங்களே எடுத்துக்கொண்டு கட்டுப்பாடில்லாமல் ஆட்சி செய்யக்கூடிய அமைப்பு சர்வாதிகார அரசு என்று கூறுகிறார். தற்கால சர்வாதிகார அரசுகள் மக்களாட்சிக்கு எதிராக பின்வரும் காரணங்களால் ஏற்பட்டன என்று சொல்லலாம்.

1. 1914–1918 முதலாம் உலகப்போரில் வெற்றி பெற்ற இங்கிலாந்து மற்றும் பிரான்சு நாடுகள் போரில் தோற்ற ஜெர்மனி போன்ற நாடுகளை மதிக்காமல் எதேச்சதிகாரம் செலுத்தின.

2. இரண்டாம் உலகப்போருக்கு முற்பட்ட 1919–39 கால கட்டத்தில் மக்களாட்சி முறை வெற்றி பெறாமல் தோல்வியுற்ற சூழ்நிலையில் சர்வாதிகாரம் தலையெடுத்தது.

3. எத்தியோப்பியாவை முஸோலினி தலைமையிலான இத்தாலி இணைத்துக்கொண்ட போதும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளை சோவியத் ரஷ்யா தாக்கியபோதும், மஞ்சூரியாவை சீனாவிடமிருந்து ஜப்பான் கைப்பற்றிய போதும் இவற்றிக்கெல்லாம் சிகரம் வைத்தார் போல ஜெர்மனியை சேர்ந்த ஹிட்லர் இதர நாடுகள் மேல் படையெடுத்து அவைகளை தாக்கியபோதும் மக்களாட்சி முறையை காப்பாற்ற சர்வதேச சங்கம் நடவடிக்கை எடுக்காமல் போயிற்று.

## இக்கால சர்வாதிகார அரசின் சிறப்பம்சங்கள்

1. இத்தகைய அரசு தனிமனித எதேச்சதிகாரமுடையது.
2. ஒரு கட்சி ஆட்சிமுறை. இதற்கு உதாரணம் சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி.
3. தனிமனித சுதந்திரம் கிடையாது.
4. பயம் மற்றும் பீதி காரணமாக சர்வாதிகாரிக்கும் மக்களுக்குமிடையே உள்ள இடைவெளி.

## நிறைகள்

1. சர்வாதிகாரிகள் மனஉறுதியுடன் எந்த காரியத்தையும் முடிக்கிறார்கள். அதுபற்றி விரைவில் முடிவெடுக்கிறார்கள்.
2. நிர்வாகச் செலவு குறைவாக இருக்கிறது.
3. ஒரே கட்சி, ஒரு தலைவர், ஒரே மாதிரியான திட்டமிடுதல் நடைமுறைதான் சர்வாதிகாரத்திற்கு உரியது.
4. தேசிய ஒற்றுமை மற்றும் மக்களிடத்தில் காணப்படும் நாம் எல்லோரும் ஒன்று என்ற உணர்ச்சி சர்வாதிகாரத்தினால் ஏற்பட்ட நன்மைகளில் ஒன்றாகும்.

## குறைகள்

1. வலிமை மற்றும் பயம் சர்வாதிகாரத்தின் ஆதாரமாகும்.
2. மக்களுக்கு உரிமைகள் ஏதும் தரப்படுவதில்லை.
3. சர்வாதிகாரிகள் தங்களுடைய சுயநலம் சார்ந்த குறிக்கோள்களை அடைவதற்கு அவர்களுடைய சக்தியை செலவிடுகிறார்கள்.
4. சர்வாதிகாரிகள் புரட்சி அடிப்படையில் மாறுதல்களை தோற்றுவிக்கிறார்கள்.

## இருபதாம் நூற்றாண்டின் சர்வாதிகாரிகள்



காஸ்ட்ரோ



ஹிட்லர், (1889–1945)



மாஸே துங்(1893–1976)



முஸோலினி (1883–1945)

**கியூபாவில் காஸ்ட்ரோவும், இத்தாலியில் முஸோலினியும், ஜெர்மனியில் ஹிட்லரும், சீனாவில் மாசேதுங்கும்** இக்கால சர்வாதிகாரத்திற்கு உதாரணம் ஆவார்கள். இத்தைகைய சர்வாதிகாரத்தில் தனிமனித விருப்பம் மற்றும் வாழ்க்கை மதிக்கப்படுவதில்லை. மாறாக அவர்கள் மேல் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு சுதந்திர கருத்துக்கள் தோன்றாமல் தடை செய்யப்படுகின்றன.

## 5.7 ஓரவை மற்றும் ஈரவை முறை சட்டமன்ற விளக்கம்

சட்டத்துறை அரசாங்கத்தின் முதலாவது பிரிவாகும் இத்துறை சட்டங்களை இயற்றுகிறது. சட்டங்கள் இயற்றப்பட்டு நடைமுறைக்கு வரும்பொழுதுதான் அவை பற்றி எழும் சந்தேகங்கள் மற்றும் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. இயற்றப்படும் சட்டங்கள் எல்லாம் பெரும்பாலும் மக்களுடைய விருப்பங்களை பிரதிபலிப்பவைகளாக இருக்கின்றன.

சட்டமன்றங்கள் இருவகைப்படும்.

**சட்டமன்றம்** →
- **1. ஓரவை முறை**
- **2. ஈரவை முறை**

**ஓரவை முறை:** ஒரே ஒரு சட்டமன்றமிருக்கும் முறைக்கு ஓரவை முறை என்று பெயர். எடுத்துக்காட்டு சீனாவில் உள்ள தேசிய மக்கள் மாநாடு.

இந்தியா: தமிழ்நாட்டிலுள்ள சட்டமன்றம்

**ஈரவை முறை:** இலத்தீனிய மொழியில் கேமிரா என்ற சொல் வீடு அல்லது மன்றம் என்று பொருள்படும். எங்கு இரண்டு சட்டமன்றங்கள் இருக்கின்றனவோ அது ஈரவை முறை என்றழைக்கப்படுகிறது.

இந்திய பாராளுமன்றம் மக்களவை மற்றும் மாநிலங்கள் அவையை கொண்டது. அமெரிக்க நாடாளுமன்றத்தில் பிரதிநிதிகள் மன்றமும் செனட்டும் இருக்கின்றன. இங்கிலாந்து பாராளுமன்றதில் பொதுமக்கள் சபை மற்றும் பிரபுக்கள் சபையும் இருக்கின்றன.

பெரும்பாலான நாடுகளில் சட்டமன்றம் இரு அவைகளை கொண்டதாக இருக்கின்றது. சில நாடுகளில் மட்டும் ஒரே ஒரு அவை இருக்கிறது. அறிஞர்கள் **பிரைஸ், கார்னர்** மற்றும் **ஆக்டன் பிரபு** போன்றவர்கள் ஈரவை முறையின் அவசியத்தை விவரித்திருக்கிறார்கள். அதே சமயம் **லாஸ்கி, பெஞ்சமின் பிராங்கிளின், பென்தம்** போன்றோர்கள் ஓரவை போதுமென்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

**சர்.ஜெ.எ.ஆர்.மேரியட்** போன்றவர்கள் கடந்த கால வரலாறு ஈரவை முறையை வற்புறுத்துவதாக இருக்கிறது. எனவே அதனால் ஏற்படும் நன்மைகளை உதாசீனப்படுத்தமுடியாது என்று கூறியிருக்கிறார்.

**டாக்டர். லீகாக்** என்பவர் ஓரவைமுறை நடைமுறையிலுள்ள இடங்களில் விரும்பத்தக்க செயல்பாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

ஓரவை மற்றும் ஈரவை முறைகளுக்கிடையே உள்ள வேறுபாடுகள்.

| | **ஓரவை முறை** | **ஈரவை முறை** |
|---|---|---|
| 1. | பொறுப்புடைமை நிலை நிறுத்தப்படுகிறது. | பொறுப்பு பங்கிடப்படுகிறது |
| 2. | அவசரமாக சட்டமியற்றப்படுகிறது. | அவசரமாக இயற்றப்படும் சட்டங்களுக்கு தடை விதிக்கப்படுகிறது. |
| 3. | சர்வாதிகாரத்திற்கு வழி கோலுகிறது. | சர்வாதிகாரம் ஏற்படுவதை தடுக்கிறது. |
| 4. | சட்டங்கள் இயற்றப்படுவதில் தாமதம் ஏற்படுவதில்லை. | சட்டமியற்றுவதில் தாமதம் ஏற்படுகிறது. |
| 5. | சட்டமியற்றுவதில் முடக்கங்கள் ஏற்படுவதில்லை | சட்டமியற்றுவதில் முடக்கங்கள் ஏற்படுகின்றன. |
| 6. | வேலை இரட்டிப்பதில்லை. | வேலை இரட்டிப்பாகிறது. |
| 7. | வேலை பளு ஏற்படுகிறது. | வேலை பளுவை குறைக்கிறது. |
| 8. | தேசிய செலவினத்தில் சிக்கனம் ஏற்படுகிறது. | செலவு அதிகமாகிறது. |
| 9. | சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவமும் மற்றும் வேறு பல நன்மைகளுக்கான நோக்கத்தை தடை செய்கிறது | சிறுபான்மையினருக்கு பிரிதிநிதித்துவம் வேறு பல நன்மைக்களுக்கான நோக்கு உள்ளது. |

## பயிற்சி

### பகுதி–அ

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதவும்:**

1. கூட்டாட்சி என்ற வார்த்தை எம்மொழியிலிருந்து பெறப்படுகிறது ?

அ. இலத்தீன் ஆ. பிரெஞ்சு

இ. ஹிந்தி ஈ. சமஸ்கிருதம்

2. கேமிரா என்ற இலத்தீன் மொழி சொல்லின் பொருள்

அ. வீடு ஆ. கட்டிடம்

இ. அமைப்பு ஈ. படம்

3. எந்த நாட்டில் குழு முறை அரசாங்கம் பின்பற்றப்படுகிறது ?

அ. அமெரிக்கா ஆ. இந்தியா

இ. சீனா ஈ. ஸ்விட்சர்லாந்து

4. கீழ்வரும் நாடுகளில் எது தலைவர் முறை அரசாங்கத்தை பின்பற்றுகிறது ?

அ. அமெரிக்கா ஆ. இங்கிலாந்து

இ. இந்தியா ஈ. பிரான்ஸ்

5. இந்தியாவில் வாக்குரிமை பெறுவதற்கு கீழே தரப்பட்டுள்ளவைகளில் எத்தகுதி பின்பற்றப்படுகிறது ?

அ. கல்வி ஆ. வரி செலுத்துதல்

இ. தொழில் ஈ. வயது

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

6. அதிகார பங்கீடு____________முறை அரசாங்கத்தில் முக்கியமான அம்சம்.

7. அரசியல் சட்டம்____________ சட்டங்களை விட மேலானது.

8. இந்திய லோக் சபை____________ மன்றமென அழைக்கப்படுகிறது.

9. இந்திய இராஜ்ய சபை____________ மன்றமென அழைக்கப்படுகிறது.

**III. சரியா அல்லது தவறா**

10. இரண்டு விதமான சட்டமன்றங்கள் இருக்கின்றன.

11. அமெரிக்க நாட்டின் மேலவை செனட் என்றழைக்கப்படுகிறது.

12. அரசாங்கம் அரசின் முக்கியக் கூறுகளில் ஒன்றாகும்.

13. கூட்டாட்சி அரசாங்க முறையில் மைய அரசில் அதிகாரங்கள் குவிக்கப் பட்டிருக்கின்றன.

## IV. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 14. பாராளுமன்றம் | – | சுவிட்ஸர்லாந்து |
| 15. தலைவர்முறை | – | இங்கிலாந்து |
| 16. குழுமுறை | – | அமெரிக்கா |
| 17. பலகட்சி முறை | – | சீனா |
| 18. ஒரு கட்சி முறை | – | இந்தியா |

### பகுதி ஆ

19. ஒற்றை ஆட்சி – பொருள் தருக.
20. கூட்டாட்சி – விவரிக்க.
21. பெயரளவிலான செயற்குழு என்பதை விளக்குக.
22. ஆதாரச் சட்டத்தின் சிறப்பென்ன ?

### பகுதி இ

23. இக்கால சர்வாதிகார ஆட்சியின் பண்புகள் யாவை ?
24. குழு ஆட்சி முறையை விளக்குக.
25. ஓரவை மற்றும் ஈரவை முறையிலுள்ள வேறுபாடுகளை எழுதுக.
26. அரசு மற்றும் அரசாங்கம் செயற்குழு உறுப்பினர்கள் பற்றி குறிப்பெழுதுக.
27. குழு முறை அரசாங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் பற்றி குறிப்பெழுதுக.

### பகுதி ஈ

28. பாராளுமன்ற அரசு முறையின் சிறப்பம்சங்களை விவரிக்க.
29. தலைவர் முறை அரசாங்கத்தின் குறை மற்றும் நிறைகளை ஆய்க.
30. சர்வாதிகார மற்றும் மக்களாட்சி அரசாங்கங்களின் வேறுபாடுகளை விவரிக்க.
31. இருபதாம் நூற்றாண்டின் சரிவாதிகாரிகளைப் பற்றி உமக்கு தெரிந்தவற்றை விவரிக்க.

# அத்தியாயம் 6
# நீதித்துறை

## முன்னுரை

நீதி பரிபாலனம் இக்காலம் என்றில்லாமல் எல்லா காலங்களிலும் முக்கியமானதாக இருக்கிறது. அரசாங்கத்தின் வளர்ச்சியிலும் அதன் செயல்முறைகளிலும் எங்கு எப்போது எவ்வாறு நீதிப்பணிகள் ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வருகின்றன என்பது தெளிவாக அறுதியிட்டு கூறயியலாது. அரசாங்கம் மூன்று அமைப்புகளைக் கொண்டதாக இருக்கிறது. அவை வருமாறு

அ. சட்டத்துறை

ஆ. செயல்துறை (நிர்வாகத்துறை)

இ. நீதித்துறை

ஆரம்ப காலத்தில் இத்துறைகளின் பணிகள் தெளிவாக இருக்கவில்லை. முடியாட்சி முதல் உயர்குடியாட்சி, சிறுகுழு ஆட்சி மற்றும் கொடுங்கோல் ஆட்சி என பலவகைப்பட்ட அரசாங்க அமைப்புகள் பல்வேறு காலங்களில் பல நாடுகளில் இயங்கி வந்திருக்கின்றன. இவை எதிலுமே அந்த மூன்று துறைகளின் பணிகள் வரையறுக்கப்பட்டு ஒவ்வொரு துறையும் அதற்கென தரப்பட்ட பணிகளை செய்து வரவில்லை. பெரும்பாலான சமயங்களில் செயல்துறை இதர துறைகளின் பணிகளையும் அதே போல சட்டத்துறை மற்றும் நீதித்துறை அவற்றின் பணிகளோடு இதர துறைகளின் அலுவல்களையும் செய்து வந்திருக்கின்றன. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையிலும் அந்த நிலையே எல்லா நாடுகளிலும் நடைமுறையில் இருந்திருக்கிறது. கால மாறுபாடுகளாலும் மக்கள் சிந்தனைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களாலும், அரசாங்க அமைப்புகளிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. இருபதாம் நூற்றாண்டில் குடியாட்சி முறை பெரும்பாலான நாடுகளில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறையில் பின்பற்றப்பட்டு வருகிறது. குடியாட்சி முறையில் முக்கிய அடிப்படைகளில் நீதித்துறை தனியாக பிரிக்கப்பட்டு சுதந்திரமாக செயல்படவேண்டுமென்பதும் நீதித்துறையை சார்ந்தவர்கள் விருப்பு வெறுப்பு இல்லாமல் தங்களுடைய கடமைகளை செய்ய வேண்டும் என்பதும் வழக்குகளில் விரைந்து சட்ட அடிப்படையிலான தீர்ப்புகள் தரப்பட வேண்டுமென்பதும் முக்கியமான அம்சமாகும். நீதித்துறையை போலவே நிர்வாகத்துறை (செயல்துறை) மற்றும் சட்டத்துறை தனித்து ஒவ்வொன்றும் அதன் பணிகளை மற்றதோடு சார்ந்திராமல் செய்ய வேண்டுமென்பதும் இன்னொரு அம்சமாகும். இவ்வாறு நிர்வாகத்துறை, சட்டத்துறை மற்றும் நீதித்துறை தனித்தனியாக செயல்பட வேண்டும் என்பது **அதிகார பிரிவினை கொள்கை** என்று சொல்லப்படுகிறது. இக்கொள்கையை பிரான்ஸ் நாட்டை சேர்ந்த **மான்டெஸ்கியூ** என்பவர் அவருடைய ''**சட்டங்களின் உயிர்**'' (The spirit of laws) 1748 ஆம் ஆண்டு வெளியிட்ட அவருடைய நூலில் விவரித்திருக்கின்றார். இக்கொள்கை அமெரிக்க அரசியலமைப்பை எழுதியவர்களால் ஏற்றுகொள்ளப்பட்டது. அதன் பிறகு இதர ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகள் அவற்றினுடைய அரசியலமைப்பில் இக்கொள்கை அடிப்படையில் அரசாங்கம் செயல்படுவதற்கான விதிகளை எல்லாம் சேர்த்து அதன்படி அவைகளின் அரசாங்கங்கள் நடைபெறுகின்றன.

## 6.1 நீதித்துறையின் தேவையும், அவசியமும்

மேலே சொல்லப்பட்டது போல நீதிபரிபாலனம் அரசாங்கத்தின் பணிகளுள் முக்கியமானது. நீதிபதி ஒருவர் வழக்கொன்றை விசாரிக்கின்றபோது நடுநிலைநின்று சட்டத்தின் அடிப்படையில் நீதி வழங்க வேண்டும். இந்த அடிப்படையில் தான் எழுதப்பட்ட அரசியல் சட்டத்தின் பாதுகாவலனாக நீதித்துறை கருதப்படுகிறது.

எவ்வளவு விரைவாக வழக்குகள் முடிவுக்கு வந்து தீர்ப்புகள் தரப்படுகின்றனவோ அவ்வளவு விரைவாக வழக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வாய்ப்பிருக்கிறது. மக்களுடைய உரிமைகளும், உடைமைகளும் பாதுகாக்கப்படும். இத்தகைய நிலை அவர்களுடைய சுதந்திரத்திற்கு பாதுகாப்பாகவும், அது கெடுக்கப்படாமல் சுதந்திரம் நிலை நாட்டப்படவும், குற்றம் இழைத்தவர்கள் தண்டனையிலிருந்து தப்பாமல் இருக்கவும், தவறு செய்யாதவர்களுக்கு நீதி கிடைக்கவும் வகை செய்கிறது.

நாகரீக முறைகளை ஏற்று அவற்றை தொடர்ந்து பின்பற்றும் மக்களை கொண்ட நாடுகளில் நீதித்துறை தனித்து சுதந்திரமாக இயங்குவது ஏதேச்சதிகாரத்தை ஒழித்து மக்களுடைய சுதந்திரம் பாதுகாக்கப்படுவதற்கு துணையாக இருக்கின்றது என்று இங்கிலாந்து நாட்டை சேர்ந்த **பென்தாம்** என்ற சமூக சீர்திருத்த அறிஞர் அவருடைய நூல்களில் வலியுறுத்தியிருக்கிறார்.

## 6.2 நீதிபதிகளுக்கு இருக்க வேண்டிய தகுதிகள்

தனிமனிதனுடைய சுதந்திரம் மற்றும் சமுதாயத்தின் பலவகைப்பட்ட பிரிவுகளின் அமைப்பு மற்றும் அவற்றின் இயக்கம் நீதித்துறை செயலாற்றும் பாங்கை பொறுத்தே அமைகிறது என்ற கருத்து தற்காலத்தில் எல்லா நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். எனவே நீதிபதிகள் உயர்ந்த நோக்கம் உடையவர்களாக ஞானம் உடையவர்களாக, சட்டக்கல்வியில் தேர்ந்தவர்களாக, இயற்றப்பட்ட சட்டங்களின் நோக்கங்களை நன்கு அறிந்தவர்களாக இருக்க வேண்டியது அவசியம். இவை அல்லாமல் குறிப்பிட்ட வேறு சில தகுதிகளும் இருப்பது அவசியம் என ஒவ்வொரு நாடும் அதனுடைய அமைப்புக்கும் குறிக்கோள்களுக்கும் ஏற்றவாறு கருதி அதன் அடிப்படையில் தகுதிகளை தீர்மானிக்கிறது.

### அமெரிக்க நீதித்துறை சார்ந்த சில கருத்துக்கள்

அமெரிக்க அரசியலமைப்பு நீதிபதிகளுக்கு இருக்க வேண்டிய தகுதிகளை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. அதில் காணப்படுவதெல்லாம் நீதிபதிகள் ''நன்நடத்தை'' உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதுதான். இதன் காரணமாக மரபு அடிப்படையில் அமெரிக்க குடியரசு தலைவரால் நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு உயர்மட்ட நீதிமன்றங்களுக்கு நீதிபதிகள் நியமிக்கப்படுகிறார்கள். இந்த நியமனங்களுக்கு பின்வரும் தகுதிகள் பொதுவாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களில் நீதித்துறையில் உள்ள அனுபவம், சட்டம் சம்மந்தப்பட்ட பட்டையங்கள் அல்லது உயர்கல்வியில் பெற்றுள்ள தகுதிகள்.

(ஆ) அரசியல் கோட்பாடு குறிப்பாக ஒவ்வொரு அரசியல் கட்சியும் பின்பற்றும் கொள்கையில் ஈடுபாடும் அதை பின்பற்றி நடத்தலும் அதாவது, அவ்வப்போது பதவியிலிருக்கும் குடியாட்சி தலைவர்கள் எந்த கட்சியை சார்ந்து எத்தகைய கொள்கையை குறிக்கோள்களாக கொண்டிருக்கிறார்களோ அவற்றை பின்பற்றுவது. உதாரணமாக பழமைவாத அல்லது மிதவாத

கொள்கையை பின்பற்றும் குடியரசு தலைவர்கள் அக்கொள்கையை ஏற்றுக்கொள்பவர்களை நீதிபதிகளாக நியமிப்பர் என எதிர்ப்பார்க்கலாம். இந்த அடிப்படையில் நியமனங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

(இ) நீதிபதிகளாக நியமிக்க படுவோர்களில் பெரும்பாலானவர்கள் கட்சி சார்பு உடையவர்களாகவும் குடியரசு தலைவர் மற்றும் அவரது கட்சியை சேர்ந்த தலைவர்களை பின்பற்றி நடப்பவர்களாகவும் இருக்கின்றனர்.

(ஈ) அண்மைக்காலம் வரையிலும் இனம் மற்றும் ஆண், பெண் என்ற பாலின அடிப்படையிலும் கூட்டாட்சி நீதிபதிகள் ஆண்களாகவே இருந்தனர். பெண்கள் எவரும் நியமிக்கப்பட்டதில்லை. ஆனால் **ரொனால்ட் ரீகன்** குடியாட்சித்தலைவராக இருந்தபோது இந்த கொள்கையினின்றும் மாறுபட்டு பெண்களையும் நீதிபதிகளாக நியமித்தார். இப்போது வெள்ளையர்கள் மட்டுமல்லாமல் கறுப்பர்களும் ஆப்பிரிக்கா, மற்றும் இலத்தீன் இனத்தை சேர்ந்த அமெரிக்கர்களும் பெரும் அளவில் நீதிபதிகளாக நியமிக்கப்படுகிறார்கள்.

பெரும்பாலான தற்கால அரசாங்கங்கள் கீழே தரப்பட்டுள்ள சில பொதுவான கொள்கைகள் நீதிபதியாக நியமிக்கப்படுவர்களுக்கு இருக்க வேண்டுமென வற்புறுத்துகின்றன.

அ. குடிமை மற்றும் தேசியம்

ஆ. வயது வரம்பு

இ. ஏதாவது ஒரு பாடத்தில் பட்ட படிப்பு தகுதி

ஈ. சட்ட கல்வியில் பட்டம்

உ. நீதித்துறையில் அல்லது வழக்கறிஞர்களாக குறிப்பிட்ட சில காலத்திற்கு உள்ள அனுபவம்

ஊ. சட்டம் மற்றும் நீதியியலில் சிறந்த புலமையுடையவராக இருத்தல்.

## 6.3 நீதி மறு ஆய்வு கொள்கை

அரசியலுக்கு நீதிமறு ஆய்வு அமெரிக்காவின் சிறந்த பங்களிப்பாகும். இயற்றப்பட்ட சட்டமொன்றை அரசியல் சட்டத்திற்கு உட்பட்டதல்ல என்றோ அல்லது அதற்கு அப்பாற்பட்டது என்றோ அறிவிக்கும் நீதித்துறைக்கு உள்ள அதிகாரம் நீதி மறு ஆய்வு (புனராய்வு) என்று அழைக்கப்படுகிறது. இம்முறை அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் நடைமுறையிலிருந்து வருகிறது. இங்கெல்லாம் மேல்மட்டத்தில் உள்ள நீதிமன்றங்கள் சட்டங்கள் செல்ல தகாதவை என்று அறிவிக்கும் அதிகாரம் உடையவை. ஆனால் இங்கிலாந்து நாட்டில் மட்டும் இக்கொள்கை பின்பற்றபடவில்லை.

இந்தியாவில் மாநிலங்களில் (States ) உள்ள உயர் நீதிமன்றங்களும் இந்தியா முழுவதற்குமான நீதித்துறை பொறுப்பு வகிக்கும் உச்ச நீதிமன்றத்திற்கும் நீதி மறு ஆய்வு அதிகாரம் கீழே தரப்பட்டுள்ள இனங்களில் வழங்கப்பட்டிருக்கிறது.

அ. மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே ஏற்படும் சச்சரவுகள்.

ஆ. அரசியல் அமைப்பில் உள்ள விதி (சரத்து) ஏதேனும் பற்றி சந்தேகங்களோ அல்லது வேறுப்பட்ட கருத்துக்களோ நிலவுமானால் அதை விளக்குவது அல்லது விமர்சிப்பது.

இ. ஆதார உரிமைகள் பாதுகாப்பு.

ஈ. மாநில சட்டமன்றங்களால் இயற்றப்படும் அரசியல் அமைப்பிற்கு எதிரான சட்டங்கள்.

**நிறைகள்.**

1. ஞானம் மற்றும் அனுபவ அடிப்படையில் நீதிபதிகள் நீதிமறு ஆய்வு செய்ய தகுதியுடையவர்கள்.
2. அரசியல் அமைப்பின் பாதுகாவலனாக, கூட்டாட்சி நீதிமன்றம் செயல்பட வகைசெய்கிறது.
3. சட்டமன்றங்கள் போலல்லாமல் நீதிமன்றங்கள் சுதந்திரமாக செயல்படவும் ஒருதலைபட்சமாக நடந்து கொள்ளாமலும் இருக்க உதவுகிறது.
4. மக்களுடைய குறிப்பாக சிறுபான்மையினருடைய உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.
5. வரம்புக்குட்பட்ட சுதந்திரமான அரசாங்கம் செயல்படுவதற்கு வகை செய்கிறது.
6. சட்டமன்றங்கள் அவசர அவசரமாக சட்டங்கள் இயற்றுவதினின்றும் பாதுகாப்பு தருகிறது.

**குறைகள்**

1. அதிகாரப்பிரிவினைக் கொள்கைக்கு எதிரானதாக இருக்கக்கூடும்.
2. நீதிமன்றங்களுக்கு இந்த அதிகாரம் தரப்படுவதால் நிர்வாகத் துறையும் சட்டத்துறையும் சிறந்த முறையில் பணியாற்ற முடியாமல் போகலாம்.
3. சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கு தேவையான கொள்கைகளையும், திட்டங்களையும் இக்கொள்கை பாதிக்க கூடும்.
4. பெரும்பாலான வழக்குகள் மற்றும் பிரச்சினைகள் அரசியல், சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகள் சம்மந்தப்பட்டவைகளாகவே இருப்பதால் நீதித்துறை சட்டத்துறையை மிஞ்சிய அதிகாரம் பெற வகை செய்யும்.
5. அமெரிக்காவிலும், இந்தியாவிலும் வழக்குகள் நான்கு அல்லது ஐந்து நீதிபதிகள் கொண்ட குழுவாக விசாரிக்கப்படும்போது பெரும்பான்மை அடிப்படையில் முடிவுகள் செய்யப்படுகின்றன. இது நீதிபதிகளுக்கு இடையே உள்ள கருத்து வேற்றுமையை எடுத்துக்காட்டுவதோடு வழக்குகளின் தரங்களையும் பாதிக்கின்றது.
6. நீதிபதிகள் சில சமயங்களில் காலத்திற்கு தகுந்தாற்போலவும், மாறுபட்ட சூழ்நிலைக்கு ஏற்பவும் நடந்து கொள்ளாமல் பழமைவாதிகளாக இருக்கின்றனர்.
7. நீதிபதிகள் சில சமயங்களில் சட்டங்களின் உள் நோக்கம் என்ன என்பதை பாராமல் அவற்றிலுள்ள சொற்களின் பொருளுக்கு ஏற்ப தீர்ப்பு வழங்குகிறார்கள். இதனால் அவர்கள் கடின நோக்கம் உடையவர்களாகவும் மாறுகிறார்கள்.

இவ்வாறு நீதிமறு ஆய்வு பல நிறைகளையும் குறைகளையும் உடையதாக இருக்கின்றது. இதனால் சில சமயங்களில் சில தடைகள் ஏற்படுகின்றன. முன்னேற்றங்கள் ஏற்படாமல் போகின்றன. தவறுகளும் நடைபெறுகின்றன. இருப்பினும் இதனுடைய நிறைகள் குறைகளைவிட மிகுந்து காணப்படுவதால் இக்கொள்கை நீதித்துறையில் பின்பற்றப்படுவது அவசியமென எல்லோரும் அறிந்துள்ளனர்.

## 6.4 நீதித்துறை செயல் வேகம் (நீதி சுறுசுறுப்பு) (Judicial Activism)

நீதித்துறை மக்களாட்சிமுறை அரசாங்கத்தில் இன்றியமையாத ஒன்றாகும். அதனுடைய கடமைகளும் பொறுப்புகளும் அரசாங்கத்தினுடைய இதர துறைகள் போலவே மிக முக்கியமானவை. நாடாளுமன்ற குடியாட்சி முறையில் அதன் பல்வேறு அமைப்புகளும் சரியான முறையில் பணியாற்றுவதற்கு நீதிசார்ந்த அமைப்புகள் பல வகைகளில் துணைநிற்கின்றன.

பொது மக்கள் விருப்பம் மற்றும் அவர்கள் தூண்டுதல் காரணமாக நீதிமன்றங்கள் இப்போது நீதிவழங்குவதிலும் பொதுமக்கள் சம்பந்தமான வழக்குகளை தீர்ப்பதிலும் புதுப்புது யுக்திகள் மற்றும் நடைமுறைகளை பொது மக்கள் நலன் கருதி பின்பற்றி வருகின்றன. அவற்றுள் முக்கியமானதாக நீதித்துறை செயல் வேகம் என்ற புதுக்கொள்கை நடைமுறைக்கு வந்திருக்கிறது. இக்கொள்கை அரசாங்கத்தின் நாலாவது அங்கம் என்று அழைக்கப்படும் செய்தி மற்றும் விளம்பரத்துறை நடவடிக்கைகளை ஒட்டியும் குடிமக்களின் விருப்பத்திற்கு இணங்கவும் ஏற்பட்டது எனலாம். நீதித்துறையில் உள்ளவர்கள் இதர துறைகளில் உள்ளவர்கள் போலவே கல்வி மற்றும் இதர நடவடிக்கைகள் உடையவர்களாக இருக்கிறார்கள். இவர்களும் தவறுகள் செய்ய கூடியவர்கள் என்பதை மறுக்க இயலாது. எனவே விழிப்புணர்வு கொண்ட மக்கள் அவர்களுடைய சுதந்திரத்தையும் பாதுகாத்து கொள்கின்ற முறையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நீதித்துறை சுறுசுறுப்புக்கு மக்களாட்சி முறை நாடுகளில் அடிப்படைகளாகின்றன.

மக்களாட்சி முறை பின்பற்றப்படுகின்ற நாடுகளில் நீதி வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. அதன் காரணமாக நீதி மறுக்கப்படும் போது அந்த நீதி மடிந்துவிடுகிறது. எனவே நீதி விரைவாக வழங்கப்படவும் அந்நீதி நியாயமானதாக இருக்கவும் நீதித்துறைக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே நீதித்துறை பொது மக்களுடைய எதிர்பார்ப்பிற்கு ஏற்ப ஆனால் அதே சமயத்தில் அரசாங்கத்தின் இதர பிரிவுகளுக்கு தீங்கு இழைக்காதவாறு நடுநிலை நின்று இருபிரிவினருக்கும் பாதுகாப்பு அளிப்பது மிக அவசியமாகிறது. ஆனால் இது நீதித்துறை ஏதேச்சதிகாரத்தில் முடிந்துவிடக்கூடாது.

நீதிமுறையிலும் நீதித்துறையிலும் அவைசார்ந்த அமைப்புகளிலும் உதாரணமாக நீதிபதிகள், தரகர்கள் நடுநிலையற்றவர்கள், சார்புடைய அரசு வழக்கறிஞர்கள் போன்றவர்களிடையே லஞ்சம் போன்ற சமூகத்திற்கு கேடு விளைவிக்கும் பல வழக்கங்கள் இருக்கின்றன. இவைகளும் மாற்றப்படுவதோடு காலப்போக்கில் ஒழிக்கப்படுவது மிக இன்றியமையாதது ஆகும். இவை எல்லாவற்றையும் செய்து முடிக்க கூடிய வாய்ப்புகளும் சூழ்நிலைகளும் நீதித்துறையை சேர்ந்தவர்களுக்கு அதிகமாக இருக்கின்றன. இவர்கள் எந்த அளவிற்கு உண்மையாகவும், நியாயமாகவும், விறுவிறுப்புடனும் இவர்களுடைய கடமைகளைச் செய்கின்றார்களோ அப்போது நீதித்துறை சுறுசுறுப்பு மக்களால் வரவேற்கப்படும். சட்ட அடிப்படையிலான நடவடிக்கைகளுக்கு மக்களிடத்தில் நம்பிக்கை ஏற்படும்.

## 6.5 நீதித்துறை சுதந்திரம்

நீதி தெய்வீகத்தன்மை உடையதென மக்கள் கருதுகிறார்கள். நீதிபதிகள் வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் எவர் பக்கமும் சாராமல் சமநிலையில் இருந்து நீதிவழங்க வேண்டும். தற்கால பொதுநல அரசில் இத்தகைய சுதந்திரம் மிகவும் தேவைப்படுகிறது. பொதுநல அரசில் பொது மக்களுக்கு நன்மைகள் ஒரு பக்கம் இருக்க தீமைகள் ஏற்படவும் சந்தர்ப்பங்கள் உண்டு. எனவே வழக்குகளும் அதிக அளவில் நீதிமன்றங்களுக்கு கொண்டுவரப்படும். இத்தகைய

சூழ்நிலைகளில் நீதிபதிகள் தங்களுடைய சுதந்திரத்தை நிலை நிறுத்துகின்ற முறையில் பச்சாதாபம் இல்லாமல் தீர்ப்பு சொல்வது அவசியமாகும். பின்வரும் காரணிகள் நீதித்துறை சுதந்திரத்தை நிலைநாட்டுகின்றன.

## 1. நீதிபதிகள் நியமன முறை

முன்னேற்றமடைந்த நாடுகளில் மூன்று முறைகளில் நீதிபதிகள் நியமிக்கப்படுகிறார்கள். அவை

அ. மக்களால் தேர்ந்தெடுக்கும் முறை

ஆ. சுவிட்ஸர்லாந்து நாட்டில் சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படும் முறை

இ. நிர்வாகத் துறையால் நியமிக்கப்படும் முறை. இவற்றின் விளக்கம் கீழே தரப்படுகிறது.

**அ. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முறை:** இம்முறை பிரான்ஸ் நாட்டில் பின்பற்றப்பட்டது.அதன் பிறகு அமெரிக்கா, சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளில் சில மகாணங்கள் இந்த முறையை பின்பற்றுகின்றன. **லாஸ்கி** மக்களால் தேர்ந்தெடுக்கும் முறை மோசமானது. எனவே அவர்கள் வழங்கும் தீர்ப்புகளும் நியாயமானவைகளாக, உண்மையானவைகளாக இருக்க முடியாது என்று கூறுகிறார். **கார்னர்** என்பவர் மக்களால் தேர்ந்தெடுக்கும் முறை நீதித்துறையின் பெருமையை தரம் தாழ்த்தி காட்டுவதோடு நீதிபதிகளை அரசியல் சார்புடையவர்களாக காட்டுவதோடு நீதிபதிகள் அரசியல் சார்புடையவர்களாக, சட்டத்தை அடிப்படையாக கொள்ளாமல் நீதிவழங்க காரணமாகிறது என்று விளக்குகிறார்.

**ஆ. சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படும் முறை:** இம்முறை சுவிட்ஸர்லாந்தில் உள்ள கான்டன்கள் (Cantons) என்று அழைக்கப்படும் மாகாணங்களில் பின்பற்றப்படுகிறது. இது ஒரு சிறந்த முறையாகாது. அதிகாரப் பிரிவு கோட்பாட்டிற்கு மாறானது. இம்முறை நீதித்துறை சட்டமன்றத்தின் ஏவலாளாகக் கருதப்படும். அல்லாமலும் அப்போது ஆட்சியிலிருக்கும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளாக நீதிபதிகள் செயலாற்றுவார்கள். அதனால் அவர்கள் சுதந்திரத்தை இழப்பார்கள்.

**இ. நிர்வாகத்தால் நியமிக்கப்படும் முறை**: இம்முறை இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, ஜப்பான், தென் ஆப்பிரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் பின்பற்றப்படுகிறது. உலகின் இதர பல நாடுகளும் இம்முறையையே பெரும்பாலும் பின்பற்றுகின்றன. இந்த முறையில் நியமிக்கப்படும் நீதிபதிகள் தேர்வுகள் எழுதுவதன் மூலமாகவும் நேர்காணல் மூலமாகவும் இதர தகுந்த தேர்வு முறை அடிப்படையிலும் நியமிக்கப்படுகிறார்கள். எனவே இவர்களுடைய சுதந்திரத்திற்கு கேடு ஏற்படுவதில்லை. நீதிபதிகளுக்கு இருக்க வேண்டிய தகுதிகள், அனுபவங்கள் எல்லாம் பார்த்து அந்த அடிப்படையில் அவர்கள் நீதித்துறை தொடர்புடைய அமைச்சகத்தால் பரிந்துரை செய்யப்பட்டு நிர்வாகத்திற்குக் தலைமையாக இருப்பவரால் நியமிக்கப்படுவதால் அவர்கள் சுயமாகவும், நேர்மையாகவும், சிறப்பாகவும் பணியாற்ற முடியும். இம்முறையை **லாஸ்கி** போன்ற அறிஞர்கள் சிறந்தது என்று கூறியிருக்கின்றார்கள்.

## 2. நீண்ட பதவிக்காலம்

நீதித்துறை சுதந்திரமாக இயங்குவதற்கு இன்றியமையாத அடுத்த காரணி நீண்ட காலத்திற்கு பதவிக்காலம் இருக்க வேண்டும் என்பதாகும். இதனால் குறுகிய காலத்திற்கு நியமிக்கபடுவோர்களிடையே காணப்படுகின்ற சுயநலம், லஞ்சம் போன்ற குறைகள் இருக்காது

என்று கருதப்படுகிறது. பெரும்பாலான நாடுகளில் உயர்மட்ட நீதித்துறையை சேர்ந்த நீதிபதிகளின் பதவிக்காலம் 60,65,70 வயது என்பதாக இருக்கிறது. **ஹமில்டன்** போன்ற அறிஞர்கள் நீண்ட பதவி காலத்திற்கு நியமிக்கப்படும் நீதிபதிகள் யோக்கியமானவர்களாகவும் சிறந்த அறிவுடையவர்களாகவும் இருப்பார்கள் என்பதோடு அரசாங்கத்திற்கும் பெருமை ஏற்பட முயற்சிப்பார்கள் என்று கூறுகிறார்.

### 3. பணிக்கால உறுதி

நீதித்துறை சுதந்திரம் நீதிபதிகளின் நீண்ட பதவிக்காலம், பதவியில் பணி நிரந்தரம் போன்றவற்றையும் அடிப்படையாகக் கொண்டது. அதாவது அவர்கள் பதவியிலிருந்து எளிதில் விலக்கப்படாமல் இருக்க வேண்டும். இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் பெரும்பாலான தற்கால அரசாங்கங்கள் இத்தகைய பணி விதிகளை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. இவைகள் எளிதில் மாற்ற முடியாதவாறு அரசியலமைப்பு சட்டத்திலேயே சேர்த்து நீதித்துறை சுதந்திரத்தை நிலைநிறுத்துவதற்கு நல்ல ஏற்பாடுகள் செய்திருக்கின்றன. எனவே நீதிபதிகளை எளிதில் பதவியிலிருந்து நீக்கமுடியாது.

### 4. போதுமென்ற அளவிற்கு ஊதிய உத்திரவாதம்

நீதிபதிகளுக்கு அவர்களுடைய கல்வி மற்றும் இதர தகுதிகள் அடிப்படையிலும், அனுபவம், சமுதாயத்தில் அவர்களுக்கு இருக்க கூடிய அந்தஸ்து போன்றவைகளை கருத்தில் கொண்டும், தகாத வழிகளில் பொருளீட்ட முற்படாமல் இருக்கவும் போதிய ஊதியம் தரவேண்டும். அப்போது தான் நீதிபதி பதவிக்கு தகுந்தவர்களும், சிறந்தவர்களும் வருவார்கள். மேலும் நீதிபதிகள் பதவியில் இருக்கும் போது எக்காரணம் கொண்டும் அவர்களுடைய ஊதியம் மற்றும் இதரபடிகள் மேலும் உத்திரவாதம் தரப்பட்டுள்ள பணி செய்யும் காலம் குறைக்கப்படவோ மறுக்கப்படவோ கூடாது. அவர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெறும்போது அமைதியாக ஓய்வு காலத்தை பெறுவதற்கு ஏற்ற வகையில் ஓய்வு ஊதியம் வழங்கப்பட வேண்டும். இவைகளையெல்லாம் உறுதி செய்யும் வகையில் நீதித்துறைக்கான நிதிகள் தேசிய அரசாங்கத்திற்கு அனுமதிக்கப்பட்ட நிதி ஆதாரங்களிலிருந்து வழங்கப்படுகிறது.

### 5. உயர் தகுதி

நீதி, சுதந்திரம், அதன் முக்கியத்துவம், நீதிபதிகளின் சிறப்பு, அவர்கள் சரியான முடிவுகளை வழங்குதல், சுதந்திரமாக கருத்துக்கள் சொல்லுதல் ஆகியவை நீதிபதிகளுக்கு இருக்க வேண்டிய தகுதிகளாகும்.

### 6. நிர்வாகத்தினின்றும் நீதித்துறையை பிரித்தல்

இப்பாடத்தில் **மான்டெஸ்கியூ** என்பவரது அதிகாரப் பிரிவினை கொள்கை பற்றி வேறொரு இடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் நீதித்துறை நிர்வாகத்துறையினின்றும் பிரிக்கப்பட்டு தனியாகவும் சுதந்திரமாகவும் செயல்படுமாறு செய்யப்பட்டிருக்கிறது. எனவே நீதித்துறையை கட்டுப்படுத்துவது அதன் சுதந்திரத்திற்கு கேடு விளைவிப்பது போன்ற செயல்களில் நிர்வாகத்துறை தலையிட முடியாது. எனவே நீதிபதிகள் பயம் இல்லாமல் சுதந்திரமாக தீர்ப்புகள் வழங்கலாம்.

### 7. ஓய்வு காலத்தில் பணியாற்றுவதற்கு தடை

நீதிபதிகள் அவர்கள் பதவிக் காலம் முடிந்த பிறகு நீதிமன்றங்களில் வழக்கறிஞர்கள் போன்ற நீதி சம்பந்தப்பட்ட பணிகளில் ஈடுபடக்கூடாது. ஏனெனில் அவர்கள்

பதவியிலிருந்தபோது அவர்களுடன் பணியாற்றியவர்கள் முன்னேயே வாதிட வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இது தவிர்க்கப்பட வேண்டும்.

### முடிவுரை

மேற்கூறப்பட்ட கருத்துக்கள் அடிப்படையில் நீதித்துறை சுதந்திரமாக செயல்பட நீதிபதிகள் நியமன முறை சிறந்ததாக இருக்கவேண்டும். அவர்களுக்கு தரப்படும் ஊதியம் அவர்கள் செய்யும் பணிக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். பதவிக்காலமும் குறிப்பிட்ட காலத்திற்கென உறுதி செய்யப்பட்டிருத்தல் அவசியம். அரசியல் தலையீடு இருக்கக் கூடாது.

## பயிற்சி

### பகுதி அ

**I. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. மான்டெஸ்கியூ என்பவர் அவருடைய ______________ 1748 ஆம் ஆண்டு வெளியிட்ட அவருடைய நூலில் விவரித்திருக்கின்றார்.
2. ______________ நாட்டில் நீதிமறு ஆய்வு நடைமுறையில் இருந்து வருகிறது.
3. நீதிபதிகள் சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படும் வழக்கம் ______________ நாட்டில் பின்பற்றப்படுகிறது.

**II. சரியா அல்லது தவறா.**

4. நீதிமறு ஆய்வு என்பதில் அமெரிக்கா நாடு முக்கிய பங்குவகிக்கிறது.
5. அரசாங்கம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது.
6. நீதித்துறை மக்களாட்சியின் தூண் என்று கருதப்படுகிறது.

### பகுதி ஆ

7. நீதித்துறை விளக்குக.
8. நீதிபதிகளாவதற்கான தகுதிகள் யாவை ?
9. நீதிமறு ஆய்வு விளக்குக.

### பகுதி இ

10. நீதித்துறை இருப்பதற்கான தேவை யாது ?
11. நீதிமறு ஆய்வின் நிறை, குறைகளை விவரிக்க.

### பகுதி ஈ

12. நீதித்துறை செயல் வேகம் பற்றி குறிப்பு எழுதுக.
13. நீதித்துறையின் சுதந்திரத்தைப் பற்றி விளக்கமாக எழுதுக.

## அத்தியாயம் 7

# இந்திய அரசாங்கமும் அரசியலும்

இறைமையுடைய மக்களாட்சி முறை கொண்ட நாட்டின் அரசியல் சட்டம் மக்கள் பிரதிநிதிகளை அடங்கிய அரசியல் நிர்ணய சபையால் இயற்றப்படுகிறது.

இந்திய அரசியலமைப்பு, அரசியலமைப்பு பேரவையால் **(1946–49)** உருவாக்கப்பட்டது. இந்திய அரசியலமைப்பு பேரவையின் (Constituent Assembly)தலைவராக டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்கள் செயல்பட்டார். டாக்டர் B.R.அம்பேத்கார் அவர்கள் வரைவுக்குழுவின் (Drafting Committee) தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார். இந்திய அரசியலமைப்பு, அரசியலமைப்பு பேரவை உறுப்பினர்களின் கூட்டுப்படைப்பாகும்.

## 7.1 இந்திய அரசியலமைப்பின் சிறப்பியல்புகள் (SALIENT FEATURES OF THE INDIAN CONSTITUTION)

1. முகப்புரை
2. எழுதப்பட்ட அரசியலமைப்பு
3. நெகிழா அரசியலமைப்பு
4. கூட்டாட்சி முறை
5. மதசார்பற்ற அரசு
6. பாராளுமன்ற மக்களாட்சி
7. அடிப்படை உரிமைகள்
8. அரசுக் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள்
9. அடிப்படை கடமைகள்
10. நீதிப்புனராய்வு
11. வயது வந்தோர் வாக்குரிமை.

### முகப்புரை (PREAMBLE)

இந்திய அரசியலமைப்பு முகப்புரையிலிருந்து துவங்குகிறது. அரசியலமைப்பின் நோக்கங்களை முகப்புரை சுருங்கக் கூறி விளங்க வைக்கின்றது. அரசியலமைப்பின் குறிக்கோள்கள் யாவும் முகப்புரையுள் அடங்கியுள்ளன என்று கூறலாம். அரசியலமைப்பின் வகையங்களை (Provisions) விளங்க வைப்பதற்கு இது துணையாக இருக்கிறது. முகப்புரை அரசியலமைப்பின் ஒரு பகுதியாகாது. எனவே இது நீதிமன்றங்களின் நீதிப் புனராய்வுக்கு அப்பாற்பட்டது.

**1976**ஆம் ஆண்டைய **42** வது அரசியல் சட்டத் திருத்த மசோதாவுக்குப் பிறகு கீழே குறிப்பிட்டுள்ளபடி இருக்கிறது.

## இந்திய அரசியலமைப்பின் முகப்புரை

இந்திய மக்களாகிய நாம் இந்திய நாட்டின் இறைமை சமச்சமுதாயம், சமயசார்பின்மை மற்றும் மக்களாட்சி முறை கொண்ட ஒரு குடியரசாக நிறுவ பவித்தரமான முடிவெடுத்து,

## அதன் குடிமக்கள் அனைவருக்கும்

1. சமுதாய, பொருளாதார, அரசியல் நீதி

2. எண்ணம், சொல், நம்பிக்கை

3. சமய நம்பிக்கை மற்றும் வழிபாடு இவற்றில் **சுதந்திரம்** சமுதாயப்படிநிலை, வாய்ப்பு நலம் இவற்றில் **சமத்துவம்** ஆகியவற்றை எய்திடச் செய்யவும் அவர்கள் அனைவரிடையேயும்

4. தனிமனிதனின் மாண்பு, நாட்டு மக்களின் **ஒற்றுமை, ஒருமைப்பாடு** இவற்றை உறுதிப்படுத்தும் உடன் பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையவராய், நம்முடைய அரசியலமைப்புப் பேரவையில் 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று ஈங்கிதனால் இந்த அரசியலமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்.

சமதர்ம, சமயச்சார்பின்மை, ஒருமைப்பாடு ஆகியன முகப்புரையில் 1976 ஆம் ஆண்டு 42–வது அரசியல் சட்டத்திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்டன.

## எழுதப்பட்ட அரசியலமைப்பு (WRITTEN CONSTITUTION)

எழுதப்பட்ட அரசியலமைப்பு என்பது பொதுவாக எழுதப்பட்ட நிலையில் விதிமுறைகளடங்கிய நூல் வடிவில் கிடைக்கக்கூடிய அரசியலமைப்பைக் குறிக்கும். இந்திய அரசியலமைப்பு எழுதப்பட்ட ஒன்று. இந்திய அரசியலமைப்பு 1950, ஜனவரி 26ல் நடைமுறைக்கு வந்தது. இது மிக விரிவாக எழுதப்பட்ட ஆவணமாகும். பிரிட்டன், அயர்லாந்து, கனடா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளின் அரசியலமைப்புகளே இந்திய அரசியலமைப்புக்கு மூலதாரமாக இருந்தன. இந்தியாவின் தேவையையும், சூழ்நிலையையும் மனதில் கொண்டு, அரசியலமைப்பை வகுத்தவர்கள் மற்ற நாடுகளின் அரசியலமைப்புகளின் கருத்துக்களையும் எடுத்துக் கொண்டனர்.

## நெகிழா அரசியலமைப்பு (RIGID CONSTITUTION)

பேராசிரியர் டைசியின் (Dicey) கூற்றுப்படி நெகிழா அரசியலமைப்பின் விதிமுறைகளைச் சாதாரணச் சட்டங்களைத் திருத்தும் வழிமுறையைப் பயன்படுத்தித் திருத்தமுடியாது.

அரசியலமைப்பு சட்டம் என்பது அரசியலமைப்பில் அடங்கியுள்ள வகையங்களைக் குறிக்கும். சட்டமன்றத்தில் இயற்றப்படும் சட்டங்கள் சாதாரண சட்டங்கள் எனப்படும். அரசியலைப்புச் சட்டம் சாதாரண சட்டத்தினின்றும் வேறுபட்டது. இந்திய அரசியலமைப்பின் விதிமுறைகளில் திருத்தம் கொண்டு வருவதற்குச் சில சிறப்பு வழிவகைகள் வரையறுக்கப்படுகின்றன.

இந்திய அரசியலமைப்பின் சில வகையங்கள் எளிய முறையில் திருத்தப்படலாம் என்றும், சில வகையங்கள் அவ்வளவு எளிதாக திருத்தம் செய்யப்பட இயலாது என்றும் அறியலாம். ஆகவே நம்முடைய அரசியலமைப்பு நெகிழும் இயல்பும், நெகிழா இயல்பும் கொண்டுள்ளது என்று நாம் அறிகிறோம்.

## கூட்டாட்சி முறை (FEDERAL SYSTEM)

கூட்டாட்சி முறை என்பது, மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்கள் என இருவகையான அரசாங்கங்களைப் பெற்று அவற்றின் அதிகார வரம்புகள் வரையறுக்கப்பட்டு செயல்படக்கூடிய முறையாகும்.

நமது அரசியலமைப்பு பின்வரும் கூட்டாட்சி இயல்புகளைக் கொண்டுள்ளது.

1. அரசியலமைப்பின் இறைமை

2. நெகிழா அரசியலமைப்பு

3. அதிகாரப் பங்கீடு

4. சுதந்திரமான நீதித்துறை

## மதசார்பற்ற அரசு

நமது அரசியலமைப்பு மதசார்பற்ற அரசை நிறுவியுள்ளது. மதம் அரசு தலையீட்டிலிருந்து விடுபட்டது. அரசு எந்த குறிப்பிட்ட மதத்தையும் சாராதது. குடிமக்கள் அனைவருக்கும் சுதந்திரமான தெய்வ நம்பிக்கை, கடவுள் வழிபாடு மற்றும் அவரவர் மனசாட்சியை பின்பற்ற முழுசுதந்திரம் அளிக்கப்படுகிறது. மதசார்பற்ற தன்மைக்கு அடிப்படையானது ஒழுக்க நெறியாகும். அது சமுதாயத்தில் சமத்துவத்தையும் நீதியையும் நிலைநாட்டும்.

## நாடாளுமன்ற மக்களாட்சி (PARLIAMENTARY DEMOCRACY)

இந்திய அரசியலமைப்பு, ஒரு நாடாளுமன்றம் சார்ந்த அரசாங்க முறையை வழங்குகிறது. அது நாடாளுமன்றத்திற்கு பொறுப்புடைய அரசாங்கம் என்றும், ‘‘காபினெட்’’ அரசாங்கம் என்றும் அழைக்கப்படுகிறது.

நாடாளுமன்ற அரசாங்கமுறையில் செயலாட்சிக்குழு சட்டமன்றத்துக்கு பொறுப்புடையதாகும். இந்திய செயலாட்சிக்குழு இரு பிரிவுகளைக் கொண்டது. ஒன்று பெயரளவிலானது. மற்றொன்று உண்மைத்தன்மை வாய்ந்தது. இந்தியாவில் பெயரளவு செயலாட்சித் தலைவர் இந்திய குடியரசுத் தலைவராவார். அவர் வாக்காளர் குழாம் (Electoral College) மூலமாக ஐந்தாண்டுகளுக்குப் பதவி வகிப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். உண்மையான செயலாட்சிக்குழு என்பது அமைச்சரையும் மற்றும் அவரது ஏனைய அமைச்சர்களையும் கொண்டதாகும். நாடாளுமன்ற அரசாங்க முறையில் அமைச்சரவை உறுப்பினர்கள் தனிப்பொறுப்பும், கூட்டுப்பொறுப்பும் உடையவர்கள்.

இந்திய அரசியலமைப்பு இரு அவை கொண்ட நாடாளுமன்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒன்று மக்கள் அவை மற்றொன்று மாநிலங்கள் அவை. மக்கள் அவை உறுப்பினர்கள், வயது வந்தோர் வாக்குரிமை என்ற அடிப்படையில் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மாநிலங்கள் அவை மாநிலச் சட்டமன்றங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது.

## அடிப்படை உரிமைகள் (FUNDAMENTAL RIGHTS)

இந்திய அரசியலமைப்பின் மூன்றாம்பகுதியில் அடிப்படை உரிமைகள் இடம் பெற்றுள்ளன. (அங்கங்கள் 12 முதல் 35 வரை) இவை தனி மனித முழு வளர்ச்சிக்கு

சூழ்நிலைகளை வகுத்துக் கொடுப்பதோடு உண்மையான மக்களாட்சியை அனுபவிப்பதற்கும் உதவி புரிகின்றன. இந்த உரிமைகள் சட்டத்தின் முன் எல்லா குடிமக்களுக்கும் சமத்துவத்தை வழங்குகின்றன. அடிப்படை உரிமைகள் தனிமனித நலனுக்கும், பொது நலனுக்கும் இடையே சமநிலையை ஏற்படுத்துகின்றன.


இந்திய அரசியலமைப்பு தொடக்கத்தில் ஏழு அடிப்படை உரிமைகளைக் கொண்டிருந்தது. 1978–ல் 44–வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தின்படி, சொத்துரிமையானது அடிப்படை உரிமையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டதால், தற்போது ஆறு அடிப்படை உரிமைகள் தான் உள்ளன. அவை பின்வருமாறு:




சமத்துவ உரிமை



சுதந்திரத்திற்கான உரிமை



சுரண்டலைத் தடுப்பதற்கான உரிமை



சமய உரிமை



பண்பாடு மற்றும் கல்வி பற்றிய உரிமைகள்



அரசியலமைப்பு வழி தீர்வுகளுக்கான உரிமை

அ. சமத்துவ உரிமை (Right to Equality)

ஆ. சுதந்திரத்திற்கான உரிமை (Right to Freedom)

இ. சுரண்டலைத் தடுப்பதற்கான உரிமை, (Right Against Exploitation)

ஈ. சமயச் சுதந்திரத்திற்கான உரிமை (Right to Freedom of Religion)

உ. பண்பாடு மற்றும் கல்வி பற்றிய உரிமைகள் (Cultural and Educational Rights)

ஊ. அரசியலமைப்பு வழிதீர்வுகளுக்கான உரிமை (Right to Constitutional Remedies)

## அரசுக் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள் (DIRECTIVE PRINCIPLES OF STATE POLICY)

இந்திய அரசியலமைப்பின் நான்காம் பகுதியில் அரசுக் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள் இடம்பெற்றிருக்கின்றன. (அங்கங்கள் 36 முதல் 51 வரை) நாட்டை ஆட்சி செய்வதற்கு இவை அடித்தளமாக இருக்கின்றன. அரசுக் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள் அரசுக்கு வழிகாட்டியாக இருப்பதோடு மட்டுமல்லாமல் சட்டங்கள் இயற்றப்படும் போதும், அடிப்படைகளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. நமது நாட்டில் பொதுநல அரசு அமைப்பதற்கும் இவைகளே வழிகாட்டின.

அரசுக் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகளை கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

I. சமத்துவக் கொள்கைகள் (SOCIALIST PRINCIPLES)

II. காந்தியக் கொள்கைகள் (GANDHIAN PRINCIPLES)

III. பன்னாட்டுக் கொள்கைகள் (INTERNATIONAL PRINCIPLES)

IV. இன்னபிற கொள்கைகள் (MISCELLANEOUS PRINCIPLES)

## I. சமத்துவக் கொள்கைகள்

அ. குடிமக்களாகிய ஆண்களும், பெண்களும் சரிநிகரான வாழ்க்கைக்கு போதுமான வழிமுறைகளுக்கு உரிமை உடையவராதல்.

ஆ. ஒரே மாதிரியான வேலைக்கு ஒரேமாதிரியான ஊதியம்

## II. காந்தியக் கொள்கைகள்

1. ஊராட்சி மன்றங்களை அமைப்பதற்கும், தன்னாட்சி அமைப்புக் கூறுகளாக அவை இயங்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2. ஊரகப் பகுதிகளில் தனிமனித அல்லது கூட்டுறவு, அடிப்படையில் குடிசைத் தொழில்களை வளர்ப்பதற்கு முயலுதல்.

3. பட்டியலில் கண்ட சாதியினர், பட்டியலில் கண்ட பழங்குடியினர், பிற நலிந்த பிரிவினர் ஆகியோரின் கல்வி, பொருளாதார நலன்களை வளர்த்தல்.

4. சத்தான உணவின் தரம், வாழ்க்கைத் தரம் ஆகியவற்றை உயர்த்துதல், மக்களின் உடல்நலத்தை மேம்படுத்துதல்.

5. வேளாண்மை, கால்நடை பேணுதல் ஆகியவற்றிற்கான அமைப்பு.

6. பசுக்கள், கன்றுகள், பிற கறவை மற்றும் இழுவைக் கால்நடை இனங்களைப் பேணிக்காத்தல், மேம்படுத்துதல், அவற்றை வன்கொலை செய்வதைத் தடைசெய்தல்.



1. கட்டாய இலவசக் கல்வி



2. ஒரேமாதிரியான வேலைக்கு ஒரே மாதிரியான ஊதியம்



3. கிராம சபைகளுக்கு போதுமான அதிகாரம்



4. நல்வாழ்வுக்கான வசதிகள்

## III. பன்னாட்டுக் கொள்கைகள்

1. பன்னாடுகளிடையே அமைதியையும் காப்புணர்வையும் வளர்ப்பது.



2. உலக நாடுகளிடையே நேர்மையும், நன்மதிப்புணர்வும் தோய்ந்த உறவுகளைப் பேணுதல்.

## IV. இன்னபிற கொள்கைகள்

1. சமநீதியும் இலவசச் சட்ட உதவியும் செய்தல்.

2. குடிமக்களுக்கு ஒரே சீரான உரிமையியல் தொகுப்புச் சட்டம் வழங்குதல்.

### அடிப்படைக் கடமைகள் (FUNDAMENTAL DUTIES)

இந்திய அரசியலமைப்பில் அடிப்படை கடமைகள் 1976 ல் 42 வது சட்டத்திருத்தம் மூலம் பகுதி IV–A ல் (அங்கம் 51A) சேர்க்கப்பட்டன. பின்வருவன இந்தியாவின் குடிமக்கள் ஒவ்வொருவரின் கடமைகள் ஆகும்.

அ. அரசியலமைப்பிற்குக் கீழ்ப்படிந்து அதன் குறிக்கோள்கள், அமைப்புகள், நாட்டுக்கொடி, நாட்டுப்பண் இவற்றை மதித்து நடத்தல்.

ஆ. நமது நாட்டு விடுதலைப் போரட்டத்திற்கு உணர்வூட்டிய உயர்குறிக்கோள்களைப் பேணிப் பின்பற்றுதல்.

இ. இந்திய நாட்டின் இறைமை, ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை பேணிப்பாதுகாத்தல்.

ஈ. வேண்டுங்கால் நாட்டினைக்காத்தல், மற்றும் நாட்டுப் பணி ஆற்றுதல்.

உ. சமயம், மொழி மற்றும் வட்டாரம் அல்லது வகுப்பு வேறுபாடுகளைக் கடந்து, இந்திய மக்கள் அனைவரிடையேயும் நல்லிணக்கத்தையும், பொது உடன் பிறப்புணர்வையும் பேணி வளர்த்தல், மகளிர் தம் மாண்பிற்கு இழுக்காகும் பழக்கங்களை விட்டொழித்தல்.

ஊ. நமது கூட்டு பண்பாட்டின் வளமார்ந்த மரபுச் செல்வத்தை மதித்துப் பாதுகாத்தல்.

எ. காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் இவை உள்ளிட்ட இயற்கைச் சூழலை அழியாது காத்து வளர்த்தல். உயிரினங்கள் பால் இரக்கங்காட்டுதல்.

ஏ. அறிவியலார்ந்த உளப்பாங்கு, மனிதநேயம், ஆய்ந்து தெளிந்து சீர்த்திருத்தும் ஆர்வம் ஆகியவற்றை வளர்த்தல்.

ஐ. பொதுச் சொத்தைப் பாதுகாத்து, வன்முறையை விலக்குதல்.

ஒ. தனிமனிதனுடைய செயல், கூட்டுறவு செயல் ஆகியவற்றை சிறப்பான முறையில் முடிக்கும் வகையில் செயலாற்றுதல் முதலியன தேவை. இதனால் நாடு எப்பொழுதும் ஆற்றலிலும் சாதனைகளிலும் மேம்பாட்டை தொடர்ந்து அடைய முடியும்.

### நீதிப்புனராய்வு (JUDICIAL REVIEW)


நமது அரசியலமைப்பு சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது. இந்திய உச்சநீதிமன்றமும், உயர் நீதி மன்றங்களும் சட்டங்களை நீதிப்புனராய்வு செய்யும் அதிகாரம் பெற்றுள்ளன. ஒரு சட்டம் அரசியலமைப்புக்கு உட்பட்டது அல்லது புறம்பானது என்று தீர்ப்பு வழங்கத்தக்க அதிகாரத்திற்கே நீதிப்புனராய்வு என்று பெயர். அரசியலமைப்பின் காவலனாக நீதித்துறை விளங்குகிறது. இந்திய குடிமக்களின் உரிமைகளையும், சுதந்திரங்களையும், நீதித்துறை இதன் மூலம் பாதுகாக்கிறது.

### வயது வந்தோர் வாக்குரிமை (UNIVERSAL ADULT FRANCHISE)

இந்திய அரசியலமைப்பு வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை வழங்க உறுதியளிக்கிறது. பதினெட்டு வயது நிரம்பிய ஒவ்வொரு குடிமகனும் சாதி, மதம், நிறம், பாலினப்பாகுபாடு இன்றி தேர்தலில் பங்குபெற உரிமை பெற்றுள்ளார்.

## 7.2 மத்திய அரசாங்கத்தின் அமைப்பு முறை

**மத்திய அரசாங்கம்**




### 7. 2. 1. குடியரசுத்தலைவர்

இந்தியக் குடியரசுத் தலைவர் இந்தியாவின் முதல் குடிமகன் ஆவார். இந்தியக் குடியரசுத்தலைவர் அரசின் தலைவராவார்.

**திரு. பிரணாப் முகர்ஜி** அவர்கள் தற்போதைய இந்தியக் குடியரசுத் தலைவராகப் பதவி வகித்து வருகிறார்.

### தகுதிகள்.

1. அவர் இந்தியாவின் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
2. அவர் 35 வயது முடிந்தவராக இருத்தல் வேண்டும்.
3. அவர் மக்கள் அவை உறுப்பினருக்குரிய தகுதி பெற்றிருக்க வேண்டும்.
4. அவர் அரசாங்கத்தில் ஊதியம் பெறும் பதவியில் இருத்தலாகாது.

### தேர்தல்

குடியரசுத் தலைவர் பின்வரும் உறுப்பினர்கள் அடங்கிய வாக்காளர் குழாம் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

1. நாடாளுமன்ற ஈரவைகளிலுமுள்ள தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினர்கள்.
2. மாநிலங்களின் சட்டமன்றப் பேரவைகளிலுள்ள தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்கள்.

இந்தியக் குடியரசுத் தலைவர் விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையில், ஒற்றை மாற்று வாக்கின் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுகிறார். குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் இரகசிய வாக்களிப்பு முறை கையாளப்படுகிறது.

இந்தியக் குடியரசுத் தலைவர் ஐந்தாண்டுக் காலத்திற்குப் பதவி வகிப்பார். மீண்டும் அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் பெறுவதற்குத் தகுதியுடையவர் ஆவார்.

## பதவி நீக்கம்

அரசியலமைப்பை மீறிய நடத்தைக்காகக் குடியரசுத் தலைவர் மீது பழிகூறப்பட்டு அவரை பதிவியிலிருந்து நீக்கலாம். அதற்காக நாடாளுமன்றத்தின் இரு அவைகளில் ஏதாவதொரு அவையால் கொண்டுவரப்படும் குற்றச்சாட்டுகள் மற்ற அவையால் விசாரணை செய்யப்படும். ஒரு அவை குடியரசுத் தலைவரை குற்ற விசாரணை (Impeachment) செய்யவேண்டும் என்று தீர்மானம் கொண்டு வர விரும்பினால் பதினான்கு நாட்களாவது முன்னறிவிப்புக் கொடுக்கப்பட்ட பின்னரே அத்தீர்மானத்தைத் தாக்கல் செய்யமுடியும். இம்முன்னறிவிப்பில் அவையின் மொத்த உறுப்பினருள் நான்கில் ஒருபகுதியினராவது கையொப்பமிட்டிருக்க வேண்டும். அவையின் தீர்மானம் மொத்த உறுப்பினருள் குறைந்த அளவு மூன்றில் இரண்டு பகுதியினரது ஒப்புதல் பெறவேண்டும். நாடாளுமன்ற இரு அவைகளில், ஒன்றினால் கொணரப்படும் குற்றச்சாட்டை மறு அவை ஆய்வு செய்தல் வேண்டும். அவ் அவையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கு குறையாத பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்பட வேண்டும். அத்தீர்மானம் நிறைவேற்றப்படும் தேதியிலிருந்து குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்படுகிறார்.

## இந்திய குடியரசுத்தலைவரின் அதிகாரங்கள் (POWERS OF THE PRESIDENT OF INDIA)


### 1. நிருவாக அதிகாரங்கள் (Executive Powers)

அரசியலமைப்பின்படி குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை அவர் நேரிடையாகவோ அல்லது தனக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகள் மூலமாகவோ செயல்படுத்துவார். மத்திய அரசின் நிர்வாக அதிகாரம் குடியரசுத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவரது பணியில் அவருக்கு துணைபுரியவும், ஆலோசனை கூறவும் அமைச்சரவை உண்டு. மத்திய அரசாங்கத்தின் அனைத்து நிருவாக அதிகாரங்களும் அவர் பெயரிலேயே செயல்படுத்தப்படுகின்றன.

பிரதமர், குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார். பிரதமரின் ஆலோசனையின் பேரில் மத்திய அரசின் மற்ற அமைச்சர்களையும் குடியரசுத் தலைவர் நியமிக்கின்றார். குடியரசுத் தலைவர் இந்தியத்தலைமை வழக்கறிஞர், இந்திய கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையர், இந்தியாவின் தூதுவர்கள், பிரதிநிதிகள், உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, மற்ற நீதிபதிகள் உயர்நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகள், பிற நீதிபதிகள், மாநில ஆளுநர்கள், துணை நிலை ஆளுநர்கள், மத்திய அரசுப்பணி ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், தலைமை தேர்தல் ஆணையர்கள் ஆகியோர்களை நியமிக்கின்றார். குடியரசுத்தலைவர் பாதுகாப்புப் படையின் தலைமைத் தளபதியாக விளங்குவார். தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகிய முப்படையின் தலைவர்களையும் குடியரசுத் தலைவர் நியமிக்கின்றார்.

பிரதமரின் பரிந்துரையின் பேரில் அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்வதற்குக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. உச்சநீதிமன்றத்தின் அறிக்கைக்கிணங்க, மத்திய தேர்வாணைக்குழுவின் தலைவரையோ, அங்கத்தினரையோ பதவியிலிருந்து நீக்கலாம். நாடாளுமன்ற இருசபையிலும், சிறப்பு அறுதிப் பெரும்பான்மை மூலம் முடிவெடுத்தால் அதன் அடிப்படையில், உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியையோ, தேர்தல் ஆணையரையோ பதவியிலிருந்து நீக்கலாம்.

அனைத்து நிருவாக அதிகாரங்களும் முறையாக குடியரசுத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தாலும், அவர் அவற்றை பிரதமரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவையின் ஆலோசனையின் அடிப்படையில் செயல்படுத்துவார். ஆரம்ப காலத்தில், அமைச்சரவை அறிவுரைக்குக் குடியரசுத் தலைவர் கட்டுப்பட வேண்டுமென்ற கட்டாயம் இருந்ததில்லை. ஆனால், 1976ல் கொண்டுவரப்பட்ட சட்டதிருத்தம் குடியரசுத் தலைவர் அமைச்சரவையில் ஆலோசனைக்குக் கட்டுப்பட்டவர் என்பதை வலியுறுத்துகிறது. 44வது சட்டத்திருத்தம் ஒரு மசோதாவை அமைச்சரவைக்கு மீண்டும் மறுபரிசீலனைக்குத் திருப்பி அனுப்ப குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்கியது. அமைச்சரவை அதை மறுபரிசீலனை செய்து குடியரசுத் தலைவருக்கு அனுப்ப நேர்ந்தால் அவர் அதை ஏற்றுக் கொண்டு ஒப்புதல் அளிக்க வேண்டும்.




**2. சட்டமன்ற அதிகாரங்கள்** (Legislative Powers)

குடியரசுத் தலைவர் குறைந்தது, ஆண்டிற்கு இருமுறையாவது நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டும். குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தின், இரு அவைகளையோ, அல்லது ஏதாவது ஒரு அவையையோ ஒத்திப்போடவா அல்லது கூட்டங்களை முடிவுக்கு கொண்டுவரவோ அதிகாரம் பெற்றிருக்கிறார். மக்கள் அவையை கலைப்பதற்கும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

குடியரசுத் தலைவர் மாநிலங்கள் அவைக்குப் பன்னிரண்டு (12) உறுப்பினர்களை நியமனம் செய்வார். இலக்கியம், அறிவியல், கலை மற்றும் சமூக சேவை ஆகிய துறைகளிலிருந்து இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படுவார்கள். ஆங்கிலோ – இந்திய சமூகத்தினருக்குப் போதுமான பிரதிநிதித்துவம் மக்களவையில் கிடைக்கப்பெறவில்லை என்று குடியரசுத் தலைவர் கருதினால், அச்சமூகத்திலிருந்து இரண்டு அங்கத்தினர்களை மக்கள் அவைக்கு நியமனம் செய்வார்.

குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்துவார். அவர் இரண்டு அவைகளையும் ஒன்றாகக் கூட்டியோ அல்லது தனியாக ஒரு அவையிலோ உரை நிகழ்த்துவார். இரு அவைகளிடையே கருத்து வேறுபாடு தோன்றுமாயின் இரு அவைகளையும் ஒன்றாகக் கூட்டி சர்ச்சையைத் தீர்த்து வைக்க முயல்வார். குடியரசுத் தலைவரின் அங்கீகாரமும், கையொப்பமும் இல்லாமல் எந்த மசோதாவும் சட்டமாகாது.

நாடாளுமன்றம் கூடாத காலங்களில் அவசரச் சட்டம் (Ordinance) பிறப்பிக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

### 3. நிதித்தொடர்பான அதிகாரங்கள் (Financial Powers)

குடியரசுத் தலைவரின் முன் அனுமதி இன்றி நிதி மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது. இந்திய அரசியலமைப்பு எதிர்பாராச் செலவு நிதியை குடியரசுத் தலைவர் பொறுப்பில் ஒப்படைத்துள்ளது. அவர் நாடாளுமன்ற இறுதி ஒப்புதலை எதிர்நோக்கி அவசரமாக ஏற்படும் செலவினங்களுக்கு இத்தொகுப்பிலிருந்து முன்பணம் வழங்குவார். குடியரசுத் தலைவர் நிதி ஆணையத்தை (Finance Commission) நியமிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளார்.

### 4. நீதி தொடர்பான அதிகாரங்கள் (Judicial Powers)

குற்றவாளிகளை மன்னிக்கவோ, தண்டனையை நிறுத்திவைக்கவோ, குறைக்கவோ குடியரசுத் தலைலவருக்கு அதிகாரம் உண்டு. அரசியலமைப்பு குறித்தும், சட்டங்கள் குறித்தும், சந்தேகமோ, சிக்கலோ ஏற்பட்டால் குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையைக் கேட்கலாம்.

### 5. நெருக்கடி நிலை தொடர்பான அதிகாரங்கள் (Emergency Powers)

நெருக்கடி நிலை தொடர்பான அதிகாரங்கள் குடியரசுத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர் கீழ்காணும் நேரங்களில் நெருக்கடி நிலையை அறிவிக்கலாம்.

அ. போர் அல்லது அயல்நாட்டு ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதம் தாங்கியோரின் கிளர்ச்சி ஆகிய நேரங்களில் நெருக்கடி நிலையை அறிவிக்கலாம். (அங்கம்: 352)

ஆ. மாநிலங்களில் அரசியலமைப்பு இயங்குமுறை செயலற்றுப் போகும் நிலையில் நெருக்கடி நிலையை அறிவிக்கலாம். (அங்கம்:356)

இ. நிதிநிலை நெருக்கடி ஏற்படும் போதும் நெருக்கடி நிலை அறிவிக்கலாம் (அங்கம் : 360)

## இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர்

இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் தமது பதவியின் வழியாக மாநிலங்கள் அவையின் தலைவராகப் பொறுப்பேற்பார். குடியரசுத் தலைவர் பதவி, அவரது மரணத்தாலோ, பதவி விலகலாலோ, பதவியிலிருந்து நீக்கப்பட்டதாலோ காலியிடமாகுமானால் துணைக் குடியரசுத் தலைவர் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்று புதிய குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை பதவி வகிப்பார். மற்றும், குடியரசுத் தலைவர் நோய் அல்லது பிற காரணத்தாலோ தம்முடைய பணியை ஆற்ற இயலாத போது துணைக் குடியரசுத் தலைவர் பொறுப்பேற்று, குடியரசுத் தலைவர் மீண்டும் கடமைகளை மேற்கொள்ளும் வரை அப்பொறுப்புகளை ஏற்பார்.

### தகுதிகள்

1. அவர் இந்தியாவின் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
2. அவர் 35 வயது முடிந்தவராக இருத்தல்வேண்டும்.
3. மாநிலங்கள் அவையின் உறுப்பினருக்குரிய தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.
4. அரசாங்கத்தில் ஊதியம் பெறும் பதவியில் இருத்தலாகாது.

### தேர்தல்

துணைக்குடியரசுத் தலைவர் நாடாளுமன்ற இரு அவைகளில் அங்கத்தினர்களைக் கொண்ட வாக்காளர் குழாம் மூலமாக, விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையில் ஒற்றை மாற்று வாக்கின் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுகிறார். துணைக்குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்க இரகசிய வாக்களிப்புமுறை பின்பற்றப்படுகிறது.

### பதவிக்காலம்

துணைக்குடியரசுத் தலைவர் ஐந்தாண்டு காலத்திற்குப் பதவி வகிப்பார். மீண்டும் அந்தப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பெறுவதற்கு தகுதியுடையவர் ஆவார். துணைக்குடியரசுத் தலைவர் ஐந்தாண்டுக் காலத்திற்குள் தம் பதவியை விட்டு விலகிக் கொள்ளலாம். துணைக் குடியரசுத் தலைவர், மாநிலங்கள் அவையின் அனைத்து உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்பட்ட பதவி நீக்கம் செய்யும் தீர்மானம், மக்கள் அவையாலும் ஏற்றுக் கொள்ளபடுமேயானால் பதவியிலிருந்து அவர் அகற்றப்படுவார். ஆனால் பதினான்கு நாட்களுக்குக் குறையாமல் முன்னறிவிப்புக் கொடுத்தல் வேண்டும்.

### 7.2.2. பிரதம அமைச்சர் (PRIME MINISTER)

பிரதம அமைச்சர்தான் அரசாங்கத்தின் தலைவர். அவர்தான் நிருவாகத் துறையின் தலைவருமாவார். அவர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றார். குடியரசுத் தலைவர் மக்கள் அவையில் பெரும்பான்மையான கட்சியின் தலைவரை அழைத்து பிரதமராக நியமித்து அமைச்சரவையை அமைக்குமாறு கேட்டுக் கொள்வார். பிரதம அமைச்சர்

1. பெரும்பான்மைக் கட்சியின் தலைவர்
2. காபினெட்டின் தலைவர்
3. நாடாளுமன்றத்தின் தலைவர்

4. குடியரசுத் தலைவருக்கும், அமைச்சரவைக்கும் இணைப்பு பாலமாகத் திகழ்பவர்.

5. குடியரசுத் தலைவருக்கும், நாடாளுமன்றத்திற்கும் இணைப்புப் பாலமாகத் திகழ்பவர்.

6. நாட்டின் முதன்மையான பிரதிநிதியாக திகழ்பவர்.

7. நாட்டின் நிர்வாகத்தை நடத்தி கொடுக்கும் பொறுப்புடையவர்.

8. பன்னாட்டு உறவை நடத்துவதில் பொறுப்பு உடையவர்.

பிரதம அமைச்சர் ''**அமைச்சக வளைவில் அடிப்படைக்கல்**'' என்றும் ''**சமமானவர்களில் முதலானவர்**'' என்றும் விவரிக்கப்படுகிறார். ''**அரசாங்க முழுமை அமைப்பிற்கும் பிரதம அமைச்சர் ஓர் அச்சாணி**'' என்று பேராசிரியர் ஹெரால்ட் லாஸ்கி குறிப்பிடுகிறார். ''**பிரதமர் ஒரு ஞாயிறு போன்றவர் என்றும் அஞ்ஞாயிறை மற்ற கிரகங்கள் எங்ஙனம் சுற்றி வருகின்றனவோ அங்ஙனமே ஏனைய அமைச்சர்கள் அனைவரும் பிரதமரைச் சுற்றி சுழல்கின்றனர்**'' என்று சர் ஐவர் ஜென்னிங்ஸ் என்ற அரசியல் அறிஞர் குறிப்பிடுகிறார்.

## காபினெட்டின் அம்சங்கள்

நாடாளுமன்ற அரசாங்க முறையில் காபினெட் என்பது நாடாளுமன்றக் குழு என அழைக்கப்படுகிறது. காபினெட் செயலாட்சிக் குழுவையும், சட்டமன்றத்தையும் சேர்த்து வைக்கிறது. காபினெட் செயலாட்சிக் குழுவையும், சட்டமன்றத்தையும் இணைக்கும் ஒரு சங்கிலி போன்றது என்று வால்டர் பேஜாட் என்பவர் குறிப்பிடுகிறார். காபினெட்டின் அம்சங்கள் பின்வருமாறு:

1. காபினெட்தான் உண்மையான செயலாட்சிக்குழு.

2. உண்மையான செயலாட்சிக்குழு நாடாளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறது.

3. உண்மையான செயலாட்சிக்குழுவையும் சட்டமன்றத்தையும் இணைக்கின்றது.

4. பிரதம அமைச்சர் காபினெட்டிற்கு தலைமை தாங்குகிறார்.

5. அரசியலில் ஒத்த தன்மை பெற்றது.

6. காபினெட் சட்டமன்றத்துக்கு பொறுப்புடையது.

7. செயலாட்சிக்குழு சட்டமன்றத்திற்கு கீழ்ப்பட்டது.

8. கட்சி அரசாங்கம் செயல்படுகின்றது.

9. அமைச்சர்கள் தனித்தனியாகவும் மற்றும் கூட்டுப் பொறுப்புடையவர்கள்.

10. எதிர்க்கட்சி செயல்படுகின்றது.

11. காபினெட் இரகசியம் காக்கப்படுகின்றது.

## காபினெட்டின் பணிகள்:

### 1. கொள்கை முடிவெடுக்கும் பணிகள்

காபினெட் விவாதங்களில் ஈடுபட்டு கொள்கைகளை வகுக்க ஒரு குழுவாகும். நாட்டை எதிர்நோக்கும் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டுப் பிரச்சினைகள் குறித்தும் விவாதித்து முடிவெடுக்கும்.

### 2. மிக உயர்ந்த தேசிய செயலாட்சிக்குழு

காபினெட் மிக உயர்ந்த தேசிய செயலாட்சிக்குழு, நாடு முழுவதும் பணியாற்றும் அரசு ஊழியர்களின் பணியை கண்காணித்து, மேற்பார்வையிட்டு வழி நடத்தும்.

### 3. ஒருங்கிணைக்கும் நிறுவனமாக காபினெட்

காபினெட் பல அமைச்சர்களையும் அல்லது அரசாங்க இலாகாக்களையும், அவற்றின் பணிகளையும் ஒருமுகப்படுத்தி வழி நடத்திச் செல்லும்.

### 4. நிதியின் மீது கட்டுப்பாடு

நாட்டின் எல்லாவகையான செலவினங்களுக்கும் வருவாய் ஈட்டு, செலவிட காபினெட் பொறுப்புடையது.

### 5. பதவிகளில் அமர்த்துதல் பொறுப்பு

பொதுவாக பதவியில் அமர்த்தும் பணி காபினெட் விவாதத்திற்குள் வராது. ஆனால் சில உயர்பதவிகளான ஆளுநர்கள், தூதர்கள் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த பதவிகளை நிரப்பும் போது காபினெட்டில் அது குறித்து விவாதித்து முடிவு எடுத்தல் வேண்டும்.

## 7.2.3 அமைச்சரவை (Council of Ministers)


பிரதம அமைச்சரது தலைமையிலான ஒரு அமைச்சரவைக்கு இந்திய அரசியலமைப்பு வகை செய்கிறது. அது குடியரசுத் தலைவருக்கு அவருடைய பணியை ஆற்றுவதில் துணை புரிந்து ஆலோசனையைக் கூறும். அமைச்சர்கள், மக்கள் அவைக்கு தனித்தனியாகவும், கூட்டாகவும் பொறுப்புடையவர்கள்.

சாதாரணமாக, அமைச்சர்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறார்கள்.

1. காபினெட் அமைச்சர்கள்

2. மாநில அமைச்சர்கள்

காபினெட் என்பது சிறிய குழுவாயினும் அது அரசாங்கத்தில் அதிகாரம் மிக்க உறுப்பாகும். மிக முக்கியமான துறைகள் காபினெட் அமைச்சர்கள் பொறுப்பில் ஒப்படைக்கப்படும். அமைச்சரவையில் ஒரு ‘‘உட்குழு’’ வாகச் செயல்படுகின்றது. காபினெட் அமைச்சர்கள் காபினெட் கூட்டங்களில் கலந்து கொண்டு முக்கிய கொள்கை முடிவுகளை எடுப்பார்கள். மாநில அமைச்சர்கள் அடுத்த நிலை வகிப்பார்கள். மாநில அமைச்சர்களில் சிலர் சில துறைகளில் தனித்துப் பொறுப்பு வகிக்கிறார்கள். பொதுவாக, அவர்கள், காபினெட் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது. இருப்பினும் அவர்கள் பொறுப்பில் இருக்கும் துறை பற்றிய விவாதம், பரிசீலனை நடைபெறும் போது கூட்டத்தில் கலந்து கொள்ள அழைக்கப்படுவார்கள்.



### பிரதம அமைச்சரின் அலுவலகம்

பிரதம அமைச்சரின் அலுவலகம் ஒரு தலைமை செயலாளரின் கீழ் இயங்குகிறது. இவ்வலுவலகம் பிரதம அமைச்சரருக்கு அலுவலக தொடர்புடைய பணிகள் சம்பந்தமான பணிகளை மேற்கொண்டு பிரதமருக்கு உதவியாக இருக்கின்றது. இவ்வலுவலகத்தில் ஊழல் ஒழிப்பு பிரிவு மற்றும் பொதுமக்கள் குறைகள் தீர்க்கும் பிரிவு ஆகியவையும் செயல்படுகின்றன.

பிரதம அமைச்சரின் பார்வைக்கு அனுப்பப்படும் பதிவேடுகள் எவை எவை என்பது பிரதம அமைச்சரின் நேர் பார்வையிலுள்ள அல்லது காபினெட் அமைச்சர் ஒருவரின் மேற்பார்வையிலுள்ள அல்லது அமைச்சகத்தோடு (காபினெட்) இணைக்கப்படாத தனி அமைச்சர் ஒருவரின் மேற்பார்வையிலுள்ள பொருள் பற்றியதா என்பதை பொருத்திருக்கிறது. அதாவது பிரதம அமைச்சரின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட வேண்டிய பொருள்கள் பற்றிய பதிவேடுகள் யார் மேற்பார்வையின் கீழ் இருந்தாலும் அவற்றை பிரதம அமைச்சரின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. பெரும்பாலான அலுவல்கள் அமைச்சக அந்தஸ்து உடைய அமைச்சராலோ தனி அமைச்சராக உள்ளவராலோ பைசல் செய்யப்படுகின்றன. மிகமுக்கியமான குறிப்பாக கொள்கைகள் சம்மந்தப்பட்ட அல்லது தீர்க்கமுடியாத பிரச்சனைகள் இருப்பின் அவை மட்டுமே பிரதம அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அதை பற்றி அவர் முடிவு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை பிரதமர் அலுவலகம் மேற்கொள்கிறது. இதர அமைச்சர்களுக்கு ஒதுக்கப்படாத துறைசார்ந்த பொருள்கள் பற்றிய முடிவுகளுக்கு பதிவேடுகள் பிரதம அமைச்சருக்கு அனுப்பப்படுகின்றன. உதாரணமாக பிரதம அமைச்சர் வழக்காறு அடிப்படையில் வான் வெளி, அணுசக்தி, அரசு அலுவலர், பொது மக்கள் குறை தீர்த்தல் மற்றும் ஓய்வு ஊதியம் சம்பந்தப்பட்ட துறைகளை தன் மேற்பார்வையின் கீழ் வைத்து கொள்வது நடைமுறையிலிருக்கிறது. பிரதம அமைச்சர் திட்டக்குழு தலைவராகவும் இருக்கிறார். எனவே இத்துறைகள் சம்பந்தப்பட்ட பதிவேடுகள் அவருடைய முடிவுக்கு அனுப்பப்படுகின்றன. மேற்கூறப்பட்டவை அல்லாமல் இதர பல அலுவல்களையும் பிரதமர் கவனிக்க வேண்டி இருக்கிறது. அவை பின் வருமாறு,

அ. பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் மற்றும் நிகழ்வுகள்.

ஆ. முக்கியமான விஷயங்களில் எடுக்கப்பட வேண்டிய கொள்கை முடிவுகள்.

இ. அமைச்சக செயலரின் சம்பந்தப்பட்ட முடிவுகள்.

ஈ. ஆட்சித்துறை பிரச்சனைகள் தீர்த்துவைக்கும் தீர்ப்பாயம், மத்திய பணியாளர் தேர்வாணையம், தேர்தல் ஆணையம், சட்டப்படி அமைக்கப்பட்டுள்ள குழுக்களின் உறுப்பினர் நியமனம், மற்றும் இதர அமைச்சகங்களோடு தொடர்புடைய குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமனம்.

உ. நிர்வாக சீர்திருத்தம் மற்றும் சீரியல் பணிகள் தொடர்புடைய கொள்கைகளை முடிவு செய்தல்.

### 7.2.4 மக்களவை மற்றும் மாநிலங்களவை – தலைவர், துணைத்தலைவர்

இந்திய அரசியலமைப்பின்படி, மக்களவைக்கு அந்த அவையின் உறுப்பினர்கள் இருவரை முறையே அதன் தலைவராகவும், துணைத்தலைவராகவும் தேர்ந்தெடுத்தல் வேண்டும். மக்களவைத் தலைவரின் பதவி காலியாக இருக்குமானால், அப்பதவிக்குரிய கடமைகளை அவைத்துணைத் தலைவர் புரிந்து வருதல் வேண்டும்.

இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் தம் பதவி வழியில் மாநிலங்களவைத் தலைவராக இருப்பார். மாநிலங்களவை, அந்த அவையின் உறுப்பினர் ஒருவரை அதன் துணைத்தலைவராக தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

இந்தியாவின் மக்களவைத் தலைவர் பதவி கிட்டத்தட்ட காமன்ஸ் அவை (House of commons) தலைவர் போன்றது. மக்கள் அவைத்தலைவர் பதவி அதிகாரமும் கௌரவமும் உடைய ஒன்றாகும்.

மக்களவையின் தலைவர் வாக்கெடுப்பின் முடிவில் வாக்குகள் சமனாக அமையும் போது மட்டும் வாக்களிப்பார். இதற்கு முடிவு செய்யும் வாக்கு (costing ஓட்டு) என்று பெயர்.

இரு அவைகளுக்கிடையே சட்டமியற்றுவதற்கான கருத்து வேறுபாடு தோன்றும்போது இரு அவைகள் கூடும்போது, மக்களவைத்தலைவர் தலைமை தாங்குவார்.

மக்களவைத் தலைவர், துணைத்தலைவர் ஆகியோர் பதவி வகிக்கும் உறுப்பினர் மக்களவையின் உறுப்பினராக இருப்பது அற்றுப்போய்விடின், அவர் தம் பதவியை விட்டகலுதல் வேண்டும். அந்த உறுப்பினர் அவைத் தலைவராக இருப்பின், துணைத்தலைவருக்கும், அந்த உறுப்பினர் துணைத்தலைவராக இருப்பின் அவைத்தலைவருக்கும், தம் கையொப்பமிட்டு எழுத்துவழியே தெரிவித்து, தம் பதவியை விட்டு விலகிக் கொள்ளலாம். மக்களவையின் அப்போதைய அனைத்து உறுப்பினர்களில் பெரும்பான்மையினர், அந்த அவையில் நிறைவேற்றியும் அகற்றப்படலாம். அத்தீர்மானத்தை முன்மொழியவிருக்கும் கருத்தினைத் தெரிவித்துப் பதினான்கு நாட்களுக்குக் குறையாமல் முன்னறிவிப்புக் கொடுத்திருத்தல் வேண்டும்.

மக்களவை கலைக்கப்பட்ட பின்பு, அடுத்த மக்களவையின் முதல் கூட்டம் தொடங்கும் வரையில், அவைத்தலைவர் தம் பதவியை விட்டு அகல வேண்டியதில்லை.

### 7.2.5. நாடாளுமன்றம் (PARLIAMENT)

### மாநிலங்கள் அவை (RAJYA SABHA)

இந்திய நாடாளுமன்றம், இந்திய குடியரசுத் தலைவரையும் மாநிலங்கள் அவை, மக்கள் அவை எனப்படும் இரண்டு அவைகளையும் கொண்டுள்ளது.

மாநிலங்கள் அவை **250**க்கு மிகாத உறுப்பினர்களைக் கொண்டது. இதில் பன்னிருவரை **(12)**, இலக்கியம், அறிவியல், கலை மற்றும் சமூக சேவை இவற்றில் சிறந்த அறிவும் அல்லது அனுபவமும் கொண்டவர்களை குடியரசுத் தலைவர் உறுப்பினர்களாக நியமிப்பார். மீதமுள்ள **238** உறுப்பினர்கள் வெவ்வேறு மாநிலங்களிலிருந்தும் யூனியன் பிரதேசங்கள் உள்பட அந்தந்த மாநிலங்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மாநிலங்கள் அவைக்கான தேர்தல் மறைமுகமானது. மாநிலங்களின் சார்பாக உறுப்பினர்கள் மாநிலங்களில் தேர்தெடுக்கப்பட்ட சட்டமன்ற பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்கள் விகிதாசார பிரதிநிதித்துவ முறையைப் பின்பற்றி ஒற்றை மாற்று வாக்களிப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். யூனியன் பிரதேசங்கள் சார்பாக உறுப்பினர்கள் நாடாளுமன்றம் அவ்வப்போது விதிக்கும் விதிகளின்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மாநிலங்கள் அவை கலைப்பிற்கு உள்ளாவதில்லை. மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை விலக, காலியான இடங்களுக்கு மீண்டும் தேர்தல் நடைபெறும். ஆக இதன் உறுப்பினர்கள் ஆறு ஆண்டு காலம் பதவி வகிப்பார்கள்.

இந்திய துணைக்குடியரசுத் தலைவர் தன்னுடைய பதவியின் அடிப்படையில் மாநிலங்கள் அவையின் தலைவராகப் பொறுப்பேற்பார். மேலும் ஒரு துணைத்தலைவர் அந்த அவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார். துணைக்குடியரசு தலைவர் இல்லாத காலங்களில் துணைத்தலைவர் மாநிலங்கள் அவைக்கு தலைமை தாங்குவார்.

### 7.2.6 மக்கள் அவை (LOK SABHA)

மக்கள் அவை 552க்கு மிகாத உறுப்பினர்களைக் கொண்டது. 530 உறுப்பினர்கள் மாநிலங்களிலிருந்தும், 20 உறுப்பினர்கள் யூனியன் பிரதேசங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மற்றும் ஆங்கிலோ இந்திய சமூகத்தினருக்கு மக்கள் அவையில் போதுமான பிரதிநிதித்துவம் கிடைக்கப்படவில்லை என்று குடியரசுத் தலைவர் கருதுவாராயின் அவர் அச்சமூகத்தினரில் இருவரை உறுப்பினர்களாக நியமிப்பார். மாநிலங்களின் மக்கள் தொகைக்கு இணங்க உறுப்பினர்கள் கணக்கிடப்பட்டு தேர்ந்தெடுக்கப் படுவார்கள். தற்போது மக்கள் அவை 545 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

இடையில் கலைக்கப்படவில்லையெனில், மக்கள் அவையின் பதவிக்காலம் ஐந்து ஆண்டு காலம் ஆகும். இருப்பினும், நெருக்கடி நிலைமை (Emergency) பிரகடனப்படுத்தும் காலங்களில் மக்கள் அவையின் காலத்தை ஓர் ஆண்டுக்கு மேற்படாமலும் நெருக்கடி நிலையை முடிவுக்கு கொண்டுவந்த பிறகு ஆறு மாதத்திற்கு மேற்படாமலும் சட்டத்தினால் நீட்டிக்கலாம்.

மக்கள் அவையின் தலைவர் (Speaker) நாடாளுமன்ற முதல் கூட்டத்தில் அவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார். மற்றும் அவை, ஒரு துணைத்தலைவரையும் (Deputy Speaker) தேர்ந்தெடுக்கும். தலைவர் இல்லாத காலங்களில் அவைத் தலைவராகப் பொறுப்பேற்றுத் துணைத்தலைவர் அவையை நடத்திக் கொடுப்பார்.

நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு ஒருவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும். மாநிலங்கள் அவையின் உறுப்பினர்கள் முப்பது வயதுக்குக் குறையாமலும், மக்கள் அவை உறுப்பினர்கள் இருபத்தைந்து வயதுக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும். கூடுதல் தகுதிகள் அவ்வப்போது நாடாளுமன்றத்தினால் சட்டத்தின் மூலம் அறிவிக்கப்படும். மக்கள் அவைக்குரிய உறுப்பினர் நாட்டின் எந்தத் தொகுதியிலிருந்தும் போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்படலாம். மாநிலங்கள் அவையின் அங்கத்தினராவதற்கு ஒருவர் எந்த மாநிலத்திற்கு தேர்ந்தெடுக்கப் படுகிறாரோ அந்த மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளராக இருத்தல் வேண்டும்.

### நாடாளுமன்றக் கூட்டத்தொடர்கள் (SESSIONS OF PARLIAMENT)

அரசியலமைப்பின்படி நாடாளுமன்றம் ஒரு ஆண்டில் குறைந்தது இரண்டு முறை கூட்டப்பட வேண்டும். இரண்டு கூட்டங்களுக்கும் இடையில் ஆறு மாதங்களுக்கு மிகாமல் இடைவெளி இருக்கும் வகையில் குடியரசுத் தலைவர் நாடாளுமன்ற கூட்டத்தைக் கூட்ட ஆணையிடுவார். நடைமுறையில் நாடாளுமன்றம் ஆண்டிற்கு மூன்று முறை கூட்டப்படுகிறது.

**1.** வரவு – செலவு அறிக்கை கூட்டத்தொடர் – பொதுவாக பிப்ரவரி மாதத்தில் கூடும்.

**2.** பருவகாலக் கூட்டத்தொடர் – பொதுவாக ஜூலை மாதத்தில் கூடும்.

**3.** குளிர்காலக் கூட்டத்தொடர் – பொதுவாக நவம்பர் மாதத்தில் தொடங்கி நடைபெறும்.

முதல் கூட்டத்தொடரில் அதாவது வரவு – செலவு அறிக்கை (பட்ஜெட்) கூட்டத்தொடரில், நாடாளுமன்ற இரு அவைகளையும் கூட்டி, குடியரசுத் தலைவர் உரை

நிகழ்த்துவார். இந்த கூட்டத் தொடரிலேயே, இரயில்வே வரவு – செலவு மற்றும் பொது வரவு – செலவு மீது விவாதம் நடத்தி அவை ஏற்றுக் கொள்ளப்படும்.

**நாடாளுமன்றத்தின் பணிகள் (FUNCTIONS OF PARLIAMENT)**

**நாடாளுமன்றம் பலதரப்பட்ட பணிகள் புரிந்துவருகிறது.**

1. சட்டம் இயற்றுதல்.
2. நிருவாக மேற்பார்வை.
3. வரவு – செலவு அறிக்கை நிறைவேற்றுதல்.
4. பொதுமக்களின் குறைகளை போக்குதல்.
5. முன்னேற்ற திட்டங்களை உருவாக்குதல்.
6. பன்னாட்டு உறவுகளைப் பராமரித்தல் போன்ற பணிகளை ஆற்றி வருகிறது.

அரசியலமைப்பின்படி அதிகாரப் பிரிவினை அடிப்படையில் சட்டங்கள் இயற்றுவதில் நாடாளுமன்றத்திற்கே அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. சில சூழ்நிலைகளில் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்திலும் நாடாளுமன்றம் சட்டம் இயற்றக்கூடும். குடியரசுத் தலைவர் மீதான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கும், உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளையும், உயர்நீதிமன்ற நீதிபதிகளையும் பதவி நீக்கம் செய்யவும், தலைமை தேர்தல் ஆணையரையும் மற்றும் இந்தியக் கணக்காய்வர் – தலைமைத் தணிக்கையர் (Comptroller and Auditor - General of India) ஆகியோரை அரசியலமைப்பின் வரையறுக்கப்பட்ட வழிமுறைப்படி பதவி நீக்கம் செய்யவும் நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் வழங்கப்படுள்ளது.

சட்டமியற்ற நாடாளுமன்ற இரு அவைகளின் ஒப்புதலைப் பெற வேண்டும். இருப்பினும், நிதி மசோதாவைப் பொறுத்தவரை மக்கள் அவையின் ஒப்புதலே முடிவானது. நிதி மசோதாக்கள், மாநில அவையினால் 14 நாட்கள் மட்டுமே தாமதப்படுத்தப்படலாம். தரப்பெறும் சட்டம் செய்யும் உரிமை நாடாளுமன்ற புனராய்வுக்கும் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டது. சட்டங்கள் இயற்றும் அதிகாரங்களோடு நாடாளுமன்றத்திற்கு அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வரும் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் செயலாட்சிக்குழுவின் மீது கேள்விகள், துணைக்கேள்விகள் கேட்பதன் மூலமாகவும், ஒத்திவைப்புத் தீர்மானம் மூலமாகவும், தீர்மானங்ளை விவாதித்து அவற்றை நிறைவேற்றுவதன் மூலமாகவும், கண்டனத் தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலமாகவும் அல்லது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதன் மூலமாகவும் கட்டுப்பாட்டினை செலுத்தலாம்.

நாடாளுமன்றத்தின் பணிகள் பல தன்மை கொண்டவை மட்டுமல்ல, மிகுதியானவையும் கூட. அதனால் ஒவ்வொரு சட்டத்திற்கும் அதிக நேரம் ஒதுக்கவோ, கூர்மையாகக் கவனம் செலுத்தவோ முடிவதில்லை. அவ்வாறே பிறபணிகளுக்கும் போதிய கவனம் செலுத்த முடிவதில்லை. எனவே மசோதாக்கள் பரிசீலனைக்காக நாடாளுமன்ற குழுக்களுக்கு அனுப்படுகின்றன.

**மக்களவை, மாநிலங்கள் அவை – வேறுபாடு:**

1. மக்களவை உறுப்பினர்கள் நேரடியாக மக்கள் மூலம் (வயதுவந்தோர் வாக்குரிமை) தேர்ந்தெடுக்கப்பட மாநிலங்கள் அவை உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். (விகிதாரசபிரதிநிதித்துவ முறையைப்பின்பற்றி ஒற்றை மாற்று வாக்களிப்பு மூலம்)

2. மக்கள் அவையின் பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும் மாநிலங்கள் அவை கலைப்பிற்கு உள்ளாவதில்லை.

3. அமைச்சரவை மக்கள் அவைக்கு பொறுப்புடையதாக. இருக்கிறது. நிதி மசோதாக்கள் மக்கள் அவையில் தான் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். நாட்டின் நிருவாகத்தை நடத்துவதற்கு தேவையான நிதியை மக்கள் அவை தான் வழங்குகிறது.

4. யூனியன் அரசாங்கங்களுக்கும் மாநிலங்களுக்கும் பொதுவான ஒன்று அல்லது அதற்கு ஒரே அனைத்திந்திய பணிகளை உருவாக்குவது நாட்டின் நலனுக்குத் தேவையானது அல்லது உகந்தது என மாநிலங்கள் அவை கருதுமானால் நாடாளுமன்றம் சட்டத்தினால் அவ்வாறே செய்யலாம்.

## 7.2.7 உச்சநீதிமன்றம் (SUPREME COURT)

**உச்சநீதிமன்றத்தின் அமைப்பு**

இந்திய உச்சநீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதியையும் மற்றும் இருபத்தைந்து நீதிபதிகளையும் கொண்டிருக்கும். தலைமை நீதிபதியும் மற்ற நீதிபதிகளும் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவார்கள். நீதிபதிகளை நியமிக்கும்போது குடியரசுத் தலைவர் உச்சநீதி மன்றத்தின் தலைமை நீதிபதியை கலந்து ஆலோசித்து முடிவெடுப்பார்.

அரசியலமைப்பின்படி உச்சநீதிமன்ற நீதிபதிக்கு பின்வரும் தகுதிகள் அவசியமென கருதப்படுகிறது.

1. அவர் இந்தியாவின் குடிமகனாக இருத்தல் வேண்டும்.

2. ஓர் உயர்நீதிமன்றத்திலோ இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட நீதிமன்றங்களிலோ தொடர்ந்து ஐந்தாண்டுகளுக்கு குறையாமல் நீதிபதியாக இருந்தவராக இருக்க வேண்டும். அல்லது

3. ஓர் உயர்நீதிமன்றத்திலோ, இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட நீதிமன்றங்களிலோ குறைந்தது பத்தாண்டுகள் வழக்கறிஞராக இருந்தவராக இருக்க வேண்டும். அல்லது

4. குடியரசுத் தலைவர் கருத்தின்படி தனிச்சிறப்பு வாய்ந்த சட்டவியல் நிபுணராக இருத்தல் வேண்டும்.

உச்சநீதி மன்றத்தின் நீதிபதிகள் அறுபத்தைந்து வயது நிறைவு பெறும்வரை பதவி வகிப்பார்கள்.

உச்ச நீதிமன்றத்தின் தலைமை இடம் டில்லியில் உள்ளது. இருப்பினும் இந்தியாவின் தலைமை நீதிபதி இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று நீதிமன்றத்தை பிற இடத்திலோ அல்லது இடங்களிலோ தற்காலிக இருப்பிடமாகக் கொண்டு செயல்படுத்தலாம்.

## உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பு (JURISDICTION OF SUPREME COURT)

1. முதலேற்பு அதிகார வரம்பு
2. மேன்முறையீட்டு அதிகார வரம்பு
3. ஆலோசனை அதிகார வரம்பு
4. நீதிப் பேராணை அதிகார வரம்பு
5. இன்னபிற அதிகார வரம்பு

### 1. முதலேற்பு அதிகார வரம்பு (Original jurisdiction)

இந்திய அரசியலமைப்பு உச்சநீதிமன்றத்தின் முதலேற்பு அதிகார வரம்பிற்குட்பட்ட வழக்குகளை கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

அ. இந்திய அரசாங்கத்திற்கும், ஒரு மாநிலம் அல்லது பல மாநிலங்களுக்கும் இடையே எழும் வழக்கு, அல்லது.

ஆ. ஒருபுறம், இந்திய அரசாங்கமும் ஏதேனும் மாநிலம் அல்லது மாநிலங்களும் மறுபுறம் பிறிதொரு மாநிலம் அல்லது மாநிலங்கள் இவற்றிற்கிடையே எழும் வழக்கு அல்லது

இ. இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையே எழும் வழக்கு

அடிப்படை உரிமைகள் செயலாக்குவது தொடர்பான வழக்குகள் உச்சநீதிமன்றத்தின் முதலேற்பு அதிகார வரம்புக்கு உட்பட்டவை.

### 2. மேல்முறையீட்டு அதிகார வரம்பு (Appellate Jurisdication)

உச்சநீதிமன்றம் தான் இந்தியாவிலேயே இறுதியான மேல் முறையீட்டு நீதிமன்றமாகும். மாநிலங்களின் உயர்நீதி மன்றங்களின் சிவில் (உரிமையியல்) மற்றும் கிரிமினல் (குற்றவியல்) வழக்குகளின் தீர்ப்புகளுக்கு எதிராக உச்சநீதி மன்றத்திற்கு முறையீடு செய்யலாம். குறிப்பிட்ட வழக்குகளில் அரசியலமைப்பின் பொருள் குறித்து தெளிவான சட்டப் பிரச்சினை உள்ளது என உயர்நீதிமன்றம் சான்று வழக்கினாலன்றி உச்சநீதிமன்றம் அந்த வழக்கை ஏற்றுக் கொள்ளாது. உயர்நீதிமன்றம் இத்தகைய சான்றுகள் வழங்கவில்லை என்றாலும் உச்சநீதிமன்றம் இந்திய எல்லைக்குட்பட்ட எந்த நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயத்தின் (Tribunal) தண்டனைக்கெதிராகவும், கட்டளைக்கெதிராகவும் தனி அனுமதி வழங்கலாம்.

சிவில் வழக்கு தொடர்பாகவும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக உச்சநீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்யலாம். குற்றவியல் வழக்கு தொடர்பாகவும், இந்திய எல்லைக்குட்பட்ட எந்த உயர்நீதிமன்றத்தின் இறுதி உத்தரவுக்கெதிராகவும் அல்லது குற்றவியல் வழக்கில் வழங்கப்பட்ட தண்டனைக்கு எதிராகவும் உச்சநீதி மன்றத்திற்கு மேல் முறையீடு செய்யலாம்.

### 3. ஆலோசனை அதிகார வரம்பு (Advisory Jurisdiction)

ஒரு வழக்கு சட்டவிளக்கம் தொடர்பான அல்லது வேறு எந்த அம்சம் குறித்தும் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று குடியரசுத் தலைவர் கருதினால் அது தொடர்பான உச்சநீதிமன்றத்தின் கருத்துரையைப் பெறுதவற்காக அனுப்பலாம். அந்த அதிகாரத்தை அரசியலமைப்பு குடியரசுத் தலைவருக்கு வழங்கியுள்ளது.

## 4. நீதிப்பேராணை அதிகாரவரம்பு (Writ Jurisdiction)

இந்திய அரசியலைப்பின் விதி 32ல் வழங்கப்படும் உரிமை மனிதனின் இருதயமும் உயிர்சக்தியும் ஆகும். இவ்வுரிமை மூலம் தனிமனிதனின் உரிமையும் சுதந்திரமும் பாதுகாக்கப்படுகின்றன. உச்சநீதிமன்றம் கீழ்க்கண்ட நீதிப்பேராணைகள் பிறப்பிப்பதற்கு அதிகாரம் உடையது.

1) ஆட்கொணர்விப்பு நீதிப்பேராணை
2) செயலுறுத்து நீதிப்பேராணை
3) தடையுறுத்து நீதிப்பேராணை
4) நெறிமுறைக்கேட்பு நீதிப்பேராணை
5) தகுதிவினவு நீதிப்பேராணை

### 1) ஆட்கொணர்விப்பு நீதிப்பேராணை (WRIT OF HABEAS CORPUS)

தவறாக ஒருவர் காவலில் வைக்கப்பட்டால் அவருக்கு நீதி வழங்கும் நீதிமன்றம் காவலில் வைத்த அதிகாரிக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ ஆணை வழங்கி காவலில் வைக்கப்பட்டவரை நீதிமன்றத்தின் முன் கொண்டுவரச் செய்வதாகும். காவலில் வைக்கப்பட்டது சரி என நியாயப்படுத்த வேண்டியது காவல் துறையின் கடமை. இல்லையேல் அவரை விடுதலை செய்ய வேண்டும்.

### 2) செயலுறுத்து நீதிப்பேராணை (WRIT OF MANDAMUS)

செய்யத்தவறிய ஒரு குறிப்பிட்ட செயலை உடனடியாக செய்யக்கோரி நீதிமன்றம் ஆணை பிறப்பிப்பதாகும். இவ்வாணை பிறப்பிக்கப்பட்டதும் குறிப்பிட்ட அலுவலர் அச்செயலை உடனடியாகச் செய்ய வேண்டியவராகிறார்.

### 3) தடையுறுத்து நீதிப்பேராணை (WRIT OF PROHIBITION)

நீதிமன்றம் ஓர் அதிகாரிக்கு ஆணை பிறப்பித்து, அவரது எல்லைக்குட்படாத ஒரு செயலை செய்யாதிருக்குமாறு ஆணை பிறப்பிப்பதாகும்.

### 4) நெறிமுறைக்கேட்பு நீதிப்பேராணை (WRIT OF CERTIORARI)

நீதிமன்றம் தனது கீழ்ப்பட்ட ஒரு அதிகாரிக்கோ அல்லது நீதிமன்றத்துக்கோ ஆணை பிறப்பித்து, குறிப்பிட்ட நீதிமன்ற செயல்முறைகளையும், அது தொடர்பான ஆவணங்களையும் தனக்கோ அல்லது உரிய அதிகாரிக்கோ மாற்றச் செய்து நியாயமான பரிசீலனைக்கு அனுப்பச்செய்வதாகும்.

செயலுறுத்து நீதிப் பேராணை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தடையுறுத்து நீதிப்பேராணை நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்பதும் ஆகும். செயலுறுத்து நீதிப் பேராணை நீதித்துறை என்று மட்டுமல்லாமல் நிர்வாகத்துறையின் அதிகாரப்பொறுப்பில் இருப்பவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வழி செய்கிறது. ஆனால் தடையுறுத்து நீதிப்பேராணை மற்றும் நெறிமுறை கேட்பு நீதிப்பேராணை நீதி அல்லது நீதித்துறையோடு தொடர்புடைய அதிகாரம் செலுத்துவோருக்கு எதிராக பயன்படுத்தப்படுகிறது.

### 5) தகுதிவினவு நீதிப்பேராணை (WRIT OF QUOWARRANTO)

பாதிக்கப்பட்ட ஒரு நபரின் நியாயமான கோரிக்கையின் அடிப்படையில் அரசாங்கத்தின் அலுவலர் ஒருவரை அவர் எந்த அடிப்படையில் குறிப்பிட்ட பதவியை வகிக்கிறார் என்பதைத் தெளிவுப் படுத்தக்கோரும் நீதிமன்றத்தின் உத்தரவாகும்.

அ. அவ்வலுவலர் அரசாங்க அலுவராகவும் அவருடைய பதவி சட்ட அடிப்படையில் அல்லது அரசியல் சட்ட அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டிருக்கவேண்டும்.

ஆ. அவ்வலுவலர், மற்றவருடைய விருப்பத்திற்கு இணங்கவோ அல்லது அவர் சொல்லுபவற்றை நிறைவேற்றும் வேலை ஆளாகவோ இல்லாமல் சார்பில்லாத உறுதியாக ஏற்படுத்தப்பட்ட அலுவலராக இருக்க வேண்டும்.

இ. அவ்வலுவலர் நியமிக்கப்பட்டது அரசியலமைப்பு அல்லது சட்டம் அல்லது சட்டம் சார்ந்த பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கவேண்டும். அரசாங்க அலுவல்கள் ஆக்கிரமிப்பை எதிர்த்து பாதுகாக்கும் அதிகாரம் மிக்கதாக தகுதி வினவு ஆணை கருதப்படுகிறது.

### 5. இன்னபிற அதிகார வரம்பு (Miscellaneous Jurisdiction)

அ. ‘உச்சநீதிமன்றம்’ ஒரு பதிவு (Court of record) நீதிமன்றமாக இருக்கும். மேலும் அதன் ஆணைகளை அவமதிப்போரைத் தண்டிக்கும் அதிகாரம் அனைத்தையும் உடையதாகவும் இருக்கும்.

ஆ. உச்சநீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட தீர்ப்புகள் இந்திய எல்லைக்குட்பட்ட எல்லா நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும்.

இ. குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெற்று நீதிமன்ற நடவடிக்கைகளையும் செயல்முறைகளையும் ஒழுங்குபடுத்துவதற்காக விதிகளை இயற்ற உச்சநீதிமன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

ஈ. உச்சநீதிமன்றம் தனக்குக் கீழ்ப்பட்ட அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோரை கட்டுப்படுத்த வல்லது.

### சட்ட அலுவலர்கள் மற்றும் மத்திய சட்ட செயலி (Law Officers and the Central Law Agency)

### மத்திய அரசு தலைமை வழக்குரைஞர் (Attorney General)

மேற்கூறப்பட்ட அலுவலர்கள் அனைவரும் அரசியல் சட்ட விதி 76யின் படி குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் அவரவர் துறையை சார்ந்தஅலுவல்கள், கடமைகள் நடைமுறைகள் மற்றும் அவைப்பற்றிய சட்டபூர்வ நிலைமைப்பற்றி தேவைப்படும் போதோ அல்லது கேட்டு கொள்ளும்போதோ, குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை கூறும் பணியைச் செய்கிறார்கள்.

பொது வழக்கறிஞர் இந்திய யூனியனில் சட்டம் சம்பந்தமான துறையின் மிக உயர்ந்த அலுவலர் ஆவார். அவருடைய பணிகளை நிறைவேற்றுவதற்கு அல்லது பணிகள் சம்பந்தப்பட்ட வழக்குகள் நீதிமன்றங்களில் விசாரணை நடைபெறும் போது அவை எத்தகைய நீதிமன்றமாக இருந்தாலும் அங்கு தானே நேரில் ஆஜராகி வழக்கு விசாரணையில் உதவுவதற்கு அனுமதியும் உரிமையும் உடையவர்.

பொது வழக்கறிஞர் குடியரசுத் தலைவருடைய விருப்பம் உள்ளவரை பதவியில் இருப்பார். அவர் அனுமதிக்கும் ஊதியத்தை அவ்வப்போது பெறுவார். பொது வழக்கறிஞரை அடுத்து இன்னும் ஒரு இந்திய அரசு வழக்கு குறிப்புகள் தயாரிப்பவர் (Solicitor General of India) உள்ளார்.

### 7.2.8 இந்திய அரசியல் கட்சிகள்

பதினோறாம் வகுப்பு பாடநூலில் அரசியல் கட்சிகள் தோற்றம், தேவை, விளக்கம், வகைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும் தேர்தல் ஆணையம், அதன் அதிகாரங்களும், பணிகளும் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. இந்தப் பாடநூலில் தேசியக் கட்சிகள், மாநில கட்சிகள் ஆகியவற்றின் அமைப்பு மற்றும் இலக்குகளும், குறிக்கோள்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

அரசியல் கட்சிகள் படிநிலை அமைப்பிலான கட்டமைப்பைப் பெற்றுள்ளன. கட்சிகள் தனக்குரிய அடிப்படையான சட்டத்தைப் பெற்றுள்ளன. அச்சட்டத்திற்குட்பட்டு கட்சியின் கட்டமைப்பு உருவாக்கப்படுகின்றது. அதன் மேல் நிலையில், தலைவர் ஒருவர் இருக்கலாம். அவருக்கு துணைபுரிய செயலாளர்கள் மற்றும் பொருளாளர்கள் இருப்பார்கள். நாட்டின் பல்வேறு நிலைகளிலும் அரசியல் கட்சிகள் தமது மாநாடுகள் உரிய காலகட்டங்களில் நடத்துகின்றன. இத்தகைய மாநாடுகள் கட்சித் தொண்டர்கள் கட்சிக்காக நிதி திரட்டவும், மக்களின் ஆதரவு திரட்டவும் உபயோகப்படுத்தப்படுகிறார்கள். இந்தியாவில் கிட்டத்தட்ட, எல்லா அரசியல் கட்சிகளும் இந்த முறையைப் பின்பற்றுகின்றன.

ஒவ்வொரு நாட்டிலும் பல அரசியல்கட்சிகள் செயல்படுகின்றன. அவ்வாறு பல அரசியல் கட்சிகள் செயல்படுவதற்கு அவற்றுக்கு இடையே உள்ள கருத்தியல்கள் மற்றும் இலக்குகள் ஆகும். கருத்தியல்கள் மற்றும் இலக்குகள் அரசியல் கட்சிகள் இயங்குவதற்கு முக்கியமானவையாகும்.

இந்தியா அதிக மக்கள்தொகை கொண்ட மிகப்பெரிய நாடாகும். மக்களிடையே இன, மொழி, மதம், வருவாய்நிலை, சமூக நிலை வேறுபாடுகள் உள்ளன. எனவே பொதுவான ஒரு அமைப்பு உருவாவது கடினம். இது கட்சிகளுக்கும் பொருந்தும். இந்தியாவில் தேசிய , மாநில அரசியல் கட்சிகள் உள்ளன. அவற்றைப் பற்றி காண்போம்.

பிரெஞ்சு அறிஞரான டிரேசி (1754 – 1836) என்பவரால் கருத்தியல் என்பது சொல்லாக்கம் செய்யப்பட்டது. மக்களுடைய இலட்சியங்கள், உறுதிப்பாடுகள், நம்பிக்கைகள் மற்றும் கருத்துக்கள் ஆகியவற்றின் தொகுப்பினைக் கருத்தியல் குறிப்பிடுகின்றது. அரசாங்கக் கோட்பாடு ஒன்றையும், அரசியல் நடவடிக்கைக்குரிய நிகழ்ச்சித் திட்டத்தையும் உருவாக்குவதற்குக் கருத்தியல் செயல்திறனை வழங்குகின்றது. அரசியல் கோட்பாடு மற்றும் அரசியல் தத்துவம் ஆகியவற்றைப் போல் அல்லாமல், நடவடிக்கைக்குரியதொரு நிகழ்ச்சித் திட்டமாய் கருத்தியல் திகழ்கின்றது.

அரசியல் சார்ந்த கருத்தியல்கள் பலவாகும். அவைகளுள் தேசியம், மக்களாட்சி, சமதர்மம், மதச்சார்பின்மைத்துவம், மிதவாதம், பொதுவுடைமை, முதலாளித்தும் போன்றவை குறிப்பிட்டத்தக்கதாகும். பலவகையிலான அரசியல் கட்சிகளின் இலக்குகள், குறிக்கோள்கள், கொள்கைகள் மற்றும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களில் வாயிலாக கருத்தியல்கள் செயற்பாட்டைப் பெறுகின்றன.

## இந்தியத் தேசியக் காங்கிரஸ்

இந்தியத் தேசியக் காங்கிரஸ் மிகப் பழமையான அரசியல் கட்சியாகும். அது ஏ.ஓ. ஹியூம் என்பவரால் 1885 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள், 28 ஆம் நாளில் நிறுவப்பட்டது. காங்கிரஸ் கட்சியின் வரலாறு சுதந்திரப் போராட்டத்தின் வரலாறாக உள்ளது. அரசியல் சுதந்திரம் என்னும் பொதுவான குறிக்கோளை அடையும் பொருட்டு பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் காங்கிரஸ் கட்சியின் கீழ் அணிதிரண்டனர். எனவே, பிரிட்டிஷ்காரர்கள் 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15 ஆம் நாளன்று நாட்டையும் அதிகாரத்தையும் காங்கிரஸிடம் ஒப்படைத்தனர். அந்த நாள் முதற்கொண்டு, இரண்டு இடைவெளிகளை அல்லது குறுகிய கால எல்லைகளைத் தவிர்த்து ஏற்றத்தாழ ஐம்பது ஆண்டுகளாய்க் காங்கிரஸ் மைய அரசாங்கத்தில் அதிகாரத்தில் இருந்து வருகின்றது. 1967 ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ அனைத்து இந்திய மாநிலங்களிலும் அதிகாரத்தில் இருந்தது. காந்திஜி, ஜவஹர்லால் நேரு, இராசகோபாலச்சாரியார், கு. காமராசர், திருமதி. இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, பி.வி. நரசிம்மராவ் மற்றும் பலர் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் ஆவர். இந்தியத் தேசியக் காங்கிரஸ் கட்சிப் பிளவுகள் பலவற்றைச் சந்தித்து உள்ளது. அதன் தேர்தல் சின்னம் 'கை' ஆகும்.

## காங்கிரஸின் அமைப்பு

காங்கிரஸ் கட்சியின் தற்போதைய அமைப்பு 1920 ஆம் ஆண்டு நாக்பூரில் நடைபெற்ற கூட்டத்தொடரில் வடிவமைக்கப்பட்டது. அதில் கூறப்பட்டுள்ளதற்கு இணங்க (1) காங்கிரஸின் உயர்மட்ட அமைப்பாக அனைத்து இந்தியக் காங்கிரஸ் கமிட்டி (குழு) அமைந்துள்ளது. (2) இதற்கு அடுத்த அமைப்பாகக் காங்கிரஸ் செயற்குழு உள்ளது. இதன் உறுப்பினர்கள் அனைத்து இந்தியக் காங்கிரஸ் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்த அமைப்பு அமைச்சரவையைப் போல் உள்ளது. பொதுவாக, மிக மூத்தக் காங்கிரஸ்காரர்கள் இந்த அமைப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். (3) நாடாளுமன்றக் குழு என்ற தனிப்பட்ட அமைப்பு ஒன்றும் உள்ளது. காங்கிரஸ் தலைவரையும் சேர்த்து ஆறு உறுப்பினர்களை அது கொண்டுள்ளது. (4) காங்கிரஸ் செயற்குழுவின் கீழ் ஒவ்வொரு மாநிலத்திற்கென, பிரதேசக் காங்கிரஸ் குழு ஒன்று அமைந்துள்ளது. இந்த அமைப்பு, தனக்கென ஒரு தலைவரையும், செயல் உறுப்பினர்களையும் பெற்றுள்ளது. (5) ஒவ்வொரு மாவட்டத்திற்குமென, மாவட்டக் காங்கிரஸ் குழுக்கள் (மாநில காங்கிரஸ் குழுவின் கீழ் அமைந்துள்ளன. இதற்குக் கீழ் நிலையில் சில குழுக்களும் மற்றும் (6) மண்டலக் காங்கிரஸ் குழுக்களும் உள்ளன. பதினெட்டு அல்லது அதற்கு மேற்பட்ட வயதைக் கொண்ட எந்த ஒரு நபரும் காங்கிரஸின் அடிப்படை உறுப்பினராக முடியும்.

## காங்கிரஸின் கருத்தியல்

சுதந்திரத்துக்கு முன்னர் தேசியச் சுதந்திரம் அடைவதைக் காங்கிரஸ் தலையாய குறிக்கோளாகக் கொண்டிருந்தது. எனினும், சுதந்திரத்திற்குப் பின்னர் காங்கிரஸின் கொள்கையிலும் செயல்திட்டங்களிலும் ஒரு மாற்றம் ஏற்பட்டது. வகுப்பு அல்லது வர்க்க பேதமற்ற, மக்களாட்சிச் சமுதாயம் ஒன்றினை அமைக்கும் குறிக்கோள் 1955ல் அறிவிக்கப்பட்டது. இக்குறிக்கோளுக்கென, காங்கிரஸ் கட்சியின் ஆவடிக் கூட்டத் தொடரில் ''சமதர்மப் பாங்கிலான சமுதாயம்'' என்னும் தீர்மானம் ஒன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. நாட்டில் நிலவும் மாறுபடும் தேவைகளுக்குப் பொருத்தமான வேறு பல கொள்கைகளையும் செயல் திட்டங்களையும் காங்கிரஸ் கட்சி தழுவியது.

இருப்பினும் கட்சியின் கொள்கைகளில் 1990 ஆம் ஆண்டு முதல் தீவிர மாற்றங்கள் ஏற்பட்டன. பிரதம அமைச்சர் திரு.பி.வி.நரசிம்மராவ் தலைமையிலான அரசாங்கம் முக்கியமான சில பொருளாதார சீர்திருத்தங்களை ஆரம்பித்திருந்தது. இவையும் இதர மாற்றங்களும் சமதர்ம சமதாயக் கொள்கைக்கு முக்கியம் தரவில்லை, வரி விதித்தல், தொழில் முதலியவைகள் செய்வதற்கு அனுமதி தருதல் போன்றவற்றிற்கு பின்பற்றப்பட்ட கடுமையான விதிமுறைகள் தளர்த்தப்பட்டன. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில் தனியார்மயமாக்குதல், தாராளமயமாக்குதல் மற்றும் உலகமயமாக்குதல் என்று பிரபலமாக இருந்த முறைகளை இந்தியா பின்பற்ற ஆரம்பித்தது. 1996ம் ஆண்டுக்கு பிறகு வந்த காங்கிரஸ் கட்சி அரசாங்கம் அல்லாத எல்லா கட்சி அரசாங்கங்களுமே இம்முறைகளை பின்பற்றவேண்டியது அவசியமாயிற்று. 2004 ஆம் ஆண்டு மே மாதம் முதல் பதவிக்கு வந்திருந்த பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் தலைமையிலான அரசாங்கமும் மேலே சொல்லப்பட்ட கொள்கைகளைப் பின்பற்றி வந்தது. 2009 ஆம் ஆண்டு மே மாதம் நடந்த பாராளுமன்ற பொதுத்தேர்தலில் மறுபடியும் டாக்டர் மன்மோகன் சிங் தலைமையிலான அரசாங்கம் பதவி ஏற்று செயல்பட்டு வந்தது. இவ்வாறு மாறுதல்கள் ஏற்பட்ட போதும் காங்கிரஸ் கட்சி மற்றும் இதர கட்சி அரசாங்கங்கள் எல்லாமே ஐந்தாண்டு திட்டங்கள் அடிப்படையில் முன்னேற்றம் ஏற்படுத்தும் முறையைப் தொடர்ந்துப் பின்பற்றின.

சுதந்திரம் பெற்றது முதல் இன்று வரையிலும் காங்கிரஸ் கட்சி தலைமையிலான அரசு பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு அவர்கள் காலம் முதல் இந்தியாவை சுற்றியுள்ள நாடுகளுடன் நட்புறவு கொள்கையே பின்பற்றி வருகிறது. உச்ச அதிகாரம் உடைய அமெரிக்க அரசாங்கம் மற்றும் சோவியத் யூனியன் போன்ற நாடுகளுடன் காங்கிரஸ் கட்சி அரசாங்கம் நடுநிலைமைக் கொள்கையையும் அணிசேரா கொள்கையையும் கடைப்பிடித்து வந்திருக்கிறது.

## இந்தியப் பொதுவுடைமைக் கட்சி

இந்தியாவில் மிகப் பழமை வாய்ந்த இரண்டாவது கட்சியாகப் பொதுவுடைமைக் கட்சி திகழ்கின்றது. 1924 ஆம் ஆண்டில் அது நிறுவப்பட்டது. ஆனால், அது நிறுவப்பட்ட பிறகு, உடனடியாக, பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டது. இதன் விளைவாக, பெருவாரியான பொதுவுடைமைக் கட்சித் தொண்டர்கள், காங்கிரஸின் வாயிலாகத் தமது பணியினைத் தொடர்ந்து ஆற்றினர். 1942ல் நடைபெற்ற ''வெள்ளையனே வெளியேறு'' எனும் இயக்கத்தை எதிர்த்ததாலும், இரண்டாம் உலகப்போரை ஆதரித்த காரணத்தாலும் பொதுவுடைமைக் கட்சியின் மீது விதிக்கப்பட்டிருந்த தடை 1943–ல் நீக்கப்பட்டது. அதுவரை, பொதுவுடைமைக் கட்சி சட்டத்திற்குப் புறம்பான ஓர் அமைப்பாக இருந்தது. சுதந்திரத்துக்குப்பின், தனது நிலையைப் பொதுவுடைமைக் கட்சி மாற்றியது. அரிவாளுடன் கூடிய நெற்கதிர்கள் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் தேர்தல் சின்னமாகும்.

## அமைப்பும் கருத்தியலும்

இந்தியப் பொதுவுடைமைக் கட்சி உலகப் பொதுவுடைமை இயக்கத்தின் ஒரு உறுப்பு ஆகும். தேசியக் கட்சிகளில் ஒன்றென அது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனினும், கேரளம், மேற்குவங்காளம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் மட்டும் அது செல்வாக்குக் கொண்டுள்ளது.

இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் அமைப்பு 1958ல் அமிர்தசரசில் நடைபெற்ற மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. போர், புரட்சி மற்றும் தீவிரக் கருத்தியலைக் கைவிடும் பொருட்டு கட்சியின் அரசியலமைப்பு மாற்றம் செய்யப்பட்டது. கட்சியின் குறிக்கோள்களை அடைவதற்கென சட்ட மன்ற வகையிலான மக்களாட்சி முறை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கட்சியின் கட்டமைப்பு, மக்களாட்சி முறையிலான மைய அதிகார ஒருமிப்புக் கொள்கையின் மீது அமைந்துள்ளது. உள் கட்சி ஜனநாயகம், மையத் தலைமை ஆகிய நியதிகளின் மீது மேற்சொன்ன கொள்கை நிலவுகின்றது. கட்சிக்குள் அதன் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதற்கென்று நிலவும் வாக்குவாதச் சுதந்திரத்தை உள்கட்சிச் ஜனநாயகம் என பொருள் குறிக்கின்றது. வாதங்களை அடுத்து, செயல்திட்டம் ஒன்றைத் தலைமை தீர்மானித்தவுடன், கட்சியின் உறுப்பினர்கள் ஒழுங்குக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து, வழிகாட்டு நெறிகளுக்கு உட்பட்டு செயல்படுகின்றனர்.

கட்சியின் துவக்கநிலை, அமைப்பு ‘கிளை’ என்று அழைக்கப்படுகின்றது. கிராமம், பஞ்சாயத்து, நகராட்சிப் பிரிவு, தொழிற்சாலை போன்ற பலவற்றின் அடிப்படையில் அது அமைந்துள்ளது. கட்சியின் கொள்கை நூல்களை விற்பனை செய்தல், கட்சி உறுப்பினர் கட்டணங்களை வசூலித்தல் போன்றவை அதன் பணிகளாகும். கட்சிக் கிளையின் மேல் நிலைகளில் வட்டார மன்றம், மாவட்ட மன்றம், மாநில மன்றம் மற்றும் தேசிய மன்றம் ஆகியவை உள்ளன. கட்சியின் அரசியலமைப்பைச் செயல்படுத்துதல், கட்சி மாநாடுகளைக் கூட்டுவித்தல் மற்றும் மைய நிர்வாகக் குழுவிற்குத் தேர்தலை நடத்துதல் போன்ற ஒவ்வொரு முக்கியமான பணியினையும் தேசிய மன்றம் நடத்திவைக்கின்றது. மைய நிர்வாகக் குழு தனது பணிகளைக் கையாள்வதற்குத் தேவையான அமைப்புகளை அமைத்துக் கொள்ளலாம். கட்சியின் மேல் நிலையில் தலைவரும் பொதுச் செயலரும் உள்ளனர். இவ்வகையான கட்சியின் அமைப்பு தனிநபர் வழிபாடு எழுவதைத் தடை செய்கின்றது. அது அதிகாரத்தைப் பரவலாக்கி, மக்களாட்சி முறையில் கட்சி செயல்படுவதற்கு வலிமையூட்டுகின்றது. தனது பாமரத் தன்மையைத் தக்கவைத்துக் கொள்ள இவ்வமைப்பு கட்சிக்குத் துணைபுரிகின்றது.

இந்தியப் பொதுவுடைமைக் கட்சி மார்க்கிசிய லெனினுடைய சிந்தனையை முழுமையாகக் கடைப்பிடிக்கின்றது. அதே சமயம் அது நாடாளுமன்ற முறையிலான பொதுவுடைமைத் தத்துவத்திலும் நம்பிக்கை கொண்டுள்ளது. பொது மக்களின் அக்கறைக்குப் புறம்பான அல்லது எதிரான பிற்போக்குச் சக்திகளை முறியடிப்பது அதனுடைய குறிக்கோளாகும். முதலாளித்துவ மக்களாட்சியின் ஓர் உறுப்பாயுள்ள நாடாளுமன்றத்தை மக்கள் விருப்பத்தின் உண்மையான ஒரு கருவியாக உருமாற்றம் செய்வதை விரும்புகின்றது.

இந்தியப் பொதுவுடைமைக் கட்சி பின்வரும் கொள்கைகளிலும் செயல்திட்டங்களிலும் நம்பிக்கை கொண்டுள்ளது.

1. வங்கிகளைத் தேசிய மயமாக்குதல்.
2. இந்திய முற்றுரிமைகளையும், தனியார் வசமுள்ள அயல்நாட்டு தொழில் நிறுவனங்களையும் அழித்தல்.
3. அரசுப் பொதுத்துறையின் எல்லையை விரிவாக்குதல்.
4. அரசு வணிகத்தை மேற்கொள்ளுதல்.
5. அயல்நாட்டு மூலதனத்தைத் தடுத்து நிறுத்துதல்.
6. அதிரடியான வேளாண்மைச் சீர்த்திருத்தங்களை மேற்கொள்ளுதல்.
7. அணிசேரா அயல்நாட்டுக் கொள்கையைக் கடைபிடித்தல்.
8. காலனி ஆதிக்கம், ஏகாதிபத்தியம் இனவெறி ஆகியவற்றை எதிர்த்தல்.

## மார்க்கிசிய இந்தியப் பொதுவுடைமைக் கட்சி

இந்தியப் பொதுவுடைமைக் கட்சி 1964 ஆம் ஆண்டில் பிளவுண்டது. சீன – ரஷ்ய உறவுகளின் உள்கட்சிப் பிளவு இந்தியப் பொதுவுடைமைக் கட்சி உடைந்ததற்குக் காரணமாய் இருந்தது. பொதுவுடைமை அல்லது கம்யூனிசத் தலைவர்கள் நாட்டில் நிலவிய அரசியல், பொருளாதார நிலவரங்களை மதிப்பீடு செய்வதில் கருத்து வேற்றுமைகளைக் கொண்டிருந்தனர். மேலும், ஓர் அணியைச் சேர்ந்தத் தலைவர்கள் நேருவின் அரசாங்கத்திற்குத் தமது ஆதரவை வழங்க விரும்பினர். ஆனால் மற்ற அணியின் தலைவர்கள், காங்கிரசை பிற்போக்கான கட்சி என்று கூறி அதற்கு கடுமையான எதிர்ப்பினைக் கோரினர். அவர்களுடைய கருத்தியலான வேறுபாடுகளில் எவ்வுடன்பாடும் தோன்றவில்லை. இறுதியாக, மாற்று கருத்துக் கொண்டோர் தனிப்பட்ட ஒரு மாநாட்டை தெனாலி என்னும் இடத்தில் 1964 ஆம் ஆண்டு ஜுலைத் திங்களில் நடத்தினர். அவர்கள் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் டாங்கே அணியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டனர்.

ஜோதிபாசு, ஈ.எம்.எஸ். நம்பூதிரிப்பாடு போன்ற தலைவர்களும், மற்றவர்களும் இந்திய (மார்க்சிய) பொதுவுடைமைக் கட்சி என்ற பெயரில் புதியதொரு கட்சியை அமைத்தனர்.

மார்க்கிசிய கட்சியின் அமைப்பு, முக்கியக் குறிக்கோள்கள், கொள்கைகள் ஆகியவை, இந்தியப் பொதுவுடைமைக் கட்சியோடு பெரும்பாலும் ஒத்துக் காணப்படுகின்றன. கிளை மட்டத்திலிருந்து மேல் நிலை வரை, கட்சியின் கட்டமைப்பிற்கு ஆதாரங்களாய் மக்களாட்சிச் சமதர்மம், உள்கட்சி ஜனநாயகம் ஆகிய நெறிகள் அமைந்துள்ளன. பாமர மக்களுடன் உயிர்ப்பான இணைப்பைக் கிளை பெற்றுள்ளது. இந்தியாவின் புரட்சிகரமான இயக்கம், தனக்கே உரித்தான செயல்வழியைப் பின்பற்ற வேண்டும் என்பதில் மார்க்கிசியக் கட்சி பற்றுறுதி கொண்டுள்ளது. சீனாவின் அல்லது ரஷ்யாவின் உருமாதிரி எதுவும் இந்தியாவிற்குப் பொருத்தமுடையதாக இருக்க முடியாது என்று அது நம்புகின்றது. மார்க்கிசியக் கட்சியின் சின்னம் ஒரு சுத்தி, அரிவாள் மற்றும் நட்சத்திரம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, மார்க்கிசியக் கட்சி ஆகியவற்றின் கருத்தியல் வேறுபாடுகள்

ஒரு சில பொதுவான இலட்சியங்களையும் செயல் திட்டங்களையும் தவிர, இந்தியப் பொதுவுடைமைக் கட்சியும், இந்திய மார்க்கிசிய கட்சியும் பின்வரும் கருத்தியலான வேறுபாடுகளைக் கொண்டுள்ளன.

1. தொழிலாளர் வர்க்கத்தின் தலைவர்களால் மட்டுமே இந்தியாவில் புரட்சியைக் கொண்டு வர முடியும் என்று மார்க்கிசியக் கட்சி கருதுகின்றது. ஆனால், ஏனைய மக்களாட்சிச் சக்திகளோடு நெருக்கமான உறவினைக் கொள்வதன் வாயிலாக சமுதாய உருமாற்றத்தை அடைய முடியும் என்று இந்திய பொதுவுடைமைக் கட்சி நம்புகின்றது.

2. தற்பொழுது செயல்பாட்டில் உள்ள அரசை அகற்றுவதிலும், அதன் இடத்தில் தொழிலாளர் வர்க்கத்தினால் வழி நடத்திச் செல்லப்படும் மக்களுடைய ஜனநாயக அரசு ஒன்றை இடங்கொள்ளுமாறு செய்வதிலும், மார்க்கிசியக் கட்சி நம்பிக்கை கொண்டுள்ளது. இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, தேசிய மக்களாட்சி முன்னணி ஒன்று அமைக்கப்படும் கருத்திற்கு ஆதரவாக உள்ளது. தற்போதைய அரசாங்க முறை அகற்றப்படுவதை அது எதிர்க்கவில்லை. காலப் போக்கில் பிற்போக்குச் சக்திகள் நீக்கப்பட்டு, கட்சியின் கைப்பிடிக்குள் அதிகாரம் வந்துவிடும் என்று அது கருதுகின்றது.

**3.** ஆளும் வர்க்கத்தினர் தாமாக முன் வந்து ஒருபோதும் அதிகாரத்தைக் கைவிடமாட்டார்கள் என்பதில் மார்க்சியக் கட்சி நம்பிக்கை வைத்துள்ளது. எனவே தேவையின் பொருட்டு வலிமையைக் கையாள அது விரும்புகின்றது. இந்தியப் பொதுவுடைமைக் கட்சி வன்முறையற்ற சாதனங்களில் நம்பிக்கை கொண்டுள்ளது. பொது மக்களுடைய விருப்பத்தின் அடிப்படையில் ஒரு தூய்மையான கருவியாக நாடாளுமன்றத்தை உருமாற்றம் செய்வது அதன் குறிக்கோளாகும்.

## பாரதீய ஜனதாக் கட்சி

பாரதீய ஜனதாக் கட்சியின் முன்னோடியாகப் பழைய பாரதீய ஜன சங்கம் உள்ளது. ஜன சங்கத்தின் மூலத்தோற்றம், பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்துத் தேசியம் பெற்ற தோற்றத்துடன் இணைந்துள்ளது. 1875ல் சுவாமி தயானந்த சரஸ்வதி ஆரிய சமாஜத்தை நிறுவினார். வட இந்திய இந்துக்களிடையே புதியதொரு ஊக்கத்தை அது உருவாக்கியது. இந்துமதப் புத்துயிர் இயக்கத்திற்குத் தூண்டுதலையும் அது வழங்கிற்று. பின்னர் இந்து மகாசபை, ஜன சங்கம் ஆகியவற்றின் அடிப்படையான நியதிகளாகப் புதிய கருத்துக்கள் அமைந்தன. 1925ல் கேசவ் ஹெட்கேவார் என்பவர் ராஷ்டிரிய சுயம் சேவச் சங்கத்தை (ஆர்.எஸ்.எஸ்) ஒரு கலாச்சார அமைப்பாக அமைத்தார். இந்து சமுதாயம் புத்துயிர் பெறுவது அதன் நோக்கமாயிருந்தது. ஷியாம பிரசாத் முகர்ஜி என்பவர் 1951 ஆம் ஆண்டில் ஜனசங்கத்தை அமைத்துக் கொடுத்தார். ஜனசங்கம் இந்து மகாசபை, ஆர்.எஸ்.எஸ் ஆகியவற்றின் ஆதரவைப் பெற்றது. 1952 முதல் 1971 வரை இக்கட்சி நிலையான வளர்ச்சியைப் பெற்றது.

1977 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் மக்களவைத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. ஜனசங்கம், காங்கிரஸ் (அமைப்பு) மக்களாட்சிக்கான காங்கிரஸ், பாரதீய லோக்தளம் மற்றும் சமதர்மக் கட்சி ஆகியவை ஜனதா கட்சி என்னும் ஒரு கொடியின் கீழ் வந்தன. ஜனதா கட்சி 170 இடங்களில் வெற்றி பெற்று மொரார்ஜி தேசாயைப் பிரதம அமைச்சராகக் கொண்டு அரசாங்கத்தை அமைத்தது. ஏ.பி.வாஜ்பாய் போன்ற ஜன சங்கத் தலைவர்கள் காபினெட் தகுதி கொண்ட அமைச்சர்களாயினர். ஜனசங்கத்தின் தலைவர்கள் தமது கட்சியைப் புனரமைத்துப் பாரதீய ஜனதா கட்சியாகப் பெயர் மாற்றம் செய்தனர். ''ஜனசங்கம்'' என்ற சொற்கள் கைவிடப்பட்டன. அதுமுதற்கொண்டு தனது தனிப்பட்ட அடையாளத்தைப் பாரதீய ஜனதாக் கட்சி வெளிப்படுத்தி வருகின்றது. திரு.ஏ.பி.வாஜ்பாய் மற்றும் திரு.எல்.கே. அத்வானி தலைமையில் தேசிய கட்சியானது. பாரதீய ஜனதாக் கட்சி பிற அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து 1998 இல் மத்தியில் அரசாங்கம் அமைத்தது. மீண்டும் இக்கட்சி 2014 – ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று, திரு.நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கம் மத்தியில் பதவியேற்று செயல்பட்டு வருகிறது.

காங்கிரஸ் கட்சிக்கு உள்ளதைப் போல, அதனுடைய அமைப்பும், மக்களாட்சித் தன்மையைப் பெற்றுள்ளது. தாமரை மலர் பாரதீய ஜனதாக் கட்சியின் தேர்தல் சின்னமாகும்.

## பாரதீய ஜனதாக் கட்சியின் கருத்தியல் நெறிகள்

**1.** பாரதீய ஜனதாக் கட்சி மக்களாட்சியை ஒரு அரசாங்க வகையாகவும், வாழ்க்கைப் போக்காகவும் ஆதரிக்கின்றது. இந்து மக்களாட்சி அரசில் அது நம்பிக்கை பூண்டுள்ளது. பாரதீய சமஸ்கிருதம் மற்றும் மரியாதை ஆகியவற்றின் மீதான அரசியல் பொருளாதாரம் சமூக மக்களாட்சியை அது கடைப்பிடிக்கின்றது.

2. வலிமையான ஒரு தேசத்தை நிர்மாணிக்கும் பொருட்டு, அனைத்துக் குடிமக்களின் சமவாய்ப்பு மற்றும் சுதந்திரம் ஆகியவற்றுக்கு அது உறுதியளிக்கின்றது.

3. தேசிய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை அது வலியுறுத்துகின்றது. அரசியலும் பொருளாதாரமும் பன்முகத்துடன் பரவலாக்கப்படுவதை அது அன்புடன் ஆதரிக்கின்றது.

4. பாரதீய ஜனதாக்கட்சி சுதேசிப் பொருளாதாரத்தை ஆதரிக்கின்றது. அடிப்படையானதும், இராணுவப் பாதுகாப்பிற்கும் உரிய தொழிற்சாலைகள் தேசிய மயமாக்கப்படும் நெறியினை அது கடைப்பிடிக்கின்றது.

5. அயல்நாட்டுக் கொள்கையில், காங்கிரசுக்கு எதிர்ப்புடையதாய் பாரதீய ஜனதாக் கட்சி உள்ளது. ‘‘அணிசேராக் கொள்கை என்னும் பெயரில் நாட்டின் அக்கறைகளைக் காங்கிரஸ் தியாகம் செய்துள்ளது” என்ற உணர்வினை அது பெற்றுள்ளது. விட்டுக் கொடுக்கும் பரஸ்பரம் அல்லது இருதரப்பு அக்கறையின் மீது அயல்நாட்டுக் கொள்கை அமைந்திருக்க வேண்டும் என்பதையும், நாட்டின் சுய அக்கறையை மேம்படுத்துவதற்குரிய தேவையினையும் அது வலியுறுத்துகின்றது.

6. பொது வாழ்க்கையில் தூய்மை, பாதுகாப்பு, பொருளாதாரத் தேசியம் மற்றும் இந்துத்துவம் ஆகியவற்றைத் தனது கொள்கைத் திட்டங்களாகப் பாரதீய ஜனதாக் கட்சி அறிவித்துள்ளது.

## ஜனதா தளம்

ஜனதா தளம் 1988 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அமையப் பெற்று மக்களாட்சித் தன்மையைக் கொண்டுள்ளது. இக்கட்சியின் அமைப்பு, பழைய ஜனதா கட்சியின் அமைப்பிற்கு இணையானதாகவே உள்ளது. ஜனதா தளத்தின் கொள்கைக் கோட்பாடுகள் மற்றும் செயல் திட்டங்கள் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்ட எந்த ஒருவரும், கட்சியில் உறுப்பினராகலாம். ஆனால், அவர் 18 வயதினை அடைந்தவராக இருத்தல் வேண்டும். காங்கிரஸ் கட்சியில் உள்ளதைப் போன்று, ஜனதா தளத்திலும் சாதாரண உறுப்பினர்களும், துடிப்புமிக்க உறுப்பினர்களும் உள்ளனர். ஒவ்வொரு உறுப்பினரும் கட்சிக்கு நேர்மையாக இருக்கும் பொருட்டு உறுதிமொழி ஒன்றினை எடுத்துக் கொள்ள வேண்டும். ஜனதாத் தளத்தின் நிர்வாகக் குழுவாக அதன் செயற்குழு அமைந்துள்ளது. கட்சியின் எந்த ஒரு பதவிக்குமென, செயல் துடிப்பான உறுப்பினர் ஒருவரே தேர்தலில் போட்டியிட முடியும், வட்டாரம், மாவட்டம், மாநிலம் மற்றும் தேசிய நிலைகளில் கட்சிக் குழுக்கள் உள்ளன.

## ஜனதா தளத்தின் கருத்தியல் நெறிகள்

ஜனதா தளத்தின் முக்கியமான கருத்தியலான உள்ளடக்கப் பொருள்களுள் சில பின் வருபவையாகும்.

காந்திஜியின் இலட்சியங்களுக்கும், மாண்புகளுக்கும் ஜனதாத் தளம் மதிப்பு கொடுக்கிறது. இந்தியாவில், மக்களாட்சிச் சமதர்ம அரசு ஒன்றினை நிர்மாணிக்க அது விழைகின்றது. மதச்சார்பற்ற மக்களாட்சியுடனும் சுதந்திரமான இலட்சியங்களுடனும் இக்கட்சித் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. அச்சமெனும் அடிமைத்தளையிலிருந்து மக்களை விடுவிக்க ஜனதா தளம் விருப்பம் கொண்டுள்ளது. லஞ்சம் ஊழல் அழித்து மாண்புறு அரசியலை மேற்கொள்ள அது ஆதரவு தருகிறது. (1) தேர்தல் சீர்திருத்தங்கள் (2) சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தல் (3) அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் (4) நீதித்துறைக்கு மறு

உயிர் ஊட்டம் பெறுமாறு செய்தல் (5). மக்களுடைய பலவகை சுதந்திரங்களைப் பாதுகாத்தல் (6) நாட்டின் அடிநிலையான மக்களாட்சியை நிலை நிறுத்தல் (7) மாநிலங்களுக்கு அதிகமான அளவில் அதிகாரம் வழங்கப்பட்டு, வலிமையானதொரு கூட்டாட்சி நாட்டைப் பெறுதல் (8) அரசியல், சமூகப் பொருளாதார நீதியை நிலைநாட்டல் போன்ற இன்னபிற அதன் மக்களாட்சி முறை மாண்புகளுள் இடம்பெற்றுள்ளன.

ஜனதா தளத்தின் பொருளாதாரக் கொள்கை காந்தியக் கருத்தியல்களைச் சார்ந்துள்ளன. வேளாண்மை, குடிசை மற்றும் சிறு அளவுத் தொழில்களில் உச்சத் தன்மையை அது வலியுத்துகிறது. வேலை வாய்ப்பு உரிமை, வேலையில்லாத் திண்டாட்ட ஒழிப்பு, தொழிற்சாலையில் தொழிலாளர்களின் பங்கேற்பு, ஒரு தேசிய வருமானம், கூலிகள் மற்றும் விலைவாசிகளைப் பற்றிய கொள்கை மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைத் தணித்துக் குறைத்தல் போன்ற இலட்சியங்களையும் அது ஏற்றுக் கொண்டுள்ளது. சுயமான தொழில் சார்பிலும் அது நம்பிக்கை கொண்டுள்ளது. அயல் நாட்டு கொள்கையை பொறுத்து, காங்கிரஸை விட ஜனதா தளம் வெகுவாக வேறுபட்டிருக்கவில்லை. ஆனால், நமது தொழிற்சாலைகளுக்கு இழப்பு ஏற்படாதவகையில், அயல்நாட்டு முதலீடுகளை அது வரவேற்கின்றது.

## மாநில அரசியல் கட்சிகள்

## திராவிட முன்னேற்றக் கழகம்

1916 ல் பிராந்திய அரசியல் தமிழ்நாட்டில் உணரப்பட்டது. அச்சமயம், தற்போதைய தமிழ்நாடு அன்றைய சென்னை மாநிலத்தின் ஒரு பிரிவாகத் திகழ்ந்தது. சென்னை மாநிலத்தில் வாழ்ந்த மக்களுள் பிராமணர்கள் அனைத்து நிலைகளிலும் செல்வாக்கு உடையவர்களாக இருந்தனர். எனவே பிராமணரல்லாதவர்களின் உரிமைகள் நிலைநாட்டப்படவேண்டும் என்று உணரப்பட்டது. இந்நோக்கத்திற்கென நடேச முதலியார் மற்றும் சிலரால் 1912 ல் திராவிடச் சங்கம் அமைக்கப்பட்டது. பின்னர் திராவிடச் சங்கம் நீதிக்கட்சி என்று பெயர் பெற்றது. அது திராவிடக் கண்ணோட்டத்தையும் குறிக்கோள்களையும் கொண்டதாய் இருந்தது. 1944ல் பெரியார் திரு.ஈ.வெ.ராமசாமி தலைமையில் திராவிடர் கழகம் அமைக்கப்பட்டது. திரு.சி.என். அண்ணாதுரையும் அதில் சேர்ந்தார்.

திராவிடக்கழகம் ஒரு சமுதாயச் சீர்திருத்த இயக்கமாகும். இந்தியா சுதந்திரம் அடைந்தபிறகு, பெரியாருக்கும், அண்ணாவுக்கும் இடையே கருத்துவேறுபாடு தோன்றியது. அதன் விளைவாக 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17ம் நாளன்று திராவிட முன்னேற்றக் கழகத்தை அண்ணா துவக்கி வைத்தார். 1949 முதல் 1957 தி.மு.க. ஒரு சமுதாய அமைப்பாக மக்களுக்கு பணி ஆற்றியது.

நான்கு தென் மாநிலங்கள் உட்கொண்டதாய், தனிப்பட்ட ஒரு திராவிட நாட்டை உருவாக்கும் குறிக்கோளைத் தி.மு.க கொண்டிருந்தது. ஆனால் பிரிவினைவாதத்தைத் தடை செய்யும் பொருட்டு அரசியலமைப்புத் திருத்தம் செய்யப்பட்டதால், 1963 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23ம் நாளன்று திராவிட நாடு என்னும் கொள்கை கருத்தியலை அண்ணா கைவிட்டார். தி.மு.கவின் வரலாற்றில் இது ஒரு திருப்புமுனையாக அமைந்தது. உதயசூரியன் தி.மு.கவின் தேர்தல் சின்னமாகும்.

1957 ல் முதன் முறையாகத் தி.மு.க தேர்தலில் போட்டியிட்டது. இதற்கடுத்து வந்த தேர்தல்களில் தி.மு.க. நிலையான வளர்ச்சியைப் பெற்றது. 1967 ல் நடைபெற்ற நான்காவது பொதுத்தேர்தலில் தி.மு.க ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது.

1967 ஆம் ஆண்டின் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் அண்ணா முதலமைச்சரானார். அவர் 1969 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3 ஆம் நாள் வரை பதவியில் நீடித்திருந்தார்.

அண்ணாவின் மறைவுக்குப் பின் திரு.மு.கருணாநிதி தமிழ்நாட்டின் முதலமைச்சரானார். அவருடைய தலைமையின் கீழ் தேர்தல்களில் தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது.

## அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

கட்சித்தலைவர் என்ற முறையில் திரு.மு.கருணாநிதி 1972 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13ம் நாளன்று கருத்து வேறுபாடு காரணமாக திரு.எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்களை கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கினார்.

தி.மு.க விலிருந்து வெளியேற்றப்பட்ட பிறகு, 1972 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18 ஆம் நாளன்று, தனது சொந்த கட்சியை எம்.ஜி.ஆர் நிறுவினார். அதற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று அவர் பெயர் சூட்டினார். 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12ஆம் நாளன்று, எம்.ஜி.ஆர், தனது கட்சியின் பெயரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று மாற்றினார்.

எம்.ஜி.ஆர் அவர்கள் தனது கட்சி திரு.சி.என். அண்ணாதுரை கொள்கைகளை பின்பற்றும் என அறிவித்தார். கட்சி தொடக்கத்திலிருந்து தற்போது வரை தமிழ்நாட்டு மக்களிடையே மதிப்பையும் வரவேற்பையும் பெற்றுள்ளது. எம்.ஜி.ஆர் அவர்கள் டிசம்பர் திங்கள் 1987 ஆம் ஆண்டு மறைந்தார். அவர் மறைவுக்கு பின், கட்சி செல்வி. ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையின் கீழ் பலமும், வரவேற்பும் பெற்றுள்ளது.

அ.தி.மு.க.வின் அடிப்படை கருத்தியல் ‘‘அண்ணாயிசம்’’ ஆகும். ஏழ்மையையும் தீண்டாமையையும் ஒழிப்பதே அண்ணாயிசத்தின் அடிப்படை கொள்கை ஆகும். மேலும் சுயமரியாதை, பகுத்தறிவு, சோசலிசம், சமூக சேவையும் அதன் கொள்கைகளாகும். கட்சி மாநில சட்டசபைக்கும், பாராளுமன்றத்திற்கும் நடக்கும் தேர்தல்களில் பங்கு கொண்டு தன்னுடைய கொள்கைகளுக்கு ஆக்கவடிவம் கொடுக்க வேண்டும் என்று நம்புகிறது. முதல் முறையாக அ.தி.மு.க 1973ஆம் ஆண்டு மே திங்கள் திண்டுக்கல் நாடாளுமன்ற தொகுதியில் தேர்தலை சந்தித்தது. மொத்தத்தில் 52 சதவிகித வாக்குகளை பெற்றது. திரு.காமராஜின் காங்கிரஸ் (ஓ) இரண்டாவது, தி.மு.க மூன்றாவது இடத்தை பெற்றது. இந்தத் தேர்தல் தமிழ்நாட்டிலுள்ள பிரதான கட்சிகளின் தேர்தல் முடிவை நிர்ணயிக்கக்கூடிய திருப்புமுனையாக இருந்தது.

## தெலுங்கு தேசம்

தி.மு.க போன்று இது ஒரு மாநில அரசியல் கட்சியாகும். என்.டி.ராமராவ் தெலுங்கு தேசக் கட்சியை 1982 ஆம் ஆண்டு, மார்ச்சுத் திங்கள் 29ம் நாள் தோற்றுவித்தார். திரைப்படத்தில் பல்வேறு வேடங்களில் நடித்து புகழ்பெற்றார். இதனால் பலதரப்பு மக்களையும் தன் பக்கம் ஈர்த்துக் கொண்டார். அவரை மக்கள் ஒரு தெய்வ நிகர் திருமகனாகப் போற்றி நடந்தனர்.

தெலுங்குதேசம் கட்சி 1983, 1985, 1994 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற ஆந்திர மாநிலச் சட்டப்பேரவைத் தேர்தல்களில் வெற்றியடைந்தது. ஆந்திரப் பிரதேசத்தின் முதல் அமைச்சராக திரு. என். டி. ஆர் அவர்கள் அம்மாநில மக்களுக்கு ஏழ்மையை அகற்றுவதிலும், வாழ்க்கை தரத்தை உயர்த்துவதிலும் பாடுபட்டார். இவருக்கு பின் 1995 ல் திரு. என். சந்திரபாபுநாயுடு தொடர்ந்தார். இவர் ஆந்திரப்பிரதேச மாநிலத்தை முன்னேற்ற பல முக்கிய முயற்சிகளை மேற்கெண்டார். தகவல் தொழில் நுட்பத்தில் இவரது முயற்சி எல்லோர்

கவனத்தையும் ஈர்த்தது. திரு.ஏ.பி.வாஜ்பாய் அரசுக்கு இவருடைய அரசு வெளியிலிருந்து ஆதரவு அளித்தது. 2004 ஆம் ஆண்டு மக்களவைக்கு தேர்தல் நடைபெற்றது. அதே சமயம், ஆந்திரப்பிரதேச மாநில சட்டமன்ற தேர்தல் நடைபெற்றது. திரு.சந்திரபாபுநாயுடு தலைமையின்கீழ் இயங்கும் தெலுங்கு தேசம் கட்சி தோல்வி அடைந்தது. இந்திய தேசிய காங்கிரஸ் 2004 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது.

## இலக்குகளும் குறிக்கோள்களும்

1. மத்திய, மாநில அரசுகளிடையே நல்லுறவு
2. மக்கள் முன்னேற்ற திட்டங்கள்
3. திட்டமிடுதலின் போது மாநிலத்தின் ஈடுபாடு
4. தேர்தல் சீர்திருத்தங்கள்
5. கட்சி தாவல் தடை செய்தல்.
6. தேர்தல் செலவினங்கள் அரசினால் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும் போன்றவைகள் ஆகும்.

## அகாலி தளம்

இது சமயம் சார்ந்த அரசியல் கட்சியாகும். தொடக்கத்தில் மாஸ்டர். தாராசிங் என்பவர் இதற்கு தலைவராக இருந்தார். இக்கட்சி பஞ்சாபி மொழி பேசும் மக்கள் கொண்ட பஞ்சாபி சுபா என்ற சுதந்திர மாநிலம் வேண்டும் என்று வற்புறுத்தி வந்தது. இதற்கு பிறகு பஞ்சாப், அரியானா என்ற 1996ல் பஞ்சாபி மொழி பேசும் பஞ்சாப் மற்றும் ஹிந்தி மொழி பேசும் அரியானா மாநிலங்கள் நடைமுறைக்கு வந்தன.

இதர பிரதேச கட்சிகள் போல அகாலிதளமும் 1967 ஆம் ஆண்டு முதல் தேர்தலில் பங்கேற்று சட்டமன்றம், மற்றும் நாடாளுமன்றத்திற்கு போட்டியிட்டு வருகிறது. இக்கட்சி பாரதீய ஜன சங்கம் அல்லது ஜனதா கட்சி அல்லது பாரதீய ஜனதா கட்சியோடு கூட்டு வைத்து தேர்தலில் வெற்றி பெற்று கூட்டணி அரசாங்கம் அமைத்து ஆட்சி செய்து வருகிறது. இக்கட்சியுடைய முக்கியமான கோரிக்கை சண்டிகர் நகரை பஞ்சாப் மாநிலத்தின் தலைநகரமாக்க வேண்டும் என்பதாகும். பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலங்களுக்கிடையே ரவி மற்றும் பியாஸ் நதிகளின் நீர்பங்கீடு இரு அரசாங்கங்களுக்கும் ஏற்றதாக இருக்க வேண்டும் என்பது மற்றுமொரு முக்கியமான கோரிக்கை ஆகும். சீக்கியர்களுடைய ராணுவ பண்பாடு நடைமுறைகளுக்கு ஏற்ப இந்திய ராணுவத்தில் நியாயமான எண்ணிக்கையில் அவர்களுக்கு பதவிகள் கொடுக்கப்படவேண்டும் என்பது இன்னும் ஒரு சிறப்பு கோரிக்கை ஆகும். இதர சிறு சிறு கோரிக்கைகள் பின்வருமாறு

1. கிறித்துவர்களுடைய புனித தலைநகரமான வாடிகன் நகருக்குத் தரப்படும் அதே முக்கியத்துவம் அமிர்தரஸ் நகருக்கும் தரப்படவேண்டும்.

2. உள்நாட்டில் வானவெளியில் செல்லும் விமானங்களில் சீக்கியர்கள் அவர்களுக்கே உரிய தலைப்பாகையும் கிரிபான் என்னும் கத்தி போன்ற ஆயுதத்தை எடுத்து செல்ல அனுமதி வேண்டும்.

3. அரியானா மாநிலத்தில் பஞ்சாபி மொழி இரண்டாவது அரசாங்கமொழியாக அறிவிக்கப்படவேண்டும்.

4. அரியானா கட்டுப்பாட்டிலுள்ள பக்ரா அணைக்கட்டின் நிர்வாகம் பஞ்சாப் அரசாங்கத்திற்கு மாற்றப்படவேண்டும்.

1980ம் ஆண்டு முதல் அகாலி அரசியல் அதன் உச்சக்கட்டத்தில் இருந்தது. அது மத்திய அரசாங்கத்தில் பஞ்சாப் மாநிலம் சம்மந்தமான கொள்கைகளை நடைமுறையில் பல பாதிப்புகளை ஏற்படுத்தியது. 20 ஆண்டுகளுக்கு பிறகும் இன்னும் தீர்க்கப்பட வேண்டிய பல கோரிக்கைகள் இருந்துவருகின்றன என்பது கவனத்துக்குரியது.

பிரதேச அரசியல் கட்சிகளில் வேறு சில கட்சிகளும் முக்கியமானவைகளாக இருக்கின்றன. அவைகளில் அஸ்ஸாம் கன தந்திர பரிஷத், காஷ்மீரில் தேசிய மாநாட்டு கட்சி மற்றும் மக்கள் விருப்ப கட்சி குறிப்பிட தகுந்தவைகளாகும்.

## முடிவுரை

மேலே தரப்பட்டுள்ள தேசிய மற்றும் பிரதேச வாரியான கட்சிகள் பற்றிய அமைப்பு மற்றும் கொள்கைகள் அக்கட்சிகளால் பின்பற்றப்படுபவையாகும். எப்போது எந்த சூழ்நிலைகளில் இவைகள் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று அரசாங்கம் அமைத்தன என்ற விவரங்கள் இப்பகுதியில் தரப்படவில்லை. இவை பற்றிய விளக்கங்களுக்கு நூல் பட்டியலில் தரப்பட்டுள்ள அரசியல் கட்சி சம்பந்தப்பட்ட புத்தகங்களிலிருந்து படித்து அறியவும்.

## பயிற்சி

### பகுதி அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த ஆண்டு

   அ. 26 ஜனவரி 1950 ஆ. 15 ஆகஸ்டு 1947

   இ. 26 ஜனவரி 1947 ஈ. 15 ஆகஸ்டு 1945

2. 42வது சட்டத் திருத்தம் நடைமுறைக்கு வந்த ஆண்டு

   அ. 1947 ஆ. 1976

   இ 1967 ஈ. 1950

3. மாநில அவையின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை

   அ. 220 ஆ. 230

   இ. 250 ஈ. 200

4. மக்கள் அவையின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை

   அ. 552 ஆ. 545

   இ. 500 ஈ. 550

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

5. இந்தியக் குடியரசுத் தலைவர் இந்தியாவின்__________குடிமகன் ஆவார்.
6. இந்தியக் குடியரசுத் தலைவர்____________தலைவர் ஆவார்.
7. இந்தியப் பிரதம அமைச்சர்_______________________தலைவர் ஆவார்.
8. இந்திய உச்ச நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதியையும் மற்றும் ____________ நீதிபதிகளையும் கொண்டிருக்கும்.
9. இந்தியத் தலைமை நீதிபதியும் மற்ற நீதிபதிகளும் __________ நியமிக்கப்படுவார்கள்.

**III. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 10. மக்கள் அவை உறுப்பினராக வயது | – | 25 ஆண்டுகள் |
| 11. மாநிலங்கள் அவை உறுப்பினராக வயது | – | 30 ஆண்டுகள் |
| 12. துணைக் குடியரசுத்தலைவர் ஆவதற்கு வயது | – | 35 ஆண்டுகள் |

**பகுதி ஆ**

13. காந்தியக் கொள்கைகள் பற்றி விவரி.
14. அமைச்சரவை பற்றி சிறு குறிப்பு வரைக.
15. மக்கள் அவை தலைவரின் பணிகள் யாவை ?

**பகுதி இ**

16. காபினெட்டின் அம்சங்கள் மற்றும் பணிகள் யாவை ?
17. இந்தியப் பிரதமரின் பங்கு பணியினை விவரிக்க.
18. மாநிலக் கட்சிகளின் முக்கியத்துவம் பற்றி விவரி.
19. மக்கள் அவையின் அமைப்பு பற்றி விவரி.
20. நாடாளுமன்றத்தின் பணிகள் யாவை.
21. இந்திய உச்சநீதிமன்றத்தின் அதிகார வரம்பு பற்றி கட்டுரை வரைக.
22. திராவிட அரசியல் கட்சிகளின் குறிக்கோள்கள் பற்றி விவரி.

**பகுதி ஈ**

23. இந்திய அரசியலமைப்பின் சிறப்பியல்புகள் யாவை ?
24. இந்தியக் குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் யாவை ?
25. இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றத்தை வரையறு.

# அத்தியாயம் 8
# மாநில அரசாங்க அமைப்பு – தமிழ்நாடு

## முன்னுரை

இந்தியாவின் அரசியலமைப்பு மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்கு தனியான நிர்வாக முறையை அளித்து ஒரு கூட்டாட்சி அரசாங்க முறையை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவில் 29 மாநிலங்களும், தலைநகர் பிரதேசமான புதுடில்லி உள்பட 7 யூனியன் பிரதேசங்களும் உள்ளன. அரசியலமைப்பு, மத்திய மற்றும் மாநிலங்களின் ஆளுமைக்கான பகுதிகளைப் பெற்றுள்ளது. அரசியலமைப்பு விதி 370ன்படி ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் அதற்கென்று தனி அரசியலமைப்பைப் பெற்றிருப்பதைத் தவிர, அரசியலமைப்பின் VI வது பகுதியில் விதி 152 லிருந்து விதி 237 வரை எல்லா மாநில அரசாங்கங்களும் ஒரே மாதிரியான அமைப்பைப் பெற்றுள்ளன என்பதை அது குறிப்பிடுகிறது. விரிவாகக் கூறினால் மத்திய அரசு பெற்றுள்ள பாராளுமன்ற அரசாங்க முறையே எல்லா மாநிலங்களிலும் உள்ளது. ஆளுநர், முதலமைச்சர், அமைச்சரவை, சட்டத்துறை, நீதித்துறை, செயலகம், மாவட்ட நிர்வாகம் மற்றும் அதற்குக் கீழுள்ள அமைப்புகள் போன்றவைகளை விளக்குவதன் மூலம் நாம் இங்கே தமிழ்நாட்டின் அரசாங்கத்தை அறியலாம்.

## 8.1 ஆளுநர்

மாநிலத்தின் செயல்துறை அதிகாரம் ஆளுநரிடத்தில் உள்ளது. மற்றும் மாநிலத்தின் எல்லா செயல்துறை நடவடிக்கைகளும் ஆளுநரின் பெயரில் செயல்படுத்தப்பட உள்ளன. ஆனால், பாராளுமன்ற முறைக்கிணங்க. அவர் மாநிலத்தின் பெயரளவுத் தலைவராக செயல்பட கடமைப்பட்டுள்ளார். பொதுவாக, அரசியலமைப்பு விதி 153க்கிணங்க, ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு ஆளுநர் இருப்பார். ஆனால், 1956 ஆம் ஆண்டின் அரசியலமைப்புத் திருத்தம் ஒரு ஆளுநர் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கும் பதவி வகிக்கலாம் என்று வழிவகை செய்தது. ஆளுநர் என்பவர் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. ஆனால், ஜனாதிபதியால் நியமனம் செய்யப்படுகிறார். ஜனாதிபதியின் விருப்பம் உள்ளவரை பதவி வகிக்கிறார். 35 வயது நிரம்பிய எந்த இந்தியக் குடிமகனும் அந்தப் பதவிக்குத் தகுதியுடையவர். ஆனால், விதி 158க்கிணங்க அவர் எவ்வித வருவாய்தரும் பதவியை வகித்தல் கூடாது மற்றும் மத்திய அல்லது எந்த மாநிலச் சட்டத்துறையிலும் உறுப்பினராக இருத்தல் கூடாது. ஆனால், ஆளுநராக நியமனம் செய்யப்படவேண்டிய ஒரு நபர் பின்வரும் தன்மைகளில் திருப்தி படுத்தவேண்டும் என்று சர்க்காரியா ஆணையம் கூறியுள்ளது.

1. வாழ்க்கைப் பயணத்தில் சிறந்தவராக அவர் இருக்க வேண்டும்.
2. மற்ற மாநிலத்திலிருந்து வரும் ஒருவராக அவர் இருக்க வேண்டும்.
3. மாநிலத்தின் அரசியலில் நெருங்கிய தொடர்பு இல்லாதவராக அவர் இருக்க வேண்டும்.
4. பொதுவாக, அரசியலில் அதிகம் பங்கெடுத்திராத ஒருவராக அவர் இருக்க வேண்டும். குறிப்பாக சமீபகால அரசியலில் பங்கெடுக்காதவராக இருக்க வேண்டும் மற்றும்
5. மேற்கூறப்பட்ட தன்மைகளுக்கேற்ப ஒரு ஆளுநரை தேர்வு செய்யும் போது, இதுவரை இருந்த சிறுபான்மைக் குழுக்களுக்கு வாய்ப்புத் தர வேண்டுமென்பது தொடர வேண்டும்.

அரசியலமைப்பிற்கிணங்க, ஆளுநர் ஜனாதிபதியால் நியமனம் செய்யபடுகிறார். ஆனால், நடைமுறையில், பிரதம மந்திரியின் பரிந்துரையின்பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிறார். ஆளுநர் பதவியின் இயல்பான காலம் ஐந்து வருடங்கள் ஆகும். அவருக்கு மறு பதவிக்காலமும் கொடுக்கப்படலாம். அவரின் பதவிக்காலம் முடிவடைந்த போதிலும்கூட பின்னர் வருபவர் பதவியேற்கும் வரை பதவியில் தொடர்கிறார். ஆளுநரின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள் என்று இருக்கின்றபோதிலும், அவருடைய இராஜினாமாவாலோ அல்லது ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்வதாலோ அவர் பதவி இழக்கலாம். மாநிலச் சட்டத்துறையில் வாக்கெடுப்புப்பெறாத தொகுப்பு நிதியிலிருந்து அவர் தனது சம்பளத்தைப் பெறுகிறார்.

## ஆளுநரின் அதிகாரங்களும், பணிகளும்

ஆளுநர் மாநில செயல்துறையின் தலைவராகத் திகழ்கிறார். மற்றும் அதிகமான அதிகாரங்களையும் அவர் பெற்றுள்ளார். விதி 163–க்கிணங்க, ஆளுநர் தனது பணிகளையும் அதிகாராங்களையும் செயல்படுத்துகின்றபோது, சில குறிப்பட்ட விதிவிலக்குகளைத்தவிர, முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனையால் வழிநடத்தப்படுகிறார். மாநில அளவிலான செயல்துறைத் தலைவராக ஆளுநர் பின்வருகின்ற பணிகளையும் அதிகாரங்களையும் பெற்றுள்ளார்.

அ. செயல்துறை அதிகாரங்கள்

ஆ. சட்டத்துறை அதிகாரங்கள்

இ. நிதி அதிகாரங்கள்

ஈ. நீதித்துறை அதிகாரங்கள்

உ. தன்விருப்ப அதிகாரங்கள், மற்றும்

ஊ. இதர அதிகாரங்கள்.

## அ. செயல்துறை அதிகாரங்கள்.

1. மாநில அரசாங்கத்தின் அனைத்து செயல்துறை நடவடிக்கைகளும் ஆளுநரின் பெயரால் எடுக்கப்படுகின்றன.
2. அவர் முதலமைச்சரையும் மற்ற அமைச்சர்களையும் நியமிக்கிறார். அவர்கள் ஆளுநரின் விருப்பம் உள்ளவரை பதவி வகிக்கின்றனர்.
3. அவர் மாநிலத்தின் தலைமை வழக்கறிஞரை நியமித்து அவரின் சம்பளத்தை நிர்ணயிருக்கிறார்.
4. அவர் மாநிலத் தேர்தல் ஆணையரை நியமித்து அவரின் பணி நிலையையும் பதவிக் காலத்தையும் தீர்மானிக்கிறார்.
5. அவர் மாநிலப் பொதுப் பணி ஆணையத்தின் தலைவரையும் உறுப்பினர்களையும் நியமிக்கிறார். இருப்பினும், அவர்கள் ஆளுநரால் அல்லாமல் இந்திய ஜனாதிபதியால் பதவியிலிருந்து விலக்கப்படலாம்.
6. அவர் முதலமைச்சரிடமிருந்து மாநில விவகாரங்கள் தொடர்பான எந்தத் தகவலையும், சட்டமியற்றுதலுக்கான முன்வரைவுகளையும் கேட்கலாம்.

7. அவர் எந்த விவாதத்தின் மீதான அமைச்சரவையின் முடிவையும் தன்னிடம் சமர்ப்பிக்கும்படி முதலமைச்சரை கேட்கலாம்.

8. அவர், தனது பெயரால் அமுல்படுத்தப்படுகின்ற ஆணைகள் தொடர்பான விதிகளை ஏற்படுத்தலாம். ஆனால், அவை நியாமானதாக பிரச்சினைக்கு இடம் தராதவையாக இருத்தல் வேண்டும்.

9. அரசாங்க செயல்பாடுகளின் சீர்பாட்டிற்காகவும், அச்செயல்பாடுகளை அமைச்சர்களிடையே பகிர்ந்தளிக்கவும் அவர் விதிகளை ஏற்படுத்தலாம்.

10. விதி 356– ன்படி, மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியை ஏற்படுத்த ஜனாதிபதிக்கு அவர் பரிந்துரை செய்யலாம். இவ்வித ஆட்சிக் காலத்தில், ஜனாதிபதியின் முகவராக இருந்துகொண்டு விரிவான செயல்துறை அதிகாரங்களை ஆளுநர் செலுத்துகிறார்.

## ஆ. சட்டதுறை அதிகாரங்கள்

ஆளுநர் மாநிலச் சட்டத்துறையின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளார். ஆனால், அவர் சட்டத்துறையின் எந்த அவையிலும் உறுப்பினர் அல்லாதவர். இத்தன்மையில், அவர் பின்வருகின்ற சட்டத்துறை அதிகாரங்களைப் பெற்றுள்ளார்.

1. அவர் மாநிலச் சட்டமன்ற கூட்டங்களைக் கூட்டவோ அல்லது தள்ளிப்போடவோ மற்றும் கீழவையான மாநில சட்ட சபையை கலைக்கவோ உரிமை பெற்றுள்ளார்.

2. அவர் பொதுத்தேர்தல் முடிந்து முதல் கூட்டத்தொடரின் ஆரம்பத்திலும் ஒவ்வொரு வருடத்தின் முதல் கூட்டத்தொடரின் ஆரம்பத்திலும் சட்டமன்றத்தில் உரையாற்றுகிறார்.

3. அவர் சட்டத்துறையின் நிலுவையில் உள்ள மசோதா தொடர்பாக இரு சபைகளுக்கும் செய்திகள் அனுப்பலாம்.

4. சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் பதவிகள் காலியாக உள்ளபோது, சட்டசபையில் உள்ள எந்த உறுப்பினரையும் சபைக்கு தலைமை வகிக்க அவர் நியமிக்கலாம்.

5. அறிவியல், கலை, கூட்டுறவு இயக்கம் மற்றும் சமூகப்பணி போன்றவற்றில் சிறப்பு அறிவு அல்லது நடைமுறை அனுபவம் பெற்றுள்ளவர்களை மாநில சட்டமன்றத்தின் மேலவைக்கு ஆறில் ஒரு பங்கு உறுப்பினர்களை அவர் நியமிக்கிறார். (சட்டமன்ற மேலவை 1986ஆம் ஆண்டு நீக்கப்பட்டது).

6. ஆங்கிலோ – இந்திய சமூகத்திலிருந்து மாநில சட்டமன்றத்தின் கீழவைக்கு ஒரு உறுப்பினரை அவர் நியமிக்கலாம்.

7. தேர்தல் ஆணையத்துடன் கலந்தாலோசித்து மாநில சட்டத்துறை உறுப்பினர்களின் தகுதியின்மை பிரச்சினையை அவர் தீர்மானிக்கிறார்.

8. மாநிலச் சட்டத்துறையால் இயற்றப்பட்ட ஒவ்வொரு மசோதாவும் அவரின் கையொப்பத்திற்குப் பின்னரே சட்டமாகும். ஆனால், சட்டத்துறையால் இயற்றப்பட்டு ஒரு மசோதா ஆளுநருக்கு அனுப்பப்படும்போது, அம்மசோதாவிற்கு அவர் சம்மதம் தெரிவிக்கலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம் அல்லது சட்டத்துறையின் மறுபரிசீலனைக்காக அந்த மசோதாவை திரும்ப அனுப்பலாம்.

9. மாநில உயர்நீதிமன்றத்தின் நிலையை பாதிக்கும் வகையில் சட்டத்துறையால் மசோதா இயற்றப்படுமானால், ஜனாதிபதியின் பரிசீலனைக்காக அம்மசோதாவை அவர் ஒதுக்கி வைக்கலாம்.

10. விதி 213–ன்படி மாநில சட்டத்துறை கூட்டத்தொடரில் இல்லாதபோது அவர் இடைக்காலச் சட்டங்களை இயற்றலாம். ஆனால், ஆறு மாதங்களுக்குள் அவ்வித இடைக்காலச் சட்டங்கள் சட்டமன்றத்தின் ஒப்புதலைப் பெறவேண்டும். ஒரு இடைக்காலச் சட்டத்தை எந்த நேரத்திலும் அவர் விலக்கிக்கொள்ளலாம். மற்றும்,

11. மாநில அரசின் கணக்குள் தொடர்பான மாநில நிதி ஆணையம், மாநில பொதுப்பணி ஆணையம், தலைமைக் கட்டுப்பாட்டாளர் மற்றும் தணிக்கையாளர் ஆகியோரின் அறிக்கைகளை மாநில சட்டமன்றத்தின் முன்வைத்திட அவர் கடமைப்பட்டவராக உள்ளார்.

## இ. நிதி அதிகாரங்கள்

1. வருடாந்திர நிதிநிலை அறிக்கை எனப்படும் மாநிலத்தின் வரவுசெலவுத்திட்டம் சட்டமன்றத்தின் முன் வைக்கப்படுகிறதா என்பதைக் கவனிக்க அவர் கடமைப்பட்டுள்ளார்.

2. அவரின் முன்பரிந்துரைபெற்ற பின்னரே மாநில சட்டமன்றத்தில் பண மசோதாக்கள் அறிமுகப்படுத்தப்பட முடியும்.

3. எந்த ஒரு மானியக் கோரிக்கைக்கும் அவரின் பரிந்துரை விதிவிலக்கு அளிக்கப்படமாட்டாது.

4. எவ்வித எதிர்பாராத செலவினத்தைச் சந்திப்பதற்கும் மாநில கூட்டு நிதியிலிருந்து முன்பணத்தை அவர் ஏற்படுத்தலாம். மற்றும்,

5. பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகளின் நிதிநிலைமையை ஆய்வு செய்வதற்காக ஒவ்வொரு ஐந்தாண்டிற்கும் ஒரு நிதி ஆணையத்தை அவர் அமைக்கிறார்.

## ஈ. நீதித்துறை அதிகாரங்கள்

1. ஆளுநர் எவ்வித குற்றத்தின் தண்டனையிலிருந்தும் ஒருவரின் தண்டனையை குறைக்கவோ, தள்ளிவைக்கவோ அல்லது மன்னிப்பு வழங்கவோ முடியும். ஆனால், ஆளுநரின் மன்னிப்பு வழங்கும் அதிகாரம் ஜனாதிபதியின் மன்னிப்பு வழங்கும் அதிகாரத்திலிருந்து பின்வரும் வழிகளில் வேறுபடுகிறது.

   அ. மரண தண்டனைக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்க முடியும். ஆனால் ஆளுநரால் முடியாது.

   ஆ. கடற்துறை நீதிமன்ற தண்டனையை ஜனாதிபதி மன்னிக்க முடியும். ஆனால் ஆளுநரால் முடியாது.

2. தொடர்புடைய உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளை நியமனம் செய்கின்றபோது, ஜனாதிபதியால் அவர் கலந்தாலோசிக்கப்படுகிறார்.

3. உயர்நீதிமன்றத்துடனான கலந்தாலோசனையில், மாவட்ட நீதிபதிகளின் நியமனங்கள், பணியமர்த்துதல், பதவி உயர்வளித்தல் போன்றவற்றை அவர் செய்கிறார்.

4. உயர்நீதிமன்றம் மற்றும் பொதுப்பணி ஆணையம் ஆகியவைகளுடனான கலந்தாலோசிப்பினால், மாநிலத்தின் நீதித்துறைப் பணிக்குப் பணியாளர்களை அவர் நியமிக்கிறார்.

## உ. தன்விருப்ப அதிகாரங்கள்

1. ஜனாதிபதியின் பரிசீலனைக்காக எந்த மசோதாவையும் ஆளுநர் அனுப்பிவைக்கலாம்.
2. மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியின் அமுலாக்கத்திற்காக அவர் பரிந்துரைக்கிறார்.
3. மாநிலத்தின் நிர்வாகம் மற்றும் சட்ட விசயங்கள் தொடர்பானத் தகவலை முதலமைச்சரிடமிருந்து அவர் கேட்கிறார்.
4. பொதுத் தேர்தலுக்குப் பின்பு சட்ட சபையில் எந்தக் கட்சிக்கும் தெளிவான அல்லது தனிப் பெரும்பான்மை இல்லாதபோது எந்தக் கட்சியின் தலைவரையும் அமைச்சரவை அமைக்க அவர் அழைக்கலாம்.
5. அமைச்சரவை நம்பிக்கையை அதன் மீதான சட்ட சபையில் நிரூபிக்க முடியவில்லையெனில், அவர் அமைச்சரவையை நீக்கம் செய்யலாம். மற்றும்
6. அமைச்சரவை தனது பெரும்பான்மையை இழந்தால், அவர் சட்ட சபையை கலைக்கலாம்.

## ஊ. இதர அதிகாரங்கள்

மேலே கூறப்பட்ட பணிகள் மற்றும் அதிகாரங்களுடன், ஆளுநர் பின்வருகின்ற இதரப் பணிகளையும் செயல்படுத்துகிறார்.

1. மாநில பொதுப்பணி ஆணையத்தின் வருடாந்திர அறிக்கையை ஆளுநர் பெறுகிறார் மற்றும் அவற்றை அமைச்சரவை, மாநில சட்டமன்றம் போன்றவைகளிடம் விவாதத்திற்காகச் சமர்ப்பிக்கிறார்.
2. மாநில அரசாங்கத்தில் பல்வேறு துறைகளால் மேற்கொள்ளப்பட்ட வரவு மற்றும் செலவினம் தொடர்பான பொதுக் கட்டுப்பாட்டாளர் மற்றும் தணிக்கையாளரின் அறிக்கையை அவர் பெறுகிறார்.

## அரசியலமைப்பு நிலை

இந்திய அரசியலமைப்பு மத்தியிலும், மாநிலங்களிலும் பாராளுமன்ற அரசாங்க முறையை ஏற்படுத்தியுள்ளது. அதன் விளைவாக, ஒரு பெயரளவு நிர்வாகியாக மட்டுமே ஆளுநர் ஆக்கப்பட்டிருக்கிறார் மற்றும் முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவை உண்மையான செயல்துறையாக அமைகிறது. ஆகவே, முதலமைச்சரைத் தலைவராகப் பெற்றுள்ள அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனையுடன், ஆளுநர் தனது அதிகாரங்களையும், பணிகளையும் செயல்படுத்தக் கடமைப்பட்டவர். உண்மையில், இந்தியக் கூட்டாட்சி முறையில் மாநிலத்தின் அரசியலமைப்புத்தலைவர், மத்திய அரசின் பிரதிநிதி ஆகிய இரட்டைத்தன்மையான பங்கினை ஆளுநர் பதவிக்கு அரசியலமைப்பு வழங்கயுள்ளது. 1952 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டின் ஆளுநர்கள் பெயர் மற்றும் பதவிக்காலம் கீழேதரப்பட்டுள்ளது.

| வ.எண் | ஆளுநர்களின்பெயர் | பதவிக்காலம் |
|---|---|---|
| 1. | திரு. ஸ்ரீ. பிரகாசா | 1952–56 |
| 2. | திரு. ஏ.ஜெ.ஜான் | 1956–57 |
| 3. | திரு. விஷ்ணுராம் மேத்தி | 1958–64 |
| 4. | திரு. ஜே. வி. பஹதூர் | 1964–66 |
| 5. | திரு. சர்தார் உஜ்ஜல் சிங் | 1966–71 |
| 6. | திரு. கே.கே.ஷா | 1971–76 |
| 7. | திரு. மோகன்லால் சுகாதியா | 1976–77 |
| 8. | திரு. பிரபுதாஸ் பட்வாரி | 1977–80 |
| 9. | திரு. சாதிக் அலி | 1980–82 |
| 10. | திரு. சுந்தர்லால் குரானா | 1982–88 |
| 11. | திரு.பி.சி. அலெக்சாண்டர் | 1988–90 |
| 12. | திரு. சுர்ஜீத்சிங் பர்னாலா | 1990–91 |
| 13. | திரு. பீஷ்ம நாராயண் சிங் | 1991–93 |
| 14. | திரு. எம். சென்னா ரெட்டி | 1993–96 |
| 15. | திரு. கிருஷ்ணகாந்த் | 1996–97 |
| 16. | செல்வி. பாத்திமா பீவி | 1997–01 |
| 17. | திரு. சி. ரங்கராஜன் | 2001 –02 |
| 18. | திரு. ராம மோகன் ராவ் | 2002–04 |
| 19. | திரு. சுர்ஜீத்சிங் பர்னாலா | 2004–11 |
| 20. | திரு. கே. ரோசையா | 2011–2016 |
| 21. | திரு. சி. வித்தியாசாகர் ராவ் ( பொறுப்பு ) | 2016 – இதுவரை |

## 8.2 முதலமைச்சர்

இந்திய அரசியலமைப்புக்கிணங்க, மாநிலச் செயல்துறையில் பெயரளவுத் தலைவராக ஆளுநரும் உண்மையான தலைவராக முதலமைச்சரும் உள்ளனர். பாராளுமன்ற அரசாங்க முறை நிலவுவதால், இரண்டு வகையான தலைவர்களை நாம் காண்கின்றோம். இவ்வாறு மாநில அளவில் முதலமைச்சரின் நிலை மத்தியில் பிரதம மந்திரியின் நிலையைப் போன்றது. விதி 163–ன் படி, தன்விருப்ப அதிகாரங்களைத் தவிர, மற்ற அதிகாரங்களையும் பணிகளையும் ஆளுநர் செயல்படுத்துவதில் உதவியும் ஆலோசனையும் கூறுவதற்கு, முதலமைச்சரைத் தலைவராகப் பெற்றுள்ள ஒரு அமைச்சரவையை ஒவ்வொரு மாநிலமும் பெற்றிருக்கும். முதலமைச்சர் ஆளுநரால் நியமிக்கப்படுகிறார். நடைமுறையில், மாநில சட்டசபைக்கான பொதுத் தேர்தல்கள் நடந்து முடிந்தவுடன், மாநிலத்தில் அமைச்சகம் அமைக்க பெரும்பான்மைக்

கட்சியின் தலைவரை ஆளுநர் அழைக்கிறார். ஆளுநரின் விருப்பம் உள்ளவரை முதலமைச்சர் பதவி வகிப்பார். இருப்பினும், முதலமைச்சர் பதவியின் இயல்பான பதவிக்காலம் ஐந்து வருடங்கள் ஆகும். ஆனால், இராஜினாமாவாலும், விதி 356–ன்படி மாநில அவசரநிலை அமுலாக்கத்தாலும் அவர் பதவி இழக்கலாம்.

## முதலமைச்சரின் அதிகாரங்கள்

முதலமைச்சர் மாநில நிர்வாகத்தின் தலைவராக இருக்கிறார். அவர் அதிகமான பணிகளையும், அதிகாரங்களையும் பெற்றுள்ளார். முதலமைச்சரின் பணிகளும் அதிகாரங்களும் பின்வருமாறு

அ. அமைச்சரவை தொடர்பானவை

ஆ. ஆளுநர் தொடர்பானவை

இ. மாநில சட்டத்துறை தொடர்பானவை

ஈ மற்ற பணிகளும் அதிகாரங்களும்

## அ. அமைச்சரவை தொடர்பானவை

அமைச்சரவையின் தலைவராக, முதலமைச்சர் பின்வரும் பணிகளையும் அதிகாரங்களையும் செயல்படுத்துகிறார்.

1. ஆளுநரால் அமைச்சர்களாக நியமிக்கப்படும் நபர்களை முதலமைச்சர் பரிந்துரைக்கிறார்.
2. அவர் அமைச்சர்களிடையே இலாக்காக்களைப் பகிர்ந்தளிக்கிறார்.
3. அவர் அமைச்சரவையை மாற்றியமைக்கிறார் மற்றும் மறுமாற்றமும் செய்கிறார்.
4. கருத்து வேறுபாட்டின் காரணமாக அவர் ஒரு அமைச்சரை ராஜினாமா செய்ய வேண்டுகிறார் அல்லது அவரை அமைச்சரவையிலிருந்து பதவி விலக்க ஆளுநருக்கு ஆலோசனைக் கூறுகிறார்.
5. அவர் அமைச்சரவை கூட்டங்களுக்குத் தலைமை வகிக்கிறார் மற்றும் அதன் முடிவுகளில் செல்வாக்குச் செலுத்துகிறார்.
6. அவர் தனது பதவியை இராஜினாமா செய்வதன்மூலம் அமைச்சரவையை முடிவுக்குக் கொண்டுவரலாம். மற்றும்
7. அவர் அனைத்து அமைச்சர்களின் செயல்பாடுகளை வழிநடத்துகிறார், இயக்குகிறார், கட்டுப்படுத்துகிறார் மற்றும் ஒருங்கிணைக்கிறார்.

## ஆ. ஆளுநர் தொடர்பானவை

1. விதி 167–ன்படி ஆளுநருக்கும் அமைச்சரவைக்கும் இடையிலான தொடர்பின் பிரதான வழியாக முதலமைச்சர் உள்ளார். மற்றும்
2. பின்வரும் அலுவலர்களின் நியமனம் தொடர்பாக ஆளுநருக்கு அவர் ஆலோசனை கூறுகிறார்.

அ. மாநில தலைமை வழக்கறிஞர்

ஆ. மாநில தேர்தல் ஆணையர்

இ. மாநில பொதுப்பணி ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்.

ஈ. மாநில திட்ட ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

உ. மாநில நிதி ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்.

## இ. மாநில சட்டத்துறைத் தொடர்பானவை.

1. மாநில சட்டமன்றக் கூட்டத்தைக் கூட்டுவது மற்றும் தள்ளிப்போடுவது தொடர்பாக முதலமைச்சர் ஆளுநருக்கு ஆலோசனை கூறுகிறார்.
2. சபையில் அரசாங்கக் கொள்கைகளை அவர் அறிவிக்கிறார்.
3. சட்ட சபையில் அவர் மசோதாக்களை அறிமுகம் செய்யலாம். மற்றும்
4. எந்த நேரத்திலும் சட்ட சபையைக் கலைப்பதற்காக ஆளுநரிடம் அவர் பரிந்துரை செய்யலாம்.

## ஈ. மற்ற பணிகளும் அதிகாரங்களும்

1. ஆளுங்கட்சியின் தலைவராக, கட்சியைக் கட்டுப்படுத்தவும், நன்னெறிகளை வளர்க்கவும், முதலமைச்சர் கடமைப்பட்டுள்ளார்.
2. மாநிலத்தின் தலைவராக, பல்வேறு பிரிவு மக்களின் கோரிக்கைகளைக் கவனமாக பரிசீலிக்கவும் அவர் கடமைப்பட்டவர்.
3. பல்வேறு பணிகளின் அரசியல் தலைவராக, மாநில அளவில் உள்ள பல்வேறு துறைகளின் செயலர்களை மேற்பார்வையிடவும், கட்டுப்படுத்தவும் மற்றும் ஒருங்கிணைக்கவும் அவர் கடமைப்பட்டவர்.
4. மாநில அரசின் சீரான செயல்பாடு மற்றும் சிறந்த மத்திய – மாநில உறவுகளுக்காக, மத்திய அரசாங்கத்துடன் ஒரு நல்லுறவை வளர்க்க அவர் கடமைப்பட்டவர். மற்றும்
5. அமைச்சரவையின் அளவு முதலமைச்சரால் தீர்மானிக்கப்படுகிறது. எனினும், சமீபத்திய அரசியலமைப்புத் திருத்தத்திற்கிணங்க, சட்டசபை உறுப்பினர்களின் 15 சதவிகித்தை மட்டுமே அவர் அமைச்சர்களாக்க முடியும்.

இவ்வாறாக, மாநில நிர்வாகத்தில் மிக முக்கியமான மற்றும் உயர்ந்த பங்கில் முதலமைச்சர் செயல்படுகிறார். இருப்பினும், ஆளுநர் சிறப்பு நிலையைப் பெற்றுள்ள மாநிலங்களில் அவரின் தன்விருப்ப அதிகாரங்கள் முதலமைச்சரின் பங்கு மற்றும் முக்கியத்துவத்தை சிறிதளவு குறைத்துள்ளன. ஆனால், தமிழ்நாடு போன்ற அமைச்சரவை உறுதிப்பாடுள்ள மாநிலங்களில் அவ்வாறு இருக்கமுடியாது.

**1952 லிருந்து தமிழ்நாட்டின் முதலமைச்சர்கள் விவரம் வரிசையாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ.எண் | முதலமைச்சர்களின் பெயர்கள் | கட்சி | பதவிக்காலம் |
|---|---|---|---|
| 1. | திரு. சி.இராசகோபாலச்சாரியர் | காங்கிரஸ் | 1952–54 |
| 2. | திரு. கே. காமராஜ் | காங்கிரஸ் | 1954–63 |
| 3. | திரு. எம்.பக்தவச்சலம் | காங்கிரஸ் | 1963–67 |
| 4. | திரு. சி. என். அண்ணாதுரை | திமுக | 1967–69 |
| 5. | திரு. மு.கருணாநிதி | திமுக | 1969–76 |
| 6. | திரு. எம். ஜி. இராமச்சந்திரன் | அஇஅதிமுக | 1977–87 |
| 7. | திருமதி. ஜானகி இராமச்சந்திரன் | அஇஅதிமுக | ஜன 1988 |
| 8. | திரு.மு. கருணாநிதி | திமுக | 1989–91 |
| 9. | செல்வி. ஜெ.ஜெயலலிதா | அஇஅதிமுக | 1991–96 |
| 10. | திரு. மு.கருணாநிதி | திமுக | 1996–2001 |
| 11. | திரு. ஓ.பன்னீர்செல்வம் | அஇஅதிமுக | 2001–2002 |
| 12. | செல்வி. ஜெ.ஜெயலலிதா | அஇஅதிமுக | 2002–2006 |
| 13. | திரு. மு.கருணாநிதி | திமுக | 2006–2011 |
| 14. | செல்வி. ஜெ.ஜெயலலிதா | அஇஅதிமுக | 2011–2014 |
| 15. | திரு. ஓ.பன்னீர்செல்வம் | அஇஅதிமுக | 2014–2015 |
| 16. | செல்வி. ஜெ.ஜெயலலிதா | அஇஅதிமுக | 2015–2016 |
| 17. | திரு. ஓ.பன்னீர்செல்வம் | அஇஅதிமுக | 2016–இதுவரை |

தமிழ்நாட்டில் ஒவ்வொரு முதலமைச்சரும் மக்கள் மத்தியில் தங்களுக்கென்று தனியிடத்தைப் பெற்றுள்ளனர். மாநிலத்தில் சமதர்ம சமதாயத்தைச் சாதித்திட அவர்களின் சிந்தனைகள் மற்றும் கொள்கைகளுக்கு ஏற்றவாறு சமூக நலத்திட்டங்களையும், மேம்பாட்டுத் திட்டங்களையும், அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர். குறிப்பாக, கிராமப்புற எளியோர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடி வகுப்பினர் போன்றோரின் நலம் மற்றும் மேம்பாட்டிற்காக, பல்வேறு திட்டங்களின் மூலமாக அவர்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளனர். அனைத்துத் துறைகளுக்கிடையே, மாநிலத்தில் மட்டுமல்லாமல் தேசிய அளவிலும் கூட போக்குவரத்துறை முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில் பல்வேறு பதவிக் காலங்களில் முதலமைச்சர்களின் சீரிய முயற்சிகளால் இது சாதிக்கப்பட்டிருக்கிறது.

## 8.3 அமைச்சரவை

ஒவ்வொரு மாநிலத்திலும் ஆளுநருக்கு உதவி மற்றும் ஆலோசனை கூறுவதற்கு முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவை இருக்கும் என்று இந்திய அரசயிலமைப்பின் **விதி–163** கூறுகிறது. அதற்கிணங்கவே, தமிழ்நாட்டில் ஆளுநர்

பெயரளவுத் தலைவராக இருக்கிறார் மற்றும் மாநில அரசாங்கத்தின் உண்மையான அதிகாரம் அமைச்சரவையிடம் உள்ளது. ஆளுநர் தன் விருப்ப அதிகாரங்களைப் பெற்றுள்ள போதிலும், அவர் எப்போதாவது அவைகளைச் செயல்படுத்துகிறார். ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல, ஆளுநர் முதலமைச்சரை நியமிக்கிறார் மற்றும் அவரின் பரிந்துரையின்பேரில் மற்ற அமைச்சர்கள் நியமிக்கப்படுகின்றனர். அமைச்சர்களுக்கான நிர்ணயிக்கப்பட்ட பதவிக்காலம் இல்லை. மேலும் அவர்கள் ஆளுநரின் விருப்பம் உள்ளவரைப் பதவி வகிப்பர். இருப்பினும், அமைச்சர்களின் இயல்பான பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். அவ்வப்போது மாநில சட்டத்துறையால் அமைச்சர்களின் சம்பளங்களும் படிகளும் நிர்ணயிக்கப்படுகின்றன.

மத்திய அரசாங்கத்தில் உள்ளதைப் போல மாநிலங்களில் பாராளுமன்ற அரசாங்கமுறை பின்பற்றப்படுவதால், அமைச்சர்கள் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் மாநிலச் சட்ட சபைக்கு பொறுப்புடையவர்களாக உள்ளனர். அமைச்சர்கள் சட்ட சபையில் உறுப்பினர்களாகவும் உள்ளனர். அதன் விளைவாக, அமைச்சர்கள் ஒரு குழுவாக செயல்படுகின்றனர். ‘‘ஒருவருக்காக அனைவர் மற்றும் அனைவருக்காக ஒருவர்’’ என்ற கொள்கை அமைச்சரவையின் செயல்பாட்டில் பணிபுரிகிறது. அமைச்சரவையின் கூட்டு முடிவிலிருந்து ஒரு அமைச்சர் தன்னைப் பிரிக்க முடியாது. சட்டசபையின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும்வரை அமைச்சரவை அதிகாரத்தில் இருக்கிறது. சட்ட சபையில் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், முதலமைச்சரால் தலைமை வகிக்கப்படும் அமைச்சரவை இராஜினாமாவை சமர்பிக்க கடமைப்பட்டுள்ளது. இதற்குக் கூட்டுப் பொறுப்பு என்று பெயர்.

அமைச்சரவையின் அளவு தொடர்பாக, இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் ஒரேமாதிரியாக இல்லை. நிர்வாகச் சீர்திருத்த ஆணையம் (ARC) பின்வருமாறு கூறியுள்ளது. ‘‘பல்வேறு மாநிலங்களில் உள்ள நிர்வாகத் தேவைகளைப் பரந்த நோக்கில் கணக்கில் எடுத்துக்கொண்டு, உத்திரப்பிரதேசம், பீகார், மத்தியப்பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரம் போன்ற பெரிய மாநிலங்களில் கிட்டத்தட்ட 20 நபர்களை அமைச்சரவையில் பெற்றிருக்கலாம் என்று நாங்கள் கருதுகிறோம். மதராஸ் (தற்போது தமிழ்நாடு), கர்நாடகா மற்றும் ஆந்திரப்பிரதேசம் போன்ற நடுத்தர அளவிலான மாநிலங்கள் 14 முதல் 18 வரை அமைச்சர்கள் இருக்கலாம். கேரளா, ஹரியானா மற்றும் பஞ்சாப் போன்ற சிறிய மாநிலங்கள் 8 முதல் 12 வரை அமைச்சர்களைப் பெற்றிருக்கலாம்’’. இருப்பினும், அமைச்சரவையில் அளவு, தொடர்புடைய மாநில முதலமைச்சரைச் சார்ந்துள்ளது. ஆனால், சமீபகால அரசியலமைப்புத் திருத்தத்திற்கிணங்க, மாநில சட்டசபையின் மொத்த உறுப்பினர்களின் 15 சதவிகிதத்திற்கு மேல் அமைச்சர்களின் எண்ணிக்கை செல்லக்கூடாது. ஒவ்வொரு அமைச்சரும் மாநில சட்டசபையில் உறுப்பினராக இருத்தல் வேண்டும். இல்லையென்றால், ஆறு மாதத்திற்குள் அதன் உறுப்பினராக. தமிழ்நாட்டில் சட்டசபை பலத்திற்கேற்ப (234 உறுப்பினர்கள்) அமைச்சர்களின் எண்ணிக்கை 36 வரை, அதாவது 234ன் 15 சதவிகிதம் இருக்கலாம். தமிழ்நாட்டில், அமைச்சரவையின் பணிகளும் அதிகாரங்களும் பின்வருமாறு,

1. மாநிலத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு, மக்களின் பாதுகாப்பு மற்றும் மக்களின் சொத்துப் பாதுகாப்பு ஆகியவற்றைப் பராமரித்தல்.

2. மாநிலத்தின் கொள்கைகளை உருவாக்குவது, தீர்மானிப்பது மற்றும் அவைகளை சிறப்பாக அமுல்படுத்துவது.

3. சட்டசபையின் சட்டமியற்றும் திட்டங்களை அது தீர்மானித்தல் மற்றும் அனைத்து முக்கிய மசோதாக்களையும் அறிமுகப்படுத்துதல்.

4. நிதிக்கொள்கையை முடிவு செய்தல் மற்றும் மாநிலத்தின் பொது நலத்திற்கான வரியமைப்பை வடிவமைத்தல்.

5. சமூகப் பொருளாதார மாற்றங்களுக்கான திட்டங்களை தீட்டுதல், பல்வேறு துறைகளில் மாநிலத்தைத் தலையெடுக்கச் செய்வது.

6. துறைத்தலைவர்களின் முக்கியமான நியமனங்களைச் செய்தல்.

7. மற்ற மாநிலங்களுடனான சிக்கல்மீது விவாதித்து முயற்சிகள் மேற்கொண்டு முடிவெடுப்பது.

8. துணை நீதிமன்ற நீதிபதிகளின் நியமனம் பற்றி ஆளுநருக்கு ஆலோசனைக் கூறுதல்.

9. ஐந்தாண்டுத் திட்டங்களில் மாநிலப் பணியின் பங்கை பரிசீலித்து மற்றும் அதன் கடமைப்பாடுகளை தீர்மானித்தல்.

10. மாநில நிதி இருப்புகளிலிருந்து செய்கின்ற செலவினத்திற்காக முன்வரைவை உருவாக்குவது.

11. சட்டசபையில் அறிமுகப்படுத்தப்படவுள்ள சாதாரண மசோதாக்கள் அல்லது பண மசோதாக்கள் ஆகிய அனைத்து மசோதாகளையும் தீர்மானித்தல்.

12. அமைச்சரவையின் ஒவ்வொரு அமைச்சரும் தொடர்புடைய துறையை மேற்பார்வையிடுகிறார், கட்டுப்படுத்துகிறார், மற்றும் ஒருங்கிணைக்கிறார். மற்றும்

13. வரவுசெலவுத்திட்டம் என அழைக்கப்படுகின்ற வருடாந்தர நிதிநிலை அறிக்கை அமைச்சரவையால் இறுதிசெய்யப்பட்டு நிலைபடுத்தப்படுகிறது.

மாநிலத்தில் சட்டத்துறையின் குறிப்பாக சட்டசபையின் வழிகாட்டியாகவும், எஜமானாகவும் அமைச்சரவை இருக்கிறது. அதுதவிர, மாநிலத்தின் பொதுக் கொள்கைகளை உருவாக்குபவர்களாகவும், அமுல்படுத்துபவர்களாகவும் அமைச்சர்கள் உள்ளனர். இருப்பினும், அமைச்சரவைக்கு எதிராக ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இயற்றும் உரிமையை மாநில சட்டசபைப் பெற்றுத்திகழ்கிறது. எனவே, மாநில சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது சீரிய விமர்சனத்திற்கு அமைச்சர்கள் உட்படுத்தப்படுகிறார்கள். தமிழ்நாட்டில், இது வரையில் எந்த அமைச்சரவைக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் எதுவும் இயற்றப்படவில்லை. ஆனால், 1963–ல் காமராஜ் திட்டத்திற்கு இணங்க முதலமைச்சர் பதவியிலிருந்து கே. காமராஜ் இராஜினாமா செய்தார். விதி 356–ன்படி மாநில அவசரநிலைப் பிரகடனத்திற்கிணங்க 1980–ல் எம்.ஜி.இராமச்சந்திரன் அமைச்சரவை கலைக்கட்டப்பட்டது. இதேபோல, 1991ல் மு.கருணாநிதி அமைச்சரவை கலைக்கப்பட்டது. சுருக்கத்தில், முதலமைச்சரை தலைவராகப் பெற்றுள்ள அமைச்சரவை மாநிலத்தில் மக்களின் நலனுக்காக எதையும் அல்லது ஒவ்வொன்றையும் தீர்மானிக்கிறது.

## 8.4 தமிழ்நாட்டில் சட்டமன்றம்

ஒரு மாநில சட்டமன்றம் ஆளுநர் மற்றும் ஒன்று அல்லது இரண்டு சபைகளைப் பெற்றுள்ளது. ஒரு மாநில சட்டமன்றம் ஓரவையை உடையதாகவோ அல்லது ஈரவையை உடையதாகவோ இருக்கலாம். தற்போது பீகார், கர்நாடகம், மஹராஷ்ட்ரம், உத்திரப்பிரதேசம், ஜம்மு மற்றும் காஷ்மீர் போன்ற 5 மாநிலங்கள் மட்டும் ஈரவை சட்டமன்றத்தைப் பெற்றுள்ளன.

ஒரு மாநிலத்தில் சட்டசபை என்பது கீழவை அல்லது முதலவை என்றும் மேலவை அல்லது இரண்டாம் அவை என்றும் இரு அவைகளைக் கொண்டிருக்கலாம். அல்லது முதலவை அல்லது கீழ் அவையை மட்டுமேயுடையதாகவும் இருக்கலாம். ஓரவை முறையில் சட்டசபை என்ற பெயர் நிலவுகிறது. 1986–வரை தமிழ்நாடு சட்டமன்றம் ஈரவையைப் பெற்றிருந்தது. அந்த ஆண்டு முதலமச்சரான எம்.ஜி.இராமச்சந்திரனால் தலைமை வகித்த அஇஅதிமுக அரசாங்கத்தில், மேலவை என்ற இரண்டாம் அவை ரத்து செய்யப்பட்டது. எனவே, தமிழ்நாட்டில் ஒரு சபை மட்டுமே இருப்பினும், தமிழ்நாடு சட்டமன்றத்தின் இரண்டு அவைகளைப் பற்றியும் தெரிந்து கொள்வது நல்லது.

### 1. மேலவை

மேலவை ஒரு அலங்கார சபையாக மட்டுமே உள்ளது. மேலும் அதன் மிகுந்த நிலைப்பாடு கீழவையின் விருப்பத்தைச் சார்ந்திருக்கிறது. அரசியலமைப்பின் விதி 169–ன் படி,தொடர்புடைய மாநிலத்தின் பரிந்துரையின் மீது பாராளுமன்றத்தின் ஒரு சாதாரணச் சட்டத்தால் மேலவை ஏற்படுத்தப்படலாம். அல்லது ஒழிக்கப்படலாம். ஆனால், மேலவையை உருவாக்குவதற்கு அல்லது ஒழிப்பதற்குச் சட்டசபையின் பரிந்துரை அவசியம். இப்பரிந்துரை மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களால் ஆதரிக்கப்பட்டு நிறைவேற்றப்படவேண்டும்.

### அமைப்பு

மேலவையின் உறுப்பினர்கள் சட்ட சபையின் மொத்த உறுப்பினர்களின் மூன்றில் ஒரு பங்கிற்கு மிகாமலும் ஆனால் நாற்பதுக்குக் குறையாமலும் இருப்பார்கள். தமிழ்நாட்டின் மேலவை கலைக்கப்பட்டபோது கவுன்சில் 63 உறுப்பினர்களைப் பெற்றிருந்தது. இயல்பாகவே, நேரடித் தேர்தல், மறைமுகத் தேர்தல் மற்றும் நியமனம் போன்றவை அடங்கிய ஒரு கலப்பு பிரதிநிதித்துவத்தால் அது அமைக்கப்படுகிறது. மேலவைக்கான தேர்தல்கள் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறையால் ஒற்றை மாற்று வாக்கு. முறையில் பின்வருகின்ற வகையில் நடத்தப்படுகின்றன (விதி – 171).

அ. 1/3 உறுப்பினர்கள் சட்டசபையால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

ஆ. 1/3 உறுப்பினர்கள் பாராளுமன்றச் சட்டத்தால் குறிப்பிட்டதைப் போல, நகராட்சிகள், மாவட்ட வாரியங்கள் மற்றும் பிற உள்ளாட்சி ஆணையங்கள் போன்றவற்றால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இ. 1/12 உறுப்பினர்கள் பட்டதாரிகள் தொகுதிகளால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

ஈ. 1/12 உறுப்பினர்கள் ஆசிரியர்கள் தொகுதிகளால் தேர்ந்தெடுப்படுவர். மற்றும்

உ. 1/6 உறுப்பினர்கள் இலக்கியம், கலை, அறிவியல், சமூகப்பணி மற்றும் கூட்டுறவு இயக்கம் போன்றவற்றில் சிறந்து விளங்கும் நபர்கள் ஆளுநரால் நியமிக்கப்படுகின்றனர்.

### தகுதிகளும், பதவிக்காலமும்

அரசியலமைப்புக்கிணங்க, மேலவை உறுப்பினராவதற்கு ஒரு நபர் பின்வருகின்ற தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

1. அவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.

2. அவர் 30 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். மற்றும்

3. பாராளுமன்றத்தால் வரையறுக்கப்பட்டுள்ள மற்ற தகுதிகளையும் அவர் பெற்றிருக்க வேண்டும்.

மேலவையின் கலைப்பிற்கு உட்படாத ஒரு தொடரும் அமைப்பாக உள்ளது. பாராளுமன்றத்தின் இராஜ்ய சபையைப் போல, அதன் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்குப் பிறகு ஓய்வு பெறுகின்றனர். மேலவை உறுப்பினர் ஆறு வருட பதவிக்காலத்தைப் பெற்றுள்ளார். மேலும் அவர் கவுன்சிலுக்கு மறுமுறை தேர்ந்தெடுக்கப்படலாம்.

**பணிகள் மற்றும் அதிகாரங்கள்**

1. சாதாரண மசோதாக்கள் அறிமுகப் படுத்தப்படலாம்.

2. சட்ட சபையால் இயற்றப்பட்ட பண மசோதாக்களுக்கு அது ஒப்புதல் அளிக்கிறது.

3. சட்ட சபையால் இயற்றப்படுகின்ற பண மசோதாக்களை 14 நாட்களுக்கும் சாதாரண மசோதாக்களை 30 நாட்களுக்கும் அது தாமதப் படுத்தலாம்.

4. அதன் தலைவரும் துணைத் தலைவரும் அதன் உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

5. பல்வேறு வகையான நடவடிக்கைகளுக்கான பல்வேறு குழுக்களை அது அமைக்கிறது. மற்றும்

6. ஆளுநரால் பிரகடனப்படுத்தப்பட்ட இடைக்காலச் சட்டங்களுக்கு அது ஒப்புதல் அளிக்கிறது.

பொதுவாகவே, மேலவை ஒரு அலங்கார அவையாக மட்டுமே திகழ்கிறது. அதனால், அது ஒரு நலிந்த அவையாகக் கருதப்படுகிறது. ஜனாதிபதி தேர்தலில் அல்லது அரசியலமைப்புத் திருத்த மசோதாக்களின் ஒப்புதலளிப்பில் அது பங்கேற்பதில்லை. சுருக்கத்தில்,கீழவையுடன் தொடர்புப் படுத்துகையில், மேலவை அதிகாரமற்றதாக உள்ளது. மாநில சட்டமன்றத்தின் இரண்டாம் அவை அல்லது மேலவை என்று அதை அழைப்பது பொருத்தமற்றதாக உள்ளது. முன்னர் குறிப்பிட்டதைப் போல், தமிழ்நாட்டில் மேலவை தற்போது இல்லை. ஆகவே, தமிழ்நாடு ஓரவை சட்டமன்றத்தைப் பெற்றுள்ளது.

## 2. சட்டசபை

ஒவ்வொரு மாநிலத்திலும், பொதுவாக சட்டத்துறை என்பது சட்டசபை என பொருள்படும். மேலவையுள்ள மாநிலத்தில் கூட இதே நிலைதான். தமிழ்நாடு சட்டத்துறை சட்டசபை என்ற ஒரே ஒரு அவையை மட்டுமே பெற்றுள்ளது.

**அமைப்பு**

அரசியலமைப்பின் விதி 170–க்கிணங்க, ஒரு மாநில சட்டசபை 500–க்கு மிகாமலும் 50–க்கு குறையாமலும் உறுப்பினர்களைப் பெற்றிருக்கும். எனினும், அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலமாக ஒரு சட்டசபையின் குறைந்தபட்ச பலத்தை நிர்ணயிக்கும் அதிகாரத்தை

பாராளுமன்றம் பெற்றுள்ளது. தமிழ்நாட்டு சட்டசபை 235 உறுப்பினர்களைப் பெற்றிருக்கிறது. இதில் 234 உறுப்பினர்களை வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையில் தேர்தல் தொகுதிகளிலிருந்து மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மற்றுமுள்ள ஒரு உறுப்பினர் ஆங்கிலோ–இந்திய இனத்திலிருந்து ஆளுநரால் நியமிக்கப்படுகிறார். இருப்பினும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்களுக்காக அவையில் இடங்கள் ஒதுக்கப்படும்.

## தகுதிகள்

சட்டசபை உறுப்பினர் பதவிக்காக போட்டியிடும் ஒரு நபர் பின்வருகின்ற தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1. அவர் ஒரு இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.

2. அவர் 25 வயது அடைந்திருக்க வேண்டும். மற்றும்

3. பாராளுமன்றச் சட்டத்தால் வரையறை செய்யப்பட்ட மற்ற தகுதிகளையும் அவர் பெற்றிருக்க வேண்டும்.

## பதவிக்காலம்

இயல்பாகவே, சட்டசபையின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும். ஆனால், ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்தில் அதன் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் என்பது விதிவிலக்காகும். இருப்பினும், விதி 356–ன்படி மாநில அவசரநிலை என்று அழைக்கப்படுகின்ற ஜனாதிபதியின் பிரகடனப்படுத்தும் ஆணையின் விளைவாக, எந்த நேரமும் ஆளுநரால் சட்டசபை கலைக்கப்படலாம். விதி 352–ன்படி தேசிய அவசரநிலையின் காரணமாக, சட்டசபையின் பதவிக்காலம் பாராளுமன்றத்தால் நீட்டிக்கப்படலாம். ஆனால் அது ஒரு வருடத்திற்கு மிகக் கூடாது. இருப்பினும், அவசரநிலைப் பிரகடனம் வாபஸ் பெற்றபிறகு ஆறு மாதத்திற்குள் புதிய தேர்தல்கள் நடத்த வேண்டும். இவைதவிர, பதவிக்காலம் முடிவதற்கு முன்பே சட்டசபையை கலைப்பதற்கான பரிந்துரை செய்வதற்கு, ஆளுநரிடம் முதலமைச்சர் தானாக முன்வரலாம்.

## அதிகாரங்களும், பணிகளும்

தமிழ்நாட்டில் சட்டசபை பல்வேறு பணிகளைச் செய்கின்ற ஒரு அரசியல் நிறுவனமாக உள்ளது. அது பின்வருகின்ற அதிகாரங்களையும் பணிகளையும் செயல்படுத்துகிறது.

1. அரசியலமைப்பால் விதிக்கப்பட்ட வரையரைகளைத்தவிர, மாநில அட்டவணை மற்றும் பொது அட்டவணை ஆகியவற்றின் எந்தப் பிரிவிலும் சட்டம் இயற்றுதல்.
2. அரசாங்கத்தை உருவாக்குதல் மற்றும் ஒழித்தல்.
3. மாநிலத்தின் நிதிகளைக் கட்டுப்படுத்துதல்.
4. பண மசோதாக்களை அறிமுகப்படுத்தி அவைகளை நிறைவேற்றுதல்.
5. பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புத் திருத்த மசோதா ஒப்புதலுக்காக வந்தால் அதற்கு ஒப்புதல் அளித்தல் அல்லது மறுத்தல்.
6. தமிழ்நாடு பொதுப்பணி ஆணையம், பொதுக் கட்டுப்பாட்டாளர் மற்றும் தணிக்கையாளர் மற்றும் பிறரால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளைப் பரிசீலித்தல்.
7. பல்வேறு நடவடிக்கைகளுக்கான பல்வேறு குழுக்களை அமைத்தல்

8. சபாநாயகரையும் துணை சபாநாயகரையும் தேர்ந்தெடுத்தல்.

9. ஆளுகின்ற அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருதல். மற்றும்

10. இந்திய ஜனாதிபதியின் தேர்தலில் பங்கேற்றல்.

மேலே கூறப்பட்ட அதிகாரங்கள் சட்டசபைக்கு மட்டுமே உரித்தானதாகும். இவ்வாறாக, கோட்பாடு மற்றும் நடைமுறை ரீதியில் சட்டசபை மிகுந்த அதிகாரங்களைப் பெற்றுள்ளது. எனவே, சட்டசபை உறுப்பினர்கள் (M.L.A) மேலவை உறுப்பினர்களைவிட (M.L.C)அதிக அதிகாரங்களும் பணிகளும் பெற்றுள்ளனர்.

சட்டத்துறையின் மற்ற முக்கிய அலுவலர்கள் தொடர்பாக சட்டசபை அதன் சபாநாயகரையும், துணை சபாநாயகரையும் தேர்ந்தெடுக்கிறது. இதேபோல, மேலவை அதன் தலைவரையும் துணைத் தலைவரையும் தேர்ந்தெடுக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக மத்திய அரசாங்கத்தின் தலைமை வழக்கறிஞரைப் போல, மாநில தலைமை வழக்கறிஞர் சட்டத்துறையின் உறுப்பினராக இல்லாமல் சட்டத்துறை நடவடிக்கைகளில் பங்கேற்கும் உரிமையையும் அதிகாரத்தையும் பெற்றுள்ளார்.

## தமிழ்நாட்டில் சட்டசபையின் அமைப்பு

1951–52லிருந்து தமிழ்நாடு சட்டசபைக்கு உறுப்பினர்கள் தேர்வுக்கான பொதுத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. தேர்தல்களில் வெற்றிபெற்ற கட்சிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வரிசை எண் | வருடம் | ஆளுங்கட்சி |
|---|---|---|
| 1. | 1952 | காங்கிரஸ் |
| 2. | 1957 | காங்கிரஸ் |
| 3. | 1962 | காங்கிரஸ் |
| 4. | 1967 | திமுக |
| 5. | 1971 | திமுக |
| 6. | 1977 | அஇஅதிமுக |
| 7. | 1980 | அஇஅதிமுக |
| 8. | 1985 | அஇஅதிமுக |
| 9. | 1989 | திமுக |
| 10. | 1991 | அஇஅதிமுக |
| 11. | 1996 | திமுக |
| 12. | 2001 | அஇஅதிமுக |
| 13. | 2006 | திமுக |
| 14 | 2011 | அஇஅதிமுக |
| 15. | 2016 | அஇஅதிமுக |

## 8.5 உயர்நீதிமன்றம் மற்றும் துணை நீதித்துறை

செயல்துறை மற்றும் சட்டத்துறை ஆகியவற்றைத் தொடர்ந்து, தமிழக அரசாங்கத்தின் மூன்றாவது கிளையாக நீதித்துறை இருக்கிறது. தமிழ்நாட்டின் நீதிமுறை உயர்நீதிமன்றம் மற்றும் துணை நீதிமன்றங்கள் ஆகிய இரண்டு பிரிவான நீதிமன்றங்களைப் பெற்றுள்ளது. சமீபத்தில், சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளை மதுரையில் 2004ம் ஆண்டு தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உயர்நீதிமன்றத்தின் அமைவிடம் சென்னையில் உள்ளது மற்றும் துணை நீதிமன்றங்களின் அமைவிடங்கள் மாவட்டத் தலைநகரங்களிலும் அவைகளுக்கு கீழ்நிலையிலும் உள்ளன. இங்கே, பொதுவாக தமிழ்நாட்டு நீதித்துறை பற்றிய விபரங்கள் அடுத்துத்தரப்பட்டுள்ளன.

### உயர்நீதிமன்றம்

தமிழ்நாட்டில் நீதித்துறையின் தலைமையாக உயர்நீதிமன்றம் திகழ்கிறது. அது ஒரு தலைமை நீதிபதியையும் மற்றும் பல நீதிபதிகளையும் பெற்றுள்ளது. தலைமை நீதிபதி இந்திய ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிறார். மற்ற நீதிபதிகள் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, மாநில ஆளுநர் மற்றும் உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி ஆகியோருடன் கலந்து ஆலோசித்தபின்பு ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றனர். இதைத்தவிர உயர்நீதிமன்றத்தில் நிலுவைப் பணிகளை முடிப்பதற்காக இரண்டு வருடங்களுக்கு மிகாமல் தற்காலிகப் பதவி வகிக்கக்கூடிய கூடுதல் நீதிபதிகளை நியமனம் செய்வதற்கு ஜனாதிபதி அதிகாரம் பெற்றுள்ளார். மேலும், உயர்நீதிமன்றத்தின் ஒரு நிரந்தர நீதிபதி தற்காலிகமாக பணிக்கு வராமலிருந்தாலோ அல்லது அவரின் கடமைகளைச் செய்ய முடியாதிருந்தாலோ அல்லது தற்காலிகமாகத் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டாலோ அந்த இடத்தில் ஒரு செயல் நீதிபதியை நியமிக்க ஜனாதிபதி அதிகாரம் பெற்றுள்ளார். உயர்நீதிமன்றத்தின் ஒரு நீதிபதி 62 வயது முடியும் வரை பதவி வகிப்பார். நிரந்தர, கூடுதல் அல்லது செயல் நீதிபதி ஒவ்வொருவரும் பதவிக்காலம் முடிவதற்கு முன்பு பின்வரும் வழிகளில் பதவியை விட்டு விலகலாம்.

1. ஜனாதிபதிக்கு எழுதி சமர்ப்பித்து இராஜினாமா செய்வதால்.
2. ஜனாதிபதியால் உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டால் அல்லது ஒரு உயர்நீதிமன்றத்திலிருந்து வேறு உயர்நீதிமன்றத்திற்கு இட மாற்றம் செய்யப்பட்டால், மற்றும்
3. துர்நடத்தை அல்லது திறமையின்மை காரணமாகப் பாராளுமன்றத்தின் ஈரவைகளில் ஜனாதிபதி உரைப்படி பதவி விலக்கப்பட்டால்.

### தகுதிகள்

உயர்நீதிமன்ற நீதிபதி நியமனத்திற்கு அரசியலமைப்பின் பின்வருகின்ற தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

1. அவர் ஒரு இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
2. அவர் 62 வயது முடிந்தவராக இருத்தல் கூடாது.
3. இந்திய நிலப்பரப்பில் நீதித்துறையில் நீதிப்பணியை அவர் பெற்றிருந்திருக்க வேண்டும்; அல்லது
4. குறைந்தது 10 வருடங்களாவது ஒரு உயர்நீதிமன்றத்தில் ஓர் வழக்கறிஞராக இருந்திருக்க வேண்டும்.

## நீதிபதிகளின் சுதந்திரம்

உச்சநீதிமன்றத்தின் நீதிபதிகளைப்போல, உயர்நீதிமன்ற நீதிபதிகளின் சுதந்திரத்தை நிலைநிறுத்த பின்வரும் வழிகளினால் அரசியலமைப்பு நாடுகிறது.

1. உயர்நீதிமன்ற நீதிபதிகள் முக்கியமான அரசியலமைப்பு ஆணையுரிமையாளர்களாக உள்ளனர்.
2. மாநிலத்தின் தொகுப்பு நிதியிலிருந்து நீதிபதிகளின் சம்பளங்களும், படிகளும் வழங்கப்பட்டுகின்றன.
3. அரசியலமைப்பு விதி 360–ன்படி நிதி அவசரநிலைக் காலத்தில் தவிர, ஒரு நீதிபதிக்கு வழங்கக்கூடிய சம்பளத்தையும், படிகளையும் மற்றும் அவரின் பணி ஓய்விற்குப் பின்னர் உள்ள உரிமைகளையும் சலுகைகளையும் பாராளுமன்றத்தால் குறைக்க அல்லது வேறுபடுத்த முடியாது.
4. உச்சநீதிமன்ற நீதிபதியின் பதவி நீக்கத்தைப் போல, உயர்நீதிமன்ற நீதிபதியின் பதவிநீக்கமும் ஒரு கடினமான வழிமுறையால் பின்பற்றப்படுகிறது. மற்றும்
5. ஒரு நீதிபதி தனது பணி ஓய்வுக்குப் பின்னர் எவ்வித வருவாய் தரும் பதவியையும் வகித்தல் கூடாது.

## அதிகாரவரம்பும் அதிகாரங்களும்

அரசியலமைப்பின்படி சென்னை உயர்நீதிமன்றம் பின்வருகின்ற அதிகார வரம்பையும், அதிகாரங்களையும் பெற்றுள்ளது.

### 1. ஆரம்ப முறையீட்டு அதிகாரவரம்பு

மும்பை, கொல்கத்தா மற்றும் சென்னை ஆகிய மூன்று மாநில நகரங்களும் தங்களுடைய மாநில நகரங்களில் உருவாகும் சிவில் மற்றும் குற்ற வழக்குகளில் ஆரம்ப முறையீட்டு அதிகாரவரம்பைப் பெற்றிருந்தன. இருப்பினும், 1973 ஆம் ஆண்டின் குற்ற வழிமுறைச் சட்டத்தால் உயர்நீதிமன்றத்தின் ஆரம்ப முறையீட்டு குற்ற அதிகார வரம்பு முழுவதும் எடுக்கப்பட்டது. சிவில் வழக்குகளை நடத்துவதற்கு நகர சிவில் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ள போதிலும், உயர்நீதிமன்றத்தின் ஆரம்ப முறையீட்டு சிவில் அதிகாரவரம்பு ஒழிக்கப்படவில்லை. அதாவது, வழக்கின் மதிப்பீடு உயர்வின் காரணமாக அது ஒழிக்கப்படவில்லை.

### 2. மேல் முறையீட்டு அதிகாரவரம்பு

தமிழ்நாட்டில் உயர்நீதிமன்றம் தலையாய நீதிமன்றமாக உள்ளது. சிவில் மற்றும் குற்ற வழக்குகள் இரண்டிலும் மேல் முறையீட்டு அதிகாரவரம்பை அது பெற்றுள்ளது. சிவில் பகுதியில், மாவட்ட நீதிபதியின் முடிவிலிருந்தும், உயர் மதிப்பீட்டின் காரணமாகத் துணை நீதிபதியின் முடிவிலிருந்தும் நேரடியாக மேல்முறையீடுகள் உயர்நீதிமன்றத்திற்கு வருகின்றன.

### 3. நீதிப்பேராணை அதிகாரவரம்பு

இந்திய அரசியலமைப்பு வடிவமைப்புக் குழுவின் தலைவரான பி.ஆர். அம்பேத்கரின் கருத்திற்கிணங்க, விதி–32 அரசியலமைப்பின் உயிரும் இதயமும் ஆகும். ஏனென்றால், நீதிப்பேராணைகள் மூலமாக ஒவ்வொரு இந்தியக் குடிமகளின் உரிமைகள், சுதந்திரம் மற்றும்

சலுகைகள் போன்றவற்றை அது பாதுகாக்கிறது. அதேபோல, விதி 226–ன் படி உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை அதிகார வரம்பைப் பெற்றுள்ளது. ஆட்கொணர்பேராணை, கட்டளைப்பேராணை, தடுப்புப்பேராணை, சான்றுபேராணை மற்றும் தகுதிவினாப் பேராணை போன்ற ஐந்து பேராணைகள் உள்ளன.

## 4. கண்காணிக்கும் அதிகாரம்

உயர்நீதிமன்றம் இராணுவத் தீர்ப்பாயங்களைத்தவிர, தனது அதிகார வரம்பின் பரப்பிலுள்ள அனைத்து நீதிமன்றங்களையும் மற்றும் தீர்ப்பாயங்களையும் கண்காணிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது. உண்மையில், அது பரந்த அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

## 5. மாநில நீதித்துறையின் தலைமையகம்

மாநில நீதித்துறையின் தலைமையகமாக, உயர்நீதிமன்றம் தனது மேல்முறையீட்டு மற்றும் மேற்பார்வை அதிகார வரம்பைத்தவிர, சில குறிப்பிட்ட விவகாரங்களில் துணை நீதித்துறையின் மீது நிர்வாகக் கட்டுப்பாட்டைப் பெற்றுள்ளது. இவ்வாறாக, உயர்நீதிமன்றம் அதிகாரம் பொதிந்ததாக உள்ளது. மேலும், அது பதிவு நீதிமன்றமாகவும் செயல்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, மாநிலத்தின் மிகமுக்கியமான வழக்குகளைத் தீர்த்துவைப்பதற்கு அமர்வு அதிகாரவரம்பையும் அது பெற்றுள்ளது.

## துணை நீதிமன்றங்கள்

சிவில் வழிமுறை சட்டத்துடன் தொடர்புள்ள சிவில் நீதிமன்றங்கள் மற்றும் குற்ற வழிமுறைச் சட்டத்துடன் தொடர்புள்ள குற்றவியல் நீதிமன்றங்கள் போன்ற இரண்டு வகைகளாகத் துணை நீதிமன்றங்கள் பிரிக்கப்படுகின்றன. அகில இந்திய நீதிபதிகள் சங்கத்தின் வழக்கிற்கிணங்க, (1989) நாடு முழுவதும் துணை நீதித்துறையின் நீதி அலுவலர்களில் ஒரேமாதிரியான பதவிநிலை கொண்டுவர உச்சநீதிமன்றம் வலியுறுத்துகிறது. அதாவது, சிவில் பக்கத்தில் மாவட்ட நீதிபதி, கூடுதல் மாவட்ட நீதிபதி, சிவில் நீதிபதி (முதுநிலைப் பிரிவு) மற்றும் சிவில் நீதிபதி (இளநிலைப் பிரிவு) என்ற படிநிலையும், குற்றவியல் வழிமுறைச் சட்டம் வரையறுத்தபடி குற்றவியல் பக்கத்தில் செசன்ஸ் நீதிபதி, கூடுதல் செசன்ஸ் நீதிபதி, முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் நீதித்துறை நடுவர் என்ற படிநிலையும் இருக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியது. கீழே வருகின்ற அட்டவணை துணை நீதிமன்றங்களின் படிநிலையைக் காண்பிக்கிறது.

## துணை நீதிமன்றங்களின் படிநிலையைக் காட்டும் அட்டவணை

| சிவில் பக்கம் | குற்றவியல் பக்கம் |
|---|---|
| 1. மாவட்ட நீதிபதி | செசன்ஸ் நீதிபதி |
| ↑ | ↑ |
| 2. கூடுதல் மாவட்ட நீதிபதி | கூடுதல் செசன்ஸ் நீதிபதி |
| ↑ | ↑ |
| 3. சிவில் நீதிபதி (முதுநிலைப் பிரிவு) | முதன்மை நீதித்துறை நடுவர் |
| ↑ | ↑ |
| 4. சிவில் நீதிபதி (இளநிலைப் பிரிவு) | நீதித்துறை நடுவர் |

இத்துடன், சிறு காரண நீதிமன்றங்களும் உள்ளன. பிராந்திய சிறு காரணங்கள் சட்டத்தின்படி இவ்வகையான நீதிமன்றங்கள் மாவட்ட அளவிலோ அல்லது மாநில சிறு காரணங்கள் நீதிமன்ற சட்டத்தின்படி மாநகரங்களிலோ அமைக்கப்படுகின்றன.

மாநில உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையுடன் ஆளுநரால் ஒரு மாவட்ட நீதிபதி நியமிக்கப்படுவார் என்றும், பணிநியமனம், இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு போன்றவைகளும் இதே வகையில் இருக்கும் என்றும் அரசியலமைப்பு கூறுகிறது. மாநில நீதிப் பணியின் பிற எந்தப் பதவியின் பணிநியமனம் தொடர்பாக, மாநில பொதுப்பணி ஆணையம் மற்றும் உயர்நீதிமன்றத்துடன் ஆலோசித்து உருவாக்கிய விதிகளின்படி ஆளுநரால் நியமனம் செய்யப்படும் என்று அரசியலமைப்பு கூறுகிறது. விதி 235க்கிணங்க, துணை நீதிப்பணி உறுப்பினர்கள் மீதான நிர்வாகக் கட்டுப்பாடு உயர்நீதிமன்றத்துடன் உள்ளது.

## குடும்ப நீதிமன்றங்கள்

முறையான நீதிமன்றங்களின் படிநிலைகளுடன், இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் குடும்ப நீதிமன்றங்களும் அமைக்கப்படுகின்றன. 1984ஆம் ஆண்டின் குடும்ப நீதிமன்றங்கள் சட்டத்திற்கிணங்க, அதிகச் செலவினம் இல்லாமல் வழக்குகளைத் தீர்ப்பது மற்றும் முறையான நீதிமன்றங்களில் அதிகச் செலவு ஏற்படுவது போன்றவற்றைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, திருமணங்கள் மற்றும் குடும்ப விவகாரங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு இவ்வகையான நீதிமன்றங்கள் அதிகாரங்களையும், அதிகார வரம்பையும் பெற்றுள்ளன. குடும்பம், விவாகரத்து, வரதட்சணை போன்றவற்றின் பிரச்சினைகள் தொடர்பான விவகாரங்களும் இவ்வித நீதிமன்றங்களால் கவனிக்கப்படுகின்றன. இவ்வித நீதிமன்றங்கள் சிவில் வழிமுறைச் சட்டத்தைப் பின்பற்றுகின்றன.

## 8.6 செயலகம்

இந்தியாவில் ஒவ்வொரு மாநிலமும் அதன் சொந்த செயலகத்தைப் பெற்றுள்ளது. அது மாநில நிர்வாகத்தின் நரம்பு மண்டலமாக இருக்கிறது. அது அரசாங்கத்தின் பல்வேறு துறைகளைப் பெற்றுள்ளது. ஒரு துறையின் அரசியல் தலைவராக அமைச்சரும், அத்துறையின் நிர்வாகத் தலைவராகச் செயலரும் உள்ளனர். ஒரு செயலர் ஒன்று அல்லது இரண்டு துறைகளுக்குத் தலைவராக இருக்கின்ற வேளையில், தலைமைச் செயலர் ஒட்டுமொத்த செயலகத்தின் தலைவராக இருக்கிறார். செயலர் என்பவர் வழக்கமாக ஒரு மூத்த அகில இந்தியப்பணி அலுவலராகவும் பொது நிர்வாகியாகவும் உள்ளார். இந்த விதிக்கு விதிவிலக்காக பொதுப்பணித் துறை ஒரு சிறப்பு நிர்வாகியான தலைமைப் பொறியாளரால் தலைமை வகிக்கிப்படுகிறது. தமிழ்நாட்டில் செயலகம் தலைமைச் செயலகம் என்று அழைக்கப்படுகிறது. அது சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ளது.

## துறைகள்

பொதுவாகவே, செயலகத்தில் துறைகளின் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. அது 15 துறைகளிலிருந்து 35 துறைகள் வரை உள்ளது. தமிழ்நாட்டில் தலைமைச் செயலகத்தில் உள்ளடங்கியுள்ள துறைகள் பின்வருகின்றன.

1. பொதுநிர்வாகம்

2. உள்துறை

3. நிதி
4. பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தங்கள்
5. வருவாய்
6. சிறை
7. வனம்
8. விவசாயம்
9. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு
10. பஞ்சாயத்துராஜ்ஜியம்
11. பொதுப் பணிகள்
12. கல்வி
13. திட்டமிடல்
14. நீர்ப்பாசனம் மற்றும் மின்சாரம்
15. சட்டம்
16. சமூக நலம்
17. வீட்டு வசதி
18. சிவில்விநியோகம்
19. போக்குவரத்து
20. உள்ளாட்சி அரசாங்கம்
21. வரிவிதிப்பு
22. தொழில்கள்
23. விளம்பரம் மற்றும் தகவல்
24. கூட்டுறவு
25. சுகாதாரம்

**பணியாளர்களின் படிநிலை**

தமிழ்நாட்டின் தலைமைச் செயலகம் நிலையான பதவிக்காலத்திற்கு நியமிக்கப்படுகின்ற அலுவலர்களைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் அரசாங்க ஊழியர்களின் ஓய்வு வயது 58ஆகும். அகில இந்தியப் பணியாளர்களையும், தமிழ்நாடு பொதுப்பணி ஆணையத்தால் பணிநியமனம் செய்யப்படுகின்ற அலுவலர்களையும் செயலகம் பெற்றுள்ளது. ஒரு துறையில் உள்ள செயலக அலுவலர்களின் படிநிலை பின்வருமாறு உள்ளது.

செயலர்
↑
கூடுதல் செயலர்
↑
இணைச் செயலர்
↑
துணைச் செயலர்
↑
உதவிச் செயலர்
↑
சார்புச் செயலர்
↑
பிரிவு அலுவலர்
↑
உதவிப் பிரிவு அலுவலர்
↑
உதவியாளர்கள்
↑
சுருக்கெழுத்தர் மற்றும் தட்டச்சர்கள்
↑
அலுவலக உதவியாளர்கள்

## செயலகத்தின் பணிகள்

செயலகம் ஒரு ஆலோசனைச் செயலியாக இருந்துகொண்டு பொதுக் கொள்கைகளின் அமுலாக்கத்தில் செயல்துறைகளுக்கு ஆலோசனை வழங்கக் கடமைப்பட்டுள்ளது. அதன் அடிப்படைப் பணியாக இருப்பது அமைச்சர்கள் தங்களது கடமைகளை நிறைவேற்றுவதற்கு உதவிபுரிவதாகும். அது பின்வருகின்ற பணிகளைச் செய்கிறது.

1. மாநில அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் செயலகம் உருவாக்குகிறது.
2. மாநில அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் அது ஒருங்கிணைக்கிறது.
3. மாநில வரவுசெலவுத் திட்டத்தை அது தயாரிக்கிறது. மற்றும் பொதுச் செலவினத்தின் மீது கட்டுப்பாடு விதிக்கிறது.
4. சட்டங்கள் மற்றும் விதிகளை அது தயாரிக்கிறது.
5. கள முகமைகளால் அமுலாக்கம் செய்யப்படுகின்ற கொள்கைகளையும் திட்டங்களையும் அது மேற்பார்வையிடுகிறது.
6. பொதுக் கொள்கைகளின் அமுலாக்க முடிவுகளை அது ஆய்கிறது.
7. மற்ற மாநில அரசாங்கங்களுடன் அது தொடர்புகளை நிலைநிறுத்துகிறது.
8. அமைப்பு மற்றும் முறைகளின் மூலமாக அமைப்புமுறை முன்னேற்றத்தை வளர்க்க அது ஆரம்ப நடவடிக்கைகளை எடுக்கிறது.

9. சட்டசபை உறுப்பினர்கள் கேட்கக்கூடிய கேள்விகளுக்கு பதிலளிப்பது போன்ற சட்டத்துறைக்கு அமைச்சர்கள் செய்யும் பொறுப்புகளுக்கு அது உதவிபுரிகிறது.

10. துறைகளின் தலைவர்களை அது நியமிக்கிறது மற்றும் சம்பளம் போன்ற அதுதொடர்பான பணிகளைக் கவனிக்கிறது.

11. பணிவிதிகள் மற்றும் அவைகளின் திருத்தங்களுக்கு அது ஒப்புதல் அளிக்கிறது.

12. மாநிலத்தின் நிதிநிலையை மேம்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை அது ஆராய்கிறது.

13. மாநில அரசாங்கத்தின் ஒரு சிந்தனைக் களஞ்சியமாக அது பணிபுரிகிறது.

14. செயலகத்தின் முறையான செயல்பாட்டில் தலைமைச் செயலருக்கு அது உதவுகிறது. மற்றும்

15. மக்களிடமிருந்து புகார்கள், விண்ணப்பங்கள் மற்றும் முறையீடுகளைப் பெற்று அவைகளை அது தீர்த்துவைக்கிறது.

## தலைமைச் செயலர்

தலைமைச் செயலர் மாநிலச் செயலகத்தின் செயல்துறைத் தலைவராக உள்ளார். மாநில நிர்வாகத்தின் நிர்வாகத் தலைவராக அவர் உள்ளார் மற்றும் மாநில நிர்வாகப் படிநிலையின் உச்சத்தில் நிற்கிறார். உண்மையில், அவர் அனைத்து செயலர்களின் தலைவராக இருந்து அனைத்துத் துறைகளையும் கட்டுப்படுத்துகிறார். அவர் மாநிலத்தில் மிகவும் மூத்த சிவில் பணியாளராக இருக்கிறார். மாநில அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட செயல் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களையும் பணிகளையும் அவர் பெற்றுள்ளார். மேலும், மரபுகளிலிருந்தும் சில அதிகாரங்களை அவர் பெறுகிறார். அவர் பின்வருகின்ற பிரதான பணிகளையும், மற்ற பணிகளையும் செய்கிறார்.

## பிரதான பணிகள்

1. முதலமைச்சருக்கு ஒரு ஆலோசகராக, மாநில அமைச்சர்களால் அனுப்பப்படும் முன்வரைவுகளின் நிர்வாக உள்ளடக்கங்களை தலைமைச் செயலர் விளக்குகிறார்.

2. அமைச்சர் குழுவிற்கு செயலராக, அமைச்சர்குழு கூட்டங்களுக்கான நிகழ்ச்சிநிரலை அவர் தயாரிக்கிறார். மற்றும் அதன் செயல்பாடுகளின் பதிவுகளைப் பாதுகாக்கிறார்.

3. சிவில் பணியின் தலைவராக, மூத்த மாநில சிவில் பணியாளர்களின் நியமனம், இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு தொடர்பானவற்றை அவர் கவனிக்கிறார்.

4. தலைமை ஒருங்கிணைப்பாளராக, துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணப்பை நோக்கி அவர் பணிபுரிகிறார். துறைகளுக்கிடையேயான சிக்கல்களைப் போக்குவதற்கு அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக அவர் இருக்கிறார்.

5. சில குறிப்பிட்ட துறைகளின் தலைவராக, அவைகளை மேற்பார்வையிடுகிறார் மற்றும் கட்டுப்படுத்துகிறார். மற்றும்

6. சிக்கல் தீர்க்கும் நிர்வாகியாக, வெள்ளம், வறட்சி, இனக் கலவரங்கள் போன்ற சிக்கலான நேரங்களில் மிகவும் முக்கிய பங்கில் அவர் செயல்படுகிறார்.

**மற்ற பணிகள்**

1. துறைகளுக்குள் அடங்காத அனைத்து விவகாரங்களையும் தலைமைச் செயலர் கவனிக்கிறார்.

2. ஒட்டுமொத்த செயலகத்தின் மீதான பொது மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டை அவர் செயல்படுத்துகிறார்.

3. தொடர்புடைய மாநில உறுப்பினராக உள்ள மண்டலக் கவுன்சிலின் செயலராக சுழற்சி முறையில் அவர் செயல்படுகிறார்.

4. செயலகக் கட்டிடம், அமைச்சர்களுடன் தொடர்புடைய பணியாளர்கள், செயலக நூலகம் மற்றும் செயலகத்துறைகளின் பணியாளர்கள் மீதான நிர்வாகக் கட்டுப்பாட்டை அவர் பெற்றுள்ளார்.

5. மாநில அரசாங்கம், மத்திய அரசாங்கம் மற்றும் பிற மாநில அரசாங்கங்கள் போன்றவைகளுக்கிடையே தகவலின் பிரதான வழியாக அவர் இருக்கிறார்,

6. சட்டம் மற்றும் ஒழுங்கு, திட்டமிடல் போன்ற நிர்வாகத்தில் ஒரு முக்கிய பங்கில் அவர் செயல்படுகிறார். மற்றும்

7. மாநில அரசாங்கத்தின் ஒரு பேச்சாளராக அவர் செயல்படுகிறார்.

8. தேசிய வளர்ச்சிக் கவுன்சிலின் கூட்டங்களில் அவர் கலந்து கொள்கிறார்.

9. மாநில அரசாங்கத்தின் தலைமை பொதுமக்கள் தொடர்பு அலுவலராக அவர் செயல்படுகிறார்.

10. அரசியலமைப்பு விதி **356–**ன்படி மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சி அமுல்படுத்தப்படும் போது, மத்திய ஆலோசகர்கள் நியமிக்கப்படாமல் இருக்கும்போது ஆளுநருக்கு முதன்மை ஆலோசகராக அவர் செயல்படுகிறார்.

இவ்வாறாக, மொத்தத்தில் தமிழ்நாட்டின் தலைமைச் செயலகம் மாநில நிர்வாகத்தின் நரம்பு மண்டலமாக இருக்கிறது. இதேபோல, தமிழ்நாட்டில் அனைத்துச் செயலர்களின் தலைவராக உள்ள தலைமைச் செயலர் குறிப்பாகச் செயலக நிர்வாகத்தின் நரம்பு முறைமையாக இருக்கிறார்.

## 8.7 கீழ்நிலையிலுள்ள கிராம அலுவலர் (VAO) வரையிலான மாவட்ட நிர்வாக அமைப்பும் அவைகளின் பணிகளும்

இந்தியாவில் நிர்வாகத்தின் அடிப்படை அலகாக மாவட்டம் உள்ளது. ‘‘தனி நிர்வாக நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பே மாவட்டம்’’ என்று ஆக்ஸ்போர்டு ஆங்கிலச் சொல்லகராதி இலக்கணப்படுத்துகிறது. ஒரு மாவட்டம் பொதுவாக பெரிய நகரத்தின் மீது பெயரிடப்படுகிறது. ஆதலால், படிநிலை நிர்வாகத்தின் ஒரு நிர்வாக அலகாக மாவட்டம் உள்ளது. அந்தப் படிநிலை நிர்வாகமானது கிராமங்கள், சிறு நகரங்கள் மற்றும் பெருநகரங்கள் போன்ற பூகோளப் பரப்பளவு களங்களின் எண்ணிக்கையைப் பெற்றுள்ளது. எனவே, ஒரு மாவட்டமாக சட்டப்படியாக அறிமுகமான ஒரு களமாக இருப்பதால், ‘மாவட்ட நிர்வாகம்’ என்ற வார்த்தைஅரசாங்கப் பணிகளின் மேலாண்மை எனப் பொருள்படுகிறது. இந்தியாவில் ஊரக மாவட்டம், நகர மாவட்டம், தொழில் மாவட்டம், பின்னிலை மாவட்டம் மற்றும் மலை மாவட்டம் என்று ஐந்து வகைகள் உள்ளன.

## மாவட்ட நிர்வாகத்தின் தன்மைகள்

பொதுவாகவே, மாவட்ட நிர்வாகம் பின்வருகின்ற தன்மைகளைப் பெற்றுள்ளது.

1. மாவட்ட அளவில்தான் மாநில அரசாங்கம் மக்களுடன் தொடர்புகொள்ள வருகிறது.
2. ஆலோசனைச் செயலி அல்லது செயலகப் பணிகளுக்கு பதிலாக மாவட்ட நிர்வாகம் ஒரு களப்பணியாக உள்ளது.
3. மாவட்ட அளவிலான பிரச்சினைகள் மாவட்டம் தொடர்பான ஸ்தலசுய தன்மையானவைகளாக உள்ளன.
4. மாவட்ட அளவில் கொள்கை உருவாக்கம் முடிவடைந்து அமுலாக்கம் தொடங்குகிறது.
5. மாநில அரசாங்கத்தின் இறுதி முகவராகவும், மாவட்டத்தில் எந்தச் செயல்பாடு அல்லது நிகழ்வுக்கான 'அவ்விட மனிதன்' என்றும் மாவட்ட அலுவலர் இருக்கிறார். மற்றும்
6. மாவட்டத்தில் அலகுகளின் பணிச்செயல்பாடு ஒட்டுமொத்தமாக உள்ளது. அதிக எண்ணிக்கையுள்ள துறைகள் மாவட்ட அளவில் தங்களது கள முகமைகளைப் பெற்றுள்ளன.

## மாவட்ட அளவிலான பணியாளர்கள்

மாவட்ட நிர்வாகத்தின் தலைவராக மாவட்ட ஆட்சியாளர் உள்ளார். 1772ல் வருவாய் வசூலித்தல் மற்றும் நீதி வழங்குதல் ஆகிய இரட்டை நோக்கத்திற்காக, முதல்முதலில் வாரன்ஹேஸ்டிங்ஸ் என்பவரால் மாவட்ட ஆட்சியாளர் பதவி உருவாக்கப்பட்டது. சரியாகக் கூறினால், ஆரம்பத்தில் நிலவருவாய் வசூலிப்பதற்காக மட்டுமே மாவட்ட ஆட்சியாளர் இருந்தார். ஆனால், தற்போது மாவட்ட ஆட்சியாளருக்கு மிகுதியான பணிகள் உள்ளன. மாவட்ட ஆட்சியாளரின் பொதுவான பங்குகளும் பணிகளும் பின்வருமாறு.

1. மாவட்ட ஆட்சியாளராக, நில வருவாயை வசூலிப்பதற்கு அவர் கடமைப்பட்டவர்.
2. மாவட்ட நீதிபதியாக, மாவட்டத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிக்க அவர் கடமைப்பட்டுள்ளார்.
3. மாவட்ட அலுவலராக, மாவட்டத்திற்குள் சம்பளம், இடமாற்றம் போன்ற பணியாளர் விசயங்களை கவனிக்க அவர் கடமைப்பட்டவர்.
4. மேம்பாட்டு அலுவலராக, ஊரக மேம்பாட்டுத் திட்டங்களின் அமுலாக்கத்திற்கு பொறுப்புடையவராக அவர் உள்ளார்.
5. தேர்தல் அலுவலராக, மாவட்டத்தில் பாராளுமன்றம், மாநிலச் சட்டசபை மற்றும் உள்ளாட்சி அரசாங்கம் ஆகியவைகளுக்கு நடத்தப்படும் தேர்தல்களுக்கு அவர் தலைவராக இருக்கிறார். எனவே, மாவட்டத்தில் தேர்தல் பணிகளை அவர் ஒருங்கிணைக்கிறார்.
6. மாவட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பு அலுவலராக பத்து வருடங்களுக்கு ஒருமுறை மக்கள்தொகை கணக்கெடுப்பு செயல்பாடுகளை அவர் நடத்துகிறார்.
7. தலைமைப் பாதுகாப்பு அலுவலராக, மாவட்டத்தில் மிக முக்கியமானவர்களின் சுற்றுலா மற்றும் தங்குதலில் பாதுகாக்க அவர் கடமைப்பட்டவர்.

8. ஒருங்கிணைப்பாளராக, மாவட்ட அளவிலான மற்ற பணியாளர்களையும் துறைகளையும் அவர் மேற்பார்வையிடுகிறார்.

9. மாவட்ட திட்ட அமுலாக்க குழுவிற்கு அவர் தலைமை வகிக்கிறார்.

10. மாவட்டத்தில் பொது விழாக்களின் போது மாநில அரசாங்கத்தின் அலுவலகப் பிரதிநிதியாக அவர் செயல்படுகிறார்.

11. மாநில அரசாங்கத்தின் பொதுமக்கள் தொடர்பு அலுவலராக அவர் செயல்படுகிறார்.

12. இயற்கைச் சீற்றத்தின் போதும் மற்ற அவசர நிலைகளின் போதும் சிக்கல் தீர்க்கும் தலைமை நிர்வாகியாக அவர் செயல்படுகிறார்.

13. உள்ளாட்சி அரசாங்க நிறுவனங்களை அவர் மேற்பார்வையிடுகிறார் மற்றும் கட்டுப்படுத்துகிறார்.

14. சிவில், பாதுகாப்புத் தொடர்பான பணிகளை அவர் மேற்கொள்கிறார். மற்றும்

15. உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் சிவில் விநியோகங்களுக்கு அவர் பொறுப்புடையவராக இருக்கிறார்.

எனவே, மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியாளர் பல்வேறு பணிபுரியும் பணியாளராக உள்ளார். உண்மையில், மக்களுக்காக அதிக எண்ணிக்கையுள்ள திட்டங்களை அமுல்படுத்தக் கடமைப்பட்டுள்ள அரசாங்கத்தின் பொதுநல அரசுக் கொள்கைக்கேற்ப, ஒரு மாவட்ட ஆட்சியாளருக்கு அதிகமான பணிப்பளுச் செயல்பாடுகள் உள்ளன. நடைமுறையில், மாவட்ட ஆட்சித் தலைவர் பதவி மிக அதிக மதிப்புள்ளதாக உள்ளது. மாவட்ட நிர்வாகத்தின் நாயகனாக மாவட்ட ஆட்சித்தலைவர் உள்ளார். மாவட்ட அளவிலான மற்ற முக்கிய பணியாளர்கள் பின்வருகின்றனர்.

1. காவல் கண்காணிப்பாளர்
2. மாவட்ட மருத்துவ அலுவலர்
3. மாவட்ட சுகாதார அலுவலர்
4. மாவட்ட வன அலுவலர்.
5. கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர்
6. மாவட்ட விவசாய அலுவலர்
7. மாவட்ட தொழில்கள் அலுவலர்
8. மாவட்ட நீதிபதி
9. பின்னிலை வகுப்பு நல அலுவலர்
10. சிறைகள் கண்காணிப்பாளர்
11. மாவட்ட தொழிலாளர் அலுவலர்

## கோட்ட அளவு

தமிழ்நாட்டில், குறிப்பாக வருவாய் நிர்வாகத்திற்கும் சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிக்கவும் கோட்ட நிர்வாகத் தலைவராக வருவாய் கோட்ட அலுவலர் உள்ளார். ஆனால், கோட்ட அளவிலான மேம்பாட்டு நிர்வாகம் உதவி இயக்குனர் (மேம்பாடு) என்பவரால் தலைமை

வகிக்கப்படுகிறது. (முன்னர் கோட்ட மேம்பாட்டு அலுவலர் – DDO). உதவி இயக்குனர் (மேம்பாடு) என்ற அலுவலரின் கீழ் விவசாயம், கூட்டுறவு, தொழில், கல்வி, விலங்கு பராமரிப்பு மற்றும் சுகாதாரம் போன்றவைகளுக்கான விரிவாக்க அலுவலர்கள் பணியாளர்களாக உள்ளனர்.

### தாலுகா அளவு

தமிழ்நாட்டில் தாலுகா அளவிலான நிர்வாகத்தின் தலைவராகத் தாசில்தார் என்ற வட்டாட்சியர் உள்ளார். இங்கே, தாலுகா என்பது வட்டம் என்று பொருள்படும். வட்ட அளவில் வட்டாட்சியருக்கு உதவி புரிவதற்குத் துணை வட்டாசியர்கள் உள்ளனர். மேம்பாட்டு நிர்வாகத்திற்காக ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. ஊராட்சி ஒன்றிய ஆணையர் அல்லது பிளாக் மேம்பாட்டு அலுவலர் (BDO) அதன் தலைவராக இருக்கிறார் மற்றும் அவருக்குக்கீழ் விவசாயம், சுகாதாரம், கூட்டுறவு, விலங்கு பராமரிப்பு, கல்வி மற்றும் தொழில் போன்றவைகளுக்கான விரிவாக்க அலுவலர்களும் உள்ளனர்.

### பிர்க்கா அளவு

பிர்க்கா அளவிலான வருவாய் நிர்வாகத்தின் தலைவராக வருவாய் ஆய்வாளர் உள்ளார். பிர்க்கா என்பது துணை வட்டம் என்று பொருள்படும். தமிழ்நாட்டில் ஒவ்வொரு தாலுகாவும் பல பிர்க்காக்களாகப் பிரிக்கப்படுகிறது. ஆனால்,இதன் பெயர் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது.

### கிராம அளவு

கிராம அளவிலான நிர்வாகத்தின் தலைவராக கிராம நிர்வாக அலுவலர் இருக்கிறார். களத்தில் குறிப்பாக கிராமத்தில் மிக முக்கியமான பணியாளராக அவர் உள்ளார். அவருக்குக்கீழ் கிராம மட்டத்திலான பணியாளர்கள் உள்ளனர். வருவாய், காவல் மற்றும் பொது நிர்வாகக் கடமைகளை அவர் செய்கிறார். கிராம அளவில் அரசாங்கத்தின் பிரதிநிதியாகவும் அவர் செயல்படுகிறார்.

## பயிற்சி

### பகுதி அ

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இந்திய அரசியலமைப்பின் ____________ பகுதியில் மாநில அரசாங்கம் விளக்கப்படுகிறது.
2. ஆளுநர் மாநில செயல்துறையின்____________ தலைவராக உள்ளார்.
3. மாநிலத்தில் அமைச்சரவை____________ க்கு பொறுப்புடையதாக உள்ளது.
4. 1963ல் கே. காமராஜ்____________ க்கிணங்க தனது முதலமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார்.
5. மாநில சட்டத்துறையின் மேலவையாக____________ உள்ளது.
6. உயர்நீதிமன்ற நீதிபதிகள்____________ ஆல் நியமிக்கப்படுகின்றனர்.

7. சட்டக் கவுன்சில் உறுப்பினர்களின் பதவிக்காலம்____________ ஆக உள்ளது.

8. செயலகத்தில் ஒரு துறையின் நிர்வாகத் தலைவர்____________ ஆவார்.

9. நீதிப்பேராணைகளின் எண்ணிக்கை ____________ ஆகும்.

10. மாவட்ட நிர்வாகம்____________ நிர்வாகமாக உள்ளது.

**II. பின்வருபவற்றை பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 11. விதி 370 | – | ஆளுநர் |
| 12. விதி 153 | – | முதலமைச்சர் |
| 13. விதி 163 | – | மேலவை |
| 14. விதி 170 | – | ஜம்மு மற்றும் காஷ்மீர் |
| 15. விதி 171 | – | தேசிய அவசரநிலை |
| 16. விதி 352 | – | சட்டசபை |

**பகுதி ஆ**

17. ஆளுநரின் அரசியலமைப்பு நிலையை எழுதுக.

18. அமைச்சரவையின் பணிகளை விளக்குக.

19. சட்டசபை தேர்தலில் போட்டியிடுவோருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் யாவை ?

20. கிராம நிர்வாக அலுவலர் பற்றி குறிப்பெழுதுக.

**பகுதி இ**

21. தமிழ்நாட்டின் சட்டத்துறையைப் பற்றி எழுதுக.

22. உயர்நீதிமன்றத்தின் அதிகார வரம்புகள் யாவை ?

23. தலைமைச் செயலரின் பணிகள் என்ன ?

**பகுதி ஈ**

24. ஆளுநரின் அதிகாரங்களையும் பணிகளையும் விவாதிக்க.

25. முதலமைச்சரின் பங்கினையும் பணிகளையும் விளக்குக.

26. மாவட்ட ஆட்சித்தலைவர் பங்கினையும் பணிகளையும் விவரிக்க.

# அத்தியாயம் 9
# தமிழ்நாட்டில் உள்ளாட்சி அரசாங்கம்
# (Local Self Government)

## சிறப்பு அம்சங்கள்

உள்ளாட்சி அரசாங்கத்தின் தந்தை எனப் போற்றப்படும் ரிப்பன் பிரபுவால் அறிமுகம் செய்யப்பட்ட கிராமப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அரசாங்கங்கள் பின்வரும் சிறப்பான அம்சங்களைக் கொண்டுள்ளன.

1. உள்ளாட்சி அரசாங்கம் நன்றாக வரையறை செய்யப்பட்டுள்ள ஓர் அதிகார எல்லையைப் பெற்றுள்ளது. அது கிராமம் அல்லது மாவட்டம் போன்ற உறுதியானதோர் நிலைவரையைப் பெற்றுள்ளது. அதனுடைய குறிக்கோள், அந்த நிலப்பகுதிக்குள் அல்லது எல்லைக்குள் நிலவும் தனிப்பட்ட தன்மை வாய்ந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதாகும்.
2. உள்ளாட்சி அரசாங்கம், அவ்வட்டாரத்திற்குள் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளால் ஆட்சி செய்யப்படுகின்றது. அவர்கள் வட்டாரத்து வாக்காளர்களுக்குப் பொறுப்பானவர்கள். மைய மாநில அரசாங்கங்களின் தேவையற்ற தலையீடின்றி வட்டாரத்து அலுவல்களைத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் நிர்வாகம் செய்கின்றனர்.
3. வட்டார மக்களின் தேவைகளை மேம்படச் செய்வது உள்ளாட்சி அரசாங்கத்தின் தலையாயக் கடமையாகும்.
4. உள்ளாட்சி அரசாங்கம் தனது நிதி நிலை அறிக்கையினை தயாரிப்பதிலும், நிதி ஆதாரங்களைத் திரட்டுவதிலும் சுதந்திரம் பெற்றுள்ளது.

இந்திய அரசியலமைப்பு 1950 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 26ம் நாளன்று நடைமுறைக்கு வந்தது. தொன்மை சுயாட்சி முறையைப் புதுப்பிப்பதற்கென, நமது அரசியலமைப்பு 40ம் அங்கம் ‘‘அரசு கிராம பஞ்சாயத்துகளை அமைப்பதற்கும், தன்னாட்சி அமைப்பு கூறுகளாக அவை இயங்குவதற்காக தேவைப்படும் அதிகாரங்களையும் அதிகார அடைவடையும் அவற்றுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும் என விதித்துள்ளது. இதற்கிணங்க 1956–ல் பல்வந்தராய் மேத்தா குழு அமைக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை 1957ல் சமர்பித்தது.

பல்வந்தராய் மேத்தாவின் அறிக்கை பஞ்சாயத்து இராச்சிய முறையின் மகா சாசனம் என்று புகழாரம் சூட்டப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கப்பட்டுள்ளது. மக்களாட்சியை உறுதி செய்யும் பொருட்டு மூன்றடுக்கு முறையான கிராமப்புற உள்ளாட்சி அரசாங்கத்தை பல்வந்தராய் மேத்தா குழு பரிந்துரை செய்தது. இம்மூன்று அடுக்கு முறையில் கிராம மட்டத்தில் பஞ்சாயத்தும் வட்டார அளவில் பஞ்சாயத்து சமிதியும் அல்லது பஞ்சாயத்து ஒன்றியமும் மாவட்ட நிலையில் ஜில்லா பரிஷத்தும் (மாவட்ட பஞ்சாயத்து) இடம் பெற்றுள்ளன.

பஞ்சாயத்து இராச்சியம் 1959–ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2–ம் நாளன்று பண்டிதர் ஜவஹர்லால் நேருவினால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து இராச்சிய நிறுவனங்களை அறிமுகம் செய்த முதல் மாநிலங்கள் ஆந்திர பிரதேசமும், ராஜஸ்தானும் ஆகும். மேகாலயா மிஜோரம் மற்றும் நாகலாந்து மாநிலங்களும் ஒன்றிய நிலப்பரப்புகளிலும் பஞ்சாயத்து இராச்சிய நிறுவனங்கள் நிறுவப்பட்டன. இவ்வாறு பஞ்சாயத்து இராச்சியம் ஆரவாரமற்ற துவக்கத்தை மேற்கொண்டது.

1977–ல் அசோக் மேத்தா தலைமையில் பஞ்சாயத்து இராச்சிய நிறுவனத்தின் மீதான ஒரு குழு அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்டது. பஞ்சாயத்து இராச்சிய நிறுவனங்களின் செயல்பாட்டை விசாரிப்பதற்கும் அவைகளை வலிமையாக்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆலோசனை வழங்கவும் அது நிறுவப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை 1978–ல் சமர்பித்தது.

இக்குழுக்களின் அறிக்கைகள், பஞ்சாயத்து இராச்சிய நிறுவனங்களின் மூலமாக ஊரக வளர்ச்சிக்கு முக்கியத்துவத்தை வழங்கின. அவை வளர்ச்சி திட்டங்கள் செயல்படுவதை வலியுறுத்தின. தன்னாட்சி நிறுவனங்களாகப் பஞ்சாயத்துக்களை உருவாக்க அவை முயலவில்லை. மேலும், நகர்ப்புற ஊராட்சி அரசாங்கங்களின் எதிர்கால அக்கறைகளைப் பற்றி பல்வந்தராய் மற்றும் அசோக் மேத்தா குழுக்கள் கவலை கொண்டிருக்கவில்லை. இச்செய்திகளைக் கருத்தில் கொண்டும், கிராமப்புற மற்றும் நகர்ப்புற மட்டங்களில் உண்மையான ''மக்கள் சக்தியை'' நிறுவும் பொறுட்டும், அரசியலமைப்பு 64 மற்றும் 65–வது சட்டதிருத்த முன்வரைவுகள் 1989–ல் மக்கள் அவையில் அறிமுகம் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டன. இம்மசோதாக்கள் விரிவானவையாகும். தேவையான அதிகாரங்களுடன், ஒரே மாதிரியான அமைப்புகளுடன் அடிமட்ட நிறுவனங்களை சீரமைக்க அவை வழிவகுத்தன. மக்களவையால் நிறைவேற்றப்பட்ட போதிலும், போதிய பெரும்பான்மை இல்லதாததால் மாநிலங்களின் அவையில் இம்மசோதாக்கள் தோற்கடிக்கப்பட்டன. இத்தகைய சூழ்நிலையில், மாநில அரசாங்கங்களின் நெருக்கமான கட்டுப்பாட்டின் கீழ் இருந்த கிரமப்புற மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அரசாங்கங்கள், வெற்றிகரமாகச் செயல்பட முடியவில்லை. அவை நிதி வகையிலான இன்னல்களைப் பெற்றிருந்தன. பல ஆண்டுகளாகத் தொடர்ந்து அவைகளுக்குத் தேர்தல்கள் கூட நடத்தப்படவில்லை. இக்குறைகளைச் சரிசெய்யும் பொருட்டு, அரசியலமைப்பு (73–வது மற்றும் 74 வது திருத்தங்கள்) சட்டங்கள் நாடாளுமன்றத்தால் 1992–ல் நிறைவேற்றப்பட்டன.

## அரசியலமைப்புச் (73வது மற்றும் 74 வது திருத்தங்கள்) சட்டங்கள், 1992

அரசியலமைப்பின் 73–வது மற்றும் 74 வது திருத்தங்கள் 1992–ம் ஆண்டு டிசம்பர் திங்களில் இயற்றப்பட்டன. 1993ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 24–ம் நாள் முதல் இத்திருத்தங்கள் நடைமுறைக்கு வந்தன. அவை பஞ்சாயத்துக்களையும், நகராட்சி அமைப்புகளையும் அரசியலமைப்பு முறைமைகளாக்கி உள்ளன.

சுயாட்சி அரசாங்க நிறுவனங்களாகச் செயல்படும் ஆணையுரிமைகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கும் பொருட்டும், 73–வது மற்றும் 74–வது திருத்தங்கள் மாநில சட்டமன்றங்களுக்கு அதிகாரத்தை வழங்கியுள்ளன. பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதி ஆகியவற்றுக்கான திட்டங்களை தயாரித்தல், அரசியலமைப்பின் 11 மற்றும் 12–வது இணைப்பு பட்டியல்களில் கண்டுள்ள அம்சங்களின் அடிப்படையில் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமுதாய நீதி பற்றிய திட்டங்களை நிறைவேற்றுதல் ஆகிய கடும்பணிகள் அவைகளிடம் ஒப்புடைவு செய்யப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விணைப்புப் பட்டியல்கள் ஒரு புறம் மாநிலச் சட்டமன்றங்களுக்கும் மறுபுறம் பஞ்சாயத்துக்கள் மற்றும் நகராட்சி அமைப்புகளுக்கும் இடையே அதிகாரப் பகிர்வினை செய்துள்ளன. 73–வது திருத்ததின் கீழ் 11–வது இணைப்பு பட்டியல் 29 வகை அதிகாரங்களைக் கொண்டுள்ளது. அவற்றின் மீது முழுமையான அதிகாரத்தைப் பஞ்சாயத்துக்கள் பெற்றுள்ளன. 12–வது இணைப்பு பட்டியல் 18 வகை அதிகாரங்களை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கென கொண்டுள்ளது. இவை அவற்றின் சம்பந்தப்பட்ட பணிகளையும் சுட்டி காட்டுகின்றன.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கிராம சபைக்கும் மற்றும் கிராமம் பஞ்சாயத்து ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட நிலைகளில் பஞ்சாயத்துகள் அமையப் பெறவும் 73–வது திருத்தம் வகை செய்கின்றது. நகர்பாலிக் சட்டம் என்றும் அறியப்படும் 74வது திருத்தம் மூன்றுவகையான நகராட்சி அமைப்புகள் அமையப்பெறுவதற்கு வகைசெய்கின்றது. அவை, நகர பஞ்சாயத்துக்கள், நகராட்சி மன்றம் மற்றும் மாநகராட்சி மன்றங்கள் என்பவையாகும். ஒரு கிராமப்புற எல்லையிலிருந்து நகர்ப்புற எல்லைக்கு இடம்பெயர்வான பகுதிக்கு ஒரு நகர பஞ்சாயத்து அமைக்கப்படுகிறது. நகராட்சி மன்றங்கள் சிறிய நகர்ப்புறப் பகுதிகளுக்கும் பெரிய நகர்ப்புறப் பகுதிகளுக்கு மாநகராட்சி மன்றங்களும் நிறுவப்படுகின்றன.

73–வது மற்றும் 74–வது திருத்தங்களால் உருவாக்கப்பட்டுள்ள புதிய முறையின் முக்கியமான மற்றும் பொதுவான அம்சங்கள் பின்வருமாறு.




1. சீரான ஐந்தாண்டுப்பதவிக்காலத்துடன் அனைத்து கிராமபுற மற்றும் நகர்ப்புற அமைப்புகளுக்கு நேர்முகத் தேர்தல் நடத்துதல்.

2. தாழ்த்தப்பட்ட சாதியாளர், மலைவாழ் குடியினர் பின்தங்கிய வகுப்பினர் ஆகியோருக்கென இடஒதுக்கீடு செய்தல், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பெண்கள் ஆகியோருக்கான இடங்கள் ஒதுக்கீடு செய்தல்.

3. பெண்டிர்களுக்கு மூன்றில் இரண்டு பங்குக்கு குறைவில்லாத இடஒதுக்கீடு செய்தல்.

4. மேற்சொல்லப்பட்டபடி, தலைவர்களுக்குரிய பதவிகளுக்கு இணையான இடஒதுக்கீடு செய்தல்.

5. உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல்களை நடத்துவதற்கென ஒரு தேர்தல் ஆணையம் ஏற்படுத்துதல்.

6. இந்நிறுவனங்களின் நிதி வலிமையை உறுதி செய்யும் பொருட்டு ஒரு நிதி ஆணையம் அமைக்கப்படல், இந்த ஆணையம் ஐந்து ஆண்டுக்கு ஒருமுறை உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலவரத்தை ஆய்வு செய்தல் வேண்டும்.

7. உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கென ஏற்பாடு செய்தல்.

8. ஏதேனும் உள்ளாட்சி அமைப்பு கலைக்கப்படுமேயானால் ஆறுமாத காலத்திற்குள் கட்டாயமாகத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடு செய்தல்.

9. கட்சி வேட்பாளர்களாகவோ அல்லது சுயேச்சை நபர்களாகவோ உள்ளாட்சி தேர்தல்களில் போட்டியிடலாம்.

## 9.2 நகர்ப்புற உள்ளாட்சி அரசாங்கங்கள்

நகர்ப்புற அல்லது ஊரக மக்கட்தொகை மிக வேகமாக நம் நாட்டில் பெருகி வருகின்றது. அதன் பிரச்சினைகளும் சிக்கல் மிகுந்தவையாய் உள்ளன. அவைகளைத் நிறைவேற்றும் பொருட்டு, நகர்ப்புற அல்லது ஊரக உள்ளாட்சி அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. இவ்வமைப்புகள் நகராட்சி அமைப்புகள் என்றும் அறியப்படுகின்றன.

அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் பிறவற்றை இந்திய அரசியலமைப்பு உறுதி செய்துள்ளது. அவைகளுடைய பணிகள் 12 வது இணைப்புப்பட்டியலில் கூறப்பட்டுள்ளன. அரசியலமைப்பானது மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் நகரப் பஞ்சாயத்துக்கள் அரசியல் அமைப்பால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவை தவிர நகரியங்கள், இராணுவக் கூட வாரியங்கள், குறிக்கப்பட்ட பகுதிகளின் குழுக்கள் போன்ற வேறு சில நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் உள்ளன.

### 9.2.1 மாநகராட்சி

நகராட்சி அமைப்பில் மாநகராட்சி மிக உயர்ந்த வகையைச் சார்ந்ததாகும். மாநாகராட்சி அதிகப்படியான அதிகாரங்களைப் பெற்றுள்ளது. ஏனைய வட்டார அமைப்புகளுடன் ஒப்பிடும்போது, அது விரிவான பணிகளையும், அதிக நிதித்தன்னாட்சியையும் அனுபவிக்கின்றது. மாநிலச் சட்டமன்றத்தால் இயற்றப்படும் சிறப்பு நகராட்சிச் சட்டங்களின் கீழ் மாநகராட்சிகள் பெரிய நகரங்களில் நிறுவப்படுகின்றன. நாடாளுமன்றத்தின் சட்டத்தினால் யூனியன் பிரதேசங்களின் மாநகராட்சிகள் அமைக்கப்படுகின்றன.

சாதாரணமாக 10 லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட மக்கட்தொகையைக் கொண்டுள்ள பெரிய நகரங்கள் மாநகராட்சிகளாக அமைக்கப்படுகின்றன. அவைகளுடைய ஆண்டு வருமானம் பொதுவாக ஒரு கோடியாகும். உதாராணமாக சென்னை, மும்பை, கொல்கத்தா, டில்லி, ஹைதராபாத், பெங்களுர் மாநகராட்சிகள் இந்தியாவின் மிகப் பெரிய மாநகராட்சிகளாய் உள்ளன. அவை அதிக மக்கட்தொகையையும் சீரிய வருவாயையும் பெற்றுள்ளன. எனினும் இரண்டு இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகையைக் கொண்டுள்ள நகரங்களிலும் மாநகராட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளின் ஆண்டு வருமானம் ரூ50,000 மேற்படுவதில்லை. சந்தர்ப்பச் சூழலைப் பொறுத்து, மாநகராட்சியை நிறுவ அரசே முடிவெடுக்கும். காலம் மாறும்போது, அதன் முக்கியத்துவம் மாறலாம். சென்னையையும் சேர்த்து, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, திருப்பூர், திண்டுக்கல், ஈரோடு, தஞ்சாவூர், வேலூர், சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய 12 மாநகராட்சிகள் தமிழ்நாட்டில் உள்ளன.

மாநகராட்சிகள் அனைத்தும் சில பொதுப்படையான சிறப்பம்சங்களைப் பெற்றுள்ளன.

1. மாநிலச் சட்ட மன்றத்தினால் நிறைவேற்றப்படும் சட்டம் ஒன்றினால்தான் மாநகராட்சியொன்று நிறுவப்படுகின்றது.
2. மாநகராட்சி நிர்வாகப்பணியால் தனிப்பட்ட அவசியமானப் பணிகளை ஆதாரமாக கொண்டுள்ளது.
3. மாநில அரசாங்கம் நகராட்சிமன்றத்தை மேற்பார்வை செய்யவும், கட்டுப்படுத்தவும், கலைக்கவும் அதிகாரங்களைப் பெற்றுள்ளது.
4. பொதுவாக, ஒரு மாநகராட்சி அதிக மக்கட் தொகையைக் கொண்டுள்ள நகர்ப்புறப் பகுதிகளில் அமைக்கப்படுகின்றது.
5. ஒரு மாநகராட்சி குறிப்பிட்ட அதிகார வரம்பிற்குள் பணியாற்றுகின்றது.

## மாநகராட்சி பணிகள்

கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளைப் போன்று நகராட்சி அமைப்புகள் சுயாட்சி அரசாங்க நிறுவனங்களாகச் செயல்பட வேண்டி உள்ளன. பொருளாதார மேம்பாடு மற்றும் சமுதாய நீதி ஆகியவற்றுக்கான திட்டங்களைத் தயாரிக்கும் பொறுப்பினை அவை பெற்றுள்ளன. பன்னிரண்டாவது இணைப்புப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள 18 அம்சங்கள் குறித்து பணிகளை மேற்கொள்வதோடு, செயல் திட்டங்களையும் அவை நிறைவேற்ற வேண்டியுள்ளது. இதன்படி மாநிலச் சட்டமன்றத்தின் சட்டங்களால் பின்வரும் பணிகள் நகராட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

1. நகர திட்டமிடலுடன் ஊரகத் திட்டத்தையும் தீட்டுதல்.
2. கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் நிலத்தைப் பயன்படுத்துதல் அவற்றை ஒழுங்குமுறைப் படுத்துதல்.
3. பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்குத் திட்டமிடுதல்.
4. சாலைகள் மற்றும் பாலங்கள் ஆகியவற்றைப் போர்க்கால அடிப்படையில் பராமரித்தல்.
5. குடிநீர் விநியோகம் செய்தல்.
6. பொதுச்சுகாதாரம் மற்றும் துப்புரவு பணிகளை மேற்கொள்ளுதல்.
7. தீயணைப்புப் படை (பணிகள்)
8. ஊரகக்காடு மற்றும் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்தல்.
9. ஊனமுற்றோர் மற்றும் சிந்தை மந்தமுற்றோர் ஆகியோரை உள்ளடக்கிய, சமுதாயத்தின் நலிவுற்ற வகுப்புனரின் நலன்கள் பாதுகாத்தல்.
10. சேரி முன்னேற்றம் செய்தல்.
11. ஊரக வறுமை நீக்கம் செய்தல்.
12. கல்வி மற்றும் கலாச்சார அம்சங்களின் வளர்ச்சிக்கு பாடுபடுதல்.

13. பூங்காக்கள், தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்ற நகர்புற வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல்.

14. இடுகாடு மற்றும் சுடுகாடு, மைதானங்கள் பராமரித்தல்.

15. கால்நடைக் குட்டைகளை அமைத்தல் மற்றும் மிருக வதையைத் தடை செய்தல்.

16. பிறப்பு, இறப்பு ஆகியவற்றின் பதிவுடன் கூடிய மிக முக்கியமான புள்ளி விவரங்களைத் திரட்டல்.

17. பேருந்து நிறுத்துமிடங்கள், கழிவறை, சாலை விளக்கு போன்ற பொது வசதிகளைச் செய்து கொடுத்தல்.

18. இறைச்சித் தொட்டிகள், தோல் பதனிடல் ஆகியவற்றை ஒழுங்குமுறை படுத்துதல்.

மேற்கண்ட அம்சங்கள் சம்பந்தமாக, மாநகராட்சியையும் உட்கொண்ட நகராட்சி அமைப்புகள் அனைத்தும் பல பணிகளை ஆற்றுகின்றன. இவற்றோடு, தோப்பு, பண்ணை மற்றும் சாலையோர மரங்கள் ஆகியவற்றை கவனித்தல், உடைமையாளர் இல்லாத நாய்கள், சுற்றித் திரியும் பன்றிகள் மற்றும் தொந்தரவளிக்கும் விலங்குகளைத் தடுப்புக் காவல் வைத்தல் அல்லது கொன்று அழித்தல், சுற்றுலாக்களையும், கண்காட்சிகளையும் அமைத்து மேலாண்மை செய்தல் போன்ற தன் விருப்பப் பணிகள் சிலவற்றையும் அவை செயலாற்றுகின்றன.

## மாநகராட்சியின் வருவாய் ஆதாரங்கள்

மாநகராட்சியின் வருவாய் ஆதாரங்கள் (அ) வரி விதிப்பு மூலம் பெறப்படும் வருவாய் (ஆ) வரிவிதிப்பில்லாத வகையிலிருந்து வரும் வருமானம் என இரு தன்மைகளை உடையனவாக உள்ளன. வரி விதிப்பைச் சாராத வருவாய் கட்டணங்கள், தண்டனைப் பணங்கள் மாநில அரசாங்கத்திலிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் மற்றும் கடன்கள் ஆகியவற்றின் மூலம் கிடைக்கின்றன. வரிகளின் மூலம் கிடைக்கப்பெறுவது தலையாய வருவாய் ஆதாராமாகும். பொதுவாகக் கீழே பட்டியல் செய்யப்பட்டுள்ளவாறு வரி விதித்து வசூலித்துக் கொள்ள ஓர் மாநகராட்சி அதிகாரம் பெற்றுள்ளது.

1. கட்டிடங்கள் மற்றும் நிலங்களின் மீதான வரி.

2. வாகனங்கள் மற்றும் கால்நடைகள் மீதான வரி.

3. கொட்டகை (நாடகம், சினிமா) வரி.

4. நகரத்திற்குள் மக்களுக்குக் காட்சியளிக்கும் பொருட்டு செயல்படும் விளம்பரங்கள் மீதான வரி.

5. தொழில், வர்த்தகம் மற்றும் வாழ்க்கைப் பணி மீதான வரி.

6. கேளிக்கை வரி.

7. மின்சார நுகர்வு மற்றும் விற்பனை மீதான வரி.

8. நில மதிப்புகள் உயர்வதின் மீது விதிக்கப்படும் மேம்பாட்டு வரி.

9. சந்தை வரி அல்லது பாதை வரி.

மாநகராட்சியின் வருவாய் பெறுதல்கள் யாவும் மாநகராட்சி (பொது) நிதியில் செலுத்தப்படுகின்றன. இந்நிதியிலிருந்து அதன் செலவினத்திற்குத் தேவையான பணம் விடுவிக்கப்படுகின்றது.

## மாநகராட்சி மன்றம்

மாநகராட்சி முக்கிய அங்கமாக மாநகராட்சி மன்றம் உள்ளது. நிலப்பரப்பு மக்கட்தொகை ஆகியவற்றின் அடிப்படையில், ஒரு மாநகராட்சி பல வட்டங்களாகப் பிரிக்கப்படுகின்றது, ஒவ்வொரு வட்டத்திலிருந்தும், வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் ஒரு பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்படுவார். இப்பிரதிநிதிகள் அல்லது உறுப்பினர்கள், ‘கவுன்சிலர்கள்’ என்று அழைக்கப்படுகின்றனர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் கவுன்சிலர்களை உட்கொண்டது தான் மாநகராட்சியின் மன்றம், பஞ்சாயத்து இராச்சிய அமைப்புகளும் உள்ளதைப்போன்று, மாநகராட்சிகளிலும் தாழ்த்தப்பட்ட சாதியினர், பழங்குடியினர், பெண்கள் ஆகியோர்களுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. மற்ற பின்தங்கிய வகுப்பினர்களுக்கும் இட ஒதுக்கீடு செய்ய சட்டமன்றம் அதிகாரம் கொண்டுள்ளது. பஞ்சாயத்து இராச்சிய அமைப்புகளின் உறுப்பினர்களுக்கு உண்டான வயது, தகுதிகள் மற்றும் தொடர்பானவைகள் மாநகராட்சிக் கவுன்சிலர்களுக்கும் பொருந்துவனவாய் உள்ளன. நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களைத் தவிர்த்து, மாநகராட்சி பகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களும் மாநகராட்சி மன்றகூட்டங்களில் கலந்து கொள்ளலாம். ஆனால் வாக்களிக்கும் உரிமை கிடையாது. நகராட்சி நிர்வாகத்தில் அனுபவம் கொண்டுள்ள நபர்களை மாநகராட்சி மன்றத்திற்கு மாநில அரசாங்கம் நியமனம் செய்யலாம். ஆனால் மன்றத்தில் வாக்களிக்கும் உரிமை அவர்களுக்குக் கிடையாது.

மாநகராட்சி மன்றத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம், வேறுபட்டுக் காணப்படுகின்றது. சென்னை மாநகராட்சி 200 உறுப்பினர்களைப் பெற்றிருக்கிறது. தகுந்த காரணங்களுக்காக மாநகராட்சி மன்றம் முன்கூட்டிக் கலைக்கப்படுமாயின், ஆறு மாதங்களுக்குள் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். மாநகராட்சி மன்றம் ஓர் விவாத அமைப்பாகத் திகழ்கின்றது. உள்ளூர் சட்டப்பேரவையைப் போன்ற அது செயல்படுகின்றது. மக்களின் விருப்பத்தை நகரத்தின் சட்டங்களாக அது மாற்றுவிக்கின்றது.

## மேயர் மற்றும் துணை மேயர்

மேயர் மாநகராட்சியின் அரசியல் ரீதியிலான தலைவர் ஆவார். அவர் நகரத்தின் முதற்குடிமகன் மற்றும் தந்தை என அழைக்கப்படுகின்றார். மேயரை மக்களே நேரடியாகத் தேர்நதெடுக்கின்றனர். கவுன்சிலர்கள் தமக்குள்ளிலிருந்து ஒருவரை துணை மேயராக தேர்ந்தெடுக்கின்றனர் அவர்களுடைய பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும். மாநகராட்சியின் மேயர் மாநகராட்சி சட்டதிட்டங்களுக்கு முரணாக செயல்படநேரிட்டால், மாநகராட்சியின் மொத்த உறுப்பினர்களில் ஐந்தில் மூன்று பகுதியினர் எழுத்துமூலமாக மாநகராட்சி ஆணையருக்குத் தெரிவித்து, அதன் மீது ஐந்தில் நான்கு பகுதியினர் மேயருக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்படவேண்டும். மேற்படி தீர்மானத்தை அரசு பரிசீலித்து மேயரின்விளக்கத்தினைப் பெற வேண்டும். மேயரின் விளக்கம் அரசுக்கு ஏற்புடையதாக இல்லை எனில், அரசு மேயரை நீக்குவதற்கு ஆணையிடலாம். இதில் அரசின் முடிவே இறுதியானது.

மேயர் ஒரு விழாத் (அலங்கார) தலைவராகத் திகழ்கின்றார். விழாக்களில் அவர் மாநகரின் சார்பில் பங்கேற்கிறார். மன்றக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி, ஒழுங்கையும், அமைதியையும் பராமரிக்கின்றார். தீய நடத்தையின் பொருட்டு அவர் உறுப்பினர்களை சபை நீக்கம் செய்யலாம் அல்லது வெளியேற்றலாம். மன்றத்தின் நடவடிக்கைகளிலிருந்து தடை செய்யப்படுவற்குரிய எப்பகுதியினையும் அவர் ஒதுக்கலாம் அல்லது நீக்கலாம். மன்றத்தின் சிறப்புக் கூட்டங்களைக் கூட்டுவிக்க மேயர் அதிகாரம் படைத்துள்ளார். மாநகரத்தின் நிர்வாகம் பற்றிய எப்பொருள் மீதும் அவர் ஆணையரிடம் இருந்து தகவலைக் கோரமுடியும். மன்றத்தின் முடிவுகள் சரிவர நிறைவேற்றப்பட்டு வருவதை அவர் கவனித்துக் கொள்கிறார். எழுத்து மூலமாக மேயர், துணை மேயருக்கு தனது அதிகாரங்கள் சிலவற்றை ஒப்படைவு செய்யலாம். மாநில அரசாங்கத்திற்கும் மாநகராட்சிக்கும் இடையிலான ‘தகவல் தொடர்பு’ அனைத்தும் மேயரின் வாயிலாக செல்ல வேண்டும். எனினும், மேயர் அதை நிறுத்தி வைக்க முடியாது.

## குழுக்கள்

மாநகராட்சியின் குழுக்கள் மன்றத்தின் பல்வேறு நடவடிக்கைகளைக் கவனித்துக் கொள்வதில் முக்கியமானதோர் பங்குப்பணியை ஆற்றுகின்றன. மாநகராட்சியின் பணிகளின் திறமையான செயல்பாட்டிற்கு அவை துணை புரிகின்றன. இக்குழுக்களான நிலைக்குழு, பள்ளிகள் குழு, மருத்துவமனைகள் குழு, மின் விநியோகம் மற்றும் போக்குவரத்துக் குழு, மாநகர மேம்பாட்டுக் குழு, சுகாதார குழு, வரிவிதிப்பு மற்றும் நிதிகுழு, மாநகர நீர் மராமத்துக் குழு மற்றும் இன்னும்பிற. குழுக்கள் அனைத்திலும் தலையாயது நிலைக்குழுவாகும். இக்குழு செயலாக்க மேற்பார்வை, நிதி மற்றும் பணியாளர் குழாம் ஆகியவற்றின் மீது தேவையான அதிகாரங்களைப் பெற்றுள்ளது.

## மாநகராட்சி ஆணையர்

ஆணையர் மாநகராட்சியின் தலைமை நிருவாகி ஆவார். மாநகராட்சி மன்றத்தால் இயற்றப்படும் கொள்கைகளைச் செயல்படுத்துவது அவருடைய தலையாயப் பொறுப்பாகும். ஆணையர் பெரும்பாலும் இந்திய ஆட்சித்துறை பணியாளர். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அவர் மாநில அரசாங்கத்தினால் நியமனம் செய்யப்படுகின்றார்.

## ஆணையாளரின் அதிகாரங்கள்

மாநகராட்சி சட்டத்தின்படியும் மாநகராட்சி கவுன்சில் மற்றும் நிலைக்குழுக்களின் ஆலோசனையின் படியும் அவர் செயல்படுகிறார். மாநகராட்சிப் பணியாட்கள் மீது மேற்பார்வையினையும் கட்டுப்பாட்டையும் அவர் செலுத்துகின்றார். நிதி நிலை அறிக்கையைத் தயாரிப்பது ஆணையரின் பொறுப்பாகும். 74–வது, அரசியல் அமைப்புச் சட்டத்திற்குமுன் தேர்தல் நடத்தும் பணிகளை அவர் பெற்றிருக்கவில்லை.

மாநகராட்சியின் நிர்வாகத்தில் அச்சாணியாக ஆணையர் திகழ்கின்றார். மாநகராட்சியின் மன்றத்திலும் பல்வேறு குழுக்களின் கூட்டங்களிலும் கலந்து கொண்டு உரையாற்றும் உரிமையை அவர் பெற்றுள்ளார். கவுன்சிலர்களுக்கு தேவையான தகவல்களையும் விளக்கங்களையும் அவர் வழங்குகின்றார். அவர்கள் வாதங்கள் புரிவதற்கு வழித்துணையாக இருந்து மாநகராட்சியின் இன்றியமையா பங்குப் பணியினை ஆணையர் ஆற்றுகின்றார்.

### 9.2.2 நகராட்சிகள்

நகர உள்ளாட்சி அமைப்புகளில் அடுத்து வருவது நகராட்சிகளாகும். 'நகராட்சி' எனும் சொல், சுயாட்சியுள்ள நகரத்தை குறிப்பிடுகிறது. மாநிலத்திற்கு மாநிலம் நகராட்சிகளின் எண்ணிக்கை வேறுபடுகின்றது. நமது நாட்டில் 1500க்கும் அதிகமான நகராட்சிகள் உள்ளன. மாநில அரசுகள் இயற்றும் நகராட்சிச் சட்டங்களால் நகராட்சிகள் நிர்வகிக்கப்படுகின்றன. எந்த ஒரு சிறிய ஊரக அல்லது நகர்ப்புற பகுதியினையும் நகராட்சியென அறிவிக்கும் உரிமையை மாநில அரசு பெற்றுள்ளது. ஒரு நகராட்சியை அமைப்பதற்குக் குறைந்த பட்சமாக மக்கட்தொகை 5000 த்திலிருந்து 50,000 க்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும். நகரங்களில் மக்களால் மேற்கொள்ளப்படும் பல்வேறுபட்ட தொழில்கள் பெரும்பாலும் விவசாயச் சார்பற்றவையாக உள்ளன. மக்கட்தொகை மற்றும் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் நகராட்சிகள் 3 அல்லது 4 வகையான பாகுபாடு செய்யப்பட்டுள்ளன.

**பணிகள்**

நகராட்சிகளின் பணிகள் ஏறத்தாழ மாநகராட்சிப் பணிகளுக்கு இணையாக உள்ளன. அவை அரசியலமைப்பின் பன்னிரண்டாவது இணைப்புப்பட்டியலின் அமைப்புக் கூட்டின் கீழ் வருகின்றன. எனினும், நகராட்சிப் பணிகளைக் கட்டாயப் பணிகள், தன் விருப்பப் பணிகள் எனவும் வகைப்படுத்தலாம்.

**கட்டாயமான பணிகள்.**

1. தூய்மையான குடிநீர் விநியோகம் செய்தல்.
2. பொதுச் சாலைகள் அமைத்துப் பராமரித்தல்.
3. தெருக்களில் விளக்கு மற்றும் குடிநீர் வசதிகளைச் செய்தல்.
4. தெருக்களை சுத்தம் செய்து கழிவுப் பொருட்களை அகற்றுதல்.
5. அபாயமிக்க வர்த்தகங்களையும் செயல்களையும் ஒழுங்கு முறைப்படுத்தல்.
6. மருத்துவமனைகளையும் பள்ளிக்கூடங்களையும் பராமரித்தல்.
7. பிறப்பு, இறப்புகளைப் பதிவு செய்தல்.
8. பொதுச் சாலைகள், பாலங்கள் மற்றும் ஏனைய பொது இடங்களில் தோன்றும் தடைகளையும், நீட்டிக் கொண்டிருப்பவைகளையும் அகற்றுதல்.
9. சாலைகளுக்குப் பெயரிட்டு, இல்லங்களுக்கு எண் வழங்குதல்.
10. பொதுச் சுகாதாரம், துப்புரவு, ஆபத்தான வியாதிகளைத் தடை செய்தல் மற்றும் பல்வேறு வகையிலான இறப்பினங்களை அடக்கம் செய்வதற்குரிய இடங்களை ஒழுங்குமுறைப் படுத்தல் போன்றவை சம்பந்தமான அனைத்துக் காரியங்களையும் செய்தல்.
11. தீயணைப்புப் படைகளுக்கான ஏற்பாடு செய்தல்.

## விருப்பப் பணிகள்.

1. நகரப் பகுதிகளை வகுத்து அமைத்தல்.
2. பெண்டிர் காப்பு இல்லங்கள், அனாதை இல்லங்கள், தொழுநோயாளிகளின் இல்லங்கள், ஓய்விடங்கள், நூலகங்கள், பொது பூங்காக்கள், தோட்டங்கள் முதலானவற்றை நிறுவி பராமரித்தல்.
3. சாலையோரங்களில் மரங்களை நடுதல்.
4. நில அளவைகளை மேற்கொள்ளுதல்.
5. நலிவுற்ற பிரிவினருக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தல்.
6. நகராட்சிப் பணியாளரின் பொது நலத்தைப் பேணிக்காத்தல்.
7. நகராட்சிப் பகுதிக்குள் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி மக்களுக்கு கலாச்சாரம் மற்றும்பிற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.

## வருவாய் ஆதாரங்கள்

நகராட்சியின் முக்கிய வருவாய் ஆதரங்களாவன.

1. சொத்து வரி.
2. தொழில் வரி.
3. பொருள்கள் மீதான வரிகள் – சுங்க வரிகள்.
4. கால்நடை மற்றும் வாகன வரி.
5. கேளிக்கை வரி.
6. குடிநீர் மற்றும் விளக்கு வரி.
7. அரசாங்கம் வழங்கும் மானியங்களும் கடன்களும்.

பொது நிர்வாகம், மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாராம், கல்வி, பொது மராமத்துப் பணிகள், நீர் விநியோகம், விளக்குகள் அமைத்தல் மற்றும் பிற வசதிகளை செய்து கொடுத்தல் யாவும் நகராட்சியின் செலவு இனங்கள் ஆகும். நகராட்சிகள் தமது வருவாயைச் செலுத்தி செலவிற்கென பணத்தைப் பெற்றுக் கொள்ள நகராட்சி நிதிகளைக் கொண்டுள்ளன.

## நகராட்சி மன்றம்

ஒவ்வொரு நகராட்சியும் ஒரு நிர்வாக அமைப்பைப் பெற்றுள்ளது. நகராட்சி மன்றம், நகராட்சிக் குழு, நகராட்சி வாரியம் என பல்வகையாக பல்வேறு மாநிலங்களில் பெயரிடப்பட்டுள்ளது. அது நகராட்சியின் சட்ட ஆக்கம் செய்யும் அமைப்பாகும். பல்வேறு வட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் கவுன்சிலர்களை நகராட்சி மன்றம் கொண்டுள்ளது. ஏனைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு உள்ளதைப் போல், தாழ்த்தப்பட்ட சாதியினர், பழங்குடியினர், பெண்கள் ஆகியோருக்கான இட ஒதுக்கீடுகள் உள்ளன. நகராட்சிகளின் தலைவர் பதவிகளும் மேற்கண்டவர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள், வட்டக் குழுக்களின் தலைவர்கள்

ஆகியோரும் நகராட்சி மன்றங்களில் கலந்து கொள்ள ஏற்பாடு உள்ளது. நகராட்சி நிர்வாகத்தில் அனுபவம் அல்லது சிறப்பான அறிவு கொண்ட நபர்களை நகராட்சி நிர்வாகத்தில் மாநில அரசாங்கம் நியமனம் செய்யலாம். ஆனால், இவ்வுறுப்பினர்கள் மன்றத்தில் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருக்கவில்லை. நகர மக்கட் தொகையின் அடிப்படையில் நகராட்சி மன்றத்தின் அளவு அமைந்துள்ளது. ஒவ்வொரு கவுன்சிலரும், நியமன உறுப்பினரும், தனது இருக்கையில் அமர்வதற்கு முன், இந்திய அரசியலமைப்பிற்கு நேர்மை அல்லது பற்றுடன் இருக்கவும், இந்தியாவின் இறைமை மற்றும் ஒருமைப்பாட்டை உறுதி செய்யவும், தனது கடமையை நேர்மையுடன் ஆற்றவும் ஓர் உறுதிமொழியை எடுத்துக் கொள்ள வேண்டும். நகராட்சி மன்றத்தின் பதவிக்காலம் 5 ஆண்டுகள். அது முன்கூட்டியே நீக்கப்படுமாயின் ஆறு மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதேபோன்று, இராஜினாமா, பதவி நீக்கம் அல்லது தகுதி இழப்பு போன்ற காரணத்தால் ஒரு உறுப்பினர் இடம் காலியாயின் அது ஆறு மாதங்களுக்குள் நிரப்பப்பட வேண்டும். தனது பணிகளை மேற்கொண்டு செயலாற்றுவதில் நிலைக்குழு மற்றும் பிற குழுக்கள் நகராட்சி மன்றத்திலும் துணை செய்கின்றன.

## நகராட்சியின் தலைவர்

ஒவ்வொரு நகராட்சி மன்றமும் ஒரு தலைவரையும், ஒரு துணைத்தலைவரையும் பெற்றுள்ளது. நகராட்சி மன்றத்தலைவர் மக்களால் நேரிடையாக தேர்ந்தெடுக்கப்படுகின்றார். துணைத்தலைவரை கவுன்சிலர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். நகராட்சித் தலைவரும், துணைத்தலைவரும் 5 ஆண்டுகளுக்கு பதவி வகிக்கின்றனர். தலைவர் அல்லது துணைத்தலைவர், மாநகராட்சியின் மேயர் மற்றும் துணை மேயரைப் போன்று பதவியிலிருந்து அகற்றப்படலாம். தலைவர் நகராட்சி மன்ற கூட்டங்களைக் கூட்டுவித்து கூட்டங்களுக்குத் தலைமை வகிக்கின்றார். பல்வேறு நடவடிக்கைகளை ஒழுங்கப்படுத்துகின்றார். நகராட்சியின் நிதி மற்றும் செயலாக்க நிர்வாகத்தை அவர் மேற்பார்வை செய்கின்றார். நகராட்சியின் பதிவுகள் அல்லது ஆவணங்கள் அனைத்தையும் அவர் பார்வையிடும் உரிமைகளை பெற்றுள்ளார். நகராட்சி நிர்வாகம் சம்பந்தமான எந்த தகவலையும் அவர் கோர முடியும். சுருக்கமாகக்கூறின், நகராட்சிச் சட்டத்தினால் அவர் மீது சுமத்தப்பட்டுள்ள அனைத்துப் பணிகளையும் அதிகாரங்களையும் அவர் செயல்படுத்த வேண்டும். தலைவர் இல்லாத நேரத்தில், துணைத்தலைவர் தலைவருக்குரிய அனைத்துப் பணிகளையும் செய்தல் வேண்டும்.

## நிர்வாக அலுவலர் ஆணையர்

ஒவ்வொரு நகராட்சிக்கும் ஒரு நிர்வாக அலுவலர் உள்ளார். அவர் ஆணையர் என்று அழைக்கப்படுகின்றார். அவர் மாநிலப் பணித்துறையைச் சேர்ந்தவர். அவர் மாநில அரசாங்கத்தினால் நியமனம் செய்யப்படுகின்றார். ஆணையர் எத்தருணத்திலும் இடப்பெயர்வு செய்யப்படலாம். பல்வேறு நகராட்சிகளிலும் பெருமளவிற்கு ஆணையர்களின் அதிகாரங்களும் பணிகளும் ஒத்திருப்பவையாக உள்ளன. சுருக்கமாகக் கூறின் மன்றத்தின் தீர்மானங்களையும் முடிவுகளையும் நகராட்சி ஆணையர் செயலாக்கம் செய்கின்றார். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தீர்மானங்களின் நகல்களை அவர் அனுப்பி வைக்கின்றார். அவர் ஒப்பந்தங்களைச் செய்கின்றார். சில அறிவிக்கைகள், உரிமங்கள், அனுமதிகள் போன்றவற்றைப் பிறப்பித்து நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பில் தலைவருக்கு துணைபுரிகிறார். அவர் நகராட்சியின் நிலை அறிக்கையை தயார்செய்து செயலாக்கம் செய்கிறார். உயர்தணிக்கைக்கு நிர்வாக அறிக்கையை அனுப்பி வைக்கிறார். நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிதிஇழப்புகள் மற்றும் கையாடல் பற்றிய அனைத்துச் செய்திகளையும் அவர் தலைவரின் கவனத்திற்கு எடுத்துச்

செல்கிறார் அல்லது கொண்டு வருகின்றார். அவர் மன்ற கூட்டத்திலும் கலந்து கொள்ளலாம். மன்றத் தலைவர் மற்றும் ஆணையர் ஆகியோரிடையே நட்பும் சுமுகமாகவும் இசைவானதுமான உறவுகளைப் பெரிதும் சார்ந்துதான் நகராட்சியின் வெற்றிகரமான பணிச்செயல்பாடு அமையும்.

### நகரப் பஞ்சாயத்து

1992 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் (74வது திருத்தம்) சட்டம் புதியதோர் ஊரக உள்ளாட்சி அமைப்பு முறையை நம் நாட்டில் அறிமுகம் செய்துள்ளது. இது நகரப் பஞ்சாயத்து என அறியப்படுகிறது. இந்த உள்ளாட்சி அமைப்பானது ஒரு கிராமப்புற எல்லையிலிருந்து ஊரக எல்லைக்கு இடப்பெயர்விலுள்ள ஒரு பகுதிக்கென அமையப்பெறுகின்றது. இக்குறிக்கோளுக்கென ஒன்று அல்லது இரண்டு வருவாய் கிராமங்களை உள்ளடக்கியுள்ள ஒரு உள்ளூர்ப் பகுதி பஞ்சாயத்து நகரமாக அமைக்கப்படுகின்றது. ஒரு பஞ்சாயத்து நகரம் குறைந்தது 5000 பேர்களை மக்கட் தொகையாகக் கொண்டிருத்தல் வேண்டும். அதன் பெருவாரியான மக்கள் வேளாண்மைச் சாராத செயல்களில் ஈடுபட்டுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். ஒரு பஞ்சாயத்து நகரத்தின் ஆண்டு வருமானம் ஒரு இலட்ச ரூபாய்க்கு குறைவாகஇருத்தல் கூடாது.

ஒவ்வொரு பஞ்சாயத்து நகரத்திலும் ஒரு நகரப் பஞ்சாயத்து நிறுவப்படுகின்றது. இதற்கென, பஞ்சாயத்து நகரம் பல வார்டுகளாகக் கொண்டதாய் பிரிக்கப்படுகின்றது. ஒரு உறுப்பினர் ஒன்றுக்கு மேற்பட்ட நகரப் பஞ்சாயத்தில் உறுப்பினராய் இருத்தல் முடியாது. மற்றபடி, நகரப்பஞ்சாயத்தின் உறுப்பினர்கள் நகராட்சிக் கவுன்சிலர்கள் கொண்டுள்ளதற்கு இணையாக தகுதிகள், பணிகள், சலுகைகள் ஆகியவற்றைப் பெற்றுள்ளனர்.

நகரப் பஞ்சாயத்தின் உறுப்பினர்கள் தமக்குள்ளிருந்து, ஒரு துணைத் தலைவரை தேர்ந்தெடுக்கின்றனர். அவர் 5 ஆண்டுகளுக்குப் பதவி வகிக்கின்றார். நகராட்சித் தலைவர் கொண்டுள்ள அதிகாரங்கள், சலுகைகள் போன்றவற்றை அனுபவிக்கின்றார். ஏனைய உள்ளூராட்சி அமைப்புகளுக்கு உள்ளதைப் போன்று நகரப் பஞ்சாயத்தின் வருவாய் ஆதாரங்கள், செலவினங்கள், மற்றும் பிற செய்திகள், நகரப் பஞ்சாயத்திற்கும் அமைந்துள்ளன. பொருளாதார மேம்பாடு மற்றும் சமுதாய நீதிக்குரிய பணிகளை ஆற்றுவதற்கு தனக்கு தேவையான குழுக்களை அது அமைத்துக் கொள்ளலாம்.

### 9.2.3. நகரீயம்

பெருவாரியான பொதுத்துறை வர்த்தக ரீதியிலான நிறுவனங்கள் தமது பணியாளர்களுக்கென நகரீயங்கள் (Township) நிறுவியுள்ளன. பொதுத்துறை நிறுவனங்களின் மொத்த முதலீட்டில் பதினோரு விழுக்காடு நகரீயங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளன. கிராமப்புற பகுதிகளில் அல்லது அருகாமையிலுள்ள நகரப்பகுதிகளில் இந்நகரீயங்கள் நிறுவப்பட்டன. நகரீயங்களின் முக்கிய அம்சங்களாவன.

1. நகரீயங்கள் முழுமையாகத் திட்டமிடப்பட்டவை.
2. நகராட்சி அமைப்புகளால் பொதுவாக வழங்கப்படுவதை விட உயர்தரத்திலான குடியியல் பணிகளையும் இவை வழங்கி பராமரிக்கின்றன.
3. மக்களுக்கு பலவகையிலான வேலை மற்றும் பிற வாய்ப்புகளை வழங்க ஒரு நகரீயம் வசதிகளைப் பெற்றுள்ளது. எனவே பெரும் அளவிலான மக்கள் அதை நாடிச் செல்கின்றனர்.

நகரிய உள்ளாட்சி அரசாங்கம் தொழில்நிறுவனத்தின் இயல்பான நிர்வாகப் பொறுப்பாக அனுசரிக்கப்படுகின்றது. நெய்வேலி போன்ற சில நகரங்களில், தொழில் நிறுவனங்களால் நியமனம் செய்யப்படும் நிர்வாக அலுவலர்கள் உள்ளனர். இந்நிர்வாக அலுவலர்களுக்கு அவைத்தலைவர்கள், பொறியாளர்கள் மற்றும் பலர் உதவி செய்கின்றனர். நகராட்சியைப் போலன்றி, நகரீயங்கள் அதிகார உயர்தன்மையைக் கொண்டுள்ளன. குடியியல் நிர்வாகத்தில் அரசியல் தலையீட்டின் அச்சத்தின் காரணமாக, நகரீயம் மக்களாட்சி அமைப்பு எதனையும் கொண்டிருக்கவில்லை. மேலும், நகரீயங்களின் குடியிருப்பாளர்கள் தற்போதுள்ள ஏற்பாடுகள் மற்றும் வசதிகள் குறித்து மனநிறைவைப் பெற்றவர்களாக உள்ளனர்.

## 9.2.4 இராணுவக் கூட வாரியங்கள் (Contonment Boards)

மைய அரசின் நிர்வாகத்திற்கு உட்பட்ட பகுதிகளாகும். அவை பாதுகாப்பு அமைச்சகத்தின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டுள்ளன. 1924 ஆம் ஆண்டின் இராணுவக் கூட்டங்கள் பற்றிய சட்டத்தின் கீழ் இராணுவக் கூடவாரியங்கள் அமைக்கப்படுகின்றன. இராணுவப் படைகள் நிறுத்தப்படுவதற்கென அல்லது தங்குவதற்கென ஒரு நகரத்தில் உள்ள இடமே இராணுவக் கூடமாகும். இராணுவக் கூடப்பகுதியின் உள் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கென்று இராணுவக் கூட வாரியம் அமைக்கப்படுகிறது.

இராணுவக் கூட வாரியத்தின் தலைவர் நிலையக் கட்டுப்பாட்டு அல்லது கட்டளை அதிகாரி ஆவார். அவருக்கு வாரியத்தில் விருப்பவாக்குச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது. மற்றபடி, தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஒருவர் ஐந்து ஆண்டுகளுக்கு பதவி வகிக்கின்றார். பதவியின் நிமித்தமான உறுப்பினர் தனது அதிகாரப் பூர்வமான பதவி வகிக்கும் காலம் வரை பதவியில் நீடிக்கின்றனர். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் தமக்கென்று ஒரு துணைத்தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர். அவர் மூன்று ஆண்டுகளுக்குப் பதவி வகிக்கின்றார்.

நகராட்சிப் பணிகள் இராணுவக் கூட வாரியத்திடம் ஒப்படைக்கப்படுகின்றன. நகராட்சி மன்றத்தில் காணப்பெறுவதைப் போன்று இப்பணிகள் கட்டாயமானவை, தன் விருப்பமானவை என பாகுபாடு செய்யப்பட்டுள்ளன. வாரியத்தின் வருவாய் ஆதாரங்கள் வரிசார்ந்த வருவாய், வரிசாராத வருவாய் என்று பிரிக்கப்பட்டுள்ளன. மைய அரசாங்கத்தின் முன் அனுமதியுடன் எத்தகைய வரியையும் வாரியம் விதிக்கலாம். நிலையக் கட்டுப்பாட்டு அதிகாரி வாரியத்தினால் தயாரிக்கப்படும் நிதிநிலை அறிக்கையை அனுமதிக்கின்றார். இராணுவக்கூட வாரியங்களின் நிலைப்பாடு, தனிப்பட்ட அமைப்புகள் ஆகியவை பொருத்தமற்றதாய் உள்ளன. எனவே காலப்போக்கில் அவை அண்டை நகராட்சி அமைப்புகளின் உறுப்புகளாக இடம்பெறலாம்.

## 9.2.5 நகர எல்லைப் பகுதி குழுக்கள்

அசாம், கேரளா, மத்திய பிரதேசம், உத்திரபிரதேசம், மேற்கு வங்களாம், ஜம்மு காஷ்மீர், இமாசலப்பிரதேசம் ஆகியவற்றில் உருவாக்கப்பட்டுள்ளன. நகர எல்லைப் பகுதி குழுக்கள் மாநில அரசாங்கத்தினால் இயற்றப்படும் தனிப்பட்ட சட்டங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. நகர எல்லைப் பகுதிக்குழுவின் மீது மாவட்ட ஆட்சியாளர் அதிகப்படியான கட்டுபாட்டினையும் அதிகாரத்தையும் கொண்டுள்ளார். நகர எல்லைப் பகுதிக் குழுவின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் அல்லது அரசாங்கத்தினால் நியமனம் செய்யப்படுகின்றனர். அல்லது ஒரு பங்கினர் தேர்ந்தெடுக்கப்பட்டோராகவும் மற்றொரு பங்கினர் நியமனம் செய்யப்பட்டோராகவும் உள்ளனர். இக்குழுவிற்குத் தெருவிளக்கு, வடிகால் மற்றும் துப்புரவு போன்ற கட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான பணிகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் இக்குழுக்கள் நகரப் பஞ்சாயத்திற்குள் உட்படுத்திக் கொள்ளப்படலாம்.

### 9.2.6. குறிப்பிட்ட எல்லைப்பகுதி குழுக்கள் (Notified Area Committee)

இக்குழுக்கள் பீகார், குஜராத், அரியானா, மத்தியப்பிரதேசம், கர்நாடகம், ஜம்மு காஷ்மீர், உத்திரபிரதேசம் மற்றும் இமாசலப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ளன. ஒரு நகராட்சி அமையப் பெறுவதற்குரிய தேவையான நிபந்தனைகளை நிறைவேற்ற முடியாத ஒரு எல்லைப்பகுதிக்கென குறிப்பிட்ட எல்லைப் பகுதிக்குழு அமைக்கப்படுகின்றது. மேம்பாட்டினைப் பெற்றுவரும் புதியதோர் நகரகத்திற்கும் அது அமைக்கப்படுகின்றது. இக்குழுவின் அமைப்பு அதிகாரப்பூர்வமான அரசிதழில் அரசாங்கத்தினால் அறிவிப்பு செய்யப்படுகின்றது. எனவே தான் அது அறிவிப்பு செய்யப்பட்டுள்ள எல்லைப் பகுதிக்குழு என அழைக்கப்படுகின்றது. இக்குழு மாநில நகராட்சி சட்டத்தின் அடிப்படையில் செயல்படுகின்றது. ஆனால் அதிகாரப்பூர்வமான அரசிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது அறிவிக்கப்பட்டுள்ள நகராட்சிச் சட்ட ஏற்பாடுகள் மட்டுமே அதற்கு பொருத்தமானவையாய் இருக்கும்.

அறிவிக்கப்பட்ட எல்லைப்பகுதிக்குழு நகராட்சி மன்றத்தின் அதிகாரங்கள் அனைத்தையும் பெற்றிருக்கின்றது. ஆனால் நகராட்சி மன்றத்தைப் போலன்றி, அது ஒரு நியமன அமைப்பாகும். இக்குழுவின் தலைவரும் உறுப்பினர்களும் மாநில அரசாங்கத்தினால் நியமனம் செய்யப்படுகின்றனர்.

இவ்வமைப்பு தற்போதைய சட்ட அடிப்படையில் இல்லை என்று மாநில தேர்தல் ஆணைய அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார்.

### 9.3.1 மூன்று அடுக்கு பஞ்சாயத்து முறை

| | **அரசியல்** | | **நிர்வாகம்** |
|---|---|---|---|
| | மாவட்டப்பஞ்சாயத்து | → | மாவட்ட ஊரக வளர்ச்சி துறை |
| **பஞ்சாயத்து முறை** | ஊராட்சி ஒன்றியம் | → | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் |
| | கிராம பஞ்சாயத்து | → | கிராம நிர்வாக அலுவலகம் |

### 9.3.1.1 மாவட்ட பஞ்சாயத்துக்கள்

மாவட்ட பஞ்சாயத்து என்பது பஞ்சாயத்து இராச்சிய கட்டுமானத்தின் மேல்மட்ட அடுக்காகும். இது மாவட்டம் முழுவதும் அதிகார எல்லையைக் கொண்டுள்ளது. எனினும், நகராட்சியில் சேர்க்கப்பட்டுள்ள மாவட்டப்பகுதிகள், அல்லது நகரப் பஞ்சாயத்து அல்லாத தொழில் நகரியம் அல்லது மாநகரப் பொறுப்புகள் கீழ் உள்ள பகுதிகள் அல்லது இராணுவக் கூட வாரியம் போன்றவை அதனுள் அடங்காது. மாவட்டப் பஞ்சாயத்து பின்வருவோரை உறுப்பினரர்களாய்க் கொண்டுள்ளது.

அ. மாவட்ட பஞ்சாயத்து வட்டங்களிலிருந்து நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள், மாவட்டப் பஞ்சாயத்து எல்லையில் உள்ள ஏறத்தாழ 50,000 மக்களுக்கென ஒவ்வொரு வட்டமும் அமைக்கப்படுகின்றது. ஒவ்வொரு வட்டத்திலிருந்தும் ஒரே ஒரு உறுப்பினர் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். ஆனால் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்ட பஞ்சாயத்தின் உறுப்பினராக ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட முடியாது.

ஆ. மாவட்ட பஞ்சாயத்து பகுதியின் மக்களவை உறுப்பினர்கள் மற்றும் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள்.

இ. மாவட்டத்திற்குள் ஓர் வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டுள்ள மாநிலங்களின் அவை உறுப்பினர்.

ஈ. பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்களிடமிருந்து ஐந்தில் ஒரு பங்கினர் மாவட்டப் பஞ்சாயத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

அ,இ,ஈ ஆகியவற்றின் கீழ்வரும் உறுப்பினர்கள் மாவட்டப்பஞ்சாயத்தின் நடவடிக்கைகளில் பங்கேற்கலாம். ஆனால் வாக்களிக்க முடியாது.

தாழ்த்தப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு மாவட்ட பஞ்சாயத்துப் பகுதியில் உள்ள மொத்த மக்கட்தொகையில் அவர்களின் எண்ணிக்கை பெற்றுள்ள விகிதாசாரத்திற்கேற்ப இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரைச் சேர்ந்த பெண்டிர்களையும் உட்கொண்ட வகையில், மகளிர்களுக்கென மூன்றில் ஒரு பங்கு இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. ஒரு வாக்காளருக்குரிய வயது தகுதி 18 ஆகும். மாவட்ட பஞ்சாயத்திற்கு நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படவுள்ள ஒரு உறுப்பினருக்கு வயதுத் தகுதி 21 ஆகும். ஆனால், அவ்விருசாராருடைய பெயர்களும் சம்பந்தப்பட்ட வாக்காளர்பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும். மைய, மாநில அரசாங்கங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் பணிபுரிவோர், மாவட்டப் பஞ்சாயத்தின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படவும் அல்லது எப்பதவியையும் வகிக்கவும் தகுதியற்றவர்கள் ஆவர். மாவட்டப் பஞ்சாயத்தின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும். அது முன்கூட்டிக் கலைக்கப்படுமாயின், ஆறு மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்படவேண்டும். ஏனைய அனைத்துப் பிரதிநிதித்துவ அமைப்புகளுக்கு உள்ளதைப் போன்று, சட்டத்தின் கீழ் தகுதிக் கேடான எந்த நபரும் மாவட்டப் பஞ்சாயத்தில் வாக்களராக அல்லது உறுப்பினராக இருத்தல் முடியாது.

## தலைவர் மற்றும் துணைத் தலைவர்

ஒவ்வொரு மாவட்டப் பஞ்சாயத்தும் ஒரு தலைவரையும், துணைத்தலைவரையும் பெற்றுள்ளது. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களால், தமக்குள்ளிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தகுதி இழக்கப்பட்டாலன்றி அல்லது பதவியிலிருந்து நீக்கப்பட்டாலன்றி, அவர்கள் ஐந்து ஆண்டுகளுக்கும் பதவியில் இருப்பர். வழங்கப்பட்டுள்ள அனைத்து சலுகைகளையும் அவர்கள் அனுபவிக்கின்றனர்.

## தலைவரின் பணிகள்

மாவட்டபஞ்சாயத்தின் அரசியல் ரீதியான தலைமை நிர்வாகி அதன் தலைவர் ஆவார். அதன்படி, மாவட்ட பஞ்சாயத்தின் கூட்டங்களைக் கூட்டுவித்துத் தலைமை தாங்கி, அதன் செயல் நடவடிக்கைகளை நடத்துகின்றார். அவர் பஞ்சாயத்து சமிதிகள் மற்றும் பஞ்சாயத்துகள் செயல்படுவதை ஆய்வு செய்து, தனது அறிக்கையை மாவட்டப் பஞ்சாயத்திற்குச் சமர்ப்பிக்கின்றார். மாவட்டப் பஞ்சாயத்தின் செயலாளரின் வேலைப்பாட்டின் மீது தனது கருத்தினை எழுதுகிறார். இது மாவட்ட ஆட்சியாளரால் எழுதப்பெறும் மந்தன அறிக்கையோடு இணைக்கப்படுகிறது. தமது பணிகளுள் எதனையும் துணைத்தலைவருக்கு அவர் ஒப்படைவு செய்யலாம். நெருக்கடியான சமயத்தின் போது, மாவட்டப்பஞ்சாயத்துத் தொடர்பான

எப்பணியினையும் நிறைவேற்ற அவர் உத்தரவிடமுடியும். ஆனால் மாவட்டப் பஞ்சாயத்தின் அடுத்த கூட்டத்தில் அத்தகைய செயலை, அவர் அறிக்கை அறிவிப்புச் செய்யவேண்டும். மாவட்டப் பஞ்சாயத்தின் பதிவுகள் அல்லது ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட அவர் அதிகாரம் பெற்றுள்ளார். இவ்வாறு, ஒரு தலைவர் மற்றும் ஒரு மேற்பார்வையாளர் ஆகியோரின் பங்குப்பணியினை தன்னுடன் இணைத்துக் கொண்டவராக மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர் உள்ளார். அரசாங்கத்திற்கும் மாவட்டப் பஞ்சாயத்திற்கும் இடையே அவர் தகவல் தொடர்பு பாலமாக அமைந்துள்ளார்.

## மாவட்டப் பஞ்சாயத்து அல்லது ஜில்லா பரிஷத்தின் அதிகாரங்களும் பணிகளும்

மாநிலச் சட்டமன்றத்தால் இயற்றப்பட்டுள்ள சட்டத்தில் கூறப்பட்டுள்ளன. மாவட்டப் பஞ்சாயத்து ஓர் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை புரியும் பங்குப் பணியினைஆற்ற வேண்டியுள்ளது அவை வருமாறு.

1. பஞ்சாயத்து சமிதிகளின் நிதிநிலை அறிக்கைகளை ஆராய்ந்து ஒப்புதல் அளிக்கிறது.
2. தமது பணிகளைத் திறமையுடன் மேற்கொள்ளுமாறு பஞ்சாயத்து சமிதிகளுக்கு அது உத்தரவுகளைப் பிறப்பிக்கின்றது.
3. பஞ்சாயத்து சமிதிகளால் தயாரிக்கப்பட்ட வளர்ச்சித் திட்டங்களை அது ஒருங்கிணைக்கின்றது.
4. மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகள் சம்பந்தமாக அது மாநில அரசாங்கத்திற்கு அறிவுரை வழங்குகின்றது.
5. மாவட்டத்தின் உள்ளூர் ஆணையுரிமை படைத்த நிறுவனங்களின் பணிகள் குறித்து அது புள்ளி விவரங்களைச் சேகரிக்கின்றது.
6. மாவட்டத்தின் உள்ள பஞ்சாயத்து சமிதிகளுக்கென மாநில அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் நிதிகளை அது பகிர்ந்தளிக்கின்றது.
7. மாவட்டத்தின் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து சமிதிகள் ஆகியவற்றிற்குச் செய்யப்படவேண்டிய பணி ஒதுக்கம் மீது அது மாநில அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குகின்றது.
8. தனக்கு கீழ் அமைந்துள்ள பஞ்சாயத்து இராச்சிய அடுக்கு முறை அமைப்புகளுக்கிடையிலான நல் உறவுகளை ஒழுங்கு முறைபடுத்துகின்றது.
9. மாநில அரசாங்கத்தினால் அளிக்கப்படும் எல்லா அதிகாரங்களையும் அது செயல்படுத்துகின்றது.

## நிலைக்குழுக்கள்

ஜில்லா பரிஷத் அல்லது மாவட்டப் பஞ்சாயத்து தனது நிலைக்குழுக்களின் வாயிலாகப்பணியாற்றுகிறது. இந்நிலைக் குழுக்கள் பின்வரும் செயல்பாடுகளுக்கென அமைக்கப்பட்டுள்ளன.

1. சமூக மேம்பாடு அல்லது முன்னேற்றம்
2. விவசாயம், கூட்டுறவு, பாசனம் மற்றும் கால்நடைப் பராமரிப்பு.

3. குடிசை, கிராம மற்றும் சிறிய அளவிலான தொழில்கள்.

4. கல்வி மற்றும் சமுதாயப் பொதுநலன்.

5. நிதி மற்றும் வரிவிதிப்பு.

6. பொதுச்சுகாதாரம்.

இக்குழுக்களின் தலைவர்களும் உறுப்பினர்களும் தம்மால் தமக்குள்ளிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மாவட்டப் பஞ்சாயத்தின்தலைவர் ஒரு குழுவின் உறுப்பினராய் இருப்பாராயின், அவரே அதன் தலைவராக இருத்தல் வேண்டும்.

## வருவாய் ஆதாரங்கள்

பொதுவாகக் கூற வேண்டுமாயின், தனதுசெயலாக்கப் பணிகளைச் சந்திக்கும் பொருட்டு, ஒரு மாவட்டப் பஞ்சாயத்து பின்வரும் வருவாய் ஆதாரங்களைப் பெற்றுள்ளது.

1. தொழில், வர்த்தகம் மற்றும் வாழ்க்கைப் பணி மீது விதிக்கப்படும் வரி.

2. பொதுக்கேளிக்கைகள் மற்றும் நீர் மீது விதிக்கப்படும் வரி.

3. பயணிகள் மீதான வரி.

4. மாநில அரசாங்கம் வழங்கும் மானியங்கள் மற்றும் கடன்கள்.

5. பணியாளர் குழாம் மற்றும் சீரமைப்பு பற்றி மானியங்களும் நில வருவாயும்.

6. திட்டம் மற்றும் வட்டாரம் குறித்த மானியங்கள்.

7. இறைச்சி விற்பனையாளர்கள் செலுத்தும் உரிமக் கட்டணம்.

8. சந்தையில் விற்பனையாகும் கால்நடைகள் மற்றும் பொருள்கள் மீது விதிக்கப்படும் வரி.

9. தனது சொத்திலிருந்து வரும் வருமானம்.

ஒவ்வொரு மாவட்ட பஞ்சாயத்திற்கென, மாவட்டப் பஞ்சாயத்து நிதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பின்வரும் இனங்கள் மாவட்டப் பஞ்சாயத்து நிதியினுள் செலுத்தப்படுகின்றன.

1. மாநிலத்தின் திரண்ட நிதிக்குவிப்பிலிருந்து மாவட்டப் பஞ்சாயத்தின் நிதிக்கென்று ஒதுக்கம் செய்யப்பட்ட தொகை.

2. அரசாங்கத்தினால் வகை செய்யப்பெறும் அனைத்து மானியங்கள், ஈட்டுத்தொகைகள், கடன்கள் மற்றும் பங்களிப்புகள்.

3. மாவட்டப் பஞ்சாயத்தின் நிலங்கள் அல்லது மற்ற சொத்து மூலம் பெறப்படும் வாடகை அல்லது குத்தகைத் தொகை.

4. தனிநபர்களிடமிருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்து மாற்றம் செய்யப்படும் அல்லது மானியங்களாய்ப் பெறப்படும், அனைத்து வட்டிகள், இலாபங்கள் மற்றும் நன்கொடையால் திரண்டுள்ள பிற வருமானங்கள்.

5. மாவட்டப் பஞ்சாயத்தினால் விற்பனை செய்யப்பட்ட நிலம் மற்றும் சொத்துக்களின் மூலம் வரும் அனைத்து வருமானங்கள்.

6. மாவட்டப் பஞ்சாயத்தினால் விதிக்கப்பெறும் அல்லது அதற்குச் செலுத்தப்படும் அனைத்துக் கட்டணங்கள் மற்றும் தண்டனைத்தொகைகள்.

ஒவ்வொரு மாவட்டப் பஞ்சாயத்து நிதிக்கும், தன்னால் தீர்மானிக்கப்பட்ட அளவில், மானியம் ஒன்றினை அரசாங்கம் வழங்குதல் வேண்டும்.

## தலைமை நிர்வாக அலுவலர்

ஒவ்வொரு மாவட்ட பஞ்சாயத்திற்கும் ஒரு தலைமை நிர்வாக அலுவலர் அரசாங்கத்தினால் நியமனம் செய்யப்படுகின்றார். பல்வேறு மாநிலங்களில் அவருடைய பதவிப் பெயர் மாறுபடுவதாய் உள்ளது. தமிழ்நாட்டில் இந்த அலுவலர் கிராம வளர்ச்சி இணை இயக்குனருக்குண்டான நிலையினை வகிக்கின்றார். தலைமை நிர்வாக அலுவலரின் ஆட்சேர்ப்பு முறை, ஊதியம் மற்றும் படிகள், ஒழுங்கு மற்றும் நடத்தை மற்றும் பணிவரையறைகள் யாவும் அரசாங்கத்தினால் ஒழுங்குமுறைப் படுத்தப்படுகின்றன.

மாவட்டப் பஞ்சாயத்தின் தலைமை நிர்வாக அலுவலரின் பணிகள், அதிகாரங்கள் மற்றும் கடமைகள்.

1. தலைமை நிர்வாக அலுவலர் மாநிலச் சட்டமன்றத்தால் தன் மீது சுமத்தியுள்ள அதிகாரங்கள் அனைத்தையும் செயல்படுத்துகின்றார்.
2. மாவட்டப் பஞ்சாயத்துப் பணிகள் அனைத்தின் செயலாக்கத்தை அவர் மேற்பார்வையும் கட்டுப்பாடும் செய்கின்றார்.
3. மாவட்டப் பஞ்சாயத்து மற்றும் அதன் குழுக்களின் கூட்டங்களில் கலந்து கொள்ளவும், அவைகளில் எந்த ஒரு தீர்மானத்தை முன் வைக்கவும் அவர் உரிமை பெற்றுள்ளார்.
4. மாவட்டப் பஞ்சாயத்தின் தீர்மானங்களை அவர் செயல்படுத்த வேண்டும்.
5. மாவட்டப் பஞ்சாயத்தின் தீர்மானங்களின் செயலாக்கம் பற்றியும் வரி வசூலிப்பு பற்றியும் கால அறிக்கைகளை அவர் வழங்குதல் வேண்டும்.
6. மாவட்டப் பஞ்சாயத்தின் அலுவலர்களையும் பணியாட்களையும் அவர் கட்டுப்பாடு செய்கின்றார்.
7. மாவட்டப் பஞ்சாயத்தின் உத்தரவுகளையும் கட்டளைகளையும் அவர் செயல்படுத்துகின்றார்.
8. மாவட்டப் பஞ்சாயத்தின் எந்த ஓர் அலுவலருக்கும் அல்லது பணியாளர்களுக்கும், எழுத்து மூலமான உத்தரவினால், தனது பணிகளுள் எதனையும் அவர் ஒப்படைவு செய்யலாம்.

## 9.3.1.2 பஞ்சாயத்து யூனியன் / ஊராட்சி ஒன்றியம்

பஞ்சாயத்து இராச்சிய முறையமைப்பில் நடு அடுக்காகப் பஞ்சாயத்து சமிதி அமைந்துள்ளது. அது ஒரு இடைநிலையான அடுக்காகவும் கருதப்படுகிறது. பஞ்சாயத்து யூனியன் அல்லது ஊராட்சி ஒன்றியம் என அது பலவகையாகப் பெயரிடப்பட்டுள்ளது.

## அமைப்பும் அளவும்

தேசிய விரிவாக்கக் குறிக்கோளாக அமையப் பெறும் பஞ்சாயத்து வளர்ச்சிக்கு வட்டாரத்துடன் பொதுவாக முடிவதைலில் பஞ்சாயத்து சமிதியின் என்று அமைந்துள்ளது. ஒரு பஞ்சாயத்து ஒன்றியம் 112 கிராமங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்தின் நிர்வாகம், பஞ்சாயத்து ஒன்றிய மன்றத்திடம் வழங்கப்படவேண்டும்.

பஞ்சாயத்து சமிதி அல்லது பஞ்சாயத்து யூனியன் ஊராட்சி ஒன்றியம்.

1. பஞ்சாயத்து ஒன்றியம் உள்ள வட்டாரங்களிலிருந்து நேரிடையாக தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு உறுப்பினர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.
2. பஞ்சாயத்து ஒன்றியப் பகுதியைச் சேர்ந்த (மக்களவை) உறுப்பினர்கள் மற்றும் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள்.
3. பஞ்சாயத்து ஒன்றியத்தின் வாக்காளார்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ள மாநிலங்கள் அவை உறுப்பினர்கள்.
4. பஞ்சாயத்து ஒன்றிய மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மொத்த எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பங்கு என்ற வகையில் கிராமப் பஞ்சாயத்து அவையில் இடம்பெறுகின்றார். பஞ்சாயத்து ஒன்றியப் பகுதியில் உள்ள கிராமப் பஞ்சாயத்து தலைவர்கள் தமக்குள் இவ்வுறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.

## தலைவர் மற்றும் துணைத்தலைவர்

பஞ்சாயத்து சமிதியின் தலைவர் பிரமுகர், பிரதான் என்று பல மாநிலங்களில் பெயரிடப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் அவர் சேர்மன் (தலைவர்) என்று அழைக்கப்பட்படுகிறார். இவரைத் தவிர்த்து ஒரு துணைத்தலைவரும் இருக்கிறார். அவர் பஞ்சாயத்து ஒன்றியத்தின் உறுப்பினர்களால் தமக்குள்ளேயே தேர்ந்தெடுக்கப்படுகிறார். தகுதி இழக்கப்பட்டாலன்றி (அ) பதவியிலிருந்து நீக்கப்பட்டாலன்றி அவர்கள் ஐந்து ஆண்டுகளுக்கு பதவி வகிக்கின்றனர். பஞ்சாயத்து ஒன்றியமன்றத்தினால் தடை செய்யப்பட்டாலன்றி எழுத்து மூலமாக உத்தரவின் மூலம், தலைவர் அவருக்குண்டான எப்பணிகளையும் துணைத்தலைவருக்கு ஒப்படைவு செய்யலாம். எனினும் தலைவர் பதவி காலியாக இருக்கும் போது தலைவருக்குண்டான பணிகளைத் துணைத்தலைவர் ஆற்ற வேண்டும். தலைவர் மற்றும் துணைத்தலைவர் ஆகிய இரு பதவிகளும் காலியாக இருக்குமாயின் வட்டார வருவாய் அதிகாரி (Revenue Divisional Officer) பஞ்சாயத்து ஒன்றிய மன்றத்தின் அலுவல் சார்பான உறுப்பினராகவும் தலைவராகவும் இருப்பார்.

## தலைவரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

பஞ்சாயத்து யூனியனின் தலைவர் அரசியல் ரீதியான செயலாக்கத் தலைவராவார். அவருடைய அதிகாரங்களும் பணிகளும் பின்வருவனவாகும்.

1. பஞ்சாயத்து சமிதியின் கூட்டங்களைக் கூட்டித் தலைமை தாங்குவதோடு அதன் செயல்முறைகளை அவர் நடத்துகின்றார்.
2. பஞ்சாயத்து சமிதி மற்றும் அதன் நிலைக்குழு ஆகியவற்றின் முடிவுகள் மற்றும் தீர்மானங்களை செயல்படுத்தும் போது வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் அவருடைய பணியாளர்கள் மீது கட்டுப்பாட்டினை அவர் செலுத்துகின்றார்.

3. திட்டங்களை தீட்டுவதிலும் உற்பத்திச் செயல்திட்டங்களை செயல்படுத்துவதிலும் பஞ்சாயத்துக்களை ஊக்குவித்து அவைகளுக்கு வழித்துணையாக அவர் திகழ்கிறார்.
4. பஞ்சாயத்து ஒன்றிய மன்றத்தின் ஆவணங்கள் மற்றும் அதிகாரப்பூர்வமான தகவல் பரிமாற்றம் அனைத்தும் தலைவரின் மூலமாக மேற்கொள்ளப்படவேண்டும்.
5. ஒன்றியம் மற்றும் அரசாங்கம் ஆகியவற்றை அதிகாரப்பூர்வமாக பார்வையிட அதிகாரம் பெற்றுள்ளார்.
6. எந்த ஒரு முக்கியமான வேலையையும் உடனடியாக செயல்படுத்துவதற்கு அவர் உத்தரவுகளையும் பிறப்பிக்கலாம்.
7. தான் ஒரு உறுப்பினராகத் திகழும் பட்சத்தில் அலுவல் சார்பு முறையில் நிலைக்குழுவின் தலைவராக அவர் திகழ்கின்றார்.

பஞ்சாயத்து ஒன்றியத்தின் முறைமையின் முக்கியமான அமைப்பாக பஞ்சாயத்து சமிதி திகழ்கிறது. அது சமூக மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த தலையாயச் செயலாக்க அமைப்பாக உள்ளது. தனக்கென குறிப்பிட்ட வகையில் ஒதுக்கப்படும் பொறுப்புகளை செயல்படுத்துவதில் மாநில அரசாங்கத்தின் ஒரு முகவராக அது செயல்படுகின்றது. தனது அதிகார எல்லகைக்குள் அமைந்துள்ள கிராம பஞ்சாயத்துக்களின் மீது பஞ்சாயத்து சமிதி கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை ஆகியவற்றை செலுத்துகின்றது. அனைவருக்கும் தேவையான தொழில்நுட்பம் மற்றும் நிதியுதவியை வழங்குகின்றது. இறுதியில் தனது எல்லைக்குள் உள்ள பஞ்சாயத்தின் நிதிநிலை அறிக்கைகளை ஆராய்ந்து அனுமதிக்கும் பொதுப்படையான அதிகாரத்தையும் பெற்றுள்ளது.

### பஞ்சாயத்து சமிதியின் பணிகள்

பஞ்சாயத்து சமிதியின் பணிகள் இருவகைப்படும். அவை குடியியல் வசதிகள் மேம்படச் செய்வது மற்றும் வளர்ச்சி திட்டங்களை நிறைவேற்றதலும் ஆகும்.

குடியியல் பொறுத்தமட்டில் பஞ்சாயத்து சமிதி பின்வரும் பொறுப்புகளைப் பெற்றுள்ளது.

1. கிராமப் பஞ்சாயத்துச் சாலைகளைத் தவிர்த்து சமிதியின் அதிகார எல்லைக்குள் சாலைகள் அமைத்துப் பராமரித்தல்.
2. குடிநீர் வழங்கல்.
3. வடிகால் குழாய்களை பராமரித்தல்.
4. தாய் சேய் நல இல்லங்களையும் ஆரம்ப சுகாதார மையங்களையும் நிறுவுதல்.
5. மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணிகளை ஏற்படுத்துதல்.
6. ஆரம்ப மற்றும் ஆதாரப் பள்ளிகளுக்கான ஏற்பாடு செய்து முதியோர் கல்வி மையங்களை நிறுவுதல்.
7. ஊட்டுப்பாதைகளாக உள்ள கிராமச் சாலைகளுக்குத் துணைபுரிதல்.
8. நூலகங்களை நிறுவுதல்.
9. இளைஞர் அமைப்புகள், மகளிர், உழவர் குடிமக்கள் போன்றவைகளை நிறுவுதல்.
10. கலாச்சார நடவடிக்கைகளுக்கு ஊக்கமளித்தல்.

தனது எல்லைக்குள் சமூக வளர்ச்சி திட்டங்களைப் பஞ்சாயத்து சமிதி நிறைவேற்றுகின்றது. அதன் பணிகள்,

1. சமூக மேம்பாட்டின் கீழ் அனைத்து திட்டங்களையும் செயலாக்குதல்.
2. வீரிய வித்துக்களைப் பெருக்கி, வினியோகித்தல்.
3. தேர்ச்சியான உரங்களைச் சேகரித்தல், வினியோகித்தல், பிரபலமாக்குதல்.
4. மண்வளம், நிலத்தை மேம்படுத்துதல்.
5. வேளாண்மைக்கான கடன் வழங்குதல்.
6. கிணறுகளை வெட்டியும், குளங்களைப் பழுதுபார்த்தும் பாசன வசதிகளைச் செய்து கொடுத்தல்.
7. மரங்களை நடுதல், மரங்களை வளர்த்தல்.
8. தேர்ச்சி வாய்ந்த இனவிருத்தி ஆடுகள், மாடுகள், பறவைகள் வளர்ப்பு அறிமுகம் செய்தல்.
9. தேர்ச்சி வாய்ந்த கால்நடை தீவனத்தை அறிமுகம் செய்தல்.
10. கால்நடைகளுக்கு வியாதி வராமல் தடுத்தல் மற்றும் உரிய நிவாரணம் அளித்தல்.
11. பால்பண்ணை அமைத்தல், பால் வினியோகம் செய்தல்.
12. கூட்டுறவுச் சங்கங்களை துவங்கி மேம்படுத்துதல்.
13. மீன் காப்பகங்களைப் பராமரித்தல்.
14. குடிசை, கிராம மற்றும் சிறிய அளவிலான தொழில்களை மேம்படுத்துதல்.
15. உற்பத்தி மற்றும் பயிற்சி மையங்களை நிறுவிப் பராமரித்தல்.

## நிலைக்குழுக்கள்

பஞ்சாயத்து சமிதி நிலைக்குழுக்களை அமைத்துக் கொண்டு தனது பணிகளை ஆற்றுகின்றது. இக்குழுக்கள் சட்டமுறையிலான அமைப்புகளாகும். கீழ்க்காணும் பணிகளையாற்றும் பொருட்டு ஐந்து குழுக்கள் உள்ளன.

அ. நிதி மற்றும் வரி விதிப்பு.

ஆ. வேளாண்மை உற்பத்தி கால்நடைப் பராமரிப்பு மற்றும் பாசனம்.

இ. கல்வி மற்றும் மாதர் நலன் உள்ளிட்ட சமுதாய பொதுநலன்.

ஈ. பொதுச் சுகாதாரம் மற்றும் துப்புரவு.

உ. தகவல், தொடர்பு மற்றும் கூட்டுறவு.

நிலைக்குழுவின் உறுப்பினர்கள் பஞ்சாயத்து சமிதியின் உறுப்பினர்களாகத் தமக்குள்ளிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பஞ்சாயத்து சமிதியின் தலைவர் நிதி மற்றும் வரிவிதிப்புக் குழுவின் தலைவராவார். பஞ்சாயத்து சமிதியினால் தமக்கு ஒப்படைவு

செய்யப்படும் அதிகாரங்களை இக்குழுக்கள் செயல்படுத்துகின்றன. வட்டார வளர்ச்சி அலுவலர் நிலைக்குழுக்களின் செயலாளராகப் பணி புரிகின்றார்.

## வருவாய் ஆதாரங்கள்

பொதுவாக ஒரு பஞ்சாயத்து சமிதி பின்வரும் வருவாய் ஆதாரகளைக் கொண்டுள்ளது.

1. பஞ்சாயத்து சமிதி விதிக்கும் வரிகள், கட்டணங்கள், ஆகியவற்றில் கிடைக்கும் வருமானங்கள்.
2. ஜில்லா பரிஷத் (அ) மாவட்டப் பஞ்சாயத்திலிருந்து பெறப்படும் நில வருவாய் மற்றும் உள்ளூர் தீர்வைப் பங்குத்தொகை.
3. மாநில அரசாங்கத்திடமிருந்து பெறப்படும் மானியங்கள்.
4. மாநில அரசாங்கத்திடமிருந்து பெறப்படும் கடன் தொகைகள்.
5. பஞ்சாயத்து சமிதியினால் அனுமதிக்கப்படும் பொதுப் பணித்துறையில் சந்தைகள், இன்ன பலவற்றின் குத்தகைகளிலிருந்து கிடைக்கும் வருமானம்.
6. மாவட்ட பஞ்சாயத்தின் வாயிலாக (அ) மாவட்டப் பஞ்சாயத்திலிருந்து பெறப்படும் தற்காலிக மானியங்கள்.
7. பங்களிப்புகள் மற்றும் நன்கொடைத் தொகைகள்.
8. செயலாக்க செயலி என்ற வகையில் பஞ்சாயத்து சமிதிக்கு அரசாங்கத்தினால் மாற்றம் செய்யப்படும் திட்டங்களிலிருந்து வரும் நிதிகள்.

இவைகளுடன் பல்வேறு வருவாய் ஆதாரங்கள் பஞ்சாயத்து சமிதி பெற்றுள்ளது. 1994 ஆம் ஆண்டின் தமிழ்நாட்டின் பஞ்சாயத்துக்கள் சட்டப்படி ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்துக்கும் பஞ்சாயத்து ஒன்றிய பொது நிதி என்றும் பஞ்சாயத்து (கல்வி) நிதி ஒன்றும் அமைக்கப்படவேண்டும். சட்டத்தில் குறிப்பிட்டவாறு பொது நிதி 27 இனங்களில் கிடைக்கப்பெறும் தொகைகளைக் கொண்டுள்ளன. மற்ற மாநிலங்களில் உள்ள பஞ்சாயத்து சமிதிகளும் பஞ்சாயத்து சமிதி நிதி வைப்புகளைக் கொண்டுள்ளன.

## நிர்வாக இயந்திரம்

தனது பணிகளை ஆற்றும் பொருட்டு பஞ்சாயத்து சமிதி நிர்வாக இயந்திரம் ஒன்றினைப் பெற்றுள்ளது. அது வட்டார வளர்ச்சி அலுவலரால் தலைமை தாங்கப்படுகிறது. வட்டார வளர்ச்சி அலுவலருக்கு உதவி புரிய விரிவாக்க அலுவலர்கள் உள்ளனர். இவ்வளர்ச்சி அலுவலர்கள் மாநில அரசாங்கத்தினால் ஊதியம் வழங்கப்படும் பணியாளர்கள் ஆவர். அவர்கள் விவசாயம், கால்நடை பராமரிப்பு, பொதுச் சுகாதாரம் போன்ற சம்பந்தப்பட்ட துறைகளில் வல்லுனர்களாய் உள்ளனர். அவர்களுக்கு கீழ் மற்ற பணியாளர்கள் உள்ளனர். வட்டார வளர்ச்சி அலுவலர் ஓர் எல்லை அல்லது வட்டத்தின் நிர்வாகியாக உள்ளார். அவர் ஆணையர் என்று தமிழ்நாட்டில் பதவிப் பெயர் பெற்றுள்ளார்.

வட்டார வளர்ச்சி அலுவலர் பொதுவாக மாநில வருவாய்த் துறையை சார்ந்தவராக உள்ளார். அவர் (அ) அலுவலகத் தலைவராகவும் (ஆ) விரிவாக்க அலுவலர்களைக் கொண்ட ஒரு அணியின் தலைவராகவும் (இ) பஞ்சாயத்து யூனியனின் செயலாளராகவும் பணி

ஆற்றுகின்றார். விரிவாக்க அலுவலர் அணியின் ஓர் தலைவர் என்ற வகையில் வட்டாரத்தில் பல்வேறு தொழில்நுட்பம் வாய்ந்த பணிகளை அவர் ஒருங்கிணைத்து பலவகையான வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்துகின்றார்.

வட்டார வளர்ச்சி அலுவலர் ஊராட்சி ஒன்றியத்தின் செயலாளரும் தலைமைச் செயலாக்க அதிகாரியும் ஆவார். அவர் பின்வரும் பணிகளை ஆற்றுகின்றார்.

1. பஞ்சாயத்து யூனியன் பலவகையான தீர்மானங்களை நிறைவேற்றம் செய்கின்றார்.
2. வட்டாரத்திலுள்ள பஞ்சாயத்துகளை மேற்பார்வை செய்கின்றார். பஞ்சாயத்து யூனியன் மற்றும் அதன் நிலைக்குழுக்கள் ஆகியவற்றின் கூட்டங்களுக்கு அவர் அறிக்கைகளை பிறப்பிக்கின்றார். அக்கூட்டங்களின் நடவடிக்கைகளைப் பதிவு செய்து பராமரிக்கின்றார்.
3. வாக்களிக்கும் உரிமையை பெறாத வகையில் யூனியன் கூட்ட விவாதங்களில் அவர் பங்கேற்கின்றார்.
4. யூனியன் நிதிகளிலிருந்து பணத்தை தருவித்துப் பட்டுவாடா செய்கிறார்.
5. பணத்திருட்டு, கையாடல் மோசடி போன்றவற்றை அவர் யூனியனின் தலைவருக்கும் மாவட்ட ஆட்சியாளருக்கும் புகார் செய்கின்றார்.
6. பொருத்தமான அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து திட்டங்களையும், திட்ட செயல்களையும் செயலாக்கம் செய்கின்றார்.
7. தனது வட்டாரத்திற்குள் உள்ள பஞ்சாயத்துகளின் நிதி நிலவரத்தை அவர் ஆய்வு செய்கிறார்.
8. பஞ்சாயத்து யூனியனின் பணியாட்கள் மற்றும் ஏனைய அலுவலர்களை அவர் மேற்பார்வையும் கட்டுப்பாடும் செய்கின்றார்.
9. யூனியனின் முன் அனுமதியுடன் யூனியனுக்காக அவர் ஒப்பந்தங்களைச் செயலாக்கம் செய்கின்றார்.

### 9.3.1.3 கிராம சபை

பஞ்சாயத்து இராச்சிய முழுமையான கட்டுமானத்தின் அடித்தளமாகக் கிராமச் சபை உள்ளது. அது ஒரு பொதுவான அமைப்பாகும். அது ஒரு சட்டமுறையிலான அமைப்பாக ஏற்கப்பட்டுள்ளது. கிராமப் பஞ்சாயத்தின் தகுதி பெற்றுள்ள அனைத்து வாக்காளர்களைக் கொண்டு அது அமையப் பெற்றுள்ளது. சராசரி 500 மக்கட் தொகையுடன் கூடிய ஒன்று அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கிராமங்களை ஒரு கிராம பஞ்சாயத்து அதிகார எல்லையாக கொண்டிருக்கலாம். கீழ்மட்ட நிலையில் ஓர் அடிமட்ட அமைப்பாக இருப்பதால், அது நேரடி மக்களாட்சியின் அடிப்படை அலகாகப் பணியாற்றுகிறது. எனவே மக்களாட்சி கட்டுப்பாட்டுக்கு உரிய முனைப்பானதோர் சாதனமாக அது கருதப்படுகின்றது. கிராம சபையானது, குறைந்தது மூன்று கூட்டங்களைளேனும் ஒரு நிதியாண்டில் நடத்தவேண்டும். கிராமப் பஞ்சாயத்தின் தலைவர், கிராம சபையின் கூட்டங்களைக் கூட்டுவதற்குப் பொறுப்பினைப் பெற்றுள்ளார்.

## கிராம சபை



## பணிகள்.

1. கிராமசபை பஞ்சாயத்து ஆற்றும் பணிகளை சீராய்வு செய்கின்றது.
2. அது சபை எல்லைக்குரிய வளர்ச்சித் திட்டத்தை வரைகின்றது.
3. அது பஞ்சாயத்தின் கணக்குகள் மற்றும் தணிக்கை பற்றிய துண்டு அறிக்கையைப் பரிசீலனை செய்கிறது.
4. அது கடந்த ஆண்டின் நிர்வாக அறிக்கையினையும், எதிர்கொள்ளும் ஆண்டுக்குரிய செயல்திட்டத்தையும் பரிசீலனை செய்கின்றது.
5. அது கிராமப் பஞ்சாயத்தின் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் ஆண்டு நிதிநிலை அறிக்கை ஆகியவற்றுக்கு ஒப்புதல் வழங்குகிறது.

கிராமசபை இறைமை கொண்ட ஓர் அமைப்பாகும். எனவே அது சில செயல்பாடுகளைச் செய்யயும் பொருட்டு கிராமப் பஞ்சாயத்திற்கு அதிகாரங்கள் மற்றும் உரிமையை வழங்கலாம்.

## கிராமப் பஞ்சாயத்து

பஞ்சாயத்து இராச்சிய இறைமையின் முதலாவதாகவும், தலையாய அலகாகவும். கிராமப் பஞ்சாயத்து உள்ளது. குறைந்தபட்சம் 500 மக்கள் தொகையைக் கொண்டுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்து கிராமத்திற்கும் அது அமைக்கப்படுகின்றது. கிராமப் பஞ்சாயத்தின் உறுப்பினரின் குறைந்தபட்ச எண்ணிக்கை ஐந்தாகவும், அதிகப்பட்சமாகப் பதினைந்தாகவும் அதன் மக்கள் தொகையைச் சார்ந்து இருக்கும். கிராமப் பஞ்சாயத்து கிராம சபையின் செயலாக்க குழுவாக உள்ளது. அதன் உறுப்பினர்கள் இரகசிய வாக்களிப்பு மூலம் கிராம சபையினால் நேரிடையாக தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். கிராமம் முழுவதும் வட்டங்களாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு வட்டமும் ஒன்று முதல் மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கிறது. தாழ்த்தப்பட்ட சாதியினர் மலைவாழ் மக்கள் மற்றும் பெண்கள் ஆகியோருக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீட்டிற்கான ஏற்பாடு உள்ளது.

கிராமப் பஞ்சாயத்து ஒரு தலைவரால் தலைமையேற்கப்படுகிறது. கிராமப் பஞ்சாயத்தின் தலைவர் கிராம சபையின் உறுப்பினர்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். கிராம சபையின் மூன்றில் ஒரு பங்கினரின் பெரும்பான்மையுடன் அவருக்கு எதிரான ஒரு நம்பிக்கை இல்லாத தீர்மானம் நிறைவேற்றப்படுமாயின் அவர் பதவியிலிருந்து நீக்கம் செய்யப்படலாம். ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு துணைத்தலைவரும் இருக்கிறார். 18 வயதடைந்த குடிமக்கள் அனைவரும் வாக்களிக்க உரிமைப் படைத்துள்ளனர். 21 வயதை நிறைவு செய்தவர்கள் மட்டுமே பஞ்சாயத்தின் தலைவராகவும் துணைத்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட முடியும். கிராமப்பஞ்சாயத்தின் பதவிக்காலமும் அதன் உறுப்பினர்களின் பதவிக்காலமும் ஐந்து ஆண்டுகளாகும். முன் கூட்டியே பஞ்சாயத்து கலைக்கப்படுமாயின் ஆறு மாதங்களுக்குள் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும்.

### தலைவரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

கிராமப் பஞ்சாயத்தின் அரசியல் சார் செயலாக்க அதிகாரியாகத் தலைவர் திகழ்கின்றார். அவர் பின்வரும் அதிகாரங்களையும் பணிகளையும் பெற்றுள்ளார்.

1. கிராமசபை மற்றும் கிராமப் பஞ்சாயத்தின் கூட்டங்களைக் கூட்டுவிக்கின்றார்.
2. பஞ்சாயத்தின் கூட்டங்களுக்குத் தலைமையேற்கிறார்.
3. பஞ்சாயத்தின் ஆவணங்களைப் பராமரிக்கிறார்.
4. பஞ்சாயத்துப் பணியாளர்கள் மீது நிர்வாகக் கட்டுப்பாட்டை செலுத்துகின்றார்.
5. பஞ்சாயத்தின் இயற்றப்பட்ட தீர்மானங்களின் செயலாக்கத்தை பார்வை செய்கின்றார்.
6. கிராமப் பஞ்சாயத்தில் எடுக்கப்படும் முடிவுகள் செயல்படுத்தப்படுவதற்கான பொறுப்பினை அவர் பெற்றுள்ளார்.
7. பஞ்சாயத்தின் நிதிகளை மேலாண்மை செய்வதற்கு உறுதியான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளார்.
8. தனது பஞ்சாயத்தின் பிரதிநிதியாக பஞ்சாயத்து சமிதி (அ) பஞ்சாயத்து ஒன்றியத்தின் கூட்டங்களில் கலந்துக் கொள்கிறார்.
9. மாநில அரசாங்கச் சட்டத்தினால் (அ) அச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ள விதிகளால் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அனைத்தையும் அவர் செயல்படுத்துகின்றார்.

தலைவர் இல்லாதிருக்கும் நேரத்தில் துணைத்தலைவர் இப்பணிகளை ஆற்றுகின்றார்.

### கிராமப் பஞ்சாயத்தின் பணிகள்

கிராமப் பஞ்சாயத்திடம் பலவகையான பொதுநலப்பணிகளும், வளர்ச்சி நடவடிக்கைகளும் ஒப்படைவு செய்யப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில், கிராம மட்டத்தில் திட்டங்களைத் தயாரித்து சமுதாய நீதி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான செயல் திட்டங்களை செயல்படுத்துவதாகும். மாநில அரசாங்கத்தின் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்து பணிகளையும் கிராமப் பஞ்சாயத்து ஆற்றவேண்டும். அவை கட்டாயமான பணிகள் மற்றும் தன்னிச்சையான பணிகள் என பாகுபாடு செய்யப்பட்டுள்ளன.

### கட்டாயமான பணிகள்

கிராமப் பஞ்சாயத்து பின்வரும் கட்டாயமான பணிகளைப் பெற்றுள்ளது.

1. வேளாண்மை முன்னேற்றம்
2. குடிசை தொழில்களின் வளர்ச்சி
3. பொதுக் கிணறுகள் மற்றும் நீர்த்தொட்டிகள் பராமரித்தல்.
4. குடிநீர் வினியோகம் செய்தல்.
5. துப்புரவு, மற்றும் வடிகாலுக்கு ஏற்பாடு செய்தல்.
6. கிராமத்துச் சாலைகளிலும் மற்ற பொது இடங்களிலும் விளக்குகள் அமைத்தல்.
7. இடுகாடு மற்றும் சுடுகாடுகளைப் பராமரித்தல்.
8. பிறப்புகள், இறப்புகள், திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்தல்.
9. கால்நடை நீர்க்குட்டைகளைப் பராமரித்து, உயிர் நடைகளை பற்றி பொதுவான அக்கறை கொள்ளுதல்.
10. கிராமப் பஞ்சாயத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தல்.
11. சிறு அளவிலான பாசன வேலைகளைக் கட்டுவித்துப் பராமரித்தல்.
12. பொதுச் சந்தைகளையும், அங்காடிகளையும் ஒழுங்குமுறை செய்தல்.
13. கழிவுப்பொருட்களைக் குவிப்பதற்கு இடங்களை ஒதுக்குதல்.
14. சமுதாயக் கல்வியின் மேம்பாடு மற்றும் பள்ளிகளின் மேற்பார்வை.
15. புள்ளிவிவரச் செய்திகளைச் சேகரித்துப் பராமரித்தல்.
16. வீரிய வித்துக்களையும் உரங்களையும் வினியோகிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
17. தாய் சேய் நல (பிரசவ) விடுதிகளையும் இறைச்சிக் தொட்டிகளையும் பராமரித்தல்.
18. நிலச்சீர்திருத்தம், திட்டங்களின் செயற்பாட்டில் உதவியினை வழங்குதல்.
19. அம்மை ஊசி, காலரா ஊசி மற்றும் கொள்ளை நோய்களுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

### தன் விருப்பப் பணிகள்

கிராமப் பஞ்சாயத்தின் தன் விருப்பமான பணிகளுள் முக்கியமான சில பணிகள் பின்வருபவையாகும்.

1. சாலை ஓரங்களில் செடிகளை நட்டுப் பேணி வளர்த்தல்.
2. தர்மசாலைகள், ஓய்விடங்கள், விளையாட்டு மைதானங்கள், நூலகங்கள், படிப்பறைகள், பூங்காக்கள் போன்ற பிறவற்றை நிறுவிப் பராமரித்தல்.
3. சுகாதாரமற்ற வட்டாரங்களை மீட்பு செய்தல்.

4. சமூகக் கூடங்களை மேலாண்மை செய்தல்.

5. ஏழைகளுக்கு நிவாரணம் அளித்து பொதுச் சுகாதாரத்தைக் கவனித்துக் கொள்ளுதல்.

6. நெற்களஞ்சியங்களையும், தானியப்பயிர் கிடங்குகளையும் நிறுவுதல்.

7. கூட்டுறவுப் பண்ணை, குடும்ப நலத்திட்டம், கால்நடை வேளாண்மை ஆகியவற்றைத் தேர்ச்சியுறுமாறு செய்தல்.

8. பன்றி வளர்ப்பை ஒழுங்கு முறை செய்தல்.

9. தீண்டாமையை நீக்குதல்.

10. கிராமப் பஞ்சாயத்தின் துப்புறவுப் பணியாளர்களுக்கு இல்லங்களைக் கட்டிப் பராமரித்தல்.

## வருவாய் ஆதாரங்கள்

மேற்குறிப்பிட்டுள்ள பணிகளை ஆற்றி கிராமப் பஞ்சாயத்து செயல்படுவதற்கான நபர்கள், சொத்து மற்றும் வர்த்தகத்தின் மீது வரிகளை விதிப்பதற்கு அது அதிகாரம் தரப்பட்டுள்ளது. ஒரு கிராம பஞ்சாயத்து கீழ்வரும் ஆதாரங்களின் மூலமாக வருவாயை பெறுகின்றது.

1. கால்நடை மீதான வரி
2. கட்டிட வரி.
3. பஞ்சாயத்துச் சட்டங்களை மீறிய காரணத்தால் விதிக்கப்படும் அபராதங்கள்.
4. பஞ்சாயத்து முன் சமர்ப்பிக்கப்படும் சட்டமுறையிலான வழக்கிற்குச் செலுத்தப்படும் கட்டணங்கள்.
5. தனது எல்லைக்குள் கால்நடைகள் விற்பனை செய்வதற்கு விதிக்கப்படும் கட்டணங்கள்.
6. கிராமச் சொத்துடைமையிலிருந்து பெறப்படும் வாடகை
7. வட்டார வர்த்தக வரி
8. மாட்டு வண்டிகள் போன்ற ஊர்திகள் மீதான வரி
9. மாநில அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவி மானியங்கள்
10. மாநில அரசாங்கத்தினால் வழங்கப்பெறும் துணை மானியங்கள்.

கிராமப் பஞ்சாயத்தின் வருவாய் கிராமப் பஞ்சாயத்து நிதியில் செலுத்தப்படுகின்றது. அதன் பலவகையான பணிகளைச் செய்து முடிக்க தேவைப்படும் செலவினை இந்த நிதியிலிருந்து தான் பெறவேண்டும்.

ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தின் ஒரு செயல் அதிகாரியாக கிராம நிர்வாக அலுவலர் இருக்கிறார். அவர் மாநில அரசாங்கத்தினால் நியமனம் செய்யப்படுகிறார். அவர் கிராம பஞ்சாயத்தின் தீர்மானங்களை செயல்படுத்துகின்றார். அவர் கிராமப் பஞ்சாயத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாட்களைக் கட்டுப்பாடு செய்கிறார். தனது கடமைகளை ஆற்றுவதன் வாயிலாக அவர் தனது அதிகார எல்லைக்குட்பட்டு கிராமப் பஞ்சாயத்தின் அன்றாட நிர்வாகத்தையும் கவனித்துக் கொள்கிறார்.

## மதிப்பீடு

1992 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் (73 வது மற்றும் 74 வது திருத்தங்கள்) சட்டங்கள் பெரும்பாலான பரம்பரைக் குறைபாடுகளை அகற்றியுள்ளன. நமது நாட்டில் மாநில அரசாங்கங்கள் கிராம புற மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளை நிறுவ வேண்டும் என்பதை அரசியலமைப்பு கட்டாயமாக்கியுள்ளது. அவைகளின் அமைப்பு, தேர்தல்கள், பதவிக்காலம், பணிகள் முதலானவற்றை அரசியலமைப்பு உறுதி செய்துள்ளது. மேலும் சுதந்திரமான நிதி ஆணையங்கள், தேர்தல் ஆணையங்கள், திட்ட அமைப்புகள் போன்றவை மாநிலங்களின் பல நிலைகளில் உருவாக்கப்படுவதற்கும் அரசியலமைப்பில் முறையாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்திய தலைமைக் கணக்கு மற்றும் தணிக்கையாளரால் உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கு ஒரு ஏற்பாடும் உள்ளது. இவ்வேற்பாடுகள் அனைத்தும் இந்தியாவில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் எதிர்காலத்தின் மீது நல்லதோர் தாக்கத்தை ஏற்படுத்தி கொடுக்கக்கூடியதாகவும் உள்ளது. இவற்றின் விளைவாக மாநில அரசாங்கங்கள் தமது பஞ்சாயத்து மற்றும் நகராட்சி சட்டங்களைப் பொருத்தமான வகையில் திருத்தம் செய்துள்ளன. முறையாகவும் சீராகவும் உள்ளாட்சி தேர்தல்கள் நடைபெற்றுவருகின்றன.

மாவட்ட பஞ்சாயத்துகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளின் மொத்த எண்ணிக்கை ஆகிய விபரங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| **மாவட்ட பஞ்சாயத்துகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளின் மொத்த எண்ணிக்கை** | | | |
|---|---|---|---|
| வரிசை எண் | மாவட்ட பஞ்சாயத்துகள் | ஊராட்சி ஒன்றியங்கள் | ஊராட்சிகள் |
| 1. | காஞ்சிபுரம் | 13 | 648 |
| 2. | திருவள்ளூர் | 14 | 539 |
| 3. | கடலூர் | 13 | 681 |
| 4. | விழுப்புரம் | 22 | 1104 |
| 5. | வேலூர் | 20 | 753 |
| 6. | திருவண்ணாமலை | 18 | 860 |
| 7. | சேலம் | 20 | 385 |
| 8. | நாமக்கல் | 15 | 331 |
| 9. | தர்மபுரி | 8 | 251 |
| 10. | கிருஷ்ணகிரி | 10 | 337 |
| 11. | ஈரோடு | 20 | 343 |
| 12. | கோயம்புத்தூர் | 19 | 389 |
| 13. | நீலகிரி | 4 | 35 |
| 14. | தஞ்சாவூர் | 14 | 589 |
| 15. | நாகப்பட்டினம் | 11 | 434 |

| | | | |
|---|---|---|---|
| 16. | திருவாரூர் | 10 | 430 |
| 17. | திருச்சிராப்பள்ளி | 14 | 408 |
| 18. | கரூர் | 8 | 158 |
| 19. | பெரம்பலூர் | 10 | 22 |
| 20. | புதுக்கோட்டை | 13 | 498 |
| 21. | மதுரை | 13 | 431 |
| 22. | தேனி | 8 | 130 |
| 23. | திண்டுக்கல் | 14 | 306 |
| 24. | இராமநாதபுரம் | 11 | 429 |
| 25. | விருதுநகர் | 11 | 450 |
| 26. | சிவகங்கை | 12 | 445 |
| 27. | திருநெல்வேலி | 19 | 425 |
| 28. | தூத்துக்குடி | 12 | 408 |
| 29. | கன்னியாகுமரி | 9 | 99 |
| | மொத்தம் | 385 | 12618 |

## பயிற்சி

### பகுதி – அ

**கோடிட்ட இடங்களை நிரப்புக:–**

1. 73 வது திருத்த சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு_____________.
2. உள்ளாட்சி அரசாங்கத்தின் தந்தை____________.
3. இந்திய அரசியலமைப்பின் ____________பிரிவு ஊராட்சி அமைப்பு பற்றிய சட்டத்தை விளக்குகிறது.

### பகுதி – ஆ

4. நகரியம் என்பதை விளக்குக.
5. நகர எல்லைப்பகுதி குழுக்கள் பற்றி விவரிக்க.
6. எல்லைப்பகுதி குழுக்கள் பற்றி விவரிக்க.

### பகுதி – இ

7. நகராட்சி பற்றி சிறுகுறிப்பு வரைக.
8. இராணுவக்கூட வாரியங்கள் பற்றி விவரிக்க.
9. உள்ளாட்சி அரசாங்கத்தின் பணிகள் யாவை ?
10. உள்ளாட்சி அரசாங்கத்தின் முக்கியத்துவத்தை விவரிக்க.

### பகுதி –ஈ

11. கிராமப் பஞ்சாயத்தின் கட்டாயமான பணிகள் மற்றும் தன் விருப்பப் பணிகள் பற்றி கட்டுரை வரைக.

# அத்தியாயம் 10
# 21 ஆம் நூற்றாண்டில் இந்தியா

இந்தியா 20–வது நூற்றாண்டுக் காலத்தில் குறிப்பாக அந்த நூற்றாண்டின் இரண்டாவது பகுதியில் சமூகப் பொருளாதாரக் களங்களில் மிகவும் குறிப்பாக விவசாயம் மற்றும் அரசியல் களங்களில் பல மேம்பாடுகளைக் கண்டுள்ளது. இந்தியர்கள் ஒருமைப்படுவதில் செல்வாக்கு செலுத்தவும், அவர்களின் தேசியநிலை மற்றும் சுதந்திரத்தை அடைவதை நோக்கிப் பல்வேறு நடவடிக்கைகளை துவக்கவும் பன்மையில் ஒற்றுமை என்பது முக்கியமான காரணியாக இருந்தது. அது கிட்டத்தட்ட வெளிநாட்டவர்களை நாட்டிலிருந்து விரட்டுகின்ற போராட்டத்தின் உருவிலும், குறிப்பாக 1947 லிருந்து மிகவும் குறிப்பாக அரசியலின் குடியரசு மாதிரி தொடங்கப்பட்டதிலிருந்து பல கோடிக்கணக்கான மக்களுக்காக வாழ்வு மற்றும் பாதுகாப்பை வழங்கும் நிலவுகின்ற முறைமைகள் மற்றும் நிறுவனங்களை மாற்றியமைக்கும் உருவிலும் இருந்தது.

இந்திய மக்களது வாழ்வின் ஒவ்வொரு பகுதியும் மிக நீண்ட தன்மையுடையதாக இருந்தது. அவர்களுக்கு முன்பு பொருளாதார மேம்பாட்டின் மிகப்பெரிய பணி இருந்தது. பாதுகாப்புடன் கூடிய பொருளாதார வளமை, சமூக இணக்கம் மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை நோக்கி நடைபோடுவதற்கு, பல தலைவர்களுக்கிடையே பண்டித ஜவஹர்லால் நேரு, இராஜேந்திரப்பிரசாத், பட்டேல் மற்றும் அம்பேத்கர் போன்ற சிறந்த மனிதர்கள் மற்றும் எதிர்கால நோக்கர்கள் 50 மற்றும் 60–களில் தொடங்கி அவர்களால் முடிந்த அளவு மக்களுக்காகப் பலதிட்டங்களை தீட்டி நிறைவேற்றினர். ஆனால், அவைகளைச் சாதிக்கும் முயற்சியில் மிகக் கடினமான சவால்களை அவர்கள் சந்திக்க நேர்ந்தது. குறை கூறுபவர்களின் கருத்துகள் இருந்தும் அதிர்ஷ்டவசமாக அவர்கள் அதை சரிசெய்தார்கள் மற்றும் ஒரு ஸ்திரமான வளர்ச்சி சகாப்தத்திற்கு வழிகாட்டியாகவும் இருந்தார்கள். இருப்பினும், சுதந்திர இந்தியாவின் இந்தக் காலம் நீண்ட நாள் நீடிக்கவில்லை. தேசத்தின் ஸ்திரத்தன்மைக்கும் மக்களின் ஒருமைப்பாட்டிற்கும் மிகவும் கடினமான சூழ்நிலைகளின் மூலம் பொறுப்பு மற்றும் வழிகாட்டலைப் பெற்றிருந்த நலிந்த தலைவர்களுடன் கூடிய நிலையற்ற காலத்தால் அது தொடரப்பட்டது. ஆனால், மிகச் சமீபத்தில், அடல் பிகாரி வாஜ்பாயால் தலைமைவகித்த தேசிய ஜனநாயக கூட்டணி அரசாங்கத்தில் இந்திய அரசியல் முறைமை மற்றும் அதன் நிறுவனங்களின் மேன்மை இருந்தது. இந்தக் காலத்தில், உள்நாடு மற்றும் பன்னாட்டளவில் செயல்பாட்டின் பல களங்களில் அனைத்துப் பகுதி வளர்ச்சியை இந்தியா கண்டது என்று கூறப்பட்டது. இந்தியாவின் அண்டை நாடுகளுடன் நெருக்கமான ஒத்துழைப்பையும், அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா மற்றும் சீனா போன்ற நாடுகளுடன் நோக்கம் செரிந்த நேர்மறையான உறவையும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கை ஏற்படுத்தியது என்று மேலும் கூறப்பட்டது.

பிரதம மந்திரியாக முனைவர் மன்மோகன் சிங்கின் சீரிய தலைமையிலும், பல்வேறு தேசிய மற்றும் பிராந்திய அரசியல் கட்சிகளை சேர்ந்த பல சிறந்த உறுப்பினர்களும் இடம்பெற்றுள்ள ஆளுவோரின் ஒரு புதிய அமைப்பில் இந்திய வாக்காளர்களின் நன்னம்பிக்கையை மே–2004ல் மக்களவைக்கு நடந்த தேர்தல்கள் கண்டன. பிராந்தியக் கட்சிகளின் ஆதிக்கம் நடக்கின்ற மற்றும் வெளியிலிருந்து தேசத்தை ஆள்வதிலும் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவதிலும் இடது மற்றும் வலதுசாரிக் கம்யூனிசக் கட்சிகளின் ஆவலான ஒரு பங்கைப் பெற்றிருக்கின்ற கணிக்கமுடியாத அல்லது எதிர்பாராத மேம்பாடாக

இது உள்ளது. தேசிய அரசாங்கத்தை எந்நிலையிலும் குறை கூறுகின்ற பலரின் இயல்பான கருத்தாக இது உள்ளது. இருப்பினும், அமைப்புக் கூறுகளின் ஒத்துழைப்பு வழங்கப்பட்ட தற்போதைய ஐக்கிய முற்போக்கு அரசாங்கம் சிறந்து செயல்படும் எனத் தோன்றுகிறது. வருகின்ற வருடங்களில் ஒரு சிறந்த இந்தியாவைச் சாதித்து இந்தியர்களுக்கு உதவுவதற்கு 21–ஆம் நூற்றாண்டிலுள்ள அரசாங்கம் முன்னேற முடியும். பொருத்தமான திட்டங்களை துவக்கமுடியும். மற்றும் திட்டவட்டத்துடன் அவைகளை நிறைவேற்ற முடியும் என்று ஒவ்வொருவரும் நம்ப முடியும்.

## 10.1 தற்போதைய நிலை

உறுதியான சாதனைகள் மூலமாக திருப்திகரம் அல்லது அதிக திருப்திகரமான முடிவுகளை அடைந்துள்ள இந்தியாவில் உள்ள சில களங்கள் பின்வருகின்றன. இவைகள், இச்சிறந்த நாட்டின் எதிர்காலத்திற்கான ஒரு வழிகாட்டியாக உதவவும் பணிபுரியவும் முடியும். சமூக மேம்பாடு, பொருளாதார வளர்ச்சி, அரசியல் மாற்றம் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம் போன்றவைகள் கணக்கில் எடுக்கப்பட்ட மற்றும் ஆராயப்பட்ட களங்களாகும். இவைகள் ஒவ்வொன்றும் ஒரு தெளிவான புரிதிறனுக்காக சில துணைக் களங்களினடியில் விளக்கப்பட்டு பகுத்தாயப்படுகிறது.

### 1. சமூக மேம்பாடு

பொதுவாகவே, பல்வேறு தன்மைகளில் பல்வேறு ஜாதிகள், மதங்கள், மொழிகள், கலாச்சாரங்கள் மற்றும் இனங்கள் நிலவுகின்ற ஒரு பன்மைச் சமூகமாக இந்தியா உள்ளது. உலகில் மக்கட்தொகை ரீதியாக சீனாவிற்கு அடுத்து இரண்டாவது பெரிய நாடாக இந்தியா இருக்கிறது. 1872–ல் முதலாவது அகில இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பு முடிக்கப்பட்டது. 1881–லிருந்து ஒவ்வொரு பத்து வருடத்திற்கு ஒருமுறை மக்கள்தொகை கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு வருகிறது. 1920–வரை இந்தியாவின் மக்கள்தொகை மெதுவாக வளர்ந்தது. 1911–லிருந்து 1920 வரையிலான பத்து ஆண்டுகளிலும் மற்றும் 1921–லிலும் பரவும் நோய்கள் நிலவியதற்கிணங்க மக்கள்தொகை வளர்ச்சியில் சரிவு இருந்தது. அட்டவணை 1ல் காட்டியுள்ளதைப் போல சுதந்திரத்திற்குப் பின்பு மக்கள்தொகை வளர்ச்சி மிக அதிக அளவு இருந்திருக்கிறது.

மேலும், 2001ன் மக்கள்தொகை கணக்கெடுப்பிற்கிணங்க, இந்தியாவின் மக்கள்தொகை 102.7 கோடியாக இருந்தது. அது 1991–ன் மக்கள்தொகை மீது 21.34 சதவீதம் அதிகரித்திருந்தது. அதே காலத்தில் இறப்பு விகிதம் குறைந்திருந்ததாலும் வாழ்வு எதிர்பார்ப்பு அதிகரித்திருந்ததாலும் இவ்வதிகரிப்பு இருந்தது. 2001–ன் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, கவன ஈர்க்கும் விவரங்கள் சில பின்வருகின்றன.

அ. நாட்டின் ஒட்டுமொத்தத்திற்கான சராசரி மக்கள் தொகை நெருக்கம் ஒரு சதுர கிலோமீட்டருக்கு 324 நபர்கள் ஆகும்.

ஆ. ஒரு சதுர கிலோமீட்டருக்கு 9294 நபர்களுடன் மிக அதிகமான மக்கள் நெருக்கத்தை டெல்லி பெற்றுள்ளது.

இ. மாநிலங்களுக்கிடையே, 904 நபர்களின் மிக அதிகமான நெருக்கத்தை மேற்கு வங்கம் பெற்றிருக்கும் வேளையில், அருணாச்சலப் பிரதேசத்தில் ஒரு சதுர கிலோமீட்டருக்கு அது 13 நபர்களாக உள்ளது.

அட்டவணை 1 – பத்தாண்டுகளுக்கு ஒருமுறை இந்திய மக்கள் தொகையும் வளர்ச்சி விகிதமும்

| வருடம் | மக்கள் தொகை (மில்லியனில்) | பத்துவருட வளர்ச்சி விகிதம் (% ) | சராசரி வருடாந்திர வளர்ச்சி விகிதம் (%) |
|---|---|---|---|
| 1921 | 251.3 | -0.31 | -0.03 |
| 1931 | 278.9 | 11.00 | 1.04 |
| 1941 | 318.6 | 14.22 | 1.33 |
| 1951 | 361.0 | 13.31 | 1.25 |
| 1961 | 439.2 | 21.51 | 1.96 |
| 1971 | 548.1 | 24.80 | 2.20 |
| 1981 | 683.3 | 24.66 | 2.22 |
| 1991 | 846.3 | 23.85 | 2.14 |
| 2001 | 1027.0 | 21.34 | 1.90 |
| 2011 | 1210.19 | 17.64 | 1.64 |

ஈ. நகரங்களுக்கிடையே கல்கத்தா, சென்னை, மும்பை, ஹைதராபாத், டெல்லி, சண்டிகர் மற்றும் பெங்களூர் சதுர கிலோமீட்டருக்கு 2000 நபர்களுக்கு அதிகமாக மக்கள் நெருக்கத்தைப் பெற்றுள்ளன.

உ. நாட்டின் சராசரியான ஆண் பெண் விகிதம் 1000 ஆண்களுக்கு 933 பெண்களாக உள்ளது. 1000 ஆண்களுக்கு 1058 பெண்களின் அதிக விகிதத்தை கேரளா பெற்றுள்ளது. 1000 ஆண்களுக்கு 861 பெண்களின் குறைந்த விகிதத்தை ஹரியானா பெற்றிருக்கிறது.

ஊ. நாட்டின் ஒட்டுமொத்தத்திற்கான சராசரி படிப்பறிவு 65.38 சதவிகிதமாக உள்ளது. படிப்பறிவு விகிதம் 90.92 சதவிகிதத்துடன் கேரளாவில் மிக அதிகமாக உள்ளபோது, 47.53 சதவிகிதத்துடன் மிகக்குறைந்ததை பீகார் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் படிப்பறிவு 73.47 சதவிகிதமாக உள்ளது.

மக்கள்தொகைக் கொள்கையை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் டாக்டர். எம்.எஸ். சுவாமிநாதன் என்பவரைத் தலைவராகக் கொண்ட ஒரு நிபுணர் குழுவை இந்திய அரசாங்கம் நியமித்தது. அக்குழு 1994–ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் நாள் பின்வருகின்ற பரிந்துரைகளைச் செய்தது.

1. மக்கள்தொகை ஸ்திரத்தன்மை என்பது கொள்கையின் நோக்கமாகத் தொடரவிருக்கும். ஆனால், பரவலாக்கப்பட்ட நிறுவனங்களின் ஈடுபாட்டுடன் சமூக மேம்பாடு மீதான ஒரு பலமான வலியுறுத்தலின் மூலம் அது வென்றெடுக்கப்பட வேண்டும்.
2. குடும்ப கட்டுப்பாட்டுத்திட்ட யுக்திகள் குறைந்தபட்ச தேவைகளின் பகுதியுடன் இணைக்கப்பட வேண்டும்.
3. குழந்தைத்திருமணம், வரதட்சணை மற்றும் பிற சமூகக் கொடுமைகளை ஒழிப்பதின் மீது சிறந்த வலியுறுத்துதல்.
4. குறிப்பிட்ட இலக்குகள் மற்றும் ரொக்க ஊக்குவித்தல்களை தேசிய முறையுடன் பகிர்ந்தளித்தல்.

5. மக்கள்தொகையுடன் கலந்த சமூக மேம்பாட்டு இலக்குகளை வடிவமைப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளை ஏற்றுக்கொள்ளல். மற்றும்

6. சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துடன் தொடர்புள்ள துறைகளை மாற்றியமைக்கக்கூடிய விண்வெளி ஆணையம் மற்றும் அணுசக்தி ஆணையம் போல மக்கள்தொகை மற்றும் சமூக மேம்பாட்டு ஆணையம் என்ற ஒரு உயர்ந்த அமைப்பை நிறுவுதல்.

பின்வருகின்ற நோக்கங்களுடன் தேசிய மக்கள்தொகைக் கொள்கையை (NPP) பிப்ரவரி 2000–ல் இந்திய அரசாங்கம் அறிவித்தது.

1. கர்ப்பத்தடை, சுகாதார நலக்கட்டுமானம், அடிப்படை மறுஉற்பத்தி மற்றும் குழந்தை சுகாதாரக் கவனத்திற்கான நிறைவேற்றாத தேவைகளை நிவர்த்தி செய்வது உடனடியான நோக்கமாக உள்ளது.

2. 2010ல் 2.1% விகிதமாக மாற்றும் அளவிற்கு மொத்த மகப்பேறு விகிதத்தை (TFR) கொண்டுவருவது நடுத்தரக் கால நோக்கமாக உள்ளது. மற்றும்

3. சீரான பொருளாதார வளர்ச்சி, சமூக மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற தேவைகளுடன் நிலையான அளவில் 2045–ல் ஒரு ஸ்திரமான மக்கள்தொகையைச் சாதிப்பது நீண்டகால நோக்கமாக உள்ளது.

அதன் விளைவாக பிரதம மந்திரியைத் தலைவராகவும், மாநில முதலமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள், அரசுசாரா நிறுவனங்கள், மக்கட்தொகை நிபுணர்கள் மற்றும் பொதுச் சுகாதார பணியாளர்கள் போன்றோரை உறுப்பினர்களாகவும் பெற்றுள்ள மக்கள்தொகை மீதான ஒரு தேசிய ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையத்தில் 100க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் அந்தக் கொள்கையை அமுலாக்கத்தை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்கின்றனர். மேலும், அக்கொள்கையை அமுல்படுத்துவதில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதான பங்கினையும் வலியுறுத்துகிறது. சிறந்த செயல்பாட்டிற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பரிசளித்தல், குடும்பக் கட்டுப்பாடு செய்கின்ற தாய்மார்களுக்கும் மற்றும் ஜோடிகளுக்கும் ரொக்க ஊக்கங்கள் மற்றும் இதுபோன்றவைகள் அந்தக் கொள்கையில் கூறப்பட்டுள்ள சில சிறந்த மற்றும் ஊக்குவிக்கும் செயல்பாடுகளாக உள்ளன.

## சாதனைகள்

உண்மையில், கடந்த ஐம்பது ஆண்டுகளில் மக்கள்தொகையைக் கட்டுப்படுத்துவதற்குத் தேசிய குடும்பநலத் திட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியை இந்தியா சாதித்துள்ளது. உதாரணங்கள்.

1. 1951–ல் 40.8 ஆக இருந்த தோராய பிறப்பு விகிதம் 2000–ல் 25.8 ஆகக் குறைந்துள்ளது.

2. 1951–ல் 1000க்கு 146 ஆக இருந்த குழந்தை இறப்பு விகிதம் 2000–ல் 1000–க்கு 68– ஆகக் குறைந்துள்ளது.

3. 1951–ல் 25 ஆக இருந்த தோராய இறப்பு விகிதம் 2000–ல் 8.5 ஆகக் குறைந்துள்ளது.

4. 1951–ல் 37 வருடமாக இருந்த ஒரு சராசரி இந்தியரின் வாழ்வு எதிர்பார்ப்பு 2000–ல் 67 வருடமாக உயர்ந்துள்ளது. மற்றும்

5. 1951–ல் 6.0 ஆக இருந்த மொத்த மகப்பேறு விகிதம் (TFR– ஒரு பெண்ணின் வாழ்க்கைக் காலத்தில் பிறக்கும் சராசரி எண்ணிக்கையிலான குழந்தைகள்) 2000–ல் 2.8 ஆகக் குறைந்துள்ளது.

## வறுமை ஒழிப்பு

1997–ஆம் ஆண்டின் மனித மேம்பாட்டு அறிக்கைக்கிணங்க, ''வறுமை என்பது ஒரு நீண்ட, சுகாதாரமான மற்றும் ஆக்கப் பூர்வமான வாழ்வை நடத்துவதற்கும், நியாயமான வாழ்க்கைத்தரம், சுதந்திரம், மாண்பு, சுயமரியாதை மற்றும் மற்றவரை மதித்தல் போன்றவற்றை அனுபவிப்பதற்கும் உரிய வாய்ப்புகளை மறுத்தல் ஆகும்''. முழுமையான வறுமை மற்றும் தொடர்பு வறுமை என இரண்டு வகைகள் உண்டு. வழக்கமாக வருமானம் மூலமாக கணக்கிடப்படும் குறைந்தபட்சத் தேவைகளின் குறிப்பிட்ட முழுமையான தரங்களை ஒரு மனிதன் பெற முடியாதது முழுமையான வறுமை எனப்படும். ஒரு நபர் மற்றவர்களுக்கு பின்தங்குவது தொடர்பு வறுமை எனப்படும். இவ்வாறாக, வருமான ஏற்றத்தாழ்வின் அளவாக அது உள்ளது. எனவே, வறுமையின் ஒரே அளவாக மட்டும் வருமானம் இருக்கிறது. ஒரு மனிதன் தனது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாததே வறுமை என்று கூறும்

**அட்டவணை 2 – 1999 – 2000ல் இந்தியாவில் குறிப்பிட்ட மாநிலங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள மக்கள்**

| வ.எண் | மாநிலம் | கிராமப்புறம் | நகர்ப்புறம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | ஆந்திரப்பிரதேசம் | 11.06 | 26.63 | 15.77 |
| 2. | அஸ்ஸாம் | 40.04 | 7.47 | 36.09 |
| 3. | பீகார் | 44.30 | 32.91 | 42.60 |
| 4. | குஜராத் | 13.17 | 15.59 | 14.07 |
| 5. | ஹரியானா | 8.27 | 9.99 | 8.74 |
| 6. | கர்நாடகா | 17.38 | 25.25 | 20.04 |
| 7. | கேரளா | 9.38 | 20.27 | 12.72 |
| 8. | மத்தியப்பிரதேசம் | 37.06 | 38.44 | 37.43 |
| 9. | மகாராஷ்ட்ரா | 23.72 | 26.81 | 25.02 |
| 10. | ஒரிஸ்ஸா | 48.01 | 42.83 | 47.15 |
| 11. | பஞ்சாப் | 6.35 | 5.75 | 6.18 |
| 12. | இராஜஸ்தான் | 13.74 | 19.85 | 15.28 |
| 13. | தமிழ்நாடு | 20.55 | 22.11 | 21.12 |
| 14. | உத்திரப்பிரதேசம் | 31.22 | 30.89 | 31.15 |
| 15. | மேற்குவங்காளம் | 31.85 | 14.86 | 27.02 |
| | **அகில இந்தியா** | **27.10** | **23.60** | **26.10** |

அடிப்படைத் தேவைகள் அணுகுமுறை மற்றொரு அணுகுமுறையாக உள்ளது. திட்ட ஆணையத்தின் பணிக்குழு வறுமையை ''வாழ்வின் குறைந்தபட்ச நிலை'' மூலமாக இலக்கணப்படுத்தியது. அது நுகர்வின் தனியான ஆதாரங்களை மட்டுமல்லாமல் சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற பொது ஆதாரங்களையும் உள்ளடக்குகிறது. 1999–2000–ல் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள நபர்களின் சதவிகிதத்தை சில குறிப்பிட்ட மாநில வாரியாக அட்டவணை 2 காட்டுகிறது.

இந்திய வறுமை பிரதானமாகக் கிராமப்புறம் சார்ந்ததாக இருக்கிறது. 1972–73 ல் 51.5 சதவிகிதமாக இருந்த வறுமைக்கோட்டிற்குக் கீழான மக்கள்தொகை 1993–94ல் 18.90 சதவிகிதமாகக் குறைந்தது என்று திட்ட ஆணையம் மதிப்பிட்டது. ஆனால், 1999–2000ல் அது 26.10 சதவிகிதமாக இருந்தது. சரியாகக் கூறினால், 1971லிருந்து கிட்டத்தட்ட 30 வருடங்களில்

**அட்டவணை 3 இந்திய அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட வறுமை ஒழிப்புத் திட்டங்கள்**

| வ.எண் | திட்டம் | அறிமுக வருடம் |
|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP) | 1978 |
| 2. | சுய வேலைவாய்ப்பிற்கான கிராமப்புற இளைஞர்களின் பயிற்சி (TRYSEM) | 1979 |
| 3. | தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் (NREP) | 1980 |
| 4. | கிராமப் புறங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் மேம்பாடு(DWCRA) | 1982 |
| 5. | கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்திரவாதத் திட்டம் (RLEGP) | 1983 |
| 6. | இந்திரா அவாஜ் யோஜனா(IAY) | 1985 |
| 7. | ஜவஹர் ரோஜ்கார் யோஜனா (JRY) | 1989 |
| 8. | பிரதம மந்திரியின் ரோஜ்கார் யோஜனா (PMRY) | 1993 |
| 9. | மில்லியன் கிணறுகள் திட்டம்(MWS) | 1996 |
| 10. | கங்கா கல்யாண் யோஜனா (GKY) | 1997 |

வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்கள்தொகை 300 மில்லியனிலிருந்து 260 மில்லியனாக சரிந்துள்ளது. அட்டவணை 3ல் குறிப்பிட்டுள்ளதைப் போல, இந்திய அரசாங்கம் பல்வேறு திட்டங்களை உருவாக்கி அமுல்படுத்தியுள்ளது.

இவ்வாறாக, பொருத்தமான கொள்கைகள் மற்றும் திட்டங்களின் உருவாக்கல் மற்றும் அமுலாக்கத்துடன் சமூகப்பிரச்சினைகளைப் போக்குவதற்கு மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் முயற்சித்துக் கொண்டு வருகின்றன.

## II. பொருளாதார வளர்ச்சி

இந்தியப் பொருளாதாரம் பொதுத்துறைகளையும் தனியார் துறைகளையும் உள்ளடக்குகின்ற கலப்புப் பொருளாதாரமாகும். ஒரு சமதர்ம சமுதாயத்தைச் சாதிப்பது முன்னாள் நோக்கமாக இருந்தது. இருப்பினும் சமீப போக்குகள் தாராளமயம், உலகமயம் மற்றும் தனியார்மயத்தை நோக்கி உள்ளன. அதிகபட்ச வளர்ச்சியை சாதிப்பதற்கான இவ்வித

முறைகளின் மீது கலந்துள்ள வேளையில் இந்த மாற்றம் தவிர்க்கமுடியாததாக வந்துள்ளது. இங்கே, இந்தியாவில் பொருளாதார வளர்ச்சியின் சில களங்களை நாம் விவாதிக்கலாம்.

## விவசாயம்

பொருளாதார மேம்பாட்டின் முதுகெலும்பாக விவசாயம் உள்ளது. கச்சாப் பொருட்களுடனான அதிக எண்ணிக்கையுள்ள தொழில்களை விவசாயம் ஏற்படுத்தியது. அதனால் அது நாட்டின் தொழில் மேம்பாட்டிற்கு முக்கியமானதாக உள்ளது. இந்தியாவில் 64% சதவிகித உழைப்புச் சக்திக்கு அது நேரடி வாழ்வளிக்கிறது என்பது இந்திய விவசாயத்தின் இயல்பான தன்மையாகும். இந்திய ஏற்றுமதியின் மொத்த மதிப்பில் கிட்டத்தட்ட 18 சதவிகிதம் அது உள்ளது. தேனீர், காப்பி, புகையிலை, முந்திரிப்பருப்பு, நறுமணப்பொருட்கள், பருத்தி மற்றும் சர்க்கரை போன்றவைகள் அடங்கிய 13 முக்கியப் பொருட்களில் விவசாய ஏற்றுமதிகள் உள்ளன. திடச் சுற்றுச்சூழலில் உள்ள வேறுபாடுகளுக்கிணங்க, இந்தியாவில் பல்வேறு பயிர்கள் பயிரிடப்படுகின்றன. நெல், கோதுமை, மக்காச்சோளம், பார்லி, கரும்பு, பருத்தி, சணல், பயிர்வகைகள், தேனீர், காப்பி, ரப்பர், பட்டு மற்றும் புகையிலை போன்றவைகள் முக்கியமான பயிர்களாக உள்ளன.

முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் விளைவாக விவசாயத்தில் பசுமைப்புரட்சி சாதிக்கப்பட்டது. ஜீலை 2000–ல் இந்திய அரசாங்கம் அதன் புதிய விவசாயக் கொள்கையை (NAP) அறிவித்தது. நடப்பிலுள்ள 1.5 சதவிகித விவசாய வளர்ச்சியை 2005–ல் 4 சதவிகிதத்திற்கு மேல் அதிகரிப்பதற்கு அது நோக்கம் கொண்டுள்ளது. ஒப்பந்தப் பண்ணை மற்றும் நிலக்குத்தகை ஏற்பாடுகள் மூலமாக தனியார்துறை பங்கேற்பை மேம்படுத்துவதற்கு அது நாடுகிறது. மேலும், உள்நாட்டு விவசாயச் சந்தைகளின் மீதான அனைத்து கட்டுப்பாடுகளையும் சிக்கலான சட்டங்களையும் போக்குவதற்கு அது நாடுகிறது. அதனால் விவசாயிகள் தங்களின் உற்பத்திப் பொருள்களுக்கு லாபகரமான விலையைப் பெறலாம்.

## தேசிய வருமானம்

ஒரு நாட்டின் உண்மையான வருமானம் என்பது அந்த நாட்டில் உற்பத்தியான மொத்த பொருட்கள் மற்றும் பணிகளைக் குறிக்கும். இவ்விதப் பொருட்களும் பணிகளும் பல்வேறு அளவைகளில் வருவதால், ஒட்டுமொத்தத்தையும் ஒரு பொது அளவையில் அளப்பது இயலாமல் உள்ளது. ஆதலால், மதிப்புகள் பண ரீதியாக வெளிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறாக, தேசிய வருமானம் என்பது ஒரு வருடத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து இறுதியான பொருட்கள் மற்றும் பணிகளின் பணமதிப்பாக உள்ளது. இந்தியாவில் ஒரு அடிப்படை வருடத்துடன் நிலையான விலைகளில் தேசிய வருமானம் கணக்கிடப்படுகிறது. அடிப்படை வருடம் 1993–94 ஆகும்.

## தொழில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

நடைமுறையில் இந்தியாவில் பல தொழில்களின் மேம்பாட்டிற்கான அடித்தளத்தைப் பலவகையான விவசாய மற்றும் சுரங்க கச்சாப் பொருட்கள் ஏற்படுத்தியுள்ளன. தொழில்களின் மேம்பாட்டில் செயல்படுவதற்கு ஒரு சிறந்த பங்கை அரசு பெற்றிருந்தது என்ற கருத்து ஜவஹர்லால் நேருவை தலைவராகக் கொண்ட தேசிய திட்டக்குழுவின் (1950) அறிக்கையில் காணப்பட்டது. இது தொழில் கொள்கையின் (1945) அறிக்கையில் வலியுறுத்தப்பட்டது. சுதந்திர இந்தியாவில் தொழில் நிகழ்வுகளை அமைத்ததில் சில பிரதான துவக்கங்கள் பின்வருகின்றன.

1. தொழில் கொள்கைத் தீர்மானம், 1948
2. தொழில்கள் மேம்பாடு மற்றும் தீர்மான சட்டம், 1951
3. தொழில் கொள்கைத் தீர்மானம், 1956
4. தொழில் கொள்கை அறிக்கை, 1973
5. தொழில் கொள்கை அறிக்கை, 1977
6. தொழில் கொள்கை அறிக்கை, 1980 மற்றும்
7. புதிய தொழில் கொள்கை, 1991.

இந்தியா அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் அறிவியல் ஆய்வு தொழில்நுட்ப மையங்களை நிறுவுதல், கருவிகளை நவீனப்படுத்துதல், ஹைட்டரஜன் மற்றும் நைட்ரஜன் குண்டுகளைத் தயாரித்தல், விண்வெளி ஆய்வு மற்றும் மேம்பாடு, இன்னும் இது போன்ற பலவற்றின் மூலமாக மேம்பாடு அடைந்துள்ளது.

## திட்டமிடல்

அரசியல் முறைமை, அரசியல் மற்றும் ஆளுமையின் சிறப்புகள் தொடர்பாக பிரிட்டனின் உதாரணத்தை இந்தியா பின்பற்றியது. இருப்பினும், இதுவரையிலான பொருளாதார மற்றும் விவசாய மேம்பாடு தொடர்பாக, முன்னுரிமைத் திட்டமிடல் மற்றும் முறையான அமுலாக்கத்தை வலியுறுத்திய சோவியத் முன் மாதிரியை அது பின்பற்றியது. திட்டமிட்ட மேம்பாட்டின் ரஷ்ய முறையின் ஆதரவாளராகச் சமதர்மவாதியான பண்டித ஜவஹர்லால் நேரு இருந்தார். அவரின் முயற்சியால் இந்தியாவில் திட்டமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதுவரை ஒன்பது திட்டங்கள் செயல்பாட்டில் இருந்தன. மற்றும் தற்போது பத்தாவது திட்டம் நடைமுறையில் உள்ளது. ஐந்தாண்டுத் திட்டங்களையும் அவைகளின் முன்னுரிமைகளையும் அட்டவணை –4 காண்பிக்கிறது.

**அட்டவணை 4 – ஐந்தாண்டுத் திட்டங்களும் முன்னுரிமைகளும்**

| **ஐந்தாண்டுத்திட்டங்கள்** | **முன்னுரிமைகள்** |
|---|---|
| முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் 1951–56 | விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் மின்சாரத் திட்டங்கள் |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் 1956–61 | தொழில் |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் 1961–66 | அடிப்படைத் தொழில்கள் |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் 1969–74 | பங்கீட்டு நிதியுடன் வளர்ச்சி |
| ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் 1974–79 | வறுமை ஒழிப்பு மற்றும் சுயசார்பு |
| ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் 1980–85 | வறுமை ஒழிப்பு |
| ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் 1985–90 | வேலைவாய்ப்பை உருவாக்குதல் |
| எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் 1992–97 | 2000–ல் முழு வேலைவாய்ப்பை சாதிக்கும் வேலையை உருவாக்குதல் |
| ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் 1997–2002 | சமூக நீதியுடன் வளர்ச்சி மற்றும் சமத்துவம் |
| பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் 2002–07 | வறுமை மற்றும் மக்கள் தொகை வளர்ச்சியைக் குறைத்தல் |

1966–லிருந்து 1969 வரையிலும் மற்றும் 1990–லிருந்து 1992 வரையிலும் திட்ட விடுமுறை இருந்தது. திட்டங்களின் சோதனையான அனுபவத்திற்குப் பின்னர், மூன்று வருடங்களாக திட்ட விடுமுறை அறிவிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் வருடாந்திரத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டன என்பது அதன் பொருளாகும். பசுமைப் புரட்சி, பணவாட்டத்தைக் குறைத்தல் மற்றும் வங்கிகளை தேசியமயமாக்குதல் போன்றவைகள் அந்தக் காலகட்டத்தில் பிரதான வளர்ச்சிப் படிகளாக இருந்தன.

## III. அரசியல் மாற்றம்

இங்கே, அரசியல் மாற்றத்தை குறிப்பாக அரசியலமைப்பு மாற்றங்களின் மூலமாக நாம் படிக்கலாம். ஆகஸ்ட் 15, 1947 வரை இந்தியா பிரிட்டிஷாரால் ஆளப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சித் தன்மையின் விவரங்கள் வரலாற்றிலிருந்து நிர்ணயிக்கப்பட முடிந்தது. ஒரு புதிய அரசியலமைப்பை வரையும் பணி இந்திய அரசியலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்பட்டது. பண்டித நேரு, அம்பேத்கர், பட்டேல், கிருஷ்ணமாச்சாரி மற்றும் பல சிறந்த உறுப்பினர்களை அது பெற்றிருந்தது. அதன் தலைவராக இராஜேந்திரப்பிரசாத் இருந்தார். அது இறுதியாக நவம்பர், 26, 1949–ல் புதிய அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டது. அப்புதிய அரசியலமைப்பு ஜனவரி 26, 1950–ல் நடைமுறைக்கு வந்தது. அப்போதிருந்து, கூட்டாட்சி மற்றும் ஒற்றையாட்சித் தன்மைகளுடன் இந்தியா ஒரு இறைமையான, சமதர்ம, மதச்சார்பற்ற, ஜனநாயக மற்றும் குடியரசு நாடாகத் திகழ்ந்து வருகிறது.

இந்திய அரசியலமைப்பு மிகவும் பெரியதாகும். அரசியலமைப்பின் செயல்பாட்டுக் காலத்தில், திருத்தங்கள் மூலமாக பல்வேறு மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அம்மாற்றங்களில் மிகவும் முக்கியமானது, இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் பஞ்சாயத்துராஜ் மற்றும் நகராட்சி முறைகளை அறிமுகப்படுத்துவது கட்டாயத் தேவை என்பதை வலியுறுத்தும் 73 மற்றும் 74–வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டங்களாகும். குறிப்பிட்ட பகுதி மக்கள் தாங்கள் தொடர்புள்ள களங்களின் நிர்வாகத்தில் சிறப்பாக பங்கேற்பதற்கு இது ஊக்கமளிக்கிறது. பின்வருவன சில அரசியல் மற்றும் அரசியலமைப்பு மாற்றங்களாகும்.

### 1. அரசியலமைப்பின் பெரிதாக்கம்

இந்தியாவின் ஆரம்ப அரசியலமைப்பு ஒரு முகவுரை, 22 பகுதிகள், 395 விதிகள் மற்றும் 8 அட்டவணைகளைப் பெற்றிருந்தது. தற்போது, அது ஒரு முகவுரை, 22 பகுதிகள், 444 விதிகள் மற்றும் 12 அட்டவணைகளைப் பெற்றுள்ளது. அது மட்டுமல்லாமல், விதி 368–க்கிணங்க, 100 முறைகளுக்கு மேல் அது திருத்தப்பட்டுள்ளது. எனவே, உலகில் மிகவும் விளக்கமான மற்றும் பெரிய அரசியலமைப்பு நமதே என்று நாம் பெருமையாகக் கூறுகிறோம்.

### 2. முகவுரையில் மாற்றங்கள்

ஆரம்ப அரசியலமைப்பின் முகவுரையில் இறைமை, ஜனநாயகம் மற்றும் குடியரசு போன்ற பிரதான கொள்கைகள் மட்டுமே இடம்பெற்றன. ஆனால், 1976–ஆம் ஆண்டின் நாற்பத்து இரண்டாவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் சமதர்மம் மற்றும் மதச்சார்பின்மை ஆகிய அடுத்த இரண்டு பிரதானக் கொள்கைகளை முகவுரையில் புகுத்தியது. எனவே, இந்தியா ஒரு இறைமையான, சமதர்ம, மதச்சார்பற்ற, ஜனநாயக மற்றும் குடியரசு நாடு என்று நாம் சொல்கிறோம். இதே போல, 42–வது திருத்தத்தால் அரசியலமைப்பின் முகவுரையில் ‘இந்தியாவின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு’ சேர்க்கப்பட்டுள்ளது.

### 3. அடிப்படை அமைப்புகளின் பராமரிப்பு

ஆரம்ப அரசியலமைப்பின் உள்ளதைப் போல கொள்கைகளின் அடிப்படை அமைப்புகள் எவ்வித குளறுபடியுமின்றி முறையாக பராமரிக்கப்பட்டு வருகின்றன. இறைமை, மதச்சார்பின்மை, சமதர்மம், மக்களாட்சி, குடியரசு, பாராளுமன்ற அரசாங்கமுறை, சட்டத்தின் ஆட்சி போன்றவைகள் அரசியலமைப்பின் சில அடிப்படை அமைப்புகளாகும். கேசவானந்த பாரதி எதிர் கேரள மாநிலம் என்ற வழக்கில் (1973), முகவுரையும் உள்ளடக்க அரசியலமைப்பின் எந்தப் பகுதியையும் பாராளுமன்றம் திருத்தலாம். ஆனால், அரசியலமைப்பின் அடிப்படை அமைப்புகள் எப்போதும் மாற்றப்படாமல் நிலவவேண்டும்.

### 4. அடிப்படைக் கடமைகள்

42–வது திருத்தத்தால், அரசியலமைப்பின் ஒரு புதிய பகுதி IV அ–வில் அடிப்படைக் கடமைகள் உள்ளடக்கப்பட்டன. மற்றும் ஒரு புதிய விதி 51–அ புகுத்தப்பட்டது. அரசியலமைப்பை மதித்து நடத்தல். அதன் கொள்கைகள் மற்றும் நிறுவனங்கள் தேசியக்கொடி, தேசிய ஒற்றுமை மற்றும் இந்தியாவின் ஒருமைப்பாட்டை மதித்தல், பொதுச்சொத்தைப் பாதுகாத்தல் ஆகியவற்றைப் போல 10 அடிப்படைக் கடமைகளை அது விளக்குகிறது.

### 5. பஞ்சாயத்துக்கள்

1992–ன் 73–வது அரசியலமைப்புத்திருத்தச் சட்டம் அரசியலமைப்பின் பகுதி IX-ல் பஞ்சாயத்துக்களை இடம்பெறச் செய்துள்ளது. இந்தப் பகுதி இந்தியாவில் கிராமபுற உள்ளாட்சி அமைப்புகளான பஞ்சாயத்து ராஜ்யத்தின் அமைப்பு மற்றும் பணிகளை விளக்குகிறது. மேலும் பஞ்சாயத்துகளின் 29 பணிகளை வரிசைப் படுத்துகின்ற அரசியலமைப்பின் 11–வது அட்டவணையை 73–வது திருத்தம் ஏற்படுத்தியுள்ளது.

### 6. நகராட்சிகள்

1992–ன் 74 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் அரசியலமைப்பின் ஒரு புதிய பகுதி IXஅ–வை உருவாக்கியுள்ளது. இப்பகுதி நகர்ப்புற உள்ளாட்சி அரசாங்கங்களின் அமைப்பையும் பணிகளையும் விவாதிக்கிறது. இடஒதுக்கீடு மற்றும் பங்கேற்புப் போன்றவைகளும் இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. மேலும், நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் 18 பணிகளை வரிசைப்படுத்துகின்ற அரசியலமைப்பின் 12–வது அட்டவணையை 74–வது திருத்தம் ஏற்படுத்தியுள்ளது.

### 7. கூட்டுறவுக் கூட்டாட்சி

ஆரம்பத்திலேயே கூட்டாட்சி மற்றும் ஒற்றையாட்சி அரசாங்க முறைகளின் தன்மைகளை உள்ளடக்கிய ஒரு அரைகுறைக் கூட்டாட்சியை இந்திய அரசியலமைப்பு ஏற்படுத்தியுள்ளது. இந்தியா பல மாநிலங்களைப் பெற்றிருப்பதாலும் மற்றும் மாநிலங்களுக்கிடையே மட்டுமல்லாமல் மத்திய அரசு மற்றும் மாநிலங்கள் ஆகியவைகளுக்கிடையே பல பிரச்சனைகளைப் பெற்றிருப்பதாலும், மாநிலங்களுக்கிடையேயான கவுன்சிலை அரசியலமைப்பு உருவாக்கியுள்ளது. சர்க்காரியா ஆணையத்தின் பரிந்துரைகளின் படி மே 1990–ல் தான் அது ஏற்படுத்தப்பட்டது. அந்தக் கவுன்சில் பிரதம மந்திரி, அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்கள் மற்றும் சட்ட சபைகளைப் பெற்றுள்ள யூனியன் பிரதேசங்களின் முதலமைச்சர்களையும் பெற்றுள்ளது. கூடுதலாக, மத்திய அமைச்சரவையிலிருந்து அமைச்சர்குழு தரத்தின் ஆறு அமைச்சர்களை பிரதம மந்திரி இந்தக் கவுன்சிலுக்கு

நியமிக்கலாம். கவுன்சிலின் கூட்டங்கள் பிரதம மந்திரியால் தலைமை வகிக்கப்படுகின்றன. உண்மையில், இந்தக் கவுன்சிலின் செயல்பாடு இந்தியாவில் ஒரு கூட்டுறவுக் கூட்டாட்சியை உருவாக்கியுள்ளது.

### 8. தேர்தல் சீர்திருத்தங்கள்

இந்தியாவில் தேர்தல் சீர்திருத்தங்களுக்காக பல குழுக்களும் ஆணையங்களும் நியமிக்கப்பட்டன. அவைகளில், பல பரிந்துரைகளை வழங்கியுள்ள டார்குண்டே குழு (1974) மற்றும் தினேஷ் கோஸ்வாமி குழு (1990) ஆகிய இரண்டும் முக்கியமான குழுக்களாகும். கூடுதலாக அவ்வப்போது தேர்தல் ஆணையமும் குறிப்பிட்ட தேர்தல் சீர்திருத்தங்களைக் கூறியுள்ளது. உதாரணமாக, அரசியல் கட்சிகள் தங்களது பதவியாளர்களை நான்கு மாதத்திற்குள் தேர்வுசெய்ய வேண்டிய ஒரு அறிவிப்பை தேர்தல் ஆணையம் 1994–ல் வெளியிட்டது. கட்சிமாறா தடைச்சட்டம் (1985), 18 வயதடைந்த அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமையை வழங்கிய 61–வது அரசியலமைப்புத் திருத்தம் போன்றவைகள் இந்தியாவில் முக்கியமான தேர்தல் சீர்த்திருத்தங்களாகும்.

### 9. தேர்தல்கள்

சுதந்திரத்திலிருந்து, இந்தியாவில் பாராளுமன்றத்திற்கும் மாநில சட்டசபைகளுக்கும் பல தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. சமீபத்தில் 14–வது மக்களவை தேர்தல்களை நாம் சந்தித்துள்ளோம். உண்மையிலேயே, அரசியலில் பங்கெடுப்பதற்கு மக்களுக்கான தருணத்தை தேர்தல்கள் வழங்கியுள்ளன. மற்றும் மக்களிடையே விழிப்புணர்வையும் உருவாக்கியுள்ளன.

இதுவரை, இந்தியாவில் பொதுவாக பல்வேறு தன்மைகளில் அரசியல் மாற்றத்தைக் குறிப்பாக அரசியலமைப்பு மாற்றங்களை நாம் விவாதித்துள்ளோம். இருப்பினும், இன அரசியல், மத அரசியல் பிராந்தியம், அரசியலில் பணத்தின் பங்கு, பாரம்பரியக் காரணிகள், தேர்தல் பிரச்சினைகள், மக்களின் கபடமற்ற தன்மை, அரசியலில் மக்களின் பங்கேற்புப் பற்றாக்குறை போன்ற பிரச்சனைகள் இந்திய அரசியலில் நிகழ்கின்றன.

## IV. நிர்வாகச் சீர்த்திருத்தங்கள்.

பொதுவாகவே, இந்திய நிர்வாகத்தின் பல களங்கள் பிரிட்டிஷ் விட்டுச் சென்றதன் அடிப்படையாக உள்ளன. சுதந்திரத்தின் போது, ஏகாதிபத்திய அரசங்கத்தின் வரையறுக்கப்பட்ட பணிகளின் செயல்பாட்டிற்காக முதன்மையாக வடிவமைக்கப்பட்டிருந்த மற்றும் இந்தியாவின் ஒரு மதச்சார்பற்ற, சுதந்திரமான, ஜனநாயக மற்றும் சமதர்மக் குடியரசின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இயற்கையிலேயே பொறுத்தமற்ற ஒரு காலனி நிர்வாகத்தை இந்தியா பெற்றிருந்தது. எனவே, இந்திய சுதந்திரத்தினைக் கண்ட தந்தைகள் இந்திய நிர்வாகத்தை சீர்செய்வதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டனர். உண்மையிலேயே, இந்தியாவில், நிர்வாகத்தின் மேம்பாடுகள் நிர்வாகக் சீர்திருத்தங்களாக உள்ளன. இங்கே, இந்திய நிர்வாகத்தின் சீர்த்திருத்தங்கள் மற்றும் மேம்பாட்டிற்காக பரிந்துரைத்த பல குழுக்களை நாம் விவாதிக்கலாம்.

### 1. அய்யங்கார் குழு, 1949

அமைப்புமுறை மாற்றங்கள், பணியாளர் திறனில் முன்னேற்றம் மற்றும் அரசாங்க நடவடிக்கை முறைகளில் முன்னேற்றம் போன்றவற்றை விளக்கிய கோபாலசுவாமி அய்யங்கார் குழு, 1949–ஆம் ஆண்டின் இறுதியில் மத்திய அரசாங்க எந்திரத்தின் ஒரு பரந்த கருத்தை

மேற்கொள்ள அமைக்கப்பட்ட முதல் குழுவாகும். ஒரு அமைச்சகத்திற்கும் ஒரு துறைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை அந்தக்குழு பரிந்துரைத்தது. 28 துறைகள், 8 மத்திய நிர்வாக அலுலகங்கள் மற்றும் ஒரு அமைச்சர்குழுச் செயலகம் போன்றவைகள் அடங்கிய அமைப்பின் 37 பிரதான அலகுகளாக மத்தியச் செயலகம் பிரிக்கப்பட வேண்டும் என்று அந்தக்குழு பரிந்துரை செய்தது. மேலும் ஒவ்வொரு துறையிலும் ஒரு ‘அமைப்பு மற்றும் முறைகள்’ பிரிவை அமைப்பதற்காக அக்குழு பரிந்துரைத்தது.

### 2. கோர்வாலா குழு, 1951

1950–ல் இந்திய அரசாங்கம் திட்ட ஆணையத்தை அமைத்தது பொது நிர்வாகத்தில் பல பிரச்சனைகள் உள்ளன என்பதை அந்த ஆணையம் உணர்ந்தது. எனவே, பொது நிர்வாகத்தில் குறிப்பாக மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களின் மேம்பாட்டுத்திட்ட அமுலாக்கம் தொடர்பானவற்றில் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்காக, ஒரு ஆய்வை மேற்கொள்ளவும் மற்றும் வழிமுறைகளைக் கூறவும் ஒரு ஓய்வு பெற்ற அகில இந்தியப் பணி அலுவலரான கோர்வாலா என்பவரை அந்த ஆணையம் வேண்டியது. பணியாளர்களின் நெறிமுறைத் தரம் இல்லாவிட்டால் பிரிட்டிஷ் மாதிரியான ஒரு அமைச்சர்குழு முறையுடன் கூடிய பாராளுமன்ற அரசாங்கம் இந்தியாவில் சிறப்பாக இருக்க முடியாது என்று அவர் குறிப்பாகப் பரிந்துரைத்தார்.

### 3. அப்லிபி அறிக்கை, 1953 மற்றும் 1956

1952–ஆம் ஆண்டின் இறுதியில், இந்தியாவில் பொது நிர்வாகத்தின் ஓர் ஆய்வை மேற்கொள்வதற்கு அமெரிக்காவில் பொது நிர்வாகத்தில் சிறந்த ஆணையாளரான பால். எச். அப்லிபி என்பவரை அப்போதைய நிதியமைச்சர் சி. டி. தேஷ்முக் அழைத்தார். ஜனநாயகம் வழியாக மேம்பாட்டை கொண்டுவருவதற்கு உலகில் சிறந்த முயற்சியை இந்தியா செய்து கொண்டிருந்தது என்று அப்லிபி உணர்ந்தார். ஒற்றுமை மற்றும் வேற்றுமையை உருவாக்கும் காரணிகளை அவர் பகுத்தாய்ந்தார். திட்டங்களின் நிர்வாகத்திற்காக ஒரு பலமான மத்திய அரசாங்கத்தை அவர் வலியுறுத்தினார். இந்திய நிர்வாகத்தில் செயல் – சிந்தனைப் பற்றாக்குறையும் சூழ்நிலைகளில் நடவடிக்கை எடுப்பதற்கு திறமைப் பற்றாக்குறையையும் அவர் குறை கூறினார். பணியாளர்கள் பயிற்சிக்காக ஒரு அகில இந்திய நிறுவனம் நிறுவப்பட்ட வேண்டும் என்று அவர் குறிப்பாகப் பரிந்துரைத்தார். நிர்வாகப் படிநிலையில் உள்ள மட்டங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் பரிந்துரைத்தார். அதன் விளைவாக, மத்திய செயலகத்தில் ஒரு ‘ஓ மற்றும் எம்’ பிரிவு அமைக்கப்பட்டது மற்றும் 1954–ல் புது டெல்லியில் இந்திய பொதுத்துறை ஆட்சியியல் கழகம் நிறுவனமும் ஏற்படுத்தப்பட்டது.

### 4. நிர்வாகச் சீர்திருத்த ஆணையம் (1966–70))

இந்தியாவில் நிர்வாகச் சீர்திருத்தங்களின் வரலாற்றில் ஒரு முக்கியமான எல்லையாக நிர்வாகச் சீர்திருத்த ஆணையத்தின் நியமனம் உள்ளது. ஐந்து உறுப்பினர்களுடன் மொரார்ஜி தேசாயின் தலைமையின் கீழ் ஜனவரி, 5, 1966–ல் அந்த ஆணையம் அமைக்கப்பட்டது. அந்த ஆணையம் 578 பரிந்துரைகள் அடங்கிய 20 அறிக்கைகளை மத்திய அரசாங்கத்திடம் சமர்ப்பித்தது, இந்த ஆணையம் பின்வருகின்ற பொது நிர்வாகத்தின் பிரதான பத்து களங்களை ஆராய்ந்துள்ளது.

1. இந்திய அரசாங்க இயந்திரம் மற்றும் அதன் பணி வழிமுறைகள்
2. அனைத்து மட்டங்களின் திட்டமிடலுக்கான இயந்திரம்
3. மத்திய – மாநில உறவுகள்
4. நிதி நிர்வாகம்
5. பணியாளர் நிர்வாகம்
6. பொருளாதார நிர்வாகம்
7. மாநில நிர்வாகம்
8. மாவட்ட நிர்வாகம்
9. விவசாய நிர்வாகம், மற்றும்
10. குடிமக்களின் குறைகளைக் களைவதற்கான நிர்வாகம்.

மேல் குறிப்பிட்டுள்ளவைகளைத் தவிர, இந்திய நிர்வாகத்தை சீர்திருத்துவதற்கு மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் பல எண்ணிக்கையுள்ள பிற குழுக்களையும் ஆணையங்களையும் அமைத்துள்ளன. இருப்பினும், லஞ்சம், காலதாமதம், ஒருதலைப்பட்சம், அரசியல் குறுக்கீடு, இனக்கொள்கை இன்னும் பல நிகழும் நிர்வாகப் பிரச்சனைகளாக உள்ளன. இவைகள் நிர்வாகப் பிரச்சினைகள் மட்டுமல்லாமல் நிர்வாக நோய்களாகவும் உள்ளன. ஊழல், அமைச்சர் எதிர் சிவில்பணியாளர், பொதுப்பணியாளர் எதிர் சிறப்புப்பணியாளர் மற்றும் நிர்வாகப் பொறுப்பு ஆகியன இந்திய நிர்வாகத்தில் நான்கு பிரதான பிரச்சினைகளாக உள்ளன.

## 10.2 எதிர்காலத்திற்கான திட்டங்கள்

இந்த அத்தியாயத்தின் மேலே கொடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களுடனான விபரங்களும் தகவலும் ஒரு தெளிவான தன்மையையும் மற்றும் இதுவரையில் தேசம் மேற்கொண்டுள்ள வளர்ச்சி நிலையையும் வழங்குகின்றன. இந்த அத்தியாயத்தின் இப்பகுதி என்ன செய்யப்படவுள்ளதை ஒரு சுருக்கமான ஆனால் தெளிவான கருத்தைத் தருகிறது. இது தொடர்பாக, தேசிய தலைவர்கள், அவர்களின் எதிர்காலநோக்குகள் மற்றும் வழிகாட்டலுக்கான அவர்களின் பங்களிப்பு போன்றவைகளின் உதாரணங்களை கணக்கில் எடுத்துச்கொள்வது சரியாக உள்ளது. தாமஸ் மூர் என்பவரின் 'உடோப்பியா' மற்றும் சிறந்த தமிழ் அறிஞரான முனைவர் மு.வரதராஜனின் 'கி.பி.2000' போன்ற புத்தகங்களின் மீதான சில வரிகளை ஆர்வமுள்ள மற்றும் படித்தறிந்த மாணவர்கள் படித்திருக்க முடியும்.


மகாத்மா காந்தி தேசத் தந்தையென சரியான அழைக்கப்பட்டு ஞாபகப் படுத்தப்படுகிறார். யாராக அவர் இருந்தார் மற்றும் என்னவாக அவர் இருந்தார் போன்றவற்றின் ஒரு முழுமையான விளக்கத்தைக் கொடுப்பது கடினமாக உள்ளது. ஆனால், ஒரு சிறந்த சமாதானத் தூதுவராக எவ்வித விதிவிலக்குமின்றி ஒட்டுமொத்த மனித சமுதாயமும் அவரைக் கருதியது என்று சொல்ல முடியும், பலம் வாய்ந்த ஆங்கிலேயர்களுடன் போராடி சுதந்திரத்தை பெற்றது அவரே. ஆனால், சிக்கலான காலங்கள் வழியாக நாட்டை சீர்படுத்துவதற்கு அவர் நீண்டகாலம் வாழமுடியவில்லை. அவர் ஜனவரி 30, 1948–ல் சுட்டுக் கொல்லப்பட்டார்.



மகாத்மா காந்தி
(1869–1948)

மகாத்மா காந்தியின் கொள்கைகளும் பங்களிப்புக்களும் காந்தியக் கொள்கையாக அறியப்படுகின்றன. மிதவாதம் அல்லது அஹிம்சை, சத்தியாகிரஹம் மற்றும் சர்வோதயம் போன்றவைகள் காந்தியக் கொள்கையின் அடிப்படையான மையக் கருத்துக்களாகும். அமைதியான எதிர்ப்பு, ஹர்தால் மற்றும் புறக்கணிப்பு போன்றவை நோக்கங்களைச் சாதிப்பதற்கான அவரின் வழிமுறைகளாக இருந்தன. அவரின் வாழ்க்கைக் காலத்தில் பெண்கள், குழந்தைகள் உழைப்பாளர்கள் மற்றும் ஒவ்வொருவரும் அமைதியாக வாழக்கூடிய ஒரு சமத்துவ சமுதாயத்தை வென்றெடுப்பதை நோக்கி செயல்பட நாட்டு மக்களை அவர் கடுமையாக தூண்டினார். அவர் சமதர்மத்தைச் சமநிலைக்கொள்கையுடன் ஒருங்கிணைந்தார். அவரின் மிகப்பெரிய பணியான ‘சத்திய சோதனை’ மற்ற எழுத்துக்கள் மற்றும் உரையாடல்களில் அவரது கொள்கைகள் உள்ளடங்கியுள்ளன.

ஜவஹர்லால் நேரு நவீன இந்தியாவின் சிற்பியாக கருதப்படுகிறார். ‘உலக வரலாற்றின் சுருக்கங்கள்’ மற்றும் ‘இந்தியாவின் கண்டுபிடிப்பு’ போன்ற அவரின் சில புத்தகங்களில், சுதந்திர இந்தியா மற்றும் தேசத்தை உருவாக்குவதற்கு கொள்கைகளும் சட்டங்களும் காணப்படுகின்றன. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதம மந்திரியாக, விவசாயம் மற்றும் தொழில் களங்களில் தன்னிறைவு நாடாக்குவதற்கு தேவையான சட்டங்களையும் திட்ட அமைப்புகளையும், இராஜேந்திரப்பிரசாத், சர்தார் வல்லப்பாய்பட்டேல், கே.காமாராஜ், லால்பகதூர் சாஸ்திரி மற்றும் பிற சிறந்த தலைவர்களுடன் சேர்ந்து அவர் துவக்கினார். இந்தியாவின் அண்டை நாடுகளுடன் ஒரு நட்புறவுக் கொள்கைகளையும் உலகின் மற்ற நாடுகளுடனான உறவில் நடுநிலையையும் அவர் பின்பற்றினார்.




பன்டித ஜவஹர்லால் நேரு

**(1889–1964)**

காந்திஜி, நேருஜி மற்றும் வல்லபாய்ப் பட்டேல் ஆகிய மும்மூர்த்திகளும் நாட்டின் எதிர்காலத்திற்கான அடித்தளத்தை நாட்டினார்கள். அவர்களுடன், புதிய கொள்கையையும் சீர்திருத்தத்தையும் தொடர்வதற்கு எதிர்காலத் தலைமை கட்டாயப்படுத்தப்படுகின்ற உலகமயத்தை நோக்கிய தற்போதைய மேம்பாட்டிற்கு அடிப்படையான பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் வாணிபக் கொள்கைகளை **1991–1996–**க் காலத்தில் துவக்கிய மன்மோகன் சிங்கை ஒப்பிடலாம். தொழில், வர்த்தகம் மற்று விவசாயம் போன்ற துறைகளில் மேலும் தொடர்படுகின்ற விதத்தில் நாட்டின் எதிர்காலம் உள்ளது. உள்நாட்டின் நுகர்வுக்காகவும் மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காகவும் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களின் தரம் மற்றும் தன்மையின் மீதே வெற்றி சார்ந்துள்ளது.

**முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே.அப்துல் கலாம்** என்பவர் இந்தியாவில் பலதுறைகளில் செய்யப்படுகின்ற சிறந்த சாதனைகளின் அபிமானியாக அறியப்படுகிறார். இந்தியா இதுவரையில் சாதித்த சாதனைகளையும் எதிர்காலத்தில் சாதிக்க வேண்டியவைகளையும் ‘அக்கினிச் சிறகுகள்’ **(1999)** மற்றும் ‘இந்தியா **2020** புதிய நூற்றாண்டிற்கான ஒரு பார்வை’ **(1998)** ஆகிய அவரது இரண்டு புத்தகங்களும் கூறுகின்றன. **2020**ல் ஒரு சிறந்த பொருளாதார சக்தி மற்றும் பலமான அரசியல் கூற்றுடன் ஒரு சிறந்த சக்தியின் அந்தஸ்தை இந்தியா அடையும் என்று அவர் கணித்துள்ளார். அவரது கருத்துக்கிணங்க, இரண்டு எதிர்காலப் பார்வைகள் உள்ளன. காந்திஜி, நேருஜி, பட்டேல் மற்றும் பலருக்கிணங்க, சுதந்திரத்தைப் பெற்று இந்தியாவை பலமான நாடாக்குவது என்பது முதல் பார்வையாகும். நமது முன்னாள் ஜனாதிபதி

அப்துல் கலாமால் பேசப்படுவது இரண்டாவது எதிர்காலப் பார்வையாகும். இந்தியாவின் உள்நாட்டுப் பலத்தை மேம்படுத்துவது, பொருளாதாரத்தை முன்னேற்றுவது மற்றும் மக்களுக்கு சமூகப் பொருளாதார வளமையை அளிப்பது போன்றவைகள் அவரது எதிர்காலப் பார்வையாகும்.



ஏ.பி.ஜே. அப்துல்கலாம்

(பிறப்பு 1931)

அப்துல் கலாமின் கருத்திற்கிணங்க, முன்னுரிமைகள் மற்றும் சாதனைகள் தொடர்பாக குறிப்பிட்ட சவால்களை சந்திக்க இந்தியா கடமைப்பட்டுள்ளது. அவைகள்,

1. முதன்மை மற்றும் மேல்நிலைக் கல்வியில் முன்னேற்றம்
2. பெண்களின் அதிகாரத்துவம்
3. அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில் முதலீடு
4. தொழில்முனைவு மேம்பாடு
5. மனிதவள மேம்பாட்டு – தனியார் முகமைகள் மற்றும் அரசுசாரா நிறுவனங்களின் பங்கு
6. அரசாங்க முகமைகள் மற்றும் நிறுவனங்களால் செயல்பாட்டு முன்னேற்றம். மற்றும்
7. சுற்றுச்சூழலுக்கான சார்பு.

இவ்வாறாக, இந்தியாவின் மேம்பாட்டிற்காக ஒரு குறிப்பிட்ட காலத்திட்டத்தை அப்துல் கலாம் கொடுத்துள்ளார். உண்மையிலேயே ஒரு நடைமுறை மற்றும் கட்டுமான அணுகுமுறையாக அவரது பார்வை அல்லது எதிர்கால இந்தியாவிற்கான திட்டம் உள்ளது. நாட்டின் மேம்பாட்டில் அரசுசாரா நிறுவனங்களில் பங்கையும் அவர் வலியுறுத்தியுள்ளார். சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான அடிப்படையாக தொழில்நுட்ப மேம்பாடு உள்ளது என்று அவர் முடிவுக்கு வந்துள்ளார். அவரது பார்வைக்கிணங்க, 2020–ல் மேம்பாடு அடைந்த நாடு மற்றும் சிறந்த சக்தியின் நிலையை இந்தியா சாதிக்கும்.

## பயிற்சி

### பகுதி அ

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ______________ல் இந்திய அரசிலமைப்பு நடைமுறைக்கு வந்தது.
2. இந்தியா ஒரு ______________ சமுதாயம் ஆகும்.
3. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம்______________ல் தொடங்கப்பட்டது.
4. இந்தியப் பொருளாதாரம் ஒரு ___________ பொருளாதாரம் ஆகும்.
5. ___________ இந்திய திட்டமிடலின் தந்தையாக அழைக்கப்படுகிறார்.
6. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் காலம் ___________ ஆகும்.
7. 73–வது அரசியலமைப்புத் திருத்தம் ___________ உடன் தொடர்புடையது.
8. நிர்வாகச் சீர்திருத்த ஆணையத்தின் தலைவராக ___________ இருந்தார்.
9. மகாத்மா காந்தி சமதர்மத்தை ___________ உடன் ஒருங்கிணைத்தார்.
10. அப்துல் கலாமால் எழுதப்பட்ட இரண்டு புத்தகங்கள் ___________,___________ ஆகும்.

**II. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 11. | 1938 | (அ) புதிய தொழில் கொள்கை |
| 12. | 1991 | (ஆ) தேசிய திட்டக் குழு |
| 13. | 1992 | (இ) 14–வது மக்களவைத் தேர்தல்கள் |
| 14. | 2000 | (ஈ) 74–வது அரசியலமைப்புத் திருத்தம் |
| 15. | 2004 | (உ) தேசிய மக்கள்தொகைக் கொள்கை |

### பகுதி ஆ


16. இந்திய மக்கள் தொகைக் கொள்கையை விவாதிக்க.
17. இந்திய விவசாயக் கொள்கையை விளக்குக.
18. நிர்வாகச் சீர்திருத்த ஆணையம் பற்றிய விபரம் தருக.

### பகுதி இ

19. இந்தியாவின் அரசியல் மாற்றத்தை விவாதிக்க.
20. இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்களை விவரிக்க.
21. இந்தியாவின் நிர்வாகச் சீர்திருத்தங்களை விளக்குக.
22. இந்தியாவின் எதிர்காலத் திட்டங்கள் யாவை ?

### பகுதி ஈ


23. 20–ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் சாதனைகளை விவாதிக்க.
24. இந்தியாவின் பொருளாதார மேம்பாட்டை விவரிக்க.




1. டாக்டர் இராஜேந்திர பிரசாத் (1884 – 1963) காந்தியவாதி சுதந்திர இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர். பதவி வகித்த காலம் (1950–62) 1962 ம் ஆண்டு பாரத் ரத்னா விருது பெற்றவர்.



2. டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் (1888 –1975) அறிஞர், தத்துவஞானி, எழுத்தாளர். இந்தியாவின் முதல் துணைக் குடியரசுத் தலைவர். இரண்டாவது குடியரசுத் தலைவர் (1962 – 67) இதற்கு முன்பு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பேராசிரியர். தலைவர் ஐ. நா. கல்வி சமூக மற்றும் பண்பாட்டுக் கழகம், 1954ல் பாரத ரத்னா விருது பெற்றவர்.



3. டாக்டர் ஜாகீர் உசேன் (1897 – 1969) தேசியவாதி மற்றும் கல்வியாளர். இரண்டாவது துணைக் குடியரசுத் தலைவர். மூன்றாவது குடியரசுத்தலைவர். (1967–69). 1963 ல் பாரத ரத்னா விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.



4. வி. வி. கிரி. **(1894–1980)** தொழிற்சங்கவாதி, மூன்றாவது துணைக் குடியரசுத்தலைவர். நான்காவது குடியரசுத்தலைவர். **(1969–1974)** குறுகிய காலம் (மே–ஜூலை **1969**) குடியரசுத்தலைவர் (பொறுப்பு) பாரதரத்னா **1975**ல் பெற்றார்.




5. எம். ஹிதயதுல்லா (1905–92) சட்ட வல்லுனர். துணைக்குடியரசுத் தலைவர் (1979–84) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாகவும் இருந்தார். குறுகிய காலம் (ஜூலை – ஆகஸ்டு 1969) குடியரசுத்தலைவர்.



**6.** பக்ருதீன் அலி அகமது **(1905–77)** ஐந்தாவது குடியரசுத்தலைவர் **(1974–77)** இந்திய சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தவர்.



7. பி. டி. ஜாட்டி (பிறந்தது 1912)துணைக்குடியரசுத் தலைவர் (1974–79) குடியரசுத் தலைவர்(பொறுப்பு)–(பிப்ரவரி – ஜூலை 1977) முதல் அமைச்சர் மைசூர் மற்றும் ஆளுநர் ஒரிஸ்ஸா.




8. நீலம் சஞ்சீவ ரெட்டி (1913–96) குடியரசுத் தலைவர் (1977–82) முதல் அமைச்சர் ஆந்திர பிரதேசம். மத்திய அமைச்சர் மற்றும் மக்களவைத் தலைவர். சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தவர்.



**9.** கியானி ஜெயில் சிங் **(1916–94)** குடியரசுத் தலைவர் **(1982 –87)** சுதந்திர போராட்ட வீரர்**.** முதல் அமைச்சர் பஞ்சாப்**.**




**10.** ஆர்.வெங்கட்ராமன் **(**பிறந்தது **1910)** குடியரசுத்தலைவர் **(1987–92).** துணைக்குடியரசுத் தலைவர் **(1984–87).** தொழிற்சங்கவாதி பாதுகாப்பு மற்றும் நிதித்துறை காபினெட் அமைச்சர் ஆக பணியாற்றியவர்**.**



**11.** டாக்டர். சங்கர்தயாள் சர்மா (பிறந்தது 1919) அறிஞர். சுதந்திர போராட்ட வீரர், குடியரசுத் தலைவர் (1992 –97) துணைக்குடியரசுத் தலைவர் (1987–92)



12. கே. ஆர். நாராயணன் (பிறந்தது 1921) ஜூலை 1997ல் குடியரசுத் தலைவர் பதவி பொறுப்பேற்றார். துணைக்குடியரசுத் தலைவர்(1992 –97) லண்டன், பொருளியல் பட்டம் பெற்று இந்திய வெளி உறவு பணித்துறையில் சேர்ந்தார். அரசியல் ஞானி மற்றும் கல்வியாளர் அயல்நாட்டு தூதுவர்ஆக சீனா –அமெரிக்காவில் பணியாற்றினார்.



**13.** திரு. டாக்டர். எ.பி. ஜே. அப்துல் கலாம்



**14.** திருமதி பிரதிபா தேவிசிங் பட்டீல்

**15.** திரு. பிரணாப் முகர்ஜி



# BIBILIOGRAPHY


1. Agarwal, *Political Theory*, *(Principles of Political Science)*, S Chand & Company Ltd., New Delhi, 2000.

2. Arora Ramesh. K, and Goyal, Rajni, *Indian Public Administration - Institutions and Issues,* WisNew Delhi 1996.

3. Basu, D.D., *Introduction to the Constitution of India,* Wadhwa and Company, Nagpur, 2000.

4. Basu, D.D., *Constituted Law of India,* Prentice Hall of India Pvt. Ltd., New Delhi, 1983.

5. Bhattacharya, D.C, *PoliticalTheory*, Vijoya Publishing House,Calcutta, 2001.

6. Bhattacharya, D.C *Indian Government and Politics*, Vijoya Publishing House, Kolkatta, 2001.

7. Bhushan, Vidya and Bhagawan, Vishnoo, *Indian Administration*, S. Chand & Company Ltd, New Delhi 2000.

8. Dahl, Robert, *Modern Political Analysis*, Prentice Hall India (P) Ltd, 1978.

9. Das, P.G, *Modern Political Theory* New Central Book Agency (p) Ltd, Calcutta, 1996.

10. Das, Harihara, *Political System of India*, Anmol Publications (P) Ltd, New Delhi, 1998.

11. Datt, Ruddar and Sundharan, K.P.M, *Indian Economy* S.Chand & Company Ltd, New Delhi - 2003.

12. Ealu, Hans, *Political Behaviour*, Harber and Collins, London, 1976.

13. Gettel. R.G., *Political Science*, The World Press Pvt. Limited, Calcutta, 1950.

14. Gokhale, B.K. Political Science *(Theory of Government Machinery)* A.R. Sheth Company, Bombay, 1972.

15. Gupta, R.C, *Indian Political Thought*, Lakshmi Narain Agarwal, Agra, 1998.

16. A.R J. Abdul Kalam, and Raj an ,Y.S., India 2020-A *Vision for the New Millennium*, Penguin Books, New Delhi, 1998.

17. A.P.J. Abdul Kalam, and Tiwari, Aran, *Wings of Fire*,Universities Press (India) Private Limited, Hyderabad, 1999.

18. Laxmikanth, *Public Administration*, Tata McGraw Hill Publishing Company Ltd, New Delhi, 2002,

19. Maheshwar, S.R., *Local Government in India*, Vimal Composing House, Agra, 1984.

*20. Manorama, Year Book* (2004), Malayala Manorama, Kottayam, 2004.

21. Prasad, Ravindra, *Administrative Thinkers*, Edited, Sterling Publications Pvt. Ltd., 1991

22. Ray, Kamal and Bhattacharya, Mohit, *Political Theory, Ideas and Institutions*, The World Press (P) Ltd, Calcutta, 1983.

23. Ray, Kamal and Bhattacharya, Mohit, *Political Theory, Ideas and Institutions*, The Worl,d Press (P) Ltd, Calcutta, 1983.

*24. Tata McGraw-Hills Year Book* - 2004, Tata McGraw- Hill Publishing Company Ltd., New Delhi, 2004.

25. Vanaik, Achin, (Ed) *Globalsation and South Asia Multi Dimensional Perspectives,* Academy of Third World Study, Monohar Publishers, New. Delhi, 2004.

26. Varma V.P., *Modern Indian Political Thought*, Lakshmi Narain, Agarwal Educational Publishers, Agra, 1980.